திருக்குறள் கதைகள்
இன்பத்துப்பால் -1161-1250

***கே.வி.குணசேகரம்***

***அணிந்துரை***

உலகளாவிய ரீதியில் காலம் காலமாகத் தமிழர் பண்பாட்டு வளர்ச்சிக்கு வழிகாட்டி வரும் இலக்கியங்களில் திருக்குறள் முதன்மை நிலையிலுள்ளது. இன்றைய நவீன நாகரீக வளர்ச்சியின் உச்சநிலை மாற்றங்களுக்கு ஏற்ப மனித இரசனை அனுபவங்களுக்கு ஏற்பச் சுவையான கதைகள் வழியாகத் திருக்குறளை உயிர்ப்பித்திருக்கின்றார் இந்நூலாசிரியர் திரு.கே.வி.குணசேகரம் அவர்கள்.

இங்கே நாகரீகம் என்பதை கடற்பயணத்திற்கு ஒப்பாகவும், பண்பாட்டை துறைமுகத்திற்கு நிகராகவும் இயம்பலாம். எவ்வளவோ நாகரிக அலைகள் புரண்டபின்னரும் தமிழர் தம் வாழ்வியற் பெருமையைக் குறிகாட்டி, தமிழர் பண்பாட்டுத் துறைமுகக் கலங்கரை விளக்காக நின்றுரைப்பது திருக்குறள் என்ற பொக்கிச நூல். இதன் அறத்துப்பாலில் உள்ள குறள்களுக்கு அற்புதமான கதைகளை எழுதிய நூலாசிரியர். தற்பொழுது இன்பத்துப்பாலில் உள்ள பாக்களுக்கு(250) அகத்தினை நோக்கில் ஜனரஞ்சகமாகவும், ஆழமாகவும் கதைகளை ஆக்கியுள்ளார். அவருடைய பழுத்த எழுத்தாற்றல் அனுபவங்கள் வெகுகச்சிதமாகக் கதைகளினூடாகப் பிரதிபலிக்கின்றன.

உலகம் உய்திட, மக்கள் வாழ்வாங்கு வாழ, இல்லறம் இன்றியமையாததாகும். சந்ததிகள் பெருகவும், மனிதகுலம் தளைக்கவும், இல்வாழ்க்கை இனித்திடவும், குடும்பங்கள் சிதைவுறாமல் நல்வாழ்வு வாழவும் பல்வேறு வழிகாட்டல்களை ஆர்வத்துடன் படிக்கும் நோக்கில் ஒவ்வொரு குறளுக்கும் ஏற்பக் கதைகள் தொகுக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ள விதம், இலக்கியத் திறனாய்வுகளுக்கு அப்பால் இந்நூலாசிரியரின் தனித்தன்மைகளின் பிரகாசிப்புக்கள் இக்கதைகளில் தெரிகிறது.

‘‘மயங்கும் நெஞ்சம்’’ என்ற மகுடத்தில் ஆரம்பித்து உயிர்க்குடிக்கும் கண்கள், ஐம்புல இன்பம், மழை, உருகும்மனம், இணைந்த இன்பம், என்ற வகையில் பல பரிமானத் தலைப்புக்களின் கீழ் அன்பும் கவர்ச்சியும், அனுசரனையும், விட்டுக்கொடுத்தலும், புரிந்து கொள்ளலும், ஆண் பெண் ஊடலுக்கு அவசியமானவை, இவ்வூடல் அறமே இல்லறத்தை நல்லறமாக்கும் என்ற தொனியில் ஒவ்வொரு குறளுக்கும் கதைகள் எழுதப்பட்டுள்ளன. தமிழர்களுடைய அகத்திலே காதல் என்பது பிறவிதோறும் தொடர்வதாகவும், உள்ளம் இயைந்த உடலுறவும், உடன் இயைந்த உள்ள உறவும் வாழ்வின் பயனாக உள்ளமையையும் கதைகள் திருக்குறளை ஆதாரமாக வைத்து எடுத்துரைக்கின்றன.

உள்ளத்திசைவுடைய காதலும், உடற்புணர்ப்புடைய காமமும் முகிழ்த்த பின்னரான இல்லற வாழ்வின் எதிர்பார்க்கைகள் காமத்துப் பாலில் கருத்துரைகளாகின்றன. தலைவனும் தலைவியும் முதன் முதலில் கண்டு காதல் கொள்வதும், அதன் தொடர்ச்சியாக உள்ளத்தாலும் உடலாலும் இணைந்து இன்பம் துய்க்கும் நெறிமுறைகளைப் பாலியல் கல்வி சார்ந்த உளவியல் அடிப்படையில் கதைகளாக்கியுள்ள நூலாசிரியர் திரு.கே.வி.குணசேகரம் அவர்களின் துணிவான அறிவியல் முயற்சி பாராட்டப்பட வேண்டியதாகும். இம்முயற்சியை முதன் முதலாக மேற்கொண்ட சமூகவியலாளராகவும் இந்நூலாசிரியர் திகழ்கின்றார்.

திருக்குறளில் இன்பத்துப்பாலில் உலகக் காதல் இலக்கியங்களுக்கு ஒப்பாக ஊடியும், உரையாடியும், பழகியும், பார்த்தும், உள்ளத்தால் அனுபவிக்கும் இன்பங்களை, ஒருவகையாகவும்; உதாரணமாக

‘‘உவந்து உறைவர் உள்ளத்துள் என்றும்; இகத்து உறைவர்
எதிலர் என்னும் இவ்வூர்’’

என்ற திருக்குறளுக்கு ‘‘உள்ளத்தில் வாழ்பவர்’’ என்ற தலைப்பில் எழுதிய கதை வடிவம் குறளுக்கே மெருகேற்றுகின்றது.

மற்று மொரு வகையாக, தலைவன் தலைவியின் அழகையும் தலைவி தலைவனின் அழகையும் கண்டு மயங்குதல்; குறிப்பறிந்து இருவரும் கூடி ஐம்புல இன்பம் துய்த்தல், கூடி மகிழ்ந்த தலைவனும் தலைவியும் அவரவர் அழகைப் பாராட்டுதல். இருவரும் நாணத்தை விட்டு வருந்துதல், முன்பு நிகழ்ந்த ஊடலின் இனிய அனுபவத்தைப் பரிமாறல் உதாரணமான.

‘‘உணவினும் உண்டது அறல் இனிது; காமம்
புணர்தலின் ஊடல் இனிது’’

என்ற குறளுக்கு ‘‘மிகுதியான இன்பம்’’ என்ற கதை வடிவம் நூலாசிரியரின் எழுத்தாற்றலைப் பறை சாற்றுகின்றது.

இந்நூல், ஒருநாவல் வடிவின் குறள்கதைகளின் தொகுப்பாக, திருக்குறளை ஆதாரமாக வைத்து எழுதப்பட்டுள்ள விதம் மேலும் இலக்கியரசனையை ஏற்படுத்துகின்றது. சமூக இயக்கத்தில் மனிததத்துவ அக வாழ்வியலை ஒரு பருவத்தோடு நிறுத்தாமல் அப்பருவ மகிழ்வின் காதல், கூடல், பாலுணர்ச்சி, அன்பின் உயிர்ப்பாய், நேசமாய், பாசமாய், பரிவாய், அருளாய், பரவி விரியும் பண்பாட்டியலை அழகிய நூலாக எழுதி எமக்கெல்லாம் நல்வழிகாட்டும் இந்த நூலாசிரியர் பணியும், அர்ப்பணிப்பும், ஈடுபாடும் உயர்ந்து நோக்கப்பாலது. அர்த்தமுடைய அவரது வாழ்வியல் எழுத்துப்பணிக்கு இந் நூல் ஓர் எடுத்துக்காட்டு.

இன்றைய நவீன சமுதாய மாற்றங்களினூடகப் புதிய ஜனரஞ்சக இலக்கியச் சூழல்; அக நிலை சார்ந்த தூய இரசனையாகவோ, அன்றேல் பதவுரை, பொழிப்புரை, கதைக்குறிப்பு, விளக்கம் முதலியவை சார்ந்த போதனையாகவோ மட்டும் இல்லாமல் வாழ்வியலோடு அமைந்த செயன்முறையாகவும் நோக்கப்படுகின்றன. இந்நோக்கிற்கு இயைபான ஒரு புத்தகமாகவும் இந்நூல் படைக்கப்பட்டுள்ளது. திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் எனக்கு அணிந்துரை எழுதித் தருமாறு வினவி, ஒரு நவீன இலக்கியத்திரனாய்வு நோக்கில் அதை ஆக்க வேண்டும் என விரும்பினார்.

அவ்வகையில் புது இலக்கியத்திரனாய்வானது இலக்கியப்படைப்பை முற்றிலும் தன்னிறைவான ஒரு மொழிசார் கட்டமைப்பாகக் கொண்டு; படைப்பாளியின் நோக்கம் மற்றும் வாழ்வியல் அனுபவங்கள் வாசகனிடத்தில் நிகழக்கூடிய உணர்வு நிலைத்தாக்கங்கள் ஆகிய சார்பு நிலைகளினூடான இலக்கியப்படைப்பு தரிசனங்களை மறுத்து; அடிப்படையாக வாசகன் தன்னளவில் தன்னியக்க முள்ளவகையில் இரசனையுடன் பயன்படுத்தும் ஆற்றலுக்கான வழிகளைக் கண்டறிதல் என்ற வகையில் விரித்து சொல்கின்றது.

இவ்விரிவானது இன்றைய இலக்கியத்திரனாய்வில் பின் நவீனத்துவ வெகுசனகலாச்சார பரிமானங்களினூடாக நோக்கப்படுகின்றன. பின் நவீனத்துவம்(Post Modernism) கல்வி, கலை, இலக்கியம்,பண்பாடு என்ற சகல துறைகளிலும் சுதந்திரத்தின் எல்லைகளை சுயமாக விரிக்க வேண்டும். முழு உலகு தழுவிய கொள்கைகள் மரணித்துவிட்டன. பல்வேறு பகுதியாக (Frasmantation) செயற்படும் இயக்கங்கள் தம் உள்ளியல்பு துலங்கற் இயங்குவதற்கு வழி விடப்பட வேண்டும். இலக்கிய ஆக்கத்தின் ஒவ்வொரு உயிரையும், ஒவ்வொன்றின் ஆக்கங்களையும், ஒவ்வொரு பாத்திரத்தையும் அவற்றின் இயல்பு நிலையிலிருந்தே வளர்க்க வேண்டும் என்கிறது.

அவை தம் இயல்பினூடாக முகிழ்க்க வேண்டும். மேலும் வித்தியாசங்கள் என்ற கருத்தியல் இங்கு முக்கியப்படுத்தப்படுகின்றது. இவ்வாறான பின் நவீனத்துவ சிந்தனைகளின் பல பிரதிபலிப்புக்களை நவீன கதை இலக்கிய வடிவில் நுட்பமான பாத்திரப்படைப்புக்கள் மூலம் வெகுசன ஜனரஞ்சக இலக்கிய ஆக்கமாக நூலாசிரியர் இந்நூலை எழுதியிருக்கின்றார்.

ஒரு வாசகன் என்ற நிலையிலிருந்து இந்நூலை நோக்குகின்ற போது; வாழ்வியலின் மகிழ்ச்சியான மாற்றத்தை உள் வாங்குதல் (Absorbing Change), ஒரே வகையான வாழ்வை தொடர்ந்து அனுபவிக்கும் வேளை ஏற்படும் சோர்வும், சலிப்பும் மாறுதலை நோக்கிய சிந்தனையை மனிதனிடம் ஏற்படுத்துகின்றது. எனவே வாழ்க்கையின் எல்லாப்பகுதிகளிலும் இந்த மாற்றத்தை ஒவ்வொரு மனிதனும் எதிர்பார்க்கின்றான். இவ் எதிர்பார்ப்புக்களுக்கு; நாளைக்கும் இன்றைக்கும் சேர்த்து நேற்றே சிந்தித்த திருக்குறளின் இன்பத்துப்பாலின் குறள்களுக்கு மாற்றத்துடன் கூடிய புத்தாக்கச் சிந்தனைகள் கதையோட்டங்களினூடாக ஆசிரியரால் பின்னப்பட்ட விதம் புதிய அனுபவத்தை ஏற்படுத்துகின்றது.

தமிழை உலகிற்கும், உலகைத் தமிழுக்கும் அர்ப்பணித்த மதம் கடந்த மானுட தர்மத்தை இயம்பி நிற்கின்ற திருக்குறளுக்கு கதை வடிவத்தை இயம்பி நிற்கும் நூலாசிரியர் பின் நவீனத்துவ உலகம் தழுவிய இலக்கிய விமர்சனப் பார்வையில் பண்பாட்டுத் தாக்கங்களையும் இவ் ஆக்கம் மூலம் எடுத்துக்காட்டுகின்றார். மேற்கு நாகரிக மனிதன் ஒழுக்கப்பரிமானத்தை ( Moral Evolution) வலியுறுத்தி ஈற்றில் மனிதனை ஒரு நிர்வாணப் பொருளாக ஆக்கியுள்ள நிலையில்; ‘‘எதனையும் தாண்டிச் செல்வதே சுவாராஷ்யமானதும், புதுமையானதும் என்ற வகையில் நிரந்தர ஒழுக்க கோவைகள் என எதுவுமே கிடையாது என்பதான கருத்துத்தையும் இக்கதை வடிவத்தின் பல சம்பவங்கள் நிராகரிக்கின்றன. இயற்கையுடன் இணைந்த காதல் வாழ்வியலின் மானுடதர்மம் இங்கே வலியுறுத்தப்படுகின்றது.

இவ்வகையில் பின்நவீனத்துவ கருத்தியல் தொடர்பான மற்றொருவகை விமர்சனப் பாங்கிற்கான ஆதாரங்களையும் நூலாசிரியர் கதைச் சம்பவங்களினூடாக எளிமையான வாசகனைக் கவரும் சொல்லாடல்கள் மூலம் எடுத்துக் காட்டுகின்றார். உயர் இரசணைத்தன்மையும் சிறந்த மனப்பாங்கு உள்ளவர்களே புத்தாக்கத்திறன் உடையவர்களாக மிளிர்வார்கள். தம்மிடமுள்ள எண்ணக்கருக்களைக் கொண்டு, தனது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட வாழ்க்கை அனுபவங்களை தான் அடைந்த

இரசனை அனுபவங்களை வாசகர்களின் உள்ளத்தில் தோற்றுவிக்க இந்நூலாசிரியர் பலவித ஊடகங்களையும், நுட்பங்களையும் பயன்படுத்தி எடுத்த பிரயத்தனங்கள் இக்கதையாக்கக் களங்களில் பிரதிபலிக்கின்றன.

அனுபவம், இரசிப்பு, அவதானிப்பு, வாய்ப்புப்பார்த்தலும் பிரயோகமும் புத்தாற்க்கத்திறனின் அடிப்படைகளாகும். இது சமுதாயம் நோக்கிய அதன் மெய்மை குன்றாத வகையில் உண்மை, அழகு, நன்மை, அறம், உணர்ச்சி ஆகிய கூறுகளுடன் சமுதாயத்தை அதன் முழு நிலையில் தரிசிக்க வைப்பதாகவும் இலக்கியங்கள் அமைய வேண்டும். இப்பார்வையிலிருந்து இக்கதையாக்கத்தை நோக்குகின்ற போது பல விதமான ஆர்வங்கள் எழுகின்றன. ஒரு படைப்பை அதன் பயன்பாடு கருதி திறனாய்வு செய்யப்படுதலை பயன்வழிக் கொள்கையாகின்றது. இதில் அழகியற் கூறுகளை விட படைப்பினால் வாசகன், கலைஞன் எய்தும் பயன் உளத்திருப்தி முதனிலைப்படுகின்றது.

இந்நிலையிலிருந்து நோக்குகின்ற போது சமுதாயத்தை அதன் இயல்பு நிலையிலிருந்து நோக்கி ஆண், பெண் உறவு நிலைப் பிரதிபலிப்புக்கள், நடைமுறை வாழ்வியல் உண்மைகள், அறிவுசார் கற்பனைகளின் தளத்தில் இன்பியலை மையமாக வைத்து நூலாசிரியர் தொகுத்துள்ள கதைவடிவங்கள் சமூக அசைவியல் உணர்வோட்டங்களுக்கான தெளிவுகளை இயம்பி நிற்கின்றன. கதை நடைபெறுகின்ற களம், சூழல், பண்பாட்டு செயலாற்றுகைகள் வாசகனின் இரசனையையும் இரச்சித்தல் உணர்வையும் அதிகரிக்கச் செய்கின்றது.

இங்கு இரசித்தல் என்பது ஒரு மானசீகமான செயற்பாடாகவே நோக்கப்படுகின்றது. அதனைச் சொற்களால் விளங்குவதென்பது கடினமாகவுள்ளது. கதையை வாசிக்கும் போது ஏற்படும் அனுபவமாக அது பரிணமிக்கும் மனிதன் யாதேனும் ஒரு நிகழ்வுப் புலன்களை வருடுவதால், ஒருவருக்குள் மானசீகமாக ஏற்படும் திருப்தி இரசித்தல் என்ற வகையில் திருக்குறளில் காமத்துப்பால் குறள்களின் பிழிவை தனது கதையாக்கத்தினூடாக எடுத்தியம்பியிருக்கும் நூலாசிரியர் திரு.கே.வி.குணசேகரம் அவர்களின் ஆக்கத்திறன், பன்முகப்பாங்கான எழுத்தாற்றல் போற்றுதலுக்குரியது. மேலும் பல புத்தாக்கங்களைத் தமிழுக்குத் தரும் ஆற்றல்களையும், ஆளுமைகளையும் உடைய அவர் பணி தொடர இறையருள் துணைநிற்பதாக.


பாலசுப்பிரமணியம் தனபாலன்<br>
BA(Cey), DipinEd, M.phil in Education,<br>
உபபீடாதிபதி(கல்வியும் தரமேம்பாடும்),<br>
தேசிய கல்வியல் கல்லூரி,<br>
கோப்பாய்,<br>
யாழ்ப்பாணம்.

## *அணிந்துரை*

தமிழின் சுவையிலும் தமிழர் நலத்திலும் தளராத பற்றுக் கொண்ட பாரதிதாசன்

"துன்பநேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்கமாட்டாயா?"

என்றுதான் பாடினான். பழந்தமிழரின் பண்பாட்டு விழுமியங்கள் வாழ்வியல் மரபுகள் சீரழிந்து செல்லும் இக்காலத்தில், இச்சீரழிவை நிவர்த்தி செய்யும் நோக்குடன் ஒரு தலைவனும் தலைவியும் எவ்வாறு இன்பம் சேர்க்க வேண்டும் என்று இன்பத்துப்பால் அதிகாரத்தில் வள்ளுவன் அன்று கூறினானோ? அதை தனது கதை மூலம் இன்று மீட்டெடுத்திருக்கின்றார் இந்நூலாசிரியர் கே.வீ.குணசேகரம்.

தமிழரது வாழ்க்கை முறைமைகள் மீட்டெடுக்கும் நோக்கில் வாசகர் அனைவர்க்கும் துன்பம் சேர்ந்துள்ள இந்நாட்களில் இன்பம் சேர்ந்திருக்கிறார் நூலாசிரியர்.

இவர் எழுதிய பல கதைகளில், நாவல்களில் சமூக சீரழிவைச் சாடி அவற்றை செப்பனிடும் நோக்கிலேயே அவரது அக்கதாபாத்திரங்களின் அசைவுகள் தென்பட்டன. ஆனால் இந்நூலில் இவரது பாத்திரங்களின் அசைவுகள் தென்பட்டன. ஆனால் இந்நூலில் இவரது கதை எழுதும் பாணி இன்பத்துப்பாலில் ஒவ்வொரு குறளிலிலுமுள்ள தேனை வாசகர்கள் ஒரு துளியும் சிந்தாமல் நுகரும்படி செய்ததன் மூலம் தலைவனும் தலைவியும் எவ்வரையறைக்குள் இன்பம் சேர்க்கலாம் என்பதையும் இக்கதை மூலம் கூறியிருக்கின்றார்.

இன்பத்துப்பால் வாழ்வியலுக்கு எத்துணை முக்கியமானது என்று வள்ளுவன் எதை நினைத்து இயற்றினானோ, அதை அப்படியே இங்கு வரைந்துள்ளமை இவர் வள்ளுவனின் மனோநிலையை முற்றாக உணர்ந்ததன் இலட்சினை ஆகும்.

தலைவனும் தலைவியும் சேரும் போது அவ்விருவர் மட்டுமே இன்பம் நுகர்கின்றனர். ஆனால் இந்நூலாசிரியர் தனது பேனா முனையால் ஒரே நேரத்தில் பல்லாயிரக் கணக்கான வாசகர்களை இன்பம் நுகரவைத்துள்ளார். ஒரு கதாசிரியரிர் தான் கதை புனையும் நோக்கில் சுதந்திரமாகக் கதா பாத்திரங்களை நகர்த்திச் செல்லலாம். ஆனால் இந்நூலாசிரியரின் இந்நூல் தொடர்பான பங்குபணி கம்பி ஒன்றில் ஏறி நின்று சமநிலையில் நடக்கும் ஒருவரின் சபதம் போன்றது. குறள் சொல்லும் வரையறைக்குள் மட்டுமே கதாபாத்திரங்களை நகர்த்திச் செல்வது என்பது அவ்வகையான சிக்கல் நிறைந்ததே.

வள்ளுவரது கருத்துக்களைச் சிதைவுறாமல் அகத்திணை மரபுகள் தனிமணம் கமழும் விதமாக அக்காலத்து நிகழ்வுகளை இக்காலத்தோடு பொருத்தித் திறம்பட கதையூடாக எடுத்தியம்பும் திறனை இங்கு காண்கிறேன்.

கவிஞன் சுதந்திரம் உள்ளவன் சுதந்திரமாகச் செயற்படுவானாகில், தான் கண்டதைத் தன் கருத்தில் அமைத்துப் பாடுவது அவனுக்கு எளிது. ஆனால் இங்கு குணசேகரம் அவர்கள் வள்ளுவரது கருத்துச் சிதைவுபடாமல் காலத்தின் தேவைக்கேற்ப மிகமிக நுணுக்கமாகவே செயற்பட வேண்டிய நிலையில் தான் இதனைச் செய்திருக்க வேண்டும் என்று நம்புகிறேன்.

காட்சி, ஐயம், தெளிவு, தேறல், பகற்குறி, இராக்குறி என்ற அகத்திணைப் பண்புகளையும் இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது. அவற்றை அடிப்படையாகக் கொண்டு கதையை அழகு தமிழில் நகர்த்தி இருக்கிறார். வள்ளுவன் இருந்தால் எப்படி இதற்குப் பாத்திர வடிவமைப்புக் கொடுப்பாரோ அதோ போன்று உயிர் துடிப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றது.

தகையணங்கு உறுத்துவதற்கு வள்ளுவர் எப்படிக் கற்பனை கண்டாரோ அதனை அப்படியே கருத்துக் களிப்பாக அமையாமல் ஐம்புலனுர்க்கும் விருந்தான சொல்லோவியமாகத் தந்திருக்கிறார். ஒவ்வொரு குறளமுதத்துக்கும் ஏற்ற பாத்திர வடிவமைப்பைச் சிருஷ்டித்து தந்துள்ளார். சில இடங்களில் நாமே நேரில் சென்று அக்காட்சியை நம் இரு கண்களாலும் நுகர்ந்தது போன்ற பெருமையை அடைகிறோம்.

இப்படியான இலக்கிய கர்த்தாவான கே.வி.குணசேகரம் அவர்களை நான் சிறுவயதில் இருந்தே அறிவேன். அவர் இலக்கிய ஆர்வம் கொண்டவர். பல பத்திரிகைகளிலும் அவரது கதைகள் வெளி வந்து பாராட்டைப் பெற்றன. நான் அவரது படைப்புக்களைப் படிப்பதில் தனிஈடுபாடு உள்ளவன்.

காலத்தின் தேவை கருதிச் சமுதாயத்தைச் சென்றடையக் கூடிய விதத்தில் தனது இலக்கியத்தை தகர்த்திச் செல்பவனே சிறந்த இலக்கிய கர்த்தா ஆகிறான். அவனது படைப்பாற்றல்கள் சகல மக்களையும் சென்றடைந்தால் தான் கதாசிரியன் வெற்றி பெற்றவனாகக் கருதப்படுகிறான். இந்த வகையில் எனது நண்பன் கே.வி.குணசேகரம் ஒரு சிறந்த எழுத்தாளன் என்ற பெருமையை விட சிறந்த இலக்கிய கர்த்தா என்று கூறிக் கொள்வதையே நான் விரும்புகிறேன்.

காலத்தால் அழியாமல் என்றும் நிலைத்திருக்கும் திருக்குறளுக்குப் பலர் பல காலப்பகுதிகளில் பல மொழிகளிலும் மொழி பெயர்த்துள்ளனர். வேறு பலர் அதற்கு தம்மால் இயன்ற அளவு உரைகளையும் ஆக்கினர். ஆனால் எனது நண்பன் தான் படித்துச் சுவைத்த பொய்யா மொழியை சகல மக்களும் நயந்து இன்புற வேண்டும் என்பதற்கு அமைவாக கதைக்களஞ்சியமாகத் தந்துள்ளார். வள்ளுவனது வாக்கில் அட்சரம் பிழையாமல் அவர் தம் கருத்தை கதைக் களஞ்சியமாகத் தந்த எனது நண்பனைத் தமிழ் நல்லுலகம் என்றும் மறவாது. முதலில் அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இரண்டுக்கும் தக்க வகையில் கதை ஆக்கினார். அதனை யாவரும் படித்து இன்புற்றனர். பலரது பாராட்டுக்களையும் பெற்ற குணசேகரத்தைக் காமத்துப்பாலைக் கதையாக எழுத வேண்டும் என நான் உட்பட பல நண்பர்கள் வேண்டியதற்கு அமைய இதனை அவர் ஆக்கினார்.

காமத்துப்பாலில் அகத்திணை மரபுகள் செப்பப்படுகின்றன. அகத்திணை மரபானது தலைவனும், தலைவியும் தம்முள் கூடிய கூட்டத்தினை பிறருக்கு உரைக்க முடியாமல் தம்முள் தாமே மயங்கி இன்புறுவது ஆகும். இதனை வாசகர்கள் படித்து இன்புறும் வகையில் உணர்வுகளை வெளிக்காட்டியுள்ளார் குணசேகரம் அவர்கள். இது அவரது படைப்பாற்றலையே பறைசாற்றுகிறது. ஓர் இலக்கியம் எக்காலத்தில் எழுந்ததோ அக்காலத்தின் தன்மைகளைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகவே அது அமையும்.

இவரது படைப்புக்கள் அக்காலத்தை இக்காலத்துக்கு செந்தமிழில் தருவனவாகவே அமைகின்றன என்பதில் ஐயம் இல்லை. இவரது பணி மேன் மேலும் தொடர வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**எஸ். மகேஸ்வரதாசன்,**
**முதல்வர்,**
**அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்,**
**ஸ்ரீலங்கா.**

## என் உரை

இன்பத்துப் பால் 81 ஆம் குறள்பாவில் இருந்து 250 ஆம் குறள்பாவரையான கதைகள் தற்பொழுது மணிமேகலைப் பிரசுர நிறுவனத்தினரால் வெளியிடப்படுகின்றது. இதற்கு முன்பு 460 குறள் பாக்களுக்கான கதைகள் வெளி வந்து விட்டன. முன்னைய நூல்களுக்குத் தந்த வரவேற்பை வாசகர்கள் இதற்கும் தரவேண்டும்.

தற்பொழுது பொருட்பால் குறள்பாக்களுக்குக் கதை எழுதி வருகிறேன். முதலாவது குறளில் இருந்து 1330 வரையான குறள் பாக்களுக்கும் தொடர் கதையாகவே இக்கதைகளை எழுதி வருகிறேன். குறள் பல வடிவங்களை இது வரை பெற்றுள்ளது. இது புதிய வடிவம். ஒரு மனிதன் அற நெறியில் நின்று பொருள் சேர்த்து இன்பமாக வாழ வேண்டும் என்ற வள்ளுவனின் கருத்தை ஆதாரமாக வைத்து எமது மக்களின் பல்வேறுபட்ட குணாதிசயங்களைக் கதைகளாக எழுதியுள்ளேன். வேத உபநிடத சாரத்தை விளக்கப் புராணக் கதைகள் எழுதப்பட்டதைப் போல, திருக்குறளின் அறக் கருத்துக்களை மக்களின் அன்றாட வாழ்வுடன் பின்னிப் பிணைத்து அவர்களுக்கு விளங்கும்படி கதைகளாக எழுதியுள்ளேன். அறத்துப் பாலில், பொருட்பாலில் கூறப்பட்ட அற ஒழுக்க சிந்தனைகளுக் கேற்ப இன்பத்துப் பாலில் நாயகனும் நாயகியும் வாழ்கின்றனர்.

காதல் அசிங்கமானது, அருவருக்கத்தக்கது என்ற நிலையை நீக்கி அத்தியாவசியமானது, புனிதமானது என்ற நிலையை மக்களுக்குத் தெரியப்படுத்துவதே எனது நோக்கம். காதல் இல்லாவிட்டால் உலகம் இல்லை என்ற கருத்துடையது திருக்குறள். காதலால் தான் உலகம் சமநிலைப்படுகிறது, நிலைத்திருக்கிறது என்ற கருத்தை வலியுறுத்துவதற்காகவே வள்ளுவர் இன்பத்துப் பாலை திருக்குறளுக்குள் சேர்த்திருக்கிறார். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷாத்தங்களை இந்து மதம் வற்புறுத்துகிறது. ஆனால் வள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பால்களுக்குள் வீட்டின்பத்தை அடக்கியுள்ளார். வீடு, பூமியிலே உள்ளது. ஒழுக்கமான வாழ்க்கை வாழ்வதன் மூலம் ஒவ்வொருவரும் தத்தமது வீட்டிலேயே மோட்ச இன்பத்தை அடையலாம் என்கிறார் வள்ளுவர். இன்று உலகம் வீட்டுக்குள்ளேயே இருக்கிறது. ஒரு மனிதன் தனது சகல தேவைகளையும் தனது வீட்டிலிருந்தே நிறைவேற்றும் காலம் இது. 2000 வருடங்களுக்கு முன் வள்ளுவர் இதையே நுட்பமாகத் தனது 1330 பாக்கள் மூலம் கூறியுள்ளார்.

இந்நூல் பல அறிவியல், உளவியல் நூல்களைப் படித்து எழுதப்பட்டது. கதை விளக்கம், குறள், உரை யாவும் ஒன்றாகத் தொகுக்கப்பட்டுள்ளது. மிகவும் அழகான முறையில் மணிமேகலைப் பிரசுரத்தினர் எனது குறள் கதைகளை வெளியிட்டு வருகிறார்கள். இதை நான் தாயகத்தில் வெளியிடுவது எனது அன்புக்குரிய தமிழக அறிஞர்கள் இதைப் பற்றிய கருத்தைக் கூற வேண்டும் என்பதற்காகவே.

மிகவும் அழகாகவும், அருமையாகவும் கணனியில் புதிய முறையில் பதித்துத் தந்த செல்வி க.சுகந்தினிக்கும், மணிமேகலைப் பிரசுர முகாமைப் பணிப்பாளர் திரு.ரவிதமிழ்வாணனுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். மீண்டும் பொருட்பால் கதைகளோடு சந்திப்பேன்.

வணக்கம்

கே.வி.குணசேகரம்,
அதிபர்,
கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்,
ஸ்ரீலங்கா.

## ஊற்று நீர்

"வித்தி எனக்கும் பயமாக இருக்கடீ. நான் தனிமையில் இருக்கும் போது யோசித்துக் கொண்டிருப்பேன். சில சமயம் என்னையும் அறியாமல் கதைப்பேன்; சிரிப்பேன். ஆனால் இதெல்லாம் எனக்குத் தெரியாது. நேற்றுக் காலை உணவை அம்மா எடுத்துத் தட்டில் வைத்திருக்கிறார். மூன்று நான்கு தினங்கள் அவரை நான் சந்திக்காததால் இரவு முழுவதும் நித்திரை கொள்ளவில்லை. இரவு முழுவதும் அவர் என்னை நித்திரை கொள்ள விடவில்லை. நாம் சந்திக்கும் போது தூர இருந்தே கதைப்போம். கடற்கரையிலும் பூங்காக்களிலும் தெருக்களிலும் சனசந்தடி அதிகமாக இருப்பதால் நெருங்கியிருந்து கதைக்கப் பயம். அத்துடன் அதிக நேரம் கதைக்க முடியாது. ஆனால் கனவில் வந்து அவர் தட்டி எழுப்பி என்னுடன் உறவாடுகிறார். நெருக்கமாக இல்லை. மிகமிக நெருக்கமாக அவர் எனக்கருகில் இருந்து என்ன என்ன வெல்லாமோ சொன்னார். நான் கூச்சமிகுதியால் அவதிப்பட்டேன். கனவில் வந்தாலும் மிகவும் பொல்லாதவரடி அவர். கதைக்கக் கூடாதவற்றை யெல்லாம் கதைக்கிறார். இதனால் அடிக்கடி எனது உறக்கம் கெட்டு விடுகிறது. இதனால் அன்று எழ நேரமாகி விட்டது. அம்மா சுடுநீர்ப் போத்தலில் ஊற்றி வைத்த தேநீரையும் குடிக்க மறந்து விட்டேன். சாப்பிட மறந்த போதும் எனக்குப் பசி எடுக்கவில்லை. அவரை நினைத்தால் எனக்கு நேரம் போவது தெரிவதில்லை. அது பரவாயில்லை. எனது மனம் மட்டுமல்ல வயிறும் உணவை மறந்து விடுகிறது''. என்று அர்ச்சகா கதைத்துக் கொண்டிருக்கும் போது வித்தியா குறுக்கிட்டுச் சொன்னாள். "நான் சரியாகச் சாப்பிட்டு எத்தனை நாளாகிறது. தெரியுமா.? அவரை நினைத்தால் பசிக்காது; தூக்கம் வராது; எந்தக் காரியமும் செய்ய முடியாது; உடல் மரத்து விறைத்து விட்ட நிலையே ஏற்படும். எத்தனையோ நாட்கள் நினைக்ககூடாதென்று கட்டுப்பாடாக இருந்தாலும் ஓரிரு நிமிடங்களில் மனம் துடிதுடித்து அவரிடம் சென்றுவிடுகிறது. அதனால் தான் எனக்கு இவ்வளவு கஷ்டம்'' என்றாள் வித்தியா.

''உன்னுடைய பிரச்சினை வெளிப்பட்டு விட்டது. ஆனால் எனது நிலை அப்படியானதல்ல. இன்று காலை அம்மா மேசையில் மூடப்பட்டிருந்த உணவைத் திறந்து பார்த்து விட்டுக் கேட்டா;''ஏன் பிள்ளை சாப்பிடவில்லை'' என்று நான் தடுமாறினாலும் சமாளித்துக் கொண்டு; ''பிந்தி எழுந்ததால் பசிக்கவில்லை. கொஞ்சம் பொறுத்துச் சாப்பிடுகிறேன்'' என்றேன். அம்மா நம்பி விட்டா''.

''இன்னொரு நாள் அவரின் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். படங்கள் சேமித்து வைத்திருக்கும் சாதனத்துள் பாடசாலையில் பிடித்த எனது படம் ஒன்றிற்குக் கீழ் நகுலனின் படத்தை ஒளித்து வைத்துப் பார்ப்பேன். அம்மா அதை அவதானித்து விட்டுக் கேட்டா; ''எந்த நேரமும் படங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய். யாருடைய படம்'' என்றவாறு எனக்கு அருகில் வந்தா. நான் தடுமாறிப்போனேன். எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது அவரின் படத்தை உள்ளே தள்ளி விட்டு காட்டினேன். அம்மா வாங்கிப் பார்த்துவிட்டு; ''பாடசாலை வாழ்வை உன்னால் மறக்க முடியவில்லை'' என்று கூறி விட்டுச் சென்றா. இப்படி எத்தனையோ முறை நான் அகப்படாமல் தப்பியுள்ளேன். அவர் மீது எனக்கிருக்கும் காதல் என்ற நோயை பிறர் அறியாமல் என்னால் மறைக்க முடியும். ஆனால் இந்நோயானது இறைக்க இறைக்கச் சுரக்கும் கிணற்று நீர் போல் இதயத்துள் சுரந்து பெருகிக் கொண்டே இருக்கிறது. எந்த வகையாலும் இதை என்னால் தடுக்க முடியவில்லை. என்ன செய்வது'' பெருமூச்சு விட்டாள் அர்ச்சகா.

''உனது நிலை இத்தகையது ஆனால் எனது நிலை எப்படி இருக்கும். என்று நினைத்துப் பார்த்தாயா? காதல் இனிமையானது ஆனால் பிரிவு கொடுமையானது'' என்று அழுதாள் வித்தியா.

**1161. மறைப்பேன்மன் யான்இ∴தோ நோயை; இறைப்பவர்க்கு**
**ஊற்று நீர் போல மிகும்.**

*இக்காம நோயைப் பிறர் அறியாமல் நான் மறைப்பேன். ஆனால் இறைக்க இறைக்க ஊறும் ஊற்று நீரைப் போல இது மேலும் மேலும் பெருகிக் கொண்டிருக்கிறது.*

## முடியவில்லை

பல நாட்களாக வித்தியாவைக் காணாமையால், வித்தியாவைத் தேடி வந்தாள் வளர்மதி. வளர்மதி வித்தியாவின் உயிர்த் தோழி. ஆரம்ப வகுப்பில் இருந்து பல்கலைக்கழகம் வரை ஒன்றாகப் படித்தவள். வித்தியா கஜேந்திரனைப் பற்றிக் கூறுவாள். வளர்மதி தனது காதலனான ஆதவனைப் பற்றிக் கூறுவாள். இருவரும் தமக்குள்ள இன்ப துன்பங்களைப் பகிர்ந்து இன்பமடைவார்கள்.

வளர்மதிக்கு ஆதவனின் மேல் தீவிரமான காதல் ஏற்பட்டது. ஆனால் ஆதவன் ஆரம்பத்தில் அவளை விரும்பவில்லை. தானுண்டு தனது படிப்புண்டு என்று இருந்தான். அத்துடன் அவனுக்குப்

பெண்களைக் கண்டால் அளவுக்கதிகமான பயம், வெட்கம், நாணம் யாராவது பெண்கள் வலியச் சென்று கதைத்தாலும் கதைக்கமாட்டான். தலையைக் குனிந்து கொண்டு செல்வான்.

“உனது கையைப் பிடித்து யாராவது ஒரு பெண் இழுத்தாலும் நீ முனிவன் மாதிரித்தான் இருப்பாய்” என்று கஜேந்திரன் அடிக்கடி அவனைக் கேலி செய்வான். வளர்மதியின் பெரு முயற்சியின் பயனாக ஆதவன் அவளோடு தலை குனிந்தபடி நின்று இரண்டொரு வார்த்தைகள் பேசுவான். அதற்குள் அவனது உடல் வியர்வையால் நனைந்து விடும். வளர்மதி ஒவ்வொரு நாளும் என்னென்ன கதைக்க வேண்டு மென்று திட்டமிட்டு வந்து கதைப்பாள். அவள் கதைக்கும் கதைகளை நடுங்கியபடி கேட்பான் ஆதவன். அவள் கேட்கும் கேள்விகளுக்கு “ம்” “சரி” என்று மட்டும் சொல்வான். அதனால் வளர்மதிக்கு ஏமாற்றம் தான் கிடைக்கும். எனினும் அவனின் மேலுள்ள மோகத்தால் அவள் அவனைச் சுற்றிச் சுற்றி வருவாள் வாயோயாமல் கதைப்பாள். ஆனால் ஆதவன் திகைத்துப் போய் நிற்பான். இருவரும் கதைப்பதை யாராவது கண்டு விட்டு வீட்டாருக்குச் சொன்னால் பெற்றோர் கண்டிப்பார்கள். என்ற பயம் அவனது நெஞ்சை வாட்டும். காதலிப்பது கேவலமானது; பெற்றோரின் மனதைப் புண்படுத்துவது; பெற்றோரின் விருப்பத்திற்கிணங்க அவர்கள் தீர்மானிக்கும் பெண்ணைத் திருமணஞ் செய்தால் தான் வாழ்வு சிறக்கும் என்று நினைப்பவன் ஆதவன். வளர்மதி முழுமூச்சுடன் விடாப்பிடியாக அவனைச் சுற்றிச் சுற்றி வந்ததாள் ஒருவாறு மெல்ல அவன் வளர்மதியுடன் சிரிக்கத் தொடங்கினான். பின் மெதுமெதுவாக இரண்டொரு வார்த்தைகள் கதைத்த போதும் இன்னும் சரியான நிலைக்கு அவன் வரவில்லை.

வித்தியாவின் வீட்டுக்கு வந்த வளர்மதி நெடுநேரமாக வித்தியாவைப் பார்த்துக் கொண்டு நின்றாள். அர்ச்சகா அங்கு நின்றமையால் அவளால் வித்தியாவுடன் கதைக்க முடியவில்லை. “யார் இவள் இங்கு ஏன் நிற்கிறாள். வந்தால் வந்த விஷயத்தை முடித்துக் கொண்டு போக வேண்டியது தானே” என்று நினைத்தாள். வெகு நேரமாக வளர்மதி பேசாததால் வித்தியா சொன்னாள்; “அவள் எனது இனத்தவள். இவ்வளவு காலமும் கொழும்பில் இவர்களது குடும்பம் இருந்தது. ஒரு வாரத்திற்கு முன் தான் இங்கு வந்தனர். அந்த ஒரு வாரத்துக்குள் நகுலனை வளைச்சுப் பிடித்து விட்டாள். எத்தனை பெட்டையள் நகுலனில் ஆசைப்பட்டவையென்று உனக்குத்தெரியும் தானே இவள் அதிட்டக்காரி. நம்பிக்கைக்குரியவள் அத்துடன் ஆதவனைப் பற்றி இவளுக்குச் சொல்லிச் சிரிக்கிறனான். நீ சொல்ல வேண்டியதைச் சொல்லு. இப்ப இவள் தான் எனக்கு உதவி” விரத்தியுடன் சிரித்தாள் வித்தியா.

“கஜேந்திரனை நேற்றுக் கண்டனான். எல்லாம் சொன்னவர். நல்லாய் மெலிஞ்சிட்டார். தாடியும் ஆளும் பார்க்கச் சகிக்கவில்லை” என்ற வளர்மதி சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டுச் சொன்னாள்; “ எனது காதல் நோயை பிறர் அறியாமல் என்னால் மறைக்க முடியவில்லை. எனது இனத்தவன் ஒருவன் தன்னைத் திருமணம் செய்யச் சொல்லி வற்புறுத்துகிறான். வீட்டாருக்கும் விருப்பம். என்னுடைய நடத்தையைப் பார்த்து வீட்டார் சந்தேகிக்கிறார்கள். எப்படி இதை மறைக்கிறது. அத்துடன் இந்நோயை எனக்குத் தந்த என்னுடைய அவருக்கு எப்படிச் சொல்வது. சொல்ல நாணமாக இருக்கிறது” என்று சிணுங்கினாள் வளர்மதி.

**1162. கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு**
**உரைத்தலும் நாணுத் தரும்.**

*இக்காம நோயை பிறர் அறிந்து கொள்ளாமல் மறைக்கவும் முடியவில்லை; இந் நோயை எனக்குத் தந்த காதலருக்குச் சொல்லவும் நாணமாக இருக்கிறது.*

**காவடித்தண்டு**

“ம்” காதலித்தால் கவலைதான். எமது பிரதேசப் பெற்றோரில் பெரும்பாண்மையானவர்கள் காதலிப்பது தவறு என்று நினைக்கிறார்கள். ஒரு பெண் காதலிக்கும் ஆண், பெரிய பணக்காரனாகவும் உயர்ந்த உத்தியோகத்தனாகவும் இருந்தாலும் கூடத் தமது கௌரவத்திற்காக அக்காதலை பெற்றோரும் உறவினர்களும் எதிர்கிறார்கள். அதே போல் ஓர் ஆண் உயர்ந்த குடும்பத்திலுள்ள பெண்ணை விரும்பினாலும் கூட ஆரம்பத்தில் எதிர்க்கிறார்கள். ஆனால் ஒரு ஆணோ பெண்ணோ தகுதியில்லாதவர்களை விரும்பி உடன் சென்றால் பின் ஏற்றுக் கொள்கிறார்கள். இது ஏன்”? என்று கேட்டாள் அர்ச்சகா.

வித்தியா சிரித்தாள். பின்பு “அப்போ என்னைக் கஜேந்திரனுடன் செல்லச் சொல்கிறாய்” என்றாள்.

“விளங்கிக் கொண்டால் சரி. எந்தப் பெற்றோரும் காதலை மகிழ்வுடன் வாழ்த்தி வரவேற்றதாக நான் அறியவில்லை. காதலிப்பது குற்ற மென்றும், அது குடும்பக் கௌரவத்தைப் பாதிக்கு மென்றும் தான் பலர் நினைக்கிறார்கள்” என்றாள் அர்ச்சகா.

“இப்ப நீ இப்படிச் சொல்லுவாய். நகுலனைத் திருமணம் செய்து பிள்ளை குட்டிகள் பிறந்த பிறகு நீயும் அப்படித்தான் சொல்லுவாய். ஏனென்றால் காதலித்துத் திருமணம் செய்யிற பெற்றோர்தான் காதலை முழு மூச்சுடன் எதிர்க்கிறவை” என்றாள் வித்தியா.

“நான் எதிர்க்க மாட்டன்” நாணிக் கோணினாள் அர்ச்சகா.

“நாங்கள் இருவரும் வந்தவளைக் கவனிக்காமல் கதைக்கிறம். நீ சொல்லு மதி” என்றாள் வித்தியா.

“ஆதவனோடு கலகலப்பாக ஐந்து நிமிடங்கள் கதைக்க முடியாமல் இருக்குதடி. என்னைக் கண்டால் பேயைக் கண்ட மாதிரி வெருளுறார். போனவாரம் யாழ்ப்பாணத்திலுள்ள கடையொன்றுக்குள் கண்டேன். அவர் என்னைத் தெரிந்தமாதிரிக் காட்டிக் கொள்ளவில்லை. நான் அவரின் அருகில் சென்றேன். அவரின் உடல் நடுங்குவது எனக்குத் தெரிந்தது. அவர் பொருட்களை வாங்காது சென்று விட்டார். நான் அவரைப் பின் தொடர்ந்து சென்று மெல்ல அவரின் பெயரைச் சொல்லி அழைத்தேன். நின்று திரும்பிப் பார்த்தார். அருகில் சென்று; “ஏன் பயப்படுகிறீர்கள் என்று கேட்டேன்” அவர் அவசரமாகப் போகவேண்டு மென்றார். எனக்கு கோபமும் அழுகையும் வந்தது. கண்கள் கலங்கிவிட்டன. “வேறு எதுவும் சொல்ல வேண்டாம். நான் உங்களைக் காதலிக்கிறேன். உங்களுக்கு என்னைப் பிடித்திருக்கா.” என்று கேட்டேன். ‘பிடித்திருக்கு’ என்று கூறி விட்டுச் சென்று விட்டார்” என்றாள் மதி.

“கஜேந்திரனாக இருந்தால் வித்தியாவைக் கண்டவுடன் பெருமகிழ்வடைந்து அவளுக்கு ஏதாவது ஒரு பொருள் வாங்கிக் கொடுத்திருப்பார். அத்துடன் குளிர்பானக் கடைக்கு அழைத்துச் சென்று குளிர்பானமும் வாங்கிக் கொடுத்திருப்பார். இவ்வளவுக்குமிடையில் பத்துத்தர மென்றாலும் அவளைத் தொட்டிருப்பார்” என்றாள் அர்ச்சகா.

பெருந்துயரத்தின் மத்தியிலும் வித்தியாவுக்குச் சிரிப்பு வந்தது; “அவள் தன்னுடைய அனுபவத்தைச் சொல்கிறாள். கஜேந்திரன் கண்ணியமானவர். என்னைத் தொட மாட்டார். நகுலன் தான் தொட்டுப் பாத்திருக்கிறான்” என்றாள் வித்தியா.

“என்னால் அவரைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அவரைத் தேடி அவர் செல்லும் இடங்களுக்குச் செல்வேன். அவர் என்னுடன் கலகலப்பாகக் கதைக்காததால் அவருடன் கதைக்க நாணமாக உள்ளது. அவரின் நிலையால் வாடி மெலிந்த உடம்பில் என் உயிரைக் காவடித்தண்டாய்க் கொண்டு காதல் நோய் ஒரு பக்கமாகவும் நாணம் மற்றொரு பக்கமாகவும் தொங்கிச் சித்திரவதை செய்கிறது” என்றாள் வளர்மதி.

**1163. காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்**
**நோனா உடம்பின் அகத்து.**

*காம நோயால் வாடி மெலிந்த என் உடம்பில் எனது உயிரைக் காவடித் தண்டமாகக் கொண்டு காம நோயும் நாணமும் இரு பக்கமும் தொங்குகின்றன.*

## தோணி இல்லை

“அழகான பெண்களைக் கண்டால் அசடு வழிய அலட்டுற இக் காலத்து ஆண்களுள் ஆதவன் வித்தியாசமானவராக இருக்கிறார். இப்படியும் ஓர் ஆண்மகன் இருப்பானா...? ஓர் ஆண் நான்கு நாட்கள் பின்னால் திரிந்தால் மயங்கும் பெண்கள் இருக்கும் இக்காலத்தில் பல மாதங்கள் பின்னால் திரிந்தும் பயப்படும் ஆண்கள் இருக்கிறார்களா? எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது” என்றாள் அர்ச்சகா.

“நல்லூர்த் திருவிழாவில் நான்கு நாட்கள் நகுலன் உன் பின்னால் திரிய, நீ மயங்கி விட்டாய். ஆனால் ஆதவன் அப்படியில்லை. ஆண்மையுள்ளவன் கற்பு நெறி தவறாதவன்” என்றாள் வித்தியா. அர்ச்சகா பலமாகச் சிரித்தாள்.

எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் அவருடன் கதைக்க முடியவில்லை. காயத்திரி ஆதவனின் தங்கையின் சிநேகிதி. அடிக்கடி ஆதவனின் வீட்டுக்குச் செல்பவள். பல நாட்களுக்குப் பின்பு தான் காயத்திரி ஆதவனின் தங்கை கவிதாவுடன் நெருங்கிய நட்புப் பூண்ட விஷயம் எனக்குத் தெரிய வந்தது. காயத்திரிக்கு எனது காதல் விஷயங்களைக் கூறி உதவி செய்யும்படி கேட்டேன். அவள் தன்னுடன் ஆதவனின் வீட்டுக்கு வரும்படி சொன்னாள். ஒரு நாள் நான் அவளுடன் ஆதவனின் வீட்டுக்குச் சென்றேன். அப்பொழுது தான் ஆதவன் குளித்து விட்டு ஈரம் துவட்டியபடி முற்றத்தில்

நின்றார். எங்களைக் கண்டதும் விரைவாக உள்ளே சென்று விட்டார். நல்ல உறுதியான உடல், உரமான தோள்கள், சிவந்த நெஞ்சில் இருந்த கருமையான முடி என்னைச் சற்றுக்கிறங்கச் செய்தது. அந்த ஒரு கணக்காட்சியை இப்போ நான் கனவில் தான் காண்கிறேன்....'' நிறுத்தினாள் வளர்மதி. அவளது விழித்திரைக்குள் ஆதவன் மேற் சட்டை இல்லாமல் தோன்றினான்.

அர்ச்சகா அவளைப் பார்த்தாள். அவளது சிவந்த கன்னங்கள் மேலும் சிவந்து கொண்டிருந்தன.; '' உன்னைக் கண்டு விட்டு அவர் ஓடி ஒளித்தாரா...? நீ அவருடன் கதைக்கவில்லையா?'' என்று கேட்டாள் அர்ச்சகா.

''வீதியில் கண்டாலே சிரிக்கமாட்டார். காணாதது போலச் சென்று விடுவார். அப்படியானவர் வீட்டில் கதைப்பாரா.....? காயத்திரி, அவர் வெளியே வரட்டும். என்று பல மணி நேரம் காத்திருந்தாள். ஆனால் அவர் வரவில்லை. ஆனால் கவிதாவுக்கு என்னைப் பிடித்து விட்டது. கலகலப்பாக கதைத்தாள். அவளுக்குப் பூக்களின் மீது கொள்ளை ஆசை என்பதைத் தெரிந்து கொண்டேன். அவர்களின் வீட்டு முற்றத்தில் விதம் விதமான பூங்கன்றுகள் பூத்துச் சிலிர்த்திருந்தன. அவளிடம் இல்லாத சில பூக்கன்றுகள் என்னிடம் இருப்பதாகச் சொன்னேன். உடனேயே அவள் என்னுடன் வரப் புறப்பட்டாள்; காயத்திரி; இப்பொழுது நாங்கள் வேறு ஓர் இடம் செல்கிறோம். நாளைக்கு உன்னை வந்து அழைத்துச் செல்கிறோம்'' என்றாள். கவிதா எனது வீட்டு விலாசத்தைக் கேட்டாள். நான் கொடுத்தேன். அன்று மாலை அவள் வீட்டுக்கு வரு முன் நான் பூத்தடிகளை வெட்டிக் கொண்டு அவளின் வீட்டுக்குச் சென்றேன். வாசலில் ஆதவன் இருந்தார். என்னைக் கண்டதும் பயந்து விட்டார். ''கவிதா எங்கே? அவளிடம் வந்தேன்'' என்றேன். அவர் பதில் எதுவும் கூறவில்லலை. உள்ளே சென்றார். அது எனக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தது. சிலகணங்களில் கவிதா மகிழ்வுடன் வந்து பூத்தடிகளைப் பெற்றுக் கொண்டு நன்றி தெரிவித்தாள். தேநீரும் தந்தாள். ஏமாற்றமாக இருந்தாலும் அவரை ஒரு முறை கண்டது இன்பத்தைத் தந்தது. என் நெஞ்சில் காதல் நோயாகிய பெருங்கடல் இருக்கிறது. ஆனால் அதை நீந்திக் கடப்பதற்கு தோணி இல்லையே. தோணியாக இருக்க வேண்டியவர் மண்குதிராக இருக்கிறார்'' என்று பெரு மூச்சு விட்டாள் வளர்மதி.

**1164. காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்**
**ஏமப் புணைமன்னும் இல்.**

*காமநோயாகிய பெருங்கடல் இருக்கிறது. ஆனால் அதைக் கடப்பதற்குரிய தோணி இல்லை.*

### என்ன செய்வார்?

வித்தியாவும் அர்ச்சகாவும் வளர்மதியும் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்தனர். அன்று ஆவணிச் சதுர்த்தி. நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய ஆவணிச் சதுர்த்தித் திருவிழாவை வித்தியாவின் குடும்பமே செய்து வந்தது. அது கஜேந்திரனுக்குத் தெரியும். இரண்டு வருடங்களாக கஜேந்திரன் ஆவணிச் சதுர்த்திக்கு நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்திருக்கிறான். அவன் வந்தால் அவனுக்கெனப் பிரத்தியேகமாகப் பிரசாதத்தை வாழையிலையில் வைத்து வித்தியா கொடுப்பாள். அவ் வேளையில் பிரசாதம் வாங்கும் சாட்டாகக் கஜேந்திரன் அவளது கையையும் சேர்த்துப் பிடிப்பான். சனக்கூட்டத்திற்கு மத்தியில் வாழையிலையோடு சேர்த்துப் பிடித்தமையை விலக்க முடியாது. அவதிப்படுவாள் வித்தியா. அப்போது அவளுக்குக் கடும் கோபம் வரும். எனினும் எதுவும் செய்ய முடியாது தவிப்பாள். மறு நாள் அவனைத் தனிமையில் சந்திக்கும் போது காரசாரமாயத் திட்டுவாள்; ''பகிடி சேட்டைகளுக்கும் ஓர் அளவு இருக்க வேண்டும். நேற்றுக் கோயிலில் இரண்டு நிமிடம் வரை வாழையிலையோடு சேர்த்துக் கையைப் பிடித்தீர்கள். எவ்வளவு சனம் கூடி நின்றதுகள். யாராவது கண்டால் நான் அம்மாவுக்கு என்ன சொல்ல முடியும்?. மறு நாள் கொழும்புக்கு அனுப்பி விடுவா. போன வரிசமும் இப்படித்தான் செய்தனீங்கள். உங்களுக்கு மனச்சாட்சி என்று ஒன்று இல்லையா.? தனிமையில் நாம் சந்திக்கும் போது சேட்டை சரசம் விட்டால் பரவாயில்லை. ஆட்களுக்கு முன்னால் எனக்கு வாற கோபத்திற்குச் செருப்புத்தான் கழற்ற வேண்டும்.''

''மனிசீன்ரை தாமரைப்பூப் போன்ற கால்களில் அணியப்பட்ட செருப்பு எனது கன்னங்களில் பட்டால் எவ்வளவு இன்பம் தெரியுமா?'' என்று சிரிப்பான்.

''உங்களுக்குக் கோபமே வராதா....? இப்படி ஏன் அசடு வழியுறியள்'' சீறினாள் வித்தியா.

“கோபம் வரும் வேளையில் உமது வனப்புக் கூடுகிறது. அழகான சிவந்த கன்னங்கள் மேலும் சிவக்க, சிவந்த உதடுகள் துடித்து விளையாட, கண்கள் நளின பாவங்களுடன் அசைய எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா..? அந்த அழகான அந்த கன்னத்தில் ....” முடிக்காமல் சிரித்தான் கஜேந்திரன்.

“உங்களுக்கு எந்த நேரமும் அந்தத் தியானம் தான். ‘சீ’ நீங்கள் ஓர் ஆண்மையுள்ள ஆம்பிளையா....?”

“நீர் எதையும் சொல்லலாம்” சிரிப்பான் கஜேந்திரன். கோயிலுக்கு வந்த வித்தியா சுற்றி வரப் பார்த்தாள். கஜேந்திரனைக் காணவில்லை. முன்னைய வருடங்களிலென்றால் அவள் வருவதற்கு முன்பே வந்து விடுவான். அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. மனதுள் பொங்கிப் பெருகிய துயரத்தைக் கட்டுப்படுத்த அவளால் முடியவில்லை. பூசை முடிந்த பின்பு குருக்கள் வீபூதி கொடுத்தார். மகா கணபதிக்கு நிவேதிக்கப்பட்ட பண்டங்கள் தாம்பாளத் தட்டில் கிடந்தன. வித்தியா ஒரு தலை வாழை இலையை எடுத்து இரண்டு மோதகங்களையும், மூன்று வடைகளையும் பொங்கலையும் எடுத்து அதில் வைத்து மடித்து அர்ச்சகாவிடம் கொடுத்து விட்டு மெதுவாகச் சொன்னாள். “கஜேந்திரன் வந்திருப்பார். பார்த்துக் கொடு”.

அர்ச்சகா அதைப் பெற்றுக் கொண்டாள். அன்று கஜந்திரன் கோயிலுக்கு வரவில்லை. கோயிலில் இருந்து புறப்படும் போது நகுலன் அங்கு வந்து ஒரு கடிதத்தை அர்ச்சகாவிடம் கொடுத்தான்.

வீட்டுக்கு வந்த வித்தியா கடிதத்தை யாரும் காணதபடி பிரித்துப் பார்த்தாள்; “என் அன்பே! என் உயிரே! நான் கோயிலுக்கு வந்து உமக்குத் துன்பத்தைத் தர விரும்பவில்லை....” மேலே வாசிக்க முடியாது தடுமாறினாள் வித்தியா; “அர்ச்சகா, இன்பமான நட்பின் போதே பிரிந்திருந்து பெருந்துன்பத்தை எனக்குத் தரும் எனது காதலர் தாங்க முடியாத துன்பத்தைத் தரும் பகை ஏற்பாட்டால் எனக்கு எத்தகைய பெரும் துன்பத்தைத் தருவாரோ” கலங்கினாள் வித்தியா.

**1165. துப்பின் எவன்ஆவர் மன்கொல் துயர்வரவு**
**நட்பினுள் ஆற்று பவர்.**

*இன்பமான நட்பின் போதே பிரிவால் பெருந் துன்பத்தை உண்டாக்கும் காதலர் துன்பம் தரும் பகையின் போது என்ன செய்வாரோ.*

## கடலிலும் பெரியது

சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டுக் கடிதத்தை ஆரம்பத்தில் இருந்து வாசித்தாள் வித்தியா; என் அன்பே! என் உயிரே! வாசித்து விட்டுக் கண்களை மூடினாள். வித்தியா. அவளது மூடிய கண்களுக்குள் அவ்வூர்க் கடற்கரை தோன்றியது. கடற்கரையை அண்டிய தென்னஞ் சோலை, அந்தக் குளிர்மையான சோலையின் கரையில் கைவிடப்பட்ட ஒரு மீன்பிடிவள்ளம் தெரிந்தது. கஜேந்திரன் பச்சை நிறக்கோடுகள் போட்ட வெள்ளைச் சட்டை அணிந்திருந்தான். அந்த வள்ளத்தின் மீது ஒய்யாரமாகச் சாய்ந்து அமர்ந்திருந்த அவன் முன்பை விட மிகவும் அழகாகத் தோன்றினான். முதன் முதலாக அன்று அவன் அணிந்திருந்த மூக்குக் கண்ணாடி அவனின் அழகை மிகைப்படுத்திக் காட்டியது.

“வித்தி” மெதுவாக அழைத்தான் கஜேந்திரன் அவனது வெப்பமான மூச்சுக்காற்று வித்தியாவின் கன்னங்களை தழுவிக் கடற்காற்றோடு கலந்தது; “உம்மைப் பார்த்துக் கொண்டு எவ்வளவு நேரமும் இருக்கலாம். நீர் தான் அம்மாவுக்குப் பயந்து ஐந்து பத்து நிமிடங்களில் ஓடி விடுகிறீர். நீர் சென்ற பின்பும் நான் இவ்விடத்தில் அமர்ந்திருப்பேன். இந்த வள்ளத்தில் சாய்ந்திருந்தால் உமது முதுகில் சாய்ந்திருப்பதைப் போன்ற பிரேமை எனக்கு ஏற்படும். எமது காதலை இந்த வள்ளம் தானே வளர்த்தது. இந்த வள்ளத்திற்குப் பேசும் சக்தியிருந்தால் நாம் கதைப்பதையெல்லாம் மற்றவர்களுக்குச் சொல்லிச் சிரிக்கும். நான் கதைக்கும் கதைகள்...” கஜேந்திரன் சிரித்தான்.

அவனது வெண்நிறப்பற்கள் மின்னலைப் போலப் பளீச்சிட்டன. உதடுகள் பிரிந்து நெடுந்தூரம் சென்றதால் இரு கன்னங்களிலும் குழி விழுந்தன. அவன் சிரிக்கும் போது குழிவிழும் கன்னங்களின் வனப்பில் மயங்கி அவனையே பார்த்துக் கொண்டு நிற்பாள் வித்தியா.

“இன்று நீர் மிகவும் அழகாக இருக்கிறீர். தலை சீவிய முறையும் இன்று கொள்ளை அழகாயிருக்கு. எனக்கு வேலை கிடைத்திருந்தால் கட்டிப்பிடித்துத் தூக்கிக் கொண்டு வீட்டை போயிடுவன்” பெருமூச்சு விட்டான் கஜேந்திரன்.

“வேலை இல்லாதவர்கள் சீவிக்கவில்லையா? எங்களது வீட்டுக்குப் பக்கத்தில் குடும்பம் ஒன்று புதிதாக வந்து குடியேறியிருக்கு. இருவரும் காதலித்திருக்கிறார்கள். இரண்டு வீட்டுப் பெற்றோருக்கும் அது விருப்பமில்லை. அதனால் இருவரும் புறப்பட்டு வந்து திருமணப்பதிவைச் செய்து விட்டுத் தனியாக வாழ்கிறார்கள். பையன் ஒரு வைத்தியரின் மகன். பட்டதாரி ஆனால் வேலை இல்லை. கச்சான் கடலை விற்கிறார்கள். நான் அவர்களுடன் கதைப்பேன். மிகவும் அன்பாக வாழ்கிறார்கள். “காதல் தான் வாழ்வு. என்னால் இவளைப் பிரிந்து வாழ முடியாது. எனது பெற்றோர் பெருஞ்சீதனத்துடன் எனக்குப் பெண் பார்த்தனர். எனக்குப் பெற்றோரை விட இவள் தான் முக்கியம். அதனால் அழைத்து வந்து விட்டேன். இரண்டொரு தினங்கள் பணமில்லாததால் கஷ்டப்பட்டோம். நான் இவளுக்காக எதையும் செய்வேன். பொய் சொல்லாது களவெடுக்காது வாழ்வது தான் முக்கியமே தவிர எந்தத் தொழிலையும் செய்யலாம்” என்றான். அதே போல என்னைக் கூட்டிக் கொண்டு போங்கோ. எனக்காக உங்களால் கடலை விற்க முடியாதா...?”

“என்னடீ கடிதத்தை வாசிக்காமல் முகட்டைப் பார்த்துக் கொண்டு முணுமுணுத்துச் சிரிக்கிறாய்” என்றவாறு வித்தியாவின் தோளைப் பற்றினாள் அர்ச்சகா. வித்தியா திடுக்கிட்டுப் போனாள். சற்றுத் தடுமாறியபடி “என்ன?” என்று கேட்டாள். அர்ச்சகா சிரித்தாள். “என்ன முணுமுணுக்கிறாய்” என்றாள்.

“நான் அவருடன் கூடி இருக்கும் போது கடலளவு இன்பத்தை அனுபவிப்பேன். அவரைப் பிரிந்தால் கடலை விடப் பெருந்துன்பம் என்னை வருத்துகிறது. அவரது கடிதத்தை வாசித்த போது பழைய சம்பவமொன்று நினைவில் வந்து இனித்தது” என்றாள் வித்தியா.

**1166. இன்பம் கடல்மற்றுக் காமம்; அ∴துஅடும்கால்**
**துன்பம் அதனின் பெரிது.**

*காமம் இன்பம் தரும்போது அதன் மூலம் வரும் இன்பம் கடலைப் போன்றது; அது வருத்துகின்ற பொழுது அதன் துன்பம் கடலை விடப் பெரியது.*

### பெரு வெள்ளம்

வித்தியாவின் முகத்தைப் பார்த்தாள் அர்ச்சகா. அவளின் முகத்தில் முன்பு தென்பட்ட துன்பத்தின் சுவட்டைக் காணவில்லை. முகம் பிரகாசமாக இருந்தது. அவளின் கண்களில் என்றுமில்லாத ஒரு மருட்சி. நினைவுகளுக்கே இவ்வளவு மாற்றமென்றால் நேரில் கண்டால் எப்படி இருக்கும். நினைக்க அர்ச்சகாவுக்கு மனம் இனித்தது. மூன்று தினங்களுக்கு முன்பு அர்ச்சகா நகுலனைச் சந்தித்தாள். அந்தச் சந்திப்பு அவளின் மனத்திரையில் அசைந்தது.

“வித்தியா பாவம். அவளை அவளது தாயும் மாமனும் கொடுமைப் படுத்துகின்றனர். அவளை அழைத்துச் செல்லத் துணிவில்லாத கஜேந்திரனுக்கு ஏன் காதல். வித்தியாவைத் தான் மறந்து விட்டதாகவும், அங்கஜனை திருமணம் செய்யுமாறு கூறும் ஒரு கடிதம் கஜேந்திரனிடம் வாங்கி வந்து தாருங்கோ. வித்தியாவை நான் சமாளிக்கிறேன். அவள் படும் வேதனையை என்னால் தாங்க முடியவில்லை”. ஆத்திரத்துடன் கூறினாள் அர்ச்சகா.

நகுலன் அழகாகச் சிரித்தான்; “உமக்கு யாரோ படும் வேதனையைப் பார்க்க முடியவில்லை. ஆனால் நான்படும் வேதனையை தாங்க முடிகிறது இரண்டுகிழமை நான் உம்மைச் சந்திக்கவில்லை. நான் படும் வேதனை உமக்குப் புரியுதா. ஒரு கணம் கூடப் பிரியாது உம்மோடு நான் இருக்க வேண்டும். உம்மோடு இருக்கும் வேளையில் தான் நான் உயிரோடு இருக்கிறேன். மற்றும் நேரங்களில் காய்ந்த மரக்கட்டை போலத் தான் இருக்கிறேன்... நகுலன் பேசிக் கொண்டிருக்கும் போது அர்ச்சகா கோபத்துடன் குறுக்கிட்டாள்; “ஓர் உயிர் நண்பனும் அவனது காதலியும் சித்திரைவதைப்படுகிறார்கள். எதைச் சொல்லியும் உங்களுக்குப் புரியுதில்லை” கோபத்துடன் கூறினாள் அர்ச்சகா.

“தனக்குப் பின் தான் தானம் என்பார்கள். நான் படும் சித்திரவதையை முதலில் நீக்கும். பிறகு நண்பனைப் பற்றியோசிப்போம்” என்றான் நகுலன்.

“நட்பு, காதல் எல்லாம் சுயநலம். நாளைக்கு உங்களுக்கும் இப்படி ஒரு நிலை வந்தால் யார் உதவி செய்யப் போகிறார்கள்” .

“அப்படி ஒரு நிலை எனக்கு வராது.?” என்று நகுலன் கூறிக் கொண்டிருக்கும் போது அர்ச்சகா கோபத்துடன் குறுக்கிட்டாள்”. நீங்கள் பெரிய இவர் இவருக்கு, வராதாம்..”

“நான் பெரிய இவர் தான். உமக்கு எந்தத் துன்பமும் வர நான் விடமாட்டன். உமக்குப் பூவால் எறிந்தால் கூட எனக்கு வலிக்கும். கஜேந்திரன் முழு மடையன் வடிகட்டிய முட்டாள். உமக்கு இப்படி

ஒரு நிலை ஏற்பட்டால் முகடு பிரித்தாவது உமது வீட்டுக்குள் நுழைந்து உம்மைத் தூக்கிக் கொண்டு வந்து விடுவன். உமக்கு அதில் சந்தேகமிருந்தால் இப்பவே என்னுடன் வீட்டை வாரும். தொழில் இல்லை என்பதெல்லாம் ஒரு சாட்டு. உலகத்தில் எத்தனையாயிரம் தொழில்கள் இருக்கு. அதில் ஒன்றைச் செய்து வித்தியாவைக் காப்பாற்ற முடியாதோ'' சற்று உணர்ச்சி வசப்பட்டான் நகுலன்.

அர்ச்சகா பூரித்துப் போனாள். இவ்வளவு தீவிரமாக என்னை அவர் நேசிக்கிறாரா?'' என நினைத்துக் கொண்டு; ''என்ன தொழில் உங்களுக்கத் தெரியும்'' என்றாள்.

''கூலி வேலை செய்வன். விறகு கொத்துவன். இன்னும் பல இருக்கு. நான் விறகு கொத்துவது உமக்கு வெட்கமாக இருக்கும் என்று நினைக்கிறீரா..?

''இல்லை இல்லை...'' அவசரமாக மறுத்தாள். ''உங்களைத்தான் நான் விரும்புறன். உங்களது தொழிலை அல்ல'' அர்ச்சகாவின் உதடுகள் அசைந்தன.

''என்னடி நீயும் முணுமுணுக்கிறாய். என்னைப் பகிடி பண்ணி விட்டு நீ....'' சிரித்தாள் வித்தியா.

காதலால் வந்த பெரு வெள்ளத்தைப் போன்ற நோயை என்னால் நீந்திக் கடக்க முடியாததால் நான் நடு இரவிலும் உறக்கம் வராமல் தவிக்கிறேன். அவரின் நினைவுகள் என்னைத் தூங்க விடுவதில்லை'' என்றாள் அர்ச்சகா.

**1167. காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்**
**யாமத்தும் யானே உளேன்.**

*காமம் என்னும் பெரு வெள்ளத்தை நீந்திய போதும் அதன் கரையை நான் காணவில்லை; நள்ளிரவிலும் நான் தனியே இருக்கிறேன்.*

## துணை

''கண்களை மூடினால் கண்களுக்குள் நின்று சிரிக்கிறார். கண்களைத் திறந்தால் மனதுக்குள் இருந்து இனிக்கிறார். இதனால் என்னால் உறங்கவும் முடியவில்லை, விழித்திருக்கவும் முடியவில்லை. சற்றுக்கண்ணயர்ந்தால் எவ்வளவு சேட்டை சரசம் விடுகிறார் தெரியுமா? அவரது இந்தச் செயல்களால் சிறிது நேரம் கூடக் கண்ணயர முடியவில்லை. தினமும் சந்தித்துக் கதைத்தாலும் இரவில் கண்களுக்குள் வந்து விடுகிறார். பல நாட்களுக்கொருமுறை சந்திக்கத் தீர்மானித்தாலும் இருபத்து நான்கு மணிநேரமும் கண்களுக்குள்ளும் மனதுக்குள்ளும் வந்தமர்ந்து ஓயாமல் தொந்தரவுகள் செய்கிறார். என்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை'' என்றாள் அர்ச்சகா.

''உன்னோடு அவர் கதைத்துச் சிரிப்பதால் தான் உனக்கு இந்த நிலை. வந்ததாக கூறுகிறாய். என்னைக் கண்டதும் வெருண்டோடும் ஆதவன் இரவில் எனது கனவில் வந்து உனக்கு நகுலன் செய்யும் தொந்தரவை விடக் கூடுதலான தொந்தரவுகளைச் செய்கிறார். நேரில் என்னைக் கண்டதும் வெட்கப்பட்டு தலை குனிந்து வேர்த்து விறுவிறுத்து நிற்கும் அவர் கனவில் வந்து செய்யும் அட்டகாசங்களைச் சொல்லி முடிக்க முடியாது. எந்நேரமும் தூக்கமின்றி அவர் நினைவாகவே இருக்கும் நான் நேற்று மாலை சற்றுக் கண்ணயர்ந்து விட்டேன். எப்பொழுது நான் கண்ணயர்வேன் எனக்காத்திருக்கும் அவர் உடனேயே என்கண்களுக்குள்ப் புகுந்து என்னைப் பூந்தோட்டத்திற்கு அழைத்துச் சென்று விட்டார்.'' கண்களை மூடினாள் வளர்மதி.

''நான் உம்மைக் கண்டதும் தலையைக் குனிந்தபடி விலகிச் செல்வதாக நீர் நினைக்கலாம். அப்படியல்ல, நீர் என்னைப் பார்க்கட்டும். என்பதற்காகவே அப்படிச் செல்வேன். நீர் வீட்டுக்கு வரும் வேளையில் நான் மறைந்திருந்து உம்மைப் பார்ப்பேன். முன்பே எனக்கு உம்மீது கொள்ளை ஆசை. கூச்ச சுபாவமுடைய நான் எப்படி உமக்கு எனது விருப்பத்தைத் தெரிவிப்பது என்று யோசித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது கஜேந்திரன் வந்து நீர் என்னைக் காதலிக்கும் விஷயத்தைச் சொன்னான். அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்த போதும் உம்மைத் தவிக்க வைத்துப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனது மனதில் துளிர்த்தது. அதனால் தான் உம்மைக் கண்டதும் தலையைக் குனிந்தேன்; உம்மைப் பாராது சென்றேன். அப்பொழுது நீர் படும் வேதனையைப் பார்க்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது''

''போங்கோ.... சரியான கள்ளன்'' என்றாள் வளர்மதி.''ஆரடி கள்ளன்'' என்றவாறு வளர்மதியின் கன்னத்தில் செல்லமாகத் தட்டினாள் அர்ச்சகா. திடுக்கிட்டு மிரண்ட வளர்மதி தன்னைச் சுதாகரித்துக்

கொண்டு; “ நான் சொன்னதை நீ நம்பவில்லை. இரவு முழுவதும் தூக்கமில்லாததால் சற்றுக் கண்ணயா்ந்து விட்டேன். அதற்குள் அவா் வந்து தன்னைப் பற்றிப் பல விஷயங்களைக் கூறி விட்டாா்” என்றாள் வளா்மதி.

வித்தியாவும் அா்ச்சகாவும் சிரித்தனா். “காதல் வந்தால் இப்படிப் பல கனவுகள் வரும். அதை நிஜம் என்று நம்பினால் பைத்தியம் பிடித்து விடும் கவனம்” என்றாள் அா்ச்சகா.

“அனுபவம் பேசுகிறது” என்று சிரித்த வளா்மதி சொன்னாள்; “உலகத்தில் வாழும் எல்லா உயிா்களையும் உறங்கச் செய்யும் இரவு பாவம். அதற்கு என்னை விட்டால் வேறு கதியில்லை. அதனால் தனக்குத் துணையாக என்னை விழித்திருக்கச் செய்கிறது” என்றாள் வளா்மதி.

வித்தியாவும் அா்ச்சகாவும் சிரித்தனா்.

**1168. மன்னுயி ரெல்லாம் துயிற்றி அளித்துஇரா
என் அல்லது இல்லை துணை.**

*இந்த இராக்காலம் இரங்கத்தக்கது; எல்லா உயிா்களையும் உறங்கச் செய்து விட்டு என்னைத் தனக்குத் துணையாக வைத்துள்ளது.*

**இரவின் கொடுமை**

“காதலர்களைக் கொடுமைப்படுத்தவென்று பலா் இருக்கிறாா்கள். பெற்றோரை விடச் சமூகமே காதலரைக் கொடுமைப்படுத்துகிறது. நான் சில தினங்களுக்கு முன்பு ஆதவனைத் தெருவில் கண்டேன். என்னைக் கண்டதும் அவா் வெருண்டு விரைவாகச் செல்ல முயற்சித்தாா். நான் அவரைக் காணாதவள் போல் வீதியின் குறுக்கே சென்றேன். அவா் அதை எதிா்பாா்க்கவில்லை. அதனால் தடுமாறியபடி துவிச்சக்கர வண்டியால் விழுந்து விட்டாா். வீதியின் குறுக்கே கிடந்த துவிச்சக்கர வண்டியைத் தூக்கி நிறுத்தி விட்டு அவரைப் பாா்த்தேன். முகம் வியா்த்திருந்தது. அவா் அணிந்திருந்த சட்டையில் புழுதி படிந்திருந்தது. முழங்கையில் கல்லொன்று தேய்த்ததனால் இரத்தம் கசிந்தது. எனக்குப் பயமாகவும் வேதனையாகவும் இருந்தது. எனது செயலால் தானே அவா் விழுந்து காயப்பட்டாா் என்பதை நினைக்க அழுகை வந்தது. எனினும் தடுமாறியபடி முழங்கையால் இரத்தம் கசிவதைப் பாா்த்துக் கொண்டிருந்த ஆதவனைப் பாா்க்கப் பரிதாபமாக இருந்தது. நான் கொண்டு சென்ற கைப்பையைத் திறந்து உள்ளே இருந்த கைக்குட்டையை எடுத்து இரத்தத்தைத் துடையுங்கள் என்று நீட்டினேன். அவா் தடுமாறினாா். தலையைக் குனிந்தபடி நின்ற அவரைப் பாா்த்ததும் எனக்குத் துணிவு வந்து விட்டது. உடனே அவரின் அருகிற் சென்று காயப்பட்ட கையைப் பிடித்து அதில் வழிந்த இரத்தத்தைத் துடைத்தேன். இதை அவா் எதிா்பாராததால் கையை உதறினாா். அவரது கை எனது கன்னத்தில் மெதுவாகப்பட்டது. இதை நான் எதிா்பாா்க்கவில்லை. அவ்விடத்தில் சனங்கள் கூடி நின்று வேடிக்கை பாா்த்தனா். சிறிது நேரத்தில் அவா் சென்று விட்டாா். அவ்விடத்தில் நின்ற ஒரு பெண் சொன்னாள்; “இப்ப பெண் பிள்ளைகள் கெட்டுப் போனாா்கள். சிறியதொரு காயத்திற்கு இவளே கட்டுப் போட வேணும்” என்றாள். நான் பதில் எதுவும் கூறாமற் சென்று விட்டேன். மறு நாள் ஊரில் உள்ளவா்கள் அச்சம்பவத்தை மிகைப்படுத்திக் கதைத்தாா்கள். அம்மாவிற்கு அச் செய்தி எட்டி விட்டது. அம்மா கேட்டா நான் உண்மையை மறைத்து “ஒருவா் வீதியில் விழுந்தால் உதவி செய்யக் கூடாதா? என்று கேட்டேன். அது அம்மாவிற்குச் சரியாகப் பட்டது.; “ வீதியால் செல்பவா்கள் விபத்துக்குள்ளானால் உதவி செய்வது மனிதாபிமானம். உடையவா்களின் கடமை. நீயும் கொப்பரைப் போல ஊருக்கு உதவி செய்பவளாக வந்து விட்டாய்” என்றாா். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது” என்றாள் வளா்மதி.

“நீ பொல்லாத ஆள், உன்னை நம்பி நாங்கள் சோ்ந்தால் ஆபத்து” என்றாள் அா்ச்சகா.

“சேர வேண்டாம். உங்களை நான் கெடுத்துப் போடுவன்” என்றாள் வளா்மதி.

“நீ சொல்ல வந்த கதையை விட்டுட்டாய். காதலிப்போா்க்கு சமூகத்தைத் தவிர வேறு யாா் யாா் எதிரி” என்று கேட்டாள் வித்தியா.

“பொதுவாய் எல்லோரும் எதிரிதான். காதலிக்கிறது பெருங்குற்றமென்று பெற்றோா் எதிா்த்துத் துன்பத்தைத் தருகிறாா்கள். நன்றாகப் பழகிய நண்பா்கள் காதலிப்பது மகா பாவம் என்றெண்ணி எம்மை விட்டுப் பிரிகிறாா்கள். எனது தோழி ஒருத்தி என்னைக் காதலிக்க வேண்டாமென்று கூறினாள். நான் காதலித்தால் என்னுடன் கூடத்திரியும் தனக்கு அவமானமாம். இப்ப அவள் என்னுடன் கதைப்பதில்லை. அது வேதனையாய் இருக்கு. இதை விட இயற்கையும் எம்மை வேதனைப்படுத்துகிறது. காதலரின் பிரிவைப் பொறுத்துக் கொள்ள முடியாது துன்புற்று வருந்தும்

எனக்கு, தூங்காமல் விழித்துக் கொண்டிருக்கும் நீண்ட இரவு சித்திரவதை செய்கிறது. அந்தக் கொடுமை பிரிவுத்துயரை விட மோசமானது. பெற்றோர், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் தரும் துன்பங்களை விடப் பலமடங்கு அதிகமானது.'' என்று அழுதாள் வளர்மதி.

**1169. கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்**
**நெடிய கழியும் இரா.**

*காதலரின் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாமல் வருந்தும் எனக்கு, நீண்ட இரவு நேரம் பிரிவுத் துயரை விட அதிக கொடுமையைத் தருகிறது.*

### மனம் செல்லும்

''வித்தியா உன்னை நினைக்க எனக்குக் கவலையாக உள்ளது. உனது நிலை வேறு யாருக்கும் ஏற்படக் கூடாது. தற்செயலாக எனக்கு இந்த நிலை ஏற்பட்டால் நான் துடிதுடித்து இறந்து விடுவேன். உறுதியான மனமும், தளர்வில்லாத நம்பிக்கையும் பெற்ற உன்னை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஒரு பெண்ணுக்கு வரக்கூடாத துன்பம் உனக்கு வந்துள்ளது. நாம் இங்கு வந்து எமது துயர்களைப் பகிர்ந்து கொண்டு செல்கிறோமே தவிர உனது துன்பத்தைப் பற்றிச் சிந்திக்கவில்லை. உனது துன்பத்தை யாராலும் போக்க முடியாது. போக்கக் கூடியவர் வாழாதிருக்கிறார். நான் இன்று சென்று அவரைச் சந்தித்து உனது நிலையைக் கூறுகிறேன்.'' என்றாள் வளர்மதி.

''அவருக்கு அர்ச்சகா யாவற்றையும் சொல்லியுள்ளாள். அத்துடன் எனது நிலையைப் பற்றித் தெளிவாகக் கடிதமும் எழுதியுள்ளேன். என்னைப் பிரிந்து அவரால் இருக்க முடியாது. எனவே அவர் எனது துன்பத்தைப் போக்க நடவடிக்கை எடுப்பார்''. என்றாள் வித்தியா. அவளது கண்கள் கலங்கின.

''அழாதை வித்தி. நீ இப்போது இருக்கும் நிலைக்கு நீ தான் பொறுப்பாளி. நாம் எப்படி வாழவேண்டுமென்று விரும்புகிறோமோ அப்படி நம்மை அமைத்துக் கொள்ளும் தன்மை நம்மிடமே இருக்கின்றது. நீ கஜேந்திரனை விரும்பியது முன் வினைப்பயன் என்றால், கஜேந்திரனைத் திருமணம் செய்து எதிர்காலத்தில் எப்படியெல்லாம் வாழவேண்டுமென்று நீ விரும்புகிறாயோ அதை நீ உன் செயல்களால் தான் செய்து முடிக்க முடியும். எனவே என்ன செய்ய வேண்டும் என்பதை நீ தீர்மானி நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள் வளர்மதி.

வளர்மதி கூறியதை நினைத்துப் பார்த்தாள் வித்தியா. அவள் சொல்வது நூற்றுக்கு நூறுவீதம் சரியெனப்பட்டது. ''நான் உறுதியாக இருந்தால் எவராலும் எதுவும் செய்ய முடியாது. கூடுதலான பிரச்சினை ஏற்பட்டால் இரவோடு இரவாகப் புறப்பட்டு கஜேந்திரனது வீட்டுக்குச் செல்ல வேண்டும்.'' என்று தீர்மானித்தாள் வித்தியா. அதன் பின் மனம் லேசாகி விட்டதைப் போல் இருந்தது. பல இரவுகள் கண் விழித்தமையால் கண்கள் எரிந்தன. இருந்த போதும் மனம் கஜேந்திரனை நினைத்தது.

கஜேந்திரன் விகடமாகப் பேசுவான். அதுவும் வித்தியாவைக் கண்டால் அவனுக்குக் குதூகலம் மிகுந்து நிற்கும். அதை நினைத்துப் பார்த்தாள் வித்தியா. அன்றொரு நாள் துவிச்சக்கர வண்டியில் அவளை ஏற்றி வரும் போது கேட்டான்; '' இன்று அம்மாவின் பிறந்த நாள். வீட்டை கூட்டிக் கொண்டு போறன். போய் அவாவை வாழ்த்தி ஆசி பெறும்.''

''ஐயையோ நான் மாட்டன். ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெறும் போதே அவாவிற்கு என் மீது சந்தேகம். இன்றைக்கும் போனால் கரைச்சல்''. தடுமாறினாள் வித்தியா.

''இன்றைக்கு நான் கட்டாயம் வீட்டிற்குக் கூட்டிச் சென்று அம்மாவை அழைத்து மருமகள் என்று உம்மை அறிமுகம் செய்யப் போறன்'' அட்டகாசமாகச் சிரித்தான் கஜேந்திரன். வித்தியா பயந்து விட்டாள்; ''என்னை இறக்கி விடுங்கோ'' என்று கூறியபடி துவிச்சக்கர வண்டியால் குதித்து இறங்கினாள். அவள் திடீரென இறங்கியதால் சமநிலையை இழந்த கஜேந்திரன் தடுமாறி நிலத்தில் விழுந்தான்.

''நான் விளையாட்டாகச் சொல்ல நீர் நம்பீட்டீர்'' என்றான் கஜேந்திரன்.

''இப்போது அவர் எப்படி இருப்பார்'' என்று நினைத்தாள் வித்தியா. உச்சுவில் குளக்கரையில் தாடியோடு மூங்கில் மரப்பற்றைக்கு அருகில் இருந்து அக் குளத்தில் மலர்ந்துள்ள செந்தாமரைப் பூக்களைப் பார்த்துக் கொண்டிருப்பார்'' என்று நினைத்தாள். இந்த மனம் எவ்வளவு புதுமையானது. காதலர் செல்லும் இடத்திற்கெல்லாம் மனம் சென்று விடுகிறது. எனது மனம் போவது போல் என்னால் போக முடியவில்லையே. போக முடிந்தால் நான் அழ வேண்டிய தேவை இராது'' என்று நினைத்தாள் வித்தியா.

**1170. உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல் மன்னோஎன் கண்.**

*காதலர் உள்ள இடத்திற்கு என் மனத்தைப் போல நானும் செல்ல முடியுமானால், என் கண்கள் கண்ணீர் வெள்ளத்தால் நீந்த வேண்டியதில்லை.*

**காட்டிய கண்கள்**

முதன் முதலாக கஜேந்திரனைக் கண்டதை நினைத்துப் பார்த்தாள் வித்தியா. ஐந்து வருடங்களுக்கு முன்பு நல்லூர்த் தேர்த்திருவிழாவன்று தேரடியில் அர்ச்சனை செய்வதற்காக நீண்ட வரிசையில் காத்து நின்றாள் வித்தியா. அவளின் அருகே கஜேந்திரனின் தாயார் இலட்சுமி அர்ச்சனைத் தட்டுடன் நின்றாள். அவள் வைத்திருந்த அர்ச்சனைத் தட்டில் கற்பூரத்தைக் காணவில்லை. கற்பூரம் வழியில் எங்கோ தவறி விட்டது. அதனால் கஜேந்திரனின் தயாரான இலட்சுமி பரபரத்துக் கொண்டு நின்றாள்.; ‘‘வருடத்திற்கு ஒரு முறை தான் நல்லூரானின் தேர்த்திருவிழா நடைபெறும் கற்பூரம் இல்லாமல் எப்படி அர்ச்சனை செய்வது. வரிசையை விட்டு விட்டுச் சென்றால் திரும்பவும் வந்து நிற்க முடியாது.’’ என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள் இலட்சுமி. அதைப் பொறுக்க முடியாத வித்தியா; ‘‘நான் கற்பூரம் வாங்கி வந்து தருகிறேன். நீங்கள் நில்லுங்கோ’’ என்று புறப்பட்டாள்.

‘‘காசைக் கொண்டு போ பிள்ளை’’ என்று இலட்சுமி சொல்லிக் கொண்டிருக்கும் போது வித்தியா அதைக் கேட்காதவள் போலச் சென்று கற்பூரத்தை வாங்கி வந்து கொடுத்தாள்.

‘‘பிள்ளை, சுவாமி காரியம் கட்டாயம் நீ காசு வாங்க வேண்டும்’’ என்று கூறிப் பத்துரூபாத் தாள் ஒன்றை எடுத்து நீட்டினாள்.

‘‘வேண்டாம் அம்மா….’’ என்றாள் வித்தியா.

‘‘இல்லை பிடிபிள்ளை’’ என்றாள் இலட்சுமி.

‘‘அர்ச்சனைப் பயன் எனக்கு வந்து விடுமென்று பயப்படுகிறீர்களோ….?’’ என்று சிரித்தாள். அப்போது கஜேந்திரன் அங்கு வந்தான்; ‘‘அம்மா, கற்பூரம் வாங்க மறந்து விட்டேன். இந்தாருங்கோ’’ என்று கற்பூரத்தை நீட்டினான் கஜேந்திரன்.

‘‘அவதானமில்லாத பிள்ளை. கற்பூரமில்லாததை நான் தேரடியிலைதான் கண்டனான். வாங்க முடியாமல் போயிற்றுது. இந்தப்பிள்ளை தான் வாங்கி வந்து தந்தது. நல்ல பிள்ளை. கற்பூரத்திற்கான காசை வேண்ட மறுக்குது’’ என்றாள் இலட்சுமி. கஜேந்திரன் நிமிர்ந்து வித்தியாவைப் பார்த்தான். அவளின் அழகு அவனைப் பெரிதாகக் கவரவில்லை; ‘‘அம்மாவுக்கு உதவி செய்ததற்கு நன்றி. உங்கள் நல்ல குணத்தைப் பாராட்டுறன். ஆனால் அம்மா ஒரு மாதிரியானவா. நான் கற்பூரம் வாங்காமல் விட்டது பெரிய விபரீதம் வருவதற்குக் காரணமாயிருக்கும் என்று நினைப்பா. காசை நீங்கள் வாங்கா விட்டால் வாழ்நாள் முழுவதும் தான் ஏதோ தவறு செய்து விட்டதாக நினைத்துக் கவலைப்படுவா. வாங்குங்கோ.’’ என்றான். அப்படி இருந்தும் வித்தியா தயங்க; அவன் தாயின் கையில் இருந்த பத்துரூபாத்தாளை வாங்கி நீட்டினான். வித்தியா அதைப் பெறும்பொழுது அவனது விரல்கள் அவளது விரல்களைத் தொட்டன. அவன் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

வித்தியா நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். மிகவும் அழகான முகம். கவர்ச்சியான சிரிப்பு, மேற்சட்டை அணியாததால் தெளிவாகத் தெரிந்த மார்பின் உறுதி அவளைச் சற்றுத்தடுமாற வைத்தது. திரண்ட தோள்கள், உறுதியான மார்பு, நெற்றியிலும் மார்பிலும் கைகளிலும் முதுகிலும் திரிபுண்டரமாகத் தரிக்கப்பட்டிருந்த வீபூதிக்குறி அவளை மிகவும் கவர்ந்தது. அவன் சென்று விட்டான். அவளது கண்களுக்குள் பதிந்த அவ்வுருவம் நெஞ்சுக்குள்ளும் புகுந்தது.

‘‘உங்கள் மகன் என்ன செய்கிறார் படிக்கிறாரா…’’ என்று கேட்டாள் வித்தியா.

‘‘ஓம் பிள்ளை பல்கலைக்கழகத்தில் படிக்கிறான்’’ என்றாள் இலட்சுமி. வித்தியாவின் கண்களுக்குள் புகுந்த அவனை வெகு நாட்களாக அவளால் மறக்க முடியவில்லை. தான் இன்னொருவனுக்கு நிச்சயிக்கப்பட்டவள் என்பதையும் மறந்து விட்டாள். அதன் பின் பல்கலைக்கழகத்திற்கு அவள் சென்ற போது தான் கஜேந்திரன் கண்டு விரும்பினான். அவளுக்கு விருப்பமிருந்த போதும் பயத்தினால் அவனை அலட்சியம் செய்தாள். ‘‘எனது கண்கள் தான் எனக்குத்

துரோகம் செய்தன. அவை தான் அடிக்கடி அவரைக் காண விரும்பின. அதனால் தான் எனக்கு இவ்வளவு பெருந்துன்பம் வந்தது'' என்று அழுதாள் வித்தியா.

**1171. கண்தாம் கலுழ்வது எவன்கொலோ? தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண்டது.**

*தீராத இந்தக் காம நோயானது, என் கண்கள் அவரைக் காட்டியதால் தானே வந்தது. அவ்வாறிருக்க காட்டிய கண்கள் ஏன் அழ வேண்டும்.*

**கலங்குவது ஏன்?**

தேர்த்திருவிழாவில் கஜேந்திரனைக் கண்டு மயங்கிய கண்கள் அவனைத் தேடிக் கொண்டிருந்தன. அவள், தான் செல்லுமிடங்களிலெல்லாம் அவனைத் தேடினாள். தேர்திருவிழாவின் மறு நாள் தீர்த்தத் திருவிழாவுக்கு வந்த அவளின் கண்கள் சுழன்று சுழன்று நாலா திசையும் அவனைத் தேடின; ''அவனது தாயாரிடம் பெயரைக் கேட்டிருக்கலாமென்று நினைத்தாள். பல்கலைக்கழகத்தில் ஆறாயிரம் ஏழாயிரம் மாணவர்கள் கற்கிறார்கள். எப்படி அவனைத் தேடுவது. யாரையாவது விசாரிக்கலாமென்றால் எப்படி விசாரிப்பது. அவன் கற்கும் துறையைக் கேட்டாலாவது விசாரிக்கலாம்.'' என்று நினைத்தவாறு அவனைத் தேடிப் பார்த்தாள். பெரும் பக்திமானான அவன் அன்று எப்படியும் கோயிலுக்குள் வந்திருப்பான். என்று அவளது மனம் கூறியது. அதனால் கோயிலுக்குச் சென்றாள். சுவாமி வசந்த மண்டபத்தில் இருந்து உள்வீதி உலாவுக்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். மூச்சு விட முடியாதளவு சனக்கூட்டம் அவளை நெரித்தது. அவனைக் காணும் ஆவலில் மனம் பரபரத்ததால் சுவாமியின் பின்னாற் சென்றாள். உள்ளே நின்ற ஆண்கள் அனைவரும் மேற்சட்டை அணியாததால் அவளுக்கு அவனைத்தேடுவது சிரமமாக இருந்தது. சுவாமிக்குச் சிறிதுதூரத்தில் அவன் நிற்பது போலிருந்தது. அவளது கண்கள் ஆவலோடு அவனின் மீது மொய்த்தன. தலையின் மேல் கரம் குவித்தபடி நின்ற அவன் மறுபக்கம் திரும்பினான். வித்தியாவுக்கு கவலையாக இருந்தது. அவனது முதுகுப்பகுதியைப் பார்த்துக் கொண்டு நின்றாள். அவளது கண்கள் அவன் திரும்ப மாட்டானா என ஏங்கித் தவித்தன.

சுவாமி மெதுவாகச் சென்று கொண்டிருந்தார். சனங்களை விலத்திச் சென்று அவனைப் பார்க்கலாமென்றால் அசைய முடியவில்லை. மெதுவாக அவள் அசைந்து சென்றாள். கண்கள் அவனை நோக்கிக் கொண்டிருந்தன. சுவாமி, உள்வீதி உலாவை முடித்துக் கொண்டு வெளியே வந்தார். வித்தியா சனங்களை விலத்திக் கொண்டு சிரமப்பட்டு முன்னேறி அவனின் அருகில் வந்தாள். நாணத்துடன் மெதுவாகக் கண்களை உயர்த்தினாள். அவனைப் பார்த்து ரசிக்க வேண்டும் போல் இருந்தது. நிமிர்ந்த வித்தியாவின் கண்கள் ஏமாற்றத்தால் சுருங்கின. அவன் யாரோ…..

வெளியே வந்த வித்தியா எங்கும் தேடிப் பார்த்தாள், அவனைக் காணவில்லை. உடல் சலிப்படைந்த போதும் கண்களும் மனமும் இன்னும் தேடிப்பார் என்றன. அதனால் அவள் மீண்டும் தான் சென்ற இடங்களெல்லாம் சென்று தேடிப் பார்த்தாள். அவனைக் காணவில்லை. ஏமாற்றத்தால் கண்கள் கசிய வீட்டுக்குச் சென்றாள். அன்று இரவு முழுவதும் அவளின் கண்களுக்குள் அவன் குடியிருந்தான். மறுநாள் பூங்காவனத் திருவிழா அன்றும் அவள் கோயில் முழுவதும் அவனைத் தேடினாள். ஆனால் அவனைக் காணவில்லை. ஏமாற்றத்தை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கோயில் வாசலுக்கு வந்து முருகப் பெருமானை உள்ளமுருக வழிபட்டாள்.; ''எம் பெருமானே தேர்த்திருவிழாவன்று கண்டு என் மனதைக் கொள்ளை கொண்ட அவனை எனக்கொரு முறை காட்டு'' என்று கண்களை மூடி வணங்கினாள். அவளது கண்களுக்குள் அவன் வந்து நின்று சிரித்தான். ''வித்தியா'' என்று மெல்ல அழைத்தான். திடுக்கிட்டு திரும்பினாள் ''வித்தியா. சனங்கள் பெருவாரியாக நின்றார்களே தவிர தெரிந்த எவரும் இல்லை.

அதன் பின் அவனைப் பார்ப்பதற்காகப் பல முறை பல்கலைக்கழக வீதியால் சென்றாள். அவனைக் காணவில்லை. அவள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிச் சென்ற போது அவனைத்தான் அவளது கண்கள் தேடின. ''ஆராய்ந்து பின் விளைவுகளை உணராமல் ஆசைப்பட்ட கண்களின் மீது அவளுக்கு வெறுப்பாக இருந்தது. பின் அவன் அவளின் பின்னால் அலையும் போது மனம் பயம் காரணமாக வெறுத்ததே தவிர அவனைக் காணத்தானே விரும்பியது'' என்று விம்மினாள் வித்தியா.

**1172. தெரிந்துஉணரா நோக்கிய உண்கண் பரிந்துஉணராப்
பைதல் உழப்பது எவன்?.**

*ஆராய்ந்து அறியாமல் அன்று அவரைக் கண்டதும் காதல் கொண்ட என்கண்கள், இந்தத் துன்ப நிலைக்குக் காரணம் தாமே என்று அறியாமல் துன்பப்பட்டு வருந்துவது ஏன்?.*

**நகைப்புக்குரியது**

“காதலா் தினத்திலன்று நான் மனிசியைப் பாக்க வேண்டும். உம்முடைய கன்னங்களைப் போல் சிவந்த மென்மையான ரோஜாப்பூக்களால் செண்டொன்றைப் பரிசாக உமக்குத் தர வேண்டும். மஞ்சள்நிற ரோஜாப்பூ ஒன்று கொண்டு வந்து உமது கூந்தலைப் பிரித்து அதில் அப்பூவை நான் செருக வேண்டும். அதன் பின் பலமணி நேரம் உம்மைப் பார்த்து இரசிக்க வேண்டும். மஞ்சள் நிற ரோஜாமலரை சூடி தேவதை போலத் தோன்றும் உம்மைக் கண் இமைக்காது பார்த்து இரசிக்க வேண்டும். உமது அழகு தான் எனது கண்களுக்கு விருந்து படைப்பது. உமது அழகு. ஒரு முறை இருப்பது போல இன்னொரு முறை இருப்பதில்லை. எனது கண்களில் குறைபாடு உள்ளதோ அல்லது உமது வனப்பு நாளுக்கு நாள் அதிகரிக்குதோ என்று தெரியாது. தடுமாறுகிறேன். காதலா் தினத்திலன்று பூரண அலங்காரத்துடன் வரும் உம்மைத் தரிசிக்க எனக்கு இன்னும் பல கண்கள் தேவை. அதற்காக கடவுளை நான் வேண்டப்போகிறேன்?” என்றான் கஜேந்திரன்.

“எனக்கும் அன்று உங்களைப் பார்க்க வேண்டும் போல் தோன்றுகிறது. உங்களைக் காணாவிட்டால் எனது கண்கள் தூங்க மறுக்கின்றன. நீங்கள் தந்த நிழற்படத்தைக் காட்டினாலும் எனது கண்கள் அதைப் பார்க்க மறுத்து நேரில் பார்க்க வேண்டுமென அடம் பிடிக்கின்றன. எனது கண்களுக்காக கட்டாயம் காதலா் தினத்தன்று வருவேன்” என்றாள் வித்தியா.

காதலா் தினத்தன்று கஜேந்திரன் நான்கு மணிக்கு கடற்கரையில் அவளைச் சந்திப்பதாகக் கூறியிருந்தான். மூன்று தினங்கள் அவள், அவனைக்காணாததால் அன்று மூன்று மணிக்குக் கடற்கரைக்கு வந்து விட்டாள். கடற்கரையில் பல காதல் சோடிகள் ஆங்காங்கே இருந்து காதலா் தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்தன. அவளுக்கு மிக அருகில் இருந்த காதல் சோடியைப் பார்க்க அவளுக்கு வேதனையாக இருந்தது. அவள் அவனது சட்டைப் பைக்குள் சிவப்பு ரோஜா வொன்றை வைத்தாள். அவன் மிகுந்த மகிழ்வுடன் அவளது கையைப் பிடிக்க அவள் ஏதோ சொல்லியவாறு அவனது கையைத் தட்டி விட்டாள். பின் அவன் மஞ்சள்நிற ரோஜாப்பூவொன்றை அவளது கூந்தலில் செருகினான். வித்தியாவுக்குப் புல்லரித்தது. மூன்று தினங்களுக்கு முன்பு கஜேந்திரன் கூறிய படி மஞ்சள் ரோஜா தனது கூந்தலில் ஆடுவது போலிருந்தது.

நான்கு மணியாகியும் கஜேந்திரன் வரவில்லை. அவளது அழகிய கண்கள் ஆவலுடன் அவன் வரும் பாதையை நோக்கிச் சென்று தரித்து நின்றன. கண்ணுக்கெட்டிய தூரம் வரை கஜேந்திரனைக் காணவில்லை. நேரம் சென்று கொண்டிருந்ததே தவிர அவனைக் காணவில்லை. அவனைக் காணாததால் அவளது கண்கள் சோர்ந்து கலங்கின. கண்களுள் தேங்கி நின்ற கண்ணீரை அருகில் இருப்பவா்கள் அறியாதபடி மெல்லத் துடைத்தாள். எனினும் கண்கள் அவன் வராமையால் ஊற்று நீா் போல் ஊறிக் கொண்டே இருந்தன. அவளால் அதைத் தடுக்க முடியவில்லை.

“என்ன வித்தி கஜேந்திரனைக் காணவில்லை தனியே இருந்து என்ன செய்கிறாய்.” என்று கேட்டவாறு அவளின் அருகில் அமா்ந்தாள் வளா்மதி.

“அவா் வாறதென்று சொன்னவா். வந்து விடுவாா்” என்றாள் வித்தியா.

“என்ன தனியே இருக்கிறீா்கள். ஐயாவைக் காணவில்லை” என்று கேட்டான் கடலை விற்பனை செய்யும் பையன்.; “கஜேந்திரன் ஐயா வந்தால் இரண்டு சரை கடலை விற்கலாம்.” என்று கூறி விட்டுச் சென்றான் அப்பையன்.

வித்தியா நேரத்தைப் பாா்த்தாள். மாலை ஐந்து மணியாகியது. கடற்கரை எங்கும் ஒரே சனக்கூட்டம். வித்தியா அவன் வரும் பாதையைப் பாா்த்துக் கொண்டு நின்றாள். “இந்தக் கண்கள் தான் நான் இன்னொருவருக்கு நிச்சயிக்கப்பட்டவள் என்று தெரிந்தும் அதை அலட்சியம் செய்து அவரைப் பாா்த்தன. இப்பொழுது கலங்குகின்றன.” என்று நினைத்தாள் வித்தியா.

**1173. கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்கது உடைத்து.**

*அன்று அவரைக் கண்கள் தானே எனது கட்டுப் பாட்டையும் மீறி தாமே விரைந்து சென்று பாா்த்து மயங்கின. இன்று தாமே அழுகின்றன. இது சிரிப்புக்குரியது.*

**தீராத நோய்**

“நான்கு மணிக்கு வருவதாகக் கூறினாா். ஐந்து மணியாகியும் வரவில்லை. என்னில் முழுமையான அன்பு வைத்திருந்தால் அவா் இப்படிச் செய்வாரா. இப்பொழுது அவா் உள்ள நிலையில் என்னைப் பாா்ப்பதைத் தவிர வேறு எந்த வேலையும் அவருக்கு இல்லை. நான்கு மணிக்கு வரச் சொன்னவா், ஆனால் எனது கண்கள் இரண்டு மணிக்கே அவரைப் பாா்க்க வேண்டும் என்று பரபரத்தன. மனமும் நிலை கொள்ளாமல் தவித்ததால் அம்மாவுக்கு பரீட்சை இருக்கிறது என்று சொல்லி விட்டுப்

புறப்பட்டேன். எனது நிலையை உணராத அம்மா மிகுந்த அக்கறையுடன் சமையல் செய்து தந்தா. என் மனதில் அவரின் நினைவுகள் நிரம்பியிருந்தமையால் என்னால் சாப்பிட முடியவில்லை. அதனால் எனக்குச் சாப்பாடு கட்டித் தந்தா. இஞ்சை பார்'' என்று கண்ணீர் மல்க ஓர் உணவுப் பொதியை எடுத்துக் காட்டினாள் வித்தியா. அதிலிருந்து வந்த வாசம் வளர்மதியின் மூக்கை அரித்தது. அதனால் வளர்மதிக்குப் பசிப்பது போல் இருந்தது.

''அம்மா அக்கறையாகச் சமைத்துக் கட்டித்தந்த போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. காதலர் தினமான இன்று அம்மா கட்டித் தந்த உணவை இருவரும் பகிர்ந்து உண்போம் என நினைத்தேன். அவர் வீட்டுக்கு வரும் போது நான் உணவு கொடுத்தால் அதைக் குழைத்துத் தரும்படி கேட்பார். நான் மறுத்தால் சாப்பிட மாட்டார்; ''உமது அம்மாவின் சமையல் பிரமாதமான சுவையுடையது. ஆனால் உம்முடைய கைபடவில்லை. எனக்குரியவள் என்று நான் நினைப்பவளின் கைபடாத அமிர்தம் கூட சுவையானதாக எனக்கு இருக்காது'' என்பார். பின் நான் குழைத்துக் கொடுத்தால்; ''உமது கைபட்ட உணவு மிகவும் சுவையாக இருக்கிறது'' என்பார். நான் விசர் கதையை விட்டு விட்டுச் சாப்பிடுங்கோ என்றால்; ''சுவையில்லை என்று நீர் நினைத்தால் சாப்பிட்டுப் பாரும். என்று தானுண்ட உணவை எனது வாய்க்குள் வைப்பார். அப்படியானவரைக் காணாமல் எனது மனம் வாடுகிறது. என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை'' என்று அழுதாள் வித்தியா.

வளர்மதிக்குத் தர்மசங்கடமாக இருந்தது. ''நான் எவ்வளவு முயன்றும் ஆதவன் ஒரு கதை கூடக் கதைக்கிறாரில்லை. தினமும் கதைத்துச் சிரிக்கும் கஜேந்திரன் வரச் சற்றுத் தாமதமாகி விட்டதால் இவள் அழுகிறாள். எவ்வளவு நேரமாக அழுகிறாள். இன்னும் இவளது கண்களுக்குள் கண்ணீர் இருக்குமோ''? என்று நினைத்தாள் வளர்மதி.

வித்தியா அவன் வரும் பாதையைப் பார்த்தபடியே இருந்தாள். அவளது கண்கள் கலங்கிய படி இருந்தன. கண்ணீர் கன்னங்களால் வழிய முன்பு கைக்குட்டையால் அவள் அடிக்கடி கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தாள். காதலுக்குப் புலவர்கள் தாம் தாம் எண்ணியவற்றையே கவிதைகளாகவும் வரைவிலக்கணமாகவும் எழுதியுள்ளனர். ஆனால் எல்லோருடைய காதலைப் பற்றியும் அவர்களால் கூற முடியுமா..? வித்தியா இன்று கண்ணீர் விடும் நிலையைக் கண்டால் கவிஞன் என்ன கூறுவான். இறைக்க இறைக்க ஊறும் கிணறா இவளது கண்கள் என்று ஆச்சரியப்படுவானோ…''என்று நினைத்தாள் வளர்மதி.

''என்னடி யோசிக்கிறாய்? என்னைப் போலப் பைத்தியம் உலகில் யாரும் இல்லை. என்று யோசிக்கிறாயா…? இல்லை அவரைக் காணாவிட்டால் ஏன் கண்ணீர் விட்டு அழுகிறாள் அவர் சற்றுத் தமதமாகி வந்தாலும் வருவார். அதற்கேன் அழுகை என்று யோசிக்கிறாயா…?'' என்று நிறுத்தியவள் சற்று நேரத்தின் பின் சொன்னாள்; '' அவர் கூறுவதைப் போல் எந்த ஒன்றையும் அவரின் கையால் பெற்று உண்பதுதான் பேரின்பத்தை எனக்குத் தரும். கடற்கரையில் விற்கப்படும் கச்சான் கடலையை வாங்கி அவர் உடைத்துத் தந்தால் எவ்வளவு சுவை தெரியுமா…? கடலை விற்பவன் பல முறை வந்து ஏமாந்து செல்கிறான். நான் வாங்கி, நானே உடைத்துச் சாப்பிடுவதில் எந்தச் சுவையும் இல்லை. அது வயிற்றை நிரப்புவதாகவே இருக்கும். என் கண்களுக்கு இன்பத்தைத் தந்து விட்டு இப்போது அவர் வராததால் அந்த இன்பம் துன்பமாக மாறி என் கண்களை வருத்துகிறது. இனி நான் அழுதாலும் கண்ணீர் வராது. கண்ணீர் முழுவதும் வற்றி விட்டது'' என்று விம்மினாள் வித்தியா.

**1174. பெயல்ஆற்றா நீர்உலந்த உண்கண் உயல்ஆற்றா**
**உய்வுஇல்நோய் என்கண் நிறுத்து.**

*எனது கண்கள் தப்பிப் பிழைக்க முடியாத தீராத காம நோயை உண்டாக்கி விட்டு, இப்பொழுது தாமும் அழ முடியாமல் நீர் வற்றிப் போய்த் துன்புறுகின்றன.*

### பெரும் நோய்

மாலை மணி ஆறாகியும் கஜேந்திரன் வரவில்லை. வித்தியா ஏதோ கதைத்துக் கதைத்து விம்மினாளே தவிரக் கண்களால் கண்ணீர் வழியவில்லை. அடிக்கடி கைக்குட்டையால் கண்களைத் துடைத்தமையால் அவளது கண்கள் சிவந்திருந்தன.

வழமையாக அவர்களுக்குக் கடலை கொடுக்கும் பையன் பத்தாவது தடவை அவளிடம் வந்தான். வித்தியா அவனது நிலையைப் பார்த்து இரங்கி பத்து ரூபாத்தாள் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள். அவன் தயாராகக் கட்டி வைத்திருந்த கடலைச் சரை ஒன்றை எடுத்து நீட்டினான்; '' இன்று அவர் வரவில்லை. எனக்குக் கடலை வேண்டாம் கொண்டு போ'' என்றாள் வித்தியா. கடலை விற்பவன் வித்தியாவை ஒரு மாதிரியாகச் சில கணங்கள் பார்த்து விட்டுச் சென்றான்.

‘‘கடற்கரையில் இவ்வளவு நாளும் கடலை வாங்கி, அதை உடைத்து அவர் தந்தவர். இன்று என்னால் அவரில்லாமல் உண்ண முடியவில்லை.’’ விம்மினாள் வித்தியா. வளர்மதி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் விக்கி விக்கி அழுத போதும் கண்ணீர் வரவில்லை.

‘‘ஆறரை மணியாச்சு. இனி அவர் வரமாட்டார். வாபோவம்’’ என்றாள் வளர்மதி.

‘‘இல்லை அவர் வருவர். இன்னும் சிறிது நேரம் காத்திருப்போம்’’ என்றாள் வித்தியா.

வளர்மதியின் நெஞ்சு ‘திக் திக்’ என்று அடித்தது. வளர்மதியின் அம்மா மிகவும் கண்டிப்பானவர். நேரம் பிந்திச் சென்றால் ஏசுவார். என்பதை நினைக்க வளர்மதிக்குப் பயமாக இருந்தது. ‘‘வித்தி ஆறுமணிக்குப் பிறகு நான் போனால் அம்மா ஏசுவா. அவாக்கு எந்தச் சாட்டும் சொல்ல முடியாது. முன்பு ஒரு முறை நான் பாடசாலையால் பிந்திச் சென்ற போது அம்மாவுக்குச் சரியான கோபம் வந்து விட்டது. என்னை ஏசி விட்டு பாடசாலை அதிபரிடம் சென்று விசாரித்தார். அதன் பின்பு தாமதமாகி வீட்டுக்குச் செல்ல எனக்குப் பயம். நீ நின்று ஆறுதலாக வா’’ என்று கூறி விட்டு எழுந்தாள் வளர்மதி.

‘‘என்னடீ விம்மி விம்மி அழுகிறாய். கண்களும் முகமும் வீங்கி இருக்கு. இரண்டு மூன்று தினங்களாய்த் தைரியமாக இருந்த உனக்கு இப்ப என்ன நடந்தது.’’ பாசத்துடன் கேட்டாள் அர்ச்சகா.

கட்டிலால் எழுந்து அமர்ந்த வித்தியா சொன்னாள்; ‘‘பழைய சம்பவமொன்றை நினைத்துப் பார்த்தேன். அழுகை வந்து விட்டது. காதலர் தினத்தன்று நான்கு மணிக்கு எனது கூந்தலில் மஞ்சள் ரோஜாப்பூ சூடுவேன் என்று கூறி விட்டுச் சென்ற அவர் வரவில்லை. அதனால் நான் மூன்று தினங்கள் சாப்பிடவில்லை. எனது நிலைமையைப் பற்றி வளர்மதி கூறியதால் துடிதுடித்துக் கொண்டு வந்தார். அவரது தாயார் அன்று காலை மயங்கி விட்டாராம். அதனால் தான் அவர் வரவில்லை. தாயார் ஒரு நோயாளி, இருந்தும் அவர் அன்று வராததை நினைக்க இப்பவும் எனக்குக் கவலையாக இருக்கு. அப்படிப்பட்ட நான் எப்படி அவரைப் பிரிந்திருக்கப் போகிறேன். ஒரு வார காலமாக அவரைக் காணாததால் உறங்க முடியாமல் தவிக்கிறேன். அவர் தந்த இந்தக் காதல் நோய் கடலை விடப் பெரிதாகி என்னை வருத்துகிறது. நீங்கள் யாராவது என்னுடன் இருந்தால் அவரை நினைத்தாலும் கலங்காது இருக்கிறேன். நீங்கள் போய் விட்டால் நான் படும் துன்பம் கடலை விடப் பெரியது’’ என்றாள் வித்தியா.

‘‘உனது அம்மா முன்பை விட இப்பொழுது மனம் குழம்பிக் காணப்படுகிறார். மாமாவும் அவாவும் அடிக்கடி கவலையோடு கதைக்கிறத்தைப் பார்த்தால் வேறு ஏதோ ஒரு துக்கம் அவர்களை வாட்டுவது போலத் தெரிகிறது. கண்மணி மாமி நேற்று இரவு கஜேந்திரனைப் பற்றி என்னைக் கேட்டவா. நான் அவரைப் பற்றிச் சொன்னனான். அவா மௌனமாகக் கேட்டாவே தவிர ஒன்றும் சொல்லவில்லை’’ என்றாள் அர்ச்சகா.

‘‘அம்மாவும் மாமாவும் சேர்ந்து ஏதாவது சூழ்ச்சி செய்வார்கள். அம்மா அவரில் உள்ள அக்கறை காரணமாக விசாரித்து இருக்க மாட்டா. அவருக்கு அம்மா ஏதாவது தீங்கு செய்தால் நான் உயிரோடு இருக்க மாட்டேன். கடலை விடப் பெரிதான காதல் நோயால் என் கண்கள் பல நாட்களாக உறங்க முடியாது வருத்துகின்றன. இந்நிலையில் அவருக்கு ஏதாவது கெடுதி ஏற்பட்டால்’’ விம்மினாள் வித்தியா.

**1175. படல்ஆற்றா பைதல் உழக்கும் கடல்ஆற்றாக்
காமநோய் செய்தஎன் கண்.**

*அன்று கடலை விடப் பெரிய நோயான காமநோயை உண்டாக்கிய எனது கண்கள், இன்று உறங்க முடியாமல் துன்பத்தால் கலங்கித் தவிக்கின்றன.*

### கண்கள் தந்த நோய்

‘‘அழாதை உனக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும் ஒரு விஷயம் சொல்லப் போகிறேன்’’ என்ற அர்ச்சகா சுற்றி வர ஒரு முறை பார்த்து விட்டுத் தனது சட்டைக்குள் மறைத்து வைத்திருந்த கஜேந்திரனது கடிதத்தை எடுத்து நீட்டினாள். வெகு நேரமாக வித்தியா அக்கடிதத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தாளே தவிர உற்சாகத்துடன் கையை நீட்டி அதைப் பெறவில்லை. அது அர்ச்சகாவுக்கு அதிர்ச்சியை கொடுத்தது. தற்செயலாக கண்மணி மாமி அறைக்குள் வந்தால் என்ன செய்வது?’’ என்று நினைத்துப் பயந்தான்; ‘‘என்னடி பேயறைந்தது மாதிரி இருக்கிறாய். உனக்காக நான் கஷ்டப்பட்டு நகுலனைச் சந்தித்துக் கஜேந்திரனிடமிருந்து கடிதத்தைப் பெற்றுக் கொண்டு வாறன். நீ அலட்சியமாக இருக்கிறாய்.’’ என்றவாறு மேசையில் அக்கடிதத்தை வைத்தாள் அர்ச்சகா.

மேசையில் இருந்த அக்கடிதம் காற்றில் படபடத்தது. அதை எடுக்காது அதையே பார்த்துக் கொண்டிருந்தாள் வித்தியா. அர்ச்சகாவுக்குப் பயமாக இருந்தது. மெல்லச் சென்று அக்கடிதத்தை எடுத்து அங்கிருந்த புத்தகமொன்றுக்குள் வைத்தாள் அர்ச்சகா. அவளுக்கு வித்தியாவின் மேல் கோபம் வந்தது.

“அர்ச்சகா, என்னால் இனியும் அவரைப் பார்க்காது இருக்க முடியாது. கடிதங்கள் இன்பத்தையோ ஆறுதலையோ தரமாட்டாது. தொலையாத துன்பத்தைத் தான் தரும். ஆயிரம் கடிதங்கள் வாசிப்பதை விட அவர் அருகில் இருந்து ஒரு வார்த்தை பேசினால் எவ்வளவு இன்பமாக இருக்கும் தெரியுமா? அத்துடன் நான் கடிதம் எழுதினால் அவருக்கு என்னைச் சந்திக்கும் எண்ணம் வராது. எனவே நான் இனிமேல் கடிதம் எழுத மாட்டேன். அத்துடன் அவர் எழுதும் கடிதத்தையும் வாசிக்க மாட்டேன். கடிதம் எழுதுவது ஆரம்பக் காதலர்களுக்கு இன்பமாக இருக்கும். அவர்கள் தமக்கு எழுதிய கடிதங்களை அடிக்கடி எடுத்து வாசித்து இன்பமடைவார்கள். நாங்கள் காதலிப்பதைக் கடந்து விட்டோம். அவர் எனது நெஞ்சில் கருங்கல் சிற்பமாகப் பதிந்துள்ளார். அதே போல் நானும் அவரின் உள்ளத்தில் உறைந்துள்ளேன். இந்நிலையில் துன்பப்படும் எனக்கு அவர் நேரில் வந்து ஆறுதல் வார்த்தைகள் கூறினாலும் எனது மனம் ஏற்காது. அத்துடன் எனது கண்களும் அதை ஏற்காது வருந்தி அழும். இப்பொழுது அவர் வந்து அழைத்துச் சென்றாலே எனது துன்பம் மறையும். அதற்கான ஏற்பாட்டை செய்ய விரும்பினால் செய். இல்லா விட்டால் நான் துன்பப்படுவதைப் பார்த்துக் கொண்டிரு” என்றாள் வித்தியா.

அர்ச்சகாவால் பேச முடியவில்லை. அவள் அதிர்ச்சியால் சில கணங்கள் உறைந்து போனாள். வித்தியாவின் வார்த்தைகளில் அர்த்தமிருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது. “வித்தியா பாவம். அவள் சொல்வதைப் போல் நாம் கஜேந்திரனைச் சந்தித்துக் கடிதங்கள் வாங்கி வருவதாலும், வித்தியாவைப் பற்றிய செய்திகளைச் சொல்வதாலும் தான் அவன் வாழாதிருக்கிறான். வித்தியாவைப் பற்றி செய்திகள் எதுவும் தெரியாவிட்டால் துடிதுடித்து அவளைச் சந்திக்க முயல்வான். அதை நான் கெடுத்து விட்டேன்” என்று நினைத்தாள் அர்ச்சகா.

“காதலிக்க துணிந்தவருக்கு எனது துயரத்தைப் போக்கவும் தெரிய வேண்டும். அழுது அழுது எனது கண்ணீர் வற்றி விட்டது. பல இரவுகள் உறங்காததால் எனது கண்கள் எரிகின்றன. கண்ணீரைத் துடைப்பதால் எனது கண்கள் சிவந்து வீங்கித் துன்பத்தைத் தருகின்றன. இனிமேலும் என்னால் துன்பத்தைத் தாங்க முடியாது. எதற்கும் ஓர் அளவு வேண்டும். அவர் எனது நிலையை உணராது தனது துன்பங்களைப் பற்றியே கடிதங்களில் எழுதுகிறார். அவருக்கு எனது பிரிவால் மட்டுமே துன்பம் உண்டு எனக்கு எவ்வளவு கரைச்சல் என்று உனக்குத் தெரியும். அம்மா தினமும் பலமுறை என்னைத் திட்டுகிறா. நான் யாரையோ கொலை செய்த மாதிரி மாமா என்னைப் பார்க்கிறார். இதிலிருந்து நான் விடுதலை அடைய வேண்டும் என்று அவருக்கு எடுத்துச் சொல்லு. இந்தத் துன்பங்கள் யாவும் அவர் அழைத்துச் சென்றால் தான் தீரும்” என்று அழுதாள் வித்தியா.

**1176. ஓஓ இனிதே எமக்குஇந்நோய் செய்தகண்**
**தாஅம் இதற்பட்டது!**

*எனக்கு இக் கொடிய காம நோயை உண்டாக்கிய கண்கள், இன்று தாமும் பெருந்துன்பத்துள்ளாகி வருந்துவது மிகவும் நல்லதே.*

## நெகிழ்ந்த கண்கள்

“அவர் உன்னை அழைத்துச் செல்ல மாட்டேன் என்று எப்போதாவது உனக்குக் கூறினாரா? அப்படிக் கூறியிருந்தால் நீ சொல்கின்ற அனைத்துக் குற்றச் சாட்டுக்களையும் ஏற்றுக் கொள்ளலாம். அவர் என்னைச் சந்திக்கும் போதெல்லாம்; “வித்தியாவை தாய் கொடுமைப்படுத்துவதை நினைக்க எனக்குத் தாங்க முடியாத வேதனையாக இருக்கிறது நான் அவளைக் கூட்டி வரப்போகிறேன். கடவுள், தான் படைத்த உயிர்களைக் காப்பாற்றாமல் விடமாட்டார். நான் விரும்பியவளை கௌரவமாகக் கூட்டிவர நினைக்கிறேன். தாங்கள் ஒரு வைத்தியனைத் தீர்மானித்திருக்க அவள் யாரோ ஊர் பேர் தெரியாத தொழிலில்லாதவனோடு சென்று விட்டாள் என்று அவளது இனத்தவர்கள் குறை கூறக்கூடாது என்பதற்காகத் தான் பொறுத்திருக்கிறேன். வித்தியா படும் துன்பங்களைக் கடிதங்களில் எழுதுவதால், அதை வாசிக்கும் போது எனது கண்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றன. அவள் ஒரு மாபெரும் புதையல். எனது சொர்க்கம் அப்படியானவள் வீட்டில் இருந்து துன்பப்படுவதை விட கௌரவக் குறைவான முறையில் கூட்டிவருவது நல்லது. நான் எனது அம்மாவுக்கு வித்தியாவின் காதல் விஷயத்தைப் பற்றிக் கூறி விட்டேன். என்னால் அவள் படும் துன்பத்தைப் பற்றியும் எடுத்துக் கூறி விட்டேன். அம்மா சுகவீனமுற்று வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்ற பொழுது வித்தியா அங்கு வந்து பராமரித்த போதே அம்மா சந்தேகப்பட்டாவாம். நல்ல பிள்ளை; குணவதி என்றா. அப்பா என்னில் மிகுந்த அன்பு வைத்துள்ளார். எனது காதலைப் பற்றி ஒன்றும் சொல்ல மாட்டார். கொழும்புக்கு வித்தியா செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால் உடனே நான் அவளை அழைத்து வந்து

விடுவேன்'' என்று கஜேந்திரன் கூறினவர். உனக்கு இங்கு இருக்கக் கஷ்டமென்றால் புறப்பட்டு வா. கூட்டிக் கொண்டு போய் விடுகிறேன் என்றாள் அர்ச்சகா.

அர்ச்சகா அப்படிச் சொல்வாள் என்று எதிர்பாராத வித்தியா சற்றுத் தடுமாறிப் போனாள்; ''இப்ப அம்மா கொழும்புக்குப் போறதைப் பற்றிக் கதைப்பதில்லை. காலையில் வந்து சொன்னா; ''வித்தி இனி நீ வீட்டை விட்டுச் செல்ல நான் அனுமதிக்க மாட்டன். அவசரமாக எங்காவது செல்வதானால் நானும் உன்னோடு வருவன்.'' என்றா. இதிலிருந்து இப்போதைக்குக் கொழும்புக்குப் போவதில்லை என்று தீர்மானித்திருக்கிறா போலத் தெரிகிறது. அம்மாவுக்கு இரத்த அழுத்த நோய் உள்ளது. நேற்றுச் சாப்பிடவில்லை தலையைச் சுற்றுகிறது என்று படுத்திருந்தா. மாமா வைத்தியரை அழைத்து வந்தார். இரத்த அழுத்தம் கூடி இருப்பதாக வைத்தியர் சொன்னார். அத்துடன் அதிகம் யோசிக்க வேண்டாமென்றும் சொன்னார். நான் அழுவதைப் பார்க்க அவாவுக்கு வருத்தம் கூடி விடும். தற்செயலாக நான் வீட்டை விட்டுப் போனால் அதிர்ச்சியில் செத்துப் போவா. அது தான் கவலையாக இருக்கு. இவ்வளவு காலமும் அன்போடு எந்த விதமான குறைகளுமில்லாமல் என்னை வளர்த்த அம்மாவுக்குத் துரோகம் செய்வதை நினைக்க கவலையாக இருக்கு.'' என்று கூறி விட்டுச் சில நிமிடங்கள் விம்மினாள் வித்தியா.

நல்லூர்க் கந்த சுவாமி கோயிலில் அவரைக் கண்டு விட்டு நான் தான் ஆசைப்பட்டேன். பின் அவர் எனக்குப் பின்னால் திரிந்த போது அவரை வெறுத்து ஒதுக்க எனது கண்கள் விடவில்லை. அப்பொழுது வெறுத்திருந்தால் இன்று இந்த நிலை ஏற்பட்டிராது. அன்று அவரைக் கண்டதும் மகிழ்ந்து விரும்பிய எனது மனமும் அவரைக் கண்டவுடன் நெகிழ்ந்து வரவேற்று மகிழ்ந்த கண்களும் இன்று உறங்க முடியாமல் தவிக்கின்றன. என்னால் இப்பொழுது அழமுடியவில்லை. அழுதாலும் கண்ணீர் வற்றியதால் கண்களால் கண்ணீர் வருவதில்லை'' என்றாள் வித்தியா. அர்ச்சகா எதுவும் பேசாமல் நின்றாள்.

**1177. உழந்துஉழந்து உள்நீர் அறுக விழைந்துஇழைந்து**
**வேண்டி யவர்க்கண்டகண்!.**

*அன்று காதலரைக் கண்டு மயங்கி விரும்பிய கண்கள், இன்று உறக்கமில்லாது துன்பத்தால் வருந்தி வருந்தி அழுது கண்ணீரும் அற்றுப் போகட்டும்.*

### கண்களின் துன்பம்

பல நாட்களாக வளர்மதி, ஆதவனைக் காணவில்லை. வழக்கமாக அவன் செல்லும் வீதியில் பலமுறை அவள் சென்ற போதும் அவனைக் காண முடியவில்லை. வளர்மதி வசதியான குடும்பத்தில் பிறந்தவள். அவளது தந்தை பெரிய விவசாயி. பெரும் வர்த்தகர்கள் சம்பாதிக்கும் பணத்தை விட கூடுதலான பணத்தை அவர் விவசாயம் செய்வதன் மூலம் பெற்றுக் கொள்வார். அத்துடன் வளர்மதியின் மூன்று சகோதரர்கள் வெளிநாட்டில் இருந்து உழைத்துப் பெருந்தொகையான பணத்தை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவளுக்குப் பணத்திற்கு ஒரு போதும் தட்டுப்பாடு ஏற்பட்டதில்லை. அவள் ஏதாவது ஒரு பொருளை விரும்பினால் அவளது தந்தை அதை வாங்கிக் கொடுத்து விடுவார். அவர் வாங்கிக் கொடுக்கா விட்டால், அவள் அன்று தொலைபேசியில் தனது சகோதரர்களுக்கு சொல்வாள். உடனே அவர்கள் தமது தந்தையை ஏசி விட்டு அவள் கேட்ட பொருளை வாங்கிக் கொடுத்து விடுவார்கள். அதனால் அவளது தகப்பனார் அவள் கேட்கும் பொருட்கள் யாவற்றையும் வாங்கிக் கொடுத்து விடுவார். அப்படிச் செல்லமாக வளர்ந்த வளர்மதிக்கு ஆதவன் அலட்சியம் செய்வது பெரும் வேதனையைக் கொடுத்தது. பொருட்கள் வாங்குவதைப் போல அவனை வாங்க முடியவில்லையே என்று அவள் துக்கப்படுவாள்.

பல நாட்களாக ஆதவனைக் காணாததால் அவனது வீட்டுக்குச் செல்ல ஆயத்தமானாள் வளர்மதி. ஆதவனின் தங்கை நிர்மலா ஓர் அழகுப் பிரியை. அழகான எந்தப் பொருளைக் கண்டாலும் அதை வாங்க வேண்டுமென்று நினைப்பவள். அதனால் வளர்மதி பூங்கன்றுகள் விற்பனை செய்யும் தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மஞ்சள் நிறமும் சிவப்பு நிறமும் கலந்த ரோஜாச் செடி விற்பனைக்கிருப்பதாகத் தோட்டச் சொந்தக்காரன் அன்றைய தினசரிப் பத்திரிகையில் விளம்பரம் செய்திருந்தான். அதனால் அங்கு சென்ற வளர்மதி அந்த ரோஜாச் செடியை விலைக்குக் கேட்டாள். உரிமையாளன் அதற்கு ஐந்நூறு ரூபா சொன்னான். பணத்தைக் கொடுத்து அந்த ரோஜாச் செடியை வாங்கிய வளர்மதி, அதைக் கொண்டு ஆதவனின் வீட்டுக்கு வந்தாள். அந்த ரோஜாச் செடியில் மலர்ந்திருந்த பூவைக் கண்டதும் நிர்மலா திகைத்து விட்டாள்.

''நிர்மலா, மிகவும் அபூர்வமான ரோஜாச் செடியொன்று எனக்குக் கிடைத்தது. ரோஜாப் பூக்களில் இரு நிறங்கள் கலப்பதில்லை. அபூர்வமாக இந்த ரோஜாச் செடியில் இரண்டு நிறங்கள் கலந்துள்ளன. உனக்குப் பூக்கள் என்றால் உயிர். அது தான் கொண்டு வந்தேன்'' என்றாள் வளர்மதி.

‘‘அண்ணா, அண்ணா ஓடி வாருங்கோ ரோஜாச் செடியில் இரண்டு நிறங்களில் பூக்கள் மலா்வதில்லை. இங்கே வந்து பாருங்கோ இரண்டு நிறத்தில் ரோஜாப்பூ உள்ளது’’ என்று பலமாகக் கூறினாள் நிர்மலா.

ஆதவன் அவசரமாக அங்கே ஓடி வந்தான். அங்கு வளா்மதி நிற்பதைக் கண்டதும் அவனுக்கு வியா்த்துக் கொட்டியது. தடுமாற்றத்துடன் அப்பூவைச் சிறிது நேரம் பார்த்த அவன்; ‘‘நல்லாயிருக்குது இதுவரை நான் இப்படியான ஒரு பூவைப் பார்க்கவில்லை’’ என்று கூறி விட்டு உள்ளே சென்றான்.

வளா்மதிக்கு ஏமாற்றமாக இருந்தது. எனினும் சில நிமிடங்களாவது அவனைப் பார்க்க முடிந்ததே என்று சந்தோசப்பட்டாள்; ‘‘நான் எவ்வளவு தீவிரமாக அவரை நேசிக்கிறேன். ஆனால் அவா் என்னை ஏறெடுத்துப் பார்க்கிறாரில்லையே. நான் உங்களை விரும்புகிறேன். உங்களுக்கு என்மீது காதல் இருக்கிறதா என்று வெட்கத்தை விட்டுக் கேட்ட போதும் ‘‘ம்’’ என்று சொன்னாரே தவிர வேறு எதுவும் பேசவில்லை. அப்படியானவராக அவா் இருந்த போதும் எனது கண்கள் அவரைப் பார்க்க வேண்டும் என்று துடிக்கின்றன. அதனால் தான் இன்று ரோஜாச் செடியுடன் அவரைத் தேடி வந்தேன். அவா் என்னைக் கண்டும் காணாதது போல் இருக்கிறார்’’ என்று துக்கப்பட்டாள் வளா்மதி.

**1178. பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றுஅவர்க்
காணாது அமைவில கண்.**

*உள்ளத்தால் விரும்பாமல் சொல்லளவில் விரும்பிப் பழகியவரானாலும், அவரைக் காணாமல் கண்கள் அமைதியுறுவதில்லை.*

## இருவகைத்துன்பம்

அர்ச்சகாவின் தாயாரான கமலேஸ்வரியும் தந்தையாரான நவரத்தினமும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷனியம்மன் ஆலயத்திற்குச் செல்வதெனத் தீா்மானித்திருந்தனா். இருபது வருடங்களாக அவா்கள் கொழும்பில் இருந்தமையால் அக் கோயிலுக்கு அவா்கள் செல்லவில்லை. நவரத்தினத்தின் பெற்றோர் திருமணம் செய்து பல வருடகாலம் பிள்ளைகள் இல்லாதிருந்ததால் நாகபூஷனி அம்மனுக்கு நேர்த்தி வைத்து விரதமிருந்தனா் அதனால் தான் நவரத்தினம் பிறந்தாரென அவரது தாயார் கூறுவார். நவரத்தினம் கொழும்புக்குச் செல்லும் வரை வருடாந்த உற்சவ காலத்தில் அவா் குடும்பத்துடன் சென்று வந்தார். ஊருக்கு வந்ததும் முதல் வேலையாக அவா் நாகபூஷனி அம்மன் கோயிலுக்குச் செல்ல வேண்டுமென்று நினைத்திருந்தார். இருந்த போதும் அவரால் உடனே புறப்பட முடியவில்லை.

கார்த்திகைத் தீபத்திருநாளுக்குச் செல்ல வேண்டுமென்று நினைத்து, கார்த்திகைத் தீபத்திருநாளன்று நவரத்தினமும் கமலேஸ்வரியும் புறப்பட்டனா். அர்ச்சகா சுகமில்லை என்று கூறி நின்று விட்டாள். ஒரு வாரத்திற்கு முன்பே அர்ச்சகா நகுலனைக் கண்டு தனது பெற்றோர் கார்த்திகைத் தீபத்திருநாளன்று நாகபூஷனியம்மன் கோயிலுக்குச் செல்வதால் அன்று அவனை வீட்டுக்கு வருமாறு கூறியிருந்தாள். அவன் முதன் முதலாக வீட்டுக்கு வரும் போது எப்படி அவனை வரவேற்பது என்று பல நாட்களாக நினைத்துப் பார்த்தாள். இரவு முழுவதும் அவனது வருகையைப் பற்றி நினைத்துத் தூங்கவில்லை. கார்த்திகைத் தீபத்திருநாளுக்கு முதல் நாள் இரவு அவள் விடியும் வரை தூங்கவில்லை. இன்று இரவு அவா் வரமாட்டார். அவரை எதிர்பாராது உறங்கு என்று சொன்னாலும் அவளது கண்கள் உறங்க மறுத்தன. இரவு முழுவதும் உறங்காது கட்டிலில் புரண்டு கொண்டிருந்தாள் அர்ச்சகா. அன்று இரவு மிகவும் நீண்டு விட்டதைப் போன்றதோர் உணா்வு அவளின் மனதில் எழுந்தது. அடிக்கடி மின் விளக்கைப் போட்டு நேரத்தைப் பார்த்தாள். மணிக் கூடு அசையாமல் நிற்பதைப் போல் இருந்தது. மனம் ஒரு நிலைப் படாது அவதிப்பட்டது.

காலை ஆறு மணிக்கு நவரத்தினமும் கமலேஸ்வரியும் அர்ச்சனைப் பொருட்களுடன் கோயிலுக்குப் புறப்பட்டனா். ‘‘பிள்ளை, கவனமாக வீட்டைப் பூட்டிக் கொண்டு போய் வித்தியாவின் வீட்டில் இரு. அடிக்கடி வீட்டுக்கு வந்து கவனித்துக் கொள். இரவு கார்த்திகைத் தீபம் பார்த்து விட்டு விடியத்தான் நாங்கள் வருவோம். இரவைக்கு வித்தியாவின் வீட்டை போய் நில்.’’ என்றாள் கமலேஸ்வரி.

‘‘இரவுக்கு வளா்மதியை கூட்டி வந்து வீட்டில் படுக்கிறேன். ஊரில் திருடா் நடமாட்டம் அதிகரித்திருப்பதால் இங்கு படுப்பது தான் நல்லது’’ என்றாள் அர்ச்சகா.

‘‘பயமில்லாவிட்டால் இரண்டு பேரும் படுங்கோ’’ என்றாள் கமலேஸ்வரி அந்த வார்த்தைகள் அர்ச்சகாவுக்குத் தேனாக இனித்தன. அவா்கள் புறப்படும் போது வளா்மதி அங்கு வந்தாள்.

‘‘மதி, அர்ச்சகாவுடன் துணையாக இருந்து கொள். நாங்கள் விடிய வருகிறோம்.’’ என்று கூறிவிட்டுச் சென்றாள் கமலேஸ்வரி. அவர்கள் சென்ற சில நிமிடங்களில் நகுலன் அங்கு வந்தான். அவனைக் கண்டதும்; ‘‘நான் வித்தியாவின் வீட்டுக்குப் போயிட்டு வாறன்’’ என்று புறப்பட்டாள் வளர்மதி.

நகுலனைக் கண்டதும் அர்ச்சகாவுக்கு நெஞ்சு படபடத்தது. அவன் அவளின் அருகில் வந்து அமர்ந்தான். அர்ச்சகாவால் அவனோடு கதைக்க முடியவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் பிரிந்து சென்று விடுவார் என்று நினைத்தாள்.

‘‘இப்படி ஒரு நாள் முழுவதும் உமக்கு அருகில் இருப்பேன் என நான் கனவு கூடக் காணவில்லை. மற்றும் வேளைகளில் கலகலப்பாக கதைக்கும் நீர் இன்று ஏன் பேசாமல் இருக்கிறீர்’’ என்று அவளின் கையைப் பிடித்தான் நகுலன்.

உங்களைக் கண்டாலும் எனக்குத் தூக்கம் வருவதில்லை. காணாவிட்டாலும் தூக்கம் வருவதில்லை. இப்பொழுது எனக்கருகில் இருக்கிறீர்கள். சிறிது நேரத்தில் என்னை விட்டுப் பிரிந்து சென்று விடுவீர்கள் என்று நினைக்க எனக்குக் கவலையாக உள்ளது. அதை நினைத்தால் எனக்குத் தூக்கம் வர மாட்டாது. நீங்கள் என்னைச் சந்திக்க வந்தாலும் துக்கம் தான். சந்திக்க வராவிட்டாலும் துக்கம் தான்’’ என்று விம்மினாள் அர்ச்சகா.

‘‘அதிஷ்டவசமாய் உம்மைச் சந்திக்க எனக்கொரு வாய்ப்புக் கிடைத்திருக்கு. அதைச்சரிவரப் பயன்படுத்தாமல் அழுகிறீர்’’ என்றான் நகுலன்.

‘‘உங்களுக்கென்ன சொல்லுவியள் நான் உங்களால் இருவகையான துன்பத்தை அனுபவிக்கிறேன்’’ என்றாள் அர்ச்சகா.

**1179.	வாராக்கால் துஞ்சா; வரின்துஞ்சா; ஆயிடை**
**ஆரஞர் உற்றன் கண்.**

*காதலர் வராவிட்டாலும் எனது கண்கள் தூங்குவதில்லை. அவர் வந்தாலும் தூங்குவதில்லை. இவ்வாறு எந்நேரமும் என் கண்கள் தூங்காமல் துன்பப்படுகின்றன.*

### கொட்டும் மேளம்

அன்று இரவு எட்டுமணிக்கு நகுலன் அர்ச்சகாவின் வீட்டிலிருந்து புறப்பட்டான்; ‘‘நான் அதிகாலையில் புறப்பட்டு வந்தால் காலை உணவையும் உண்ணவில்லை, உம்மோடு இருந்தால் மதிய உணவையும் அம்மாவிடம் உண்ணவில்லை. அம்மா காலையில் சாப்பிட்டிருப்பா. மத்தியானம் நான் சாப்பிடாமல் சாப்பிடமாட்டா’’ என்று ஐந்தாவது தடவையாகக் கூறிவிட்டு எழுந்தான் நகுலன்.

‘‘என்னை விட உங்களுடைய அம்மாவினுடைய சாப்பாடு முக்கியமென்று கருதும் உங்களை எனக்குப் பிடிக்கவில்லை. இன்னும் சிறிது நேரம் இருந்து விட்டுச் செல்லுங்கள்’’ என்று சிணுங்கினாள் அர்ச்சகா.

‘‘மாலை ஆறுமணிக்கும் இதைத் தான் சொன்னனீர். இப்ப ஒன்பது மணி இப்பவும் அதைத்தான் சொல்கிறீர். இப்படியே சொல்லிக் கொண்டிருந்தால் விடிந்த பின்பும் நான் செல்ல முடியாது.’’ என்றான் நகுலன்.

‘‘இப்படி ஒரு சந்தர்ப்பம் இனிமேல் கிடைக்கமாட்டாது. விடிந்த பின்பு நீங்கள் செல்வதானாலும் எனக்குச் சந்தோஷம் தான்.’’

‘‘இனியும் தாமதிக்க என்னால் முடியாது’’ என்று எழுந்தான் நகுலன்.

அர்ச்சகா அவனது கையைப் பிடித்து இழுத்தாள்; ‘‘எனது பள்ளித் தோழி மாதுமையும் அவளது தாயாரும் யாழ்ப்பாணத்தைப் பார்ப்பதற்காக நாளைக்கு இங்கு வருகிறார்கள். அவர்கள் செல்ல இரண்டு வாரங்களாகும். அது வரையும் நான் உங்களைக் காண முடியாது. இன்னும் சிறிது நேரம் இருங்கோ’’ என்று கெஞ்சினாள் அர்ச்சகா.

‘‘எனக்கு உம்மோடு இருக்க விருப்பமில்லையென்றா நீர் நினைக்கிறீர். என்னுடைய நிலைமையை உம்மால் புரிந்து கொள்ள முடியவில்லையே நான் மாலை வேளைகளில் தாமதமாக வீட்டுக்குச் செல்ல நேர்ந்தால், அம்மா விளக்குடன் ஒழுங்கையில் நிற்பா. ஊர்முழுக்க நான் நேரம் தமதமாகி வரும் செய்தி தெரிந்து விடும்’’ என்று கூறி விட்டு அர்ச்சகாவின் பதிலை எதிர்பாராது நடந்தான் நகுலன்.

அன்று இரவு முழுவதும் அர்ச்சகா தூங்கவில்லை. பகல் முழுவதும் நகுலன் அருகில் இருந்ததைப் போல் விடியும் வரை அவளின் நினைவில் அவன் இருந்தான். அவன் அங்கிருந்த போது நடந்த சம்பவங்கள், அவன் சென்ற பின்பும் நடப்பதைப் போல் இருந்தன. வளர்மதி நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள். விடியலை வரவேற்றுக் குருவிகள் இசைக்கும் இராகம் கேட்டுக் கொண்டிருந்தது. நித்திரை வராமையால் எழுந்த அர்ச்சகா குளித்து விட்டுச் சமைக்க ஆரம்பித்தாள்.

பத்துமணிக்கு மாதுமையும் அவளது தாயார் புனிதவதியும் அர்ச்சகாவின் வீட்டுக்கு வந்தனர். அவர்கள் வந்த போது நவரத்தினமும் கமலேஸ்வரியும் நாகபூஷனியம்மன் கோயிலால் வரவில்லை. மாதுமை குளித்து விட்டு வந்து சாப்பாட்டு மேசையில் அமர்ந்தாள். அர்ச்சகா அவளுக்கு உணவு பரிமாறினாள்.; ''யாழ்ப்பாணத்துத் தண்ணீர் உன்னைக் கொழுக்க வைத்திருக்கு. இரண்டு மாதத்துள் ஆளே மாறிவிட்டாய். கொழும்பில் உனது முகத்தில் நரம்புகள் தெரிந்தன. இப்ப நல்லாய்க் கொழுத்துச் சிவந்திட்டாய். முன்பை விட ஓர் அபூர்வ அழகு உனது முகத்தில் தாண்டவமாடுகிறது'' என்ற மாதுமை அவளது கண்களை உற்றுப்பார்த்தாள் பின்; ''ஆள் அழகாக இருந்தாலும் கண்களில் உள்ள மருட்சியும் துன்பமும் என்னைச் சந்தேகப்பட வைக்கின்றன. உண்மையைச் சொல்லு இல்லாவிட்டால் மாமியைக் கேட்பன்.'' என்றாள் மாதுமை.

உனக்கு எப்பவும் கேலியும் நக்கலும் தான். உன்னைப் போல என்னையும் நினைக்கிறாய்'' என்றாள் அர்ச்சகா.

''நீ உண்மையாகக் காதலிக்காது இருந்தால், காதலைப் பற்றி எப்படிக் கதைப்பாய். உனக்குள்ளே இருப்பது தான் உனது உடலிலும் இருக்கிறது. ஒருவரது கண்கள் அவரது முகத்தைக் காட்டும் கண்ணாடி என்று சொல்வார்கள். மனதின் உணர்வுகளை முகம் பிரதிபலிக்கும். நான் சொல்லும் வார்த்தைகளால் உனது கண்கள் துடிக்கின்றன. முகம் சிவந்து விட்டது. உனது கண்களில் காணப்படும் காதலரைப் பிரிந்த சோகம் அடிக்கப்படும் மேளத்தைப் போல உனது மனதில் உள்ள செய்தியைச் சொல்கிறது'' என்று கண்சிமிட்டினாள் மாதுமை.

**1180. மறைபெறல் ஊரார்க்கு அரிதுஅன்றால் எம்போல்**
**அறைபறை கண்ணா ரகத்து.**

*அறைந்து இரகசியத்தை வெளிப்படுத்தும் பறையைப் போல துன்பத்தை வெளிப்படுத்தும் கண்களை உடைய என்னைப் போன்றவரிடத்தில் இரகசியங்களை அறிந்து கொள்வது இந்த ஊரவருக்கு மிகவும் எளிதானது.*

**யாரிடம் சொல்வேன்**

''காதல் என்பது அற்பமானதென்றா நீ கருதுகிறாய். உலகின் உயிர் மூச்சு காதல் தான். காதல் இல்லாவிட்டால் உலகம் அழிந்து விடும். உலகில் எந்த ஓர் உயிரினமும் இருக்கமாட்டாது. காற்றும் இராது. நீரும் இராது. கடவுள் உலகத்தையும் காதலையும் ஒன்றாகத் தான் படைத்தார். காதல் இல்லா விட்டால் உலகில் சுவைகள் கூட இருக்கமாட்டாது. விஞ்ஞானப்படி தாவரங்கள் கூடக் காதலிக்கின்றன. நீ காதலிப்பதைப் பற்றி நான் குறை சொல்ல வில்லை. காதலை மறைப்பதைத் தான் குறை சொல்லுறன். நீ உனது காதல் விஷயத்தைப் பற்றி எனக்குக் கடிதம் எழுதியிருக்கலாம் தானே. என்னை நீ உண்மையாக நேசித்திருந்தால் மறைத்திருக்கமாட்டாய். காதலைப் பற்றி நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வது எவ்வளவு இன்பமானதென்று உனக்குத் தெரியுமா? காதலிப்பதை விடக் காதலிப்பவரைப் பற்றி அன்புள்ளம் கொண்டவர்களுடன் கதைப்பது பேரின்பத்தைத் தரும்'' என்றாள் மாதுமை.

''உனக்கு எனது காதலைப் பற்றி எழுத வேண்டும் என்று தான் நினைத்தனான். ஆனால் நேரங்கிடைக்கவில்லை. வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்து ஒழுங்குபடுத்த ஒரு மாதத்திற்கு மேல் எடுத்து விட்டது...'' என்று அர்ச்சகா சொல்லிக் கொண்டிருக்கும் போது மாதுமை குறுக்கிட்டாள்.; ''சாட்டுச் சொல்லாதை நீ இரண்டு கடிதங்கள் எனக்கு எழுதினனீ ஒன்றிலென்றாலும், எழுதியிருக்கலாம்'' என்றாள் மாதுமை.

''பிழை தான், அவர் என்னைக் காதலிக்கிறாரோ என்று அந்த நேரம் என்னால் சரியாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. சரியாகத் தெரியாமல் எழுதினால் நீ அங்குள்ள எல்லோருக்கும் சொல்லி விடுவாய். பிறகு வீணான தொந்தரவுகள் வந்துவிடும். எழுதாதது பிழை தான். இனி அப்படியான தவறு எதுவும் விட மாட்டன்'' என்றாள் அர்ச்சகா.

''அவர் எப்படி வடிவானவரே? என்ன செய்கிறார். எத்தனை நாட்கள் அவரைச் சந்தித்துக் கதைத்தனீ'' என்று கேட்டாள் மாதுமை.

“அவர் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புப் படிக்கிறார். மிகவும் நல்லவர். அழகானவர் பலமுறை சந்தித்துக் கதைத்தனான். அடுத்த முறை உன்னையும் அழைத்துச் செல்கிறேன்” என்றாள் அர்ச்சகா.

“ உனது வார்த்தைகளை விட உனது அங்கங்கள் தான் அவரைப் பற்றிச் சொல்கின்றன. நீ பேசும் போது உனது கண்களும், உதடுகளும் அசையும் அசைவில் இருந்து அவர் மீது நீ கொண்டுள்ள காதலைப் பற்றி நான் தெரிந்து கொண்டேன். எவ்வளவு அழகாக இருந்த நீ இப்பொழுது பசலை நிறமாகியுள்ளாய். காதல் வசப்பட்ட ஒரு பெண் தனது காதலன் அருகில் இருந்தால் சிவந்து அழகு கூடிக்காணப்படுவாள். காதலனின் நெருக்கம் கூடக் கூட அவளின் உடல் சிவந்து பொன் போல் ஒளிரும். ஆனால் காதலன் அப் பெண்ணை விட்டுப் பிரிந்தால் அவளது நாணமாகிய செந்நிறம் உடனே மாறி விடும். இதற்குக் காரணம் அவளின் உடலில் பசலை படர்வது தான்.” என்ற மாதுமை சிறிது நேரம் பேசாமல் இருந்தாள். பின்; “எனது காதலரைப் பற்றி உனக்குத் தெரியும் தானே. ஒரு நிமிடம் கூட என்னை விட்டுப் பிரிந்திருக்க மாட்டார். அதே போலத்தான் நானும் அவரை விட்டுப் பிரிந்திருக்க மாட்டேன். தொழில் நிமித்தம் அவர் வெளிநாடு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதற்காக அவர் என்னை விட்டுப் பிரியவிரும்பினார். நான் அதற்குச் சம்மதித்து விடை கொடுத்தேன். அவர் பிரிந்த பின்பு பசலையுற்றேன். இந்த நிலையை நான் யாருக்குச் சொல்வேன். சொல்வதால் ஏதாவது பிரயோசனம் ஏற்படுமா. என்ன….? அவர் எப்போது வருவாரென நான் ஆவலோடு காத்திருக்கிறேன். அவர் இல்லாததால் எனக்குப் பொழுது போகுதில்லை” என்று விம்மினாள் மாதுமை.

அர்ச்சகா மாதுமையை உற்றுப் பார்த்தாள். அவளது உடல் வெளிறி பசலை படர்ந்திருந்தது.

**1181.** **நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்**
**பண்பியார்க்கு உரைக்கோ பிற?.**

*எனது காதலர் பிரிவை விரும்பிய போது அதற்கு உடன்பட்டேன்; பிரிந்த பின்பு பசலை உற்ற என் தன்மையை நான் வேறு யாரிடம் போய்ச் சொல்லுவேன்.*

**பெருமையுடன்**

“அர்ச்சகா, உனக்கு அவரைத் தெரியும் தானே. அவர் என்மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தார். அத்துடன் அவர் எனது தந்தையாரின் உற்ற நண்பனின் மகன் என்பதால் எந்த நேரமும் அவர் எமது வீட்டுக்கு வருவார். இரு வீட்டாரும் எமக்கு திருமணம் செய்து வைப்பதாகத் தீர்மானித்திருந்தமையால் எமக்குக் கட்டுப்பாடுகள் இருக்கவில்லை. நினைத்த நேரம் நான் தொலைபேசியில் அவரோடு கதைப்பேன். அவரைக் காண வேண்டும் என்று விரும்பினால் உடனே தொலைபேசியில் அவரை வீட்டுக்கு வருமாறு அழைப்பு விடுவேன். உடனே வந்து விடுவார். அவருக்கு என்ன அவசர வேலை இருந்தாலும் அதை எனக்காக ஒதுக்கி வைத்து விட்டு என்னைச் சந்திப்பதற்காக வந்து விடுவார். அப்படித் தினமும் அவரைச் சந்தித்துக் கதைத்து மகிழ்ந்த நான் இப்போது இரண்டு மாதங்களாக அவரைச் சந்தித்துக் கதைக்க முடியாமல் இருக்கிறேன்” அழுதாள் மாதுமை.

“ஒவ்வொரு நாளும் மூன்று மணித்தியாலங்கள் தொலைபேசியில் கதைக்கிறதாய் நான் கேள்விப்பட்டன்” என்றாள் அர்ச்சகா.

விரக்தியாகச் சிரித்தாள் மாதுமை; “நேரில் சந்தித்துக் கதைக்கும் இன்பத்தைப் போல ஓர் இன்பம் இவ்வுலகில் இல்லை என்று நினைக்கிறேன். அவரின் கருணையான விழிகளைப் பார்த்துக் கொண்டிருந்தால் எனக்குத் தூக்கமே வராது. அவர் கதைக்கும் போது, அவரின் உதடுகள் அசையும் நளினம் இருக்கே அதை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அவர் கதைப்பதைக் கேட்பதிலும் பார்க்கப் பார்ப்பது தான் எனக்கு இன்பத்தைத் தரும். அழகான கருமை மிக்க சுருண்ட அவரது தலை முடி எவ்வளவு அழகானது தெரியுமா.?” அந்த அழகை நான் தொலைபேசியில் பார்க்க முடியுமா….? இல்லை அவரது உதடுகள் அசையும் நளினத்தை நான் இரசிக்க முடியுமா..? குரலைத்தான் கேட்க முடிகிறது. அதுவும் அவர் என் அருகில் இருந்து பேசுவது போல வருமா…? அவர் எனக்கு அருகில் இருந்து கதைக்கும் போது எனது விரல்களைப் பிடிப்பார். தலையில் பூச்சூடுவார். நான் தேநீர் கொடுத்தால் என்னையும் குடிக்குமாறு வற்புறுத்துவார். நான் குடித்து விட்டுக் கொடுத்தால் தான் அவர் குடிப்பார். அதற்காக நான் தேநீர் குடிக்காமல் அவர் வரும்வரை காத்திருப்பேன். அந்த இன்பத்தைப் பற்றி உனக்குத் தெரியாது” சொல்லிக் கொண்டிருந்தாள் மாதுமை.

அதைக் கேட்க அர்ச்சகாவுக்குச் சிரிப்பாக இருந்தது. “நகுலன் செய்யாத ஒன்றையா இவளது காதலன் செய்கிறார். கையை அசைக்கும் போது தற்செயலாக தொடுவதைப் போல் அவர் எங்கெல்லாம் தொட்டிருக்கிறார் என்று இவளுக்கு எங்கே புரியப் போகிறது. கடற்கரையில் குளிர்பானம்

வாங்கி எனக்கு அவர் பருக்கியதை இவள் அறிவாளா? இல்லை கடலை வாங்கி நான் அவரது வாயில் வைக்க, அவர் எனது கையையும் சேர்த்துக் கடிப்பதை இவள் அறிவாளா…? தான் பெரும் இன்பத்தை அடைந்ததாக நினைக்கிறாள்'' என்று மனதுக்குள் நினைத்துச் சிரித்தாள் அர்ச்சகா.

''என்னடி சிரிக்கிறாய்?'' என்ற மாதுமையைப் பார்த்துச் சொன்னாள் அர்ச்சகா; ''நீ சொல்வதைப் பற்றி ஒன்றும் எனக்குத் தெரியாது. நீ வீட்டாரின் அனுமதியோடு உனது காதலரோடு கதைத்து இன்பமனுபவிக்கிறாய். ஆனால் நான் எங்கோ இருக்கும் ஒருவருடன் மனதுள் கதைத்துச் சிரிக்கிறேன்'' என்றாள் அர்ச்சகா.

''நான் அதிஷ்டம் செய்தவள். ஆனால் தற்பொழுது பிரிந்திருக்கிறேன்'' என்றாள் மாதுமை.

பிரிந்திருப்பதால் நன்றாக மெலிந்து விட்டாய். அதோடு வெளிறியும் போனாய்'' என்றாள் அர்ச்சகா.

''அவர், என் அருகில் இருக்கும் போது கொழுத்துச் சிவந்திருந்த எனது உடல், அவர் வெளிநாடு சென்றதும் வெளிறி விட்டது. அவர் உண்டாக்கினார் என்ற பெருமையோடு பசலை உடலெங்கும் பரவி விட்டது. அது தான் வெளிறிப் போனேன்.'' என்றாள் மாதுமை.

**1182. அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்துஎன்**
**மேனிமேல் ஊரும் பசப்பு.**

*அந்தக் காதலர் உண்டாகினார். என்ற பெருமையோடு இந்தப் பசலை நிறம் என்மேனி யெங்கும் ஊர்ந்து பரவி வருகிறது.*

**கைம்மாறு**

''நீ முன்பு எவ்வளவு அழகாக இருந்தாய் எம்மோடு கூடப் படித்த மாணவர்கள் பலர் உன் அழகில் மயங்கிப் பித்துப் பிடித்துத் திரிந்தவர்கள். மதிவதனன் உனது அழகில் மயங்கிப் பித்துப் பிடித்தவன் போல உனக்குப் பின்னால் அலைந்தவன். அவன் உனக்குக் கடிதம் எழுதிக் கொண்டு வந்து என்னிடம் எத்தனை தடவை தந்தவன். நான் அவன் தந்த கடிதமொன்றை உன்னிடம் கொண்டு வந்து தர அதை நீ வாங்க மறுத்து விட்டாய். அதனால் அதை அவனிடம் திருப்பிக் கொடுத்தேன். ஆனால் அவன் அதை வாங்கவில்லை. ''அர்ச்சகா, நீயே இக்கடிதத்தை வைத்துக் கொள். இன்றில்லா விட்டாலும் என்றோ ஒரு நாள் அவள் என்னை விரும்புவாள். அப்பொழுது அந்தக் கடிதத்தைக் கொடு'' என்றான். இரண்டு வருட காலமாக நான் உன்னைக் கேட்டும் நீ அந்தக் கடிதத்தை வாங்கவில்லை. அதற்குப்பின் அவன் வெளிநாடு ஒன்றிற்குச் சென்று விட்டான். அதனால் அவன் தந்த கடிதம் என்னிடடே இருக்கு. இரு எடுத்து வருகிறேன்'' என்று கூறி விட்டு மாதுமையின் பதிலை எதிர்பாராது உள்ளே சென்ற அர்ச்சகா சில நிமிடங்களில் திரும்பி வந்தாள்.

'' இந்தா மதிவதனனின் கடிதம்'' என்று ஒரு கடிதத்தை நீட்டினாள் அர்ச்சகா. மாதுமை அக்கடிதத்தை வாங்கவில்லை.; ''மாதுமை, அவன் வெளிநாட்டிற்குச் சென்று விட்டான். செல்வதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு எங்களது வீட்டுக்கு வந்து அழுதான். நான் ஏற்கனவே உனக்குத் திருமணம் நிச்சயமாகி விட்டது என்று கூறினேன். கவலைப்பட்டான். அவன் கவலைப்படுவதைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. உன்மீது கோபமும் வெறுப்பும் வந்தது. அவன் சொன்னான்; ''மாதுமையை விரும்பிய என்னால் அவளை மறக்க முடியவில்லை. எனக்குப் பைத்தியம் பிடித்து விடும் போல் உள்ளது. எனக்கு மூன்று பெண் சகோதரிகள் இருக்கிறார்கள். அப்பா அண்மையில் ஒரு விபத்தில் அகப்பட்டு இறந்து போனார். அதனால் சகோதரிகளைக் காப்பாற்றுகின்ற பொறுப்பு என்மீது சுமத்தப்பட்டு விட்டது. இல்லாவிட்டால் நான் செத்திருப்பன்'' என்றான். உன் மீது அளவில்லாத அன்பு வைத்திருக்கும் மதிவதனனின் கடிதத்தை வாசித்துப் பார்'' என்றாள் அர்ச்சகா.

''நான் வாசிக்க மாட்டன்'' என்றாள் மாதுமை; ''நீ வாசிக்க வேண்டாம் நான் வாசிக்கிறேன் கேள்'' என்ற அர்ச்சகா கடிதத்தை மெதுவாக வாசித்தாள்.

அன்பே! நான் உன்னை விரும்புகிறேன். அதற்குக் காரணம் உனது அழகுதான். பிரமன் தனது கைவண்ணத்தைப் பூவுலகினர்க்குக் காட்ட எண்ணிப் போலும் உன்னைப் படைத்தான் உனது உடலில் கொட்டிக் கிடக்கும் அழகை என்னால் வர்ணிக்க முடியாது. வட்டவடிவமான முகம். அதில் படர்ந்திருக்கும் பசுமை எனது கண்களைப் பறிக்கிறது. சிற்பி ஒருவன் அளவறிந்து செதுக்கிய சிலையைப் போன்ற உனது உடலமைப்பு என் உயிரைக் கொல்கிறது. அழகான நெற்றி, அதை அழகு படுத்தும் ஒட்டுப் பொட்டு, கூர்மையான வளைந்த புருவங்கள், அழகான கண்கள், பளபளக்கும் சிவந்த கன்னங்கள். எடுப்பான மூக்கு, அழகான செந்நிற ரோஜா இதழில் பனித்துளி பட்டுப் பிரகாசிப்பதைப் போன்ற உதடுகள். தொடர்ந்து வாசிக்கட்டா'' என்று கேட்டு விட்டு மாதுமையைப்

பார்த்தாள் அர்ச்சகா. மாதுமை எதுவும் சொல்லாதால் அர்ச்சக சொன்னாள்; ''இப்ப நான் ஏன் இந்தக் கடிதத்தை வாசித்தனான் தெரியுமே..? மதிவதனன் எழுதிய அழகு அப்ப சரி. இப்ப எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. சுருக்கம் விழுந்த கன்னங்கள் காய்ந்து வெளிறிய உதடுகள், ''என்று அர்ச்சகா கூறிக் கொண்டிருக்கும் போது மாதுமை குறுக்கிட்டுச் சொன்னாள்; ''உண்மை தான் அவர் காதல் நோயையும் பசலை நிறத்தையும் தந்து விட்டு எனது அழகையும் நாணத்தையும் எடுத்துச் சென்று விட்டார்'' என்று விம்மினாள் மாதுமை.

**1183. சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா**
**நோயும் பசலையும் தந்து.**

*காமநோயையும் பசலை நிறத்தையும் எனக்கு அவர் கைம்மாற்றாகத் தந்து விட்டு எனது அழகையும் நாணத்தையும் எடுத்துச் சென்று விட்டார்.*

## ஏன்?

அர்ச்சகா வெளியே சென்றதால், மாதுமை கட்டிலில் படுத்திருந்தாள், ''மாது'' யாரோ காதுக்குள் கிசு கிசுப்பதைப் போல் இருந்தது. அது அவளது காதலனான விபுலனது குரல் போல இருந்தது. ''மாது… என்ன நித்திரையா என்னை மறந்து உன்னால் எப்படி நித்திரை கொள்ள முடிகிறது. நீ என் உடல் முழுவதும் வியாபித்திருப்பதனால் என்னால் நித்திரை கொள்ள முடியவில்லை. உனது அழகிய தோற்றம் என் கண்களுக்குள் புகுந்திருப்பதால் கண்கள் மூட மறுக்கின்றன. உனது இனிமையான ஒலி எனது காதுகளை நிரப்பியிருப்பதால் வேறு ஒலிகள் எவையும் எனக்குக் கேட்பதில்லை. உனது பேரழகும் இனிமையான குரலும் என் மனதில் பதிவாகி நிறைந்திருப்பதால் என்னால் செயலாற்ற முடியவில்லை'' ''என்று அவன் மாதுமையின் காதுகளுக்குள் மெதுவாகச் சொல்லிக் கொண்டிருந்தான். அவனது உஷ்ணமான மூச்சுக் காற்று அவளது கன்னங்களைக் குளிரச் செய்தது. அவனது உதடுகள் அவளது காதில் உரசி உரசி அசைந்தன.

மாதுமை பூரித்துப் போனாள், ''வந்து விட்டீர்களா…? எப்படி உங்களால் என்னைப் பிரிந்திருக்க முடிந்தது. உங்களுக்கு வெளிநாட்டு உழைப்பு வேண்டாம். இங்கு எனக்கு இருக்கும் சொத்தில் வாழ்வோம். இல்லாவிட்டால் என்னையும் உடனே அழைத்துச் செல்லுங்கள். ஒரு கணம் கூட உங்களைப் பிரிந்து என்னால் இருக்க முடியவில்லை. அர்ச்சகா சொல்கிறாள், எனது அழகெல்லாம் குறைந்து விட்டதாம். முன்பு பொங்கிப் பூரித்திருந்த எனது கண்கள் வாடிச் சுருங்கி விட்டனவாம். அத்துடன் முக எலும்புகள் தெரிகின்றனவாம். சிவந்த எனது உடல் வெளிறி மெலிந்து விட்டதாகக் கூறுகிறாள். அத்துடன் அம்மா எனக்கேதோ வருத்தமெனப் பயப்படுகிறா. எனவே உடனே வந்து என்னை அழைத்துச் செல்லுங்கள்.''

''மாதுமை, அதுக்கிடையில் நித்திரையாகி விட்டியா..? எழும்பு விபுலன் தொலைபேசியில் வெகு நேரமாகக் காத்திருக்கிறார். நீ வரும்போது எமது வீட்டுத் தொலை பேசி எண்ணைக் கொடுத்து விட்டு வந்திருக்கிறாய். புத்திசாலி'' என்றாள் அர்ச்சகா.

''மாது, யாழ்ப்பாணத்தில் சுகமாக இருக்கிறாயா?. உனக்கு வெய்யில் ஒத்துக் கொள்ளாது யாழ்ப்பாணக்காலநிலை வித்தியாசமானது. கொழும்பு கருங்கற்பூமி. யாழ்ப்பாணம் சுண்ணாம்புக்கற்பூமி. அந்தச் சுவாத்தியம் உனக்கு ஒத்துக் கொள்ளாது. கவனமாக இரு. தற்செயலாக உமக்கு ஏதாவது வருத்தம் வந்தால் நான் வரவேண்டிய சூழ்நிலை உருவாகிவிடும்.'' விபுலன் கதைத்துக் கொண்டிருக்கும் போது மாதுமை குறுக்கிட்டாள்.; ''நீங்கள் இங்கு வாறதாக இருந்தால் எனக்கு வருத்தம் வரவேண்டும்.''

''உமக்கு வருத்தம் வந்தால் தான் நான் வர வேண்டுமா…? வருத்தம் வராவிட்டால் நான் வரமாட்டேனா…? இப்பொழுது எனக்கு வேலை கிடைத்து விட்டது. உம்மை இங்கு அழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறேன். எப்படியும் ஆறு மாத காலத்துக்குள் உம்மை என்னுடன் அழைத்து வந்து விடுவேன்'' என்றான் விபுலன்.

''ஆறு மாதங்கள் என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.'' சிணுங்கினாள் மாதுமை.

ஒரு மணிநேரம் விபுலனுடன் கதைத்தாள் மாதுமை. அவள் கதைத்து முடிந்த பின்பு அர்ச்சகா அங்கே வந்தாள்; ''ஒரு மணித்தியாலமாக அவருடன் ஏதோ சிரித்துச் சிரித்துக் கதைத்தாய். ஆனாலும் முகம் கறுத்திருக்கு உனக்கு என்ன நடந்தது.''

‘‘கண்காணாமல் கதைப்பதில் எந்த விதமான இன்பமும் இல்லை. உப்பில்லாத கறியைச் சாப்பிடுவதைப் போன்றது. அவரோடு தொலைபேசியில் கதைத்த பின்பும் என்னால் உணவை உண்ண முடியவில்லை. சந்தோசமாக இருக்க முடியவில்லை. அதனால் தான் நான் மெலிகிறேன். மிகவும் சுவையான கறி வகைகளை அம்மா சமைத்தாலும் பசிப்பதில்லை. நான் எனது காதலரைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவரைப் பற்றி பெற்றாருடனும் இனத்தவர்களுடனும் கதைக்கிறேன். ஆனால் சந்தோசமாக இருக்க முடியவில்லை. என்னுடைய உடலெல்லாம் வெளிறி இருக்கிறது’’ என்றாள் மாதுமை.

**1184. உள்ளுவன் மன்யான்; உரைப்பது அவர்திறமால்;**
**கள்ளம் பிறவோ பசப்பு.**

*நான் அவரின் நல்லியல்புகளை நினைக்கிறேன்; நான் சொல்வதும் அவற்றையே; அவ்வாறிருக்க இந்தப் பசலை என் உடலைப் பற்றிப் படரும் வஞ்சகம் என்னவோ?.*

**இதோபார்**

அர்ச்சகா, மாதுமையை அழைத்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்றாள். அப்பொழுது மாலை நான்குமணி. கடற்கரையில் சன நடமாட்டம் மிகவும் குறைவாகவே இருந்தது. குளிர்மையான காற்று வீசிய போதும் சூரியனின் ஆதிக்கம் குறையாததால் வெய்யில் மாதுமையின் உடலைச் சுட்டது.; ‘‘மாலை, நான்கு மணியாகியும் வெப்பம் குறையவில்லை’’ என்று கூறியவாறு கடற்கரை மணலில் நடந்தாள் மாதுமை. அவளது கால்கள் மணலுள் புதைந்தன.

‘‘நாங்கள் இன்னும் கொஞ்ச நேரம் செல்ல வந்திருக்கலாம்’’ என்றாள் மாதுமை.

உனக்கு அம்மாவைப் பற்றித் தெரியும்தானே. பாடசாலையால் செல்லச் சிறிது நேரம் தாமதித்தாலும், பக்கத்து வீட்டுக்கார மாமாவைப் பாடசாலைக்கு அனுப்பி விடுவா. நான் இங்கு ஐந்து மணி வரை இருக்க எனக்கு அனுமதியிருக்கு அது நகுலனுக்குத் தெரியும். அதனால் அவர் வந்திருப்பர். வா அந்தப் பக்கம் செல்வோம்’’ என்று மாதுமையை அழைத்துச் சென்றாள் அர்ச்சகா.

வழமையாக அவர்கள் இருக்கும் பழுதடைந்த ஓடத்தின் அருகில் நகுலன் இருந்தான். ‘‘நகுலன் வந்து விட்டார்’’ என்றவாறு அர்ச்சகா மகிழ்வுடன் நடந்தாள். அவளுக்குப் பின்னால் மாதுமை சென்றாள்; ‘‘மாது, இவர் தான்…’’ வாக்கியத்தை முடிக்காது நாணிணாள் அர்ச்சகா. மாதுமை நிமிர்ந்து நகுலனைப் பார்த்தாள். அழகான மிடுக்குள்ள இளைஞன் என்று அவளது மனம் சொல்லியது. அவனது அரும்பு மீசை முகத்திற்கு எடுப்பாக இருந்தது. அழகைப் பொறுத்தவரை அர்ச்சகா மிகவும் கொடுத்து வைத்தவள். என்று நினைத்தாள். ‘‘இவள் எனது கொழும்புத் தோழி மாதுமை. என்னுடன் படித்தாள். இவளைப் பற்றிய விடயங்கள் யாவும் உங்களுக்குச் சொல்லியிருக்கிறன். இப்ப எமது ஊரைப் பார்க்க வந்திருக்கிறாள்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘வணக்கம்! இருங்கோ. உங்களைப் பற்றி எந்த நாளும் வாயோயாமல் அர்ச்சகா சொல்வா. அத்துடன் உங்களது காதல் விஷயங்களைப் பற்றியும் சொல்லியுள்ளா. உங்களுக்கு நல்லதொரு அம்மா வாய்த்திருக்கிறா. உங்களின் அம்மாவுக்கு எதிர்மாறானவர் அர்ச்சகாவின் அம்மா. அர்ச்சகா ஐந்துமணிக்கு ஒரு நிமிடம் பிந்தினாலும் அவளை வீட்டில் இருந்து வெளியேற அனுமதிக்கமாட்டா. பெருந்துன்பம்’’ என்று பெருமூச்சு விட்டான் நகுலன்.

என்னைப் பற்றிய விடயங்கள் யாவற்றையும் உங்களுக்குச் சொல்லிய அர்ச்சகா, தன்னுடைய காதலைப் பற்றி எனக்கு எதுவும் சொல்லவில்லை.’’ என்றாள் மாதுமை துக்கத்துடன்.

அர்ச்சகா எதுவும் பேசாமல் தலையைக் குனிந்து கொண்டிருந்தாள்; ‘‘இவள் இப்படித் தான். படிக்கும் போது கூட வீட்டில் நடைபெறுபவற்றைச் சொல்ல மாட்டாள். நான் தான் அவளின் வீட்டுக்குச் சென்று தெரிந்து கொள்ள வேண்டும். அர்ச்சகா மிகவும் நல்லவள். பூப்போன்ற மென்மையான மனமுள்ளவள். யாழ்ப்பாணத்து இளைஞர் பெண்களைக் காதலிப்பார்கள். பின்பு சீதனத்திற்காக ஏமாற்றி விடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் அப்படியானவராக இருக்க மாட்டீர்கள் என்று எண்ணுகிறேன். எக்காரணத்திற்காகவும் அவளை ஏமாற்றி விடாதீர்கள் அவள் ஒரு சிறு ஏமாற்றத்தையும் தாங்க மாட்டாள். அவ்வளவு மென்மையானவள்’’ என்றாள் மாதுமை.

நீங்கள் கூறுவதைப் போல பல இளைஞர்கள் இருக்கலாம். ஆனால் நான் அப்படியானவன் அல்லன். என்னுடைய உயிர் அர்ச்சகா’’ என்று கூறிவிட்டு அர்ச்சகாவைப் பார்த்தான். அவளின் முகம் சிவந்து சுடராகப் பிரகாசித்தது.

அவர்கள் அங்கிருந்து மகிழ்வுடன் ஒரு மணிநேரம் கதைத்துச் சிரித்தனர். அர்ச்சகா ஐந்து மணிக்கு எழுந்து புறப்பட்டாள். நகுலன் அவளுடன் பிரதான வீதிவரை வந்தான். அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றாள் அர்ச்சகா. அவளது மனத்தைப் போல உடலும் சோர்ந்தது. ''நான் அவரைப் பிரிந்து மூன்று மாதங்களாகி விட்டன. நீ நகுலனைப் பிரிந்து ஒரு நிமிடம் கூட ஆகவில்லை. அதுக்கிடையில் கலங்குகிறாய். உடல் சோர்கிறாய்'' நகுலன் உனது கண்களை விட்டு அகலுமுன் உனது முகம் வெளிறி விட்டது'' என்றாள் மாதுமை.

**1185. உவக்காண்எம் காதலர் செல்வார்; இவக்காண்என்**
**மேனி பசப்புஊர் வது.**

*அதோ பார் என்னைப் பிரிந்த காதலர் செல்கிறார்; இதோ பார் என் மேனியில் பசலை நிறம் வந்து படர்கிறது.*

## காத்திருப்பு

''உனக்கு நான் இவற்றையெல்லாம் விரிவாகக் கூறவேண்டுமா என்ன? ஒரு பெண்ணுக்கு?. ஆண் தான் அவளது உயிர். உயிர் போனால் உடம்பு எப்படியாகுமோ. அதே போலத்தான் காதலனைப் பிரிந்த காதலியின் நிலையும். நீ மூன்று மாதங்களாக விபுலனைப் பிரிந்து உயிரற்றவளாக உலாவி வருகிறாய். பிரிவு நாட்ச் செல்லச் செல்ல உடலை அரித்து விடும். இதனால் அழகு வனப்பு வசீகரம் யாவும் குறைந்து விடும். பிரிவு ஒரு நாளாக இருந்தாலென்ன ஓரிரு நிமிடங்களாக இருந்தாலென்ன ஓரிரு வருடங்களாக இருந்தாலென்ன பிரிவு பிரிவு தான். அதனால் உண்டாகும் கொடுமை கொடுமை தான். இனி அவரை நான் சந்திக்க இரண்டொரு நாளாகலாம். இல்லை இரண்டொரு வாரமாகலாம். அது வரை உனக்கு உள்ள துன்பத்தளவு தான் எனக்கும் இருக்கும். உன்னைப் பொறுத்தவரை உனது காதலனைத் திருமணம் செய்யலாம் என்ற துணிவு உனக்கு இருக்கு. அதனால் நீ துன்பத்திலும் துணிவுடன் இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் எனது தாயாரைப் பற்றி உனக்குத் தெரியும் தானே. நகுலன் நல்லவர்; படித்தவர்; பண்பானவர்; பணக்காரர் என்று தெரிந்தாலும் அம்மா சில வேளைகளில் தனது கௌரவத்தைப் பார்ப்பா. பொதுவாக அம்மாவிற்கு தான் நினைப்பது தவறு என்று தெரிந்தாலும் கூடத்தான் நினைத்ததையே செய்ய விரும்புவா. இதனால் அப்பா சில சமயம் குழம்பி விடுவார். ஒரு முறை அப்பா ஒரு சேலையை அம்மாவுக்காக வாங்கி வந்தார். அது அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. அதை வாங்கிய கடையில் திருப்பிக் கொடுத்து விட்டு வேறு சேலை வாங்கப் போவதாக அம்மா கூறினா. அப்பா அதற்குச் சம்மதிக்கவில்லை; ''இந்தச் சேலை மிகவும் அழகாக இருந்ததால் மிகவும் ஆசையோடு வாங்கி வந்தேன். உனக்குப் பிடிக்கா விட்டாலும் எனக்காக ஒரு தரம் உடுத்துக் கொண்டு வா கோயிலுக்குப் போயிட்டு வருவம்'' என்றார். அம்மா அன்று அச் சேலையை உடுக்கவில்லை. ஆறு மாதங்கள் கழிந்தும் உடுக்கவில்லை. தனக்குப் பிடிக்காத அந்தச் சேலையை உடுக்க மாட்டேன் என்று சொல்லி விட்டா. அது அப்பாவிற்குத் தாங்க முடியாத மனவருத்தத்தைக் கொடுத்தது'' பெருமூச்சு விட்டாள் அர்ச்சகா.

''உனது தாயார் சரியான பிடிவாதக்காரி. நான் பலமுறை அவதானித்திருக்கிறேன். அதனால் உனது வீட்டுக்கு வர அம்மாவிற்கு விருப்பமில்லை வற்புறுத்தித்தான் அவாவை அழைத்து வந்தேன்'' என்றாள் மாதுமை.

''அப்பாவைப் பார்க்க எனக்கு மனவருத்தமாக இருக்கும்; ''எனக்குக் கொம்மாவைத் திருமணம் செய்ய விருப்பமில்லை. அப்பாதான் வற்புறுத்திக் கலியாணம் செய்து வைத்தார். எனது வாழ்க்கை பாழாகி விட்டது'' என்று ஒரு முறை எனக்குச் சொன்னார். அப்பா எமது குடும்பத்தை அளவுக்கதிகமாக நேசிப்பவர்; ''அர்ச்சகாம்மா உனக்காகத் தான் நான் வாழ்கிறேன். நீ இல்லாவிட்டால் நரகமான இந்த வாழ்வைத் துறந்திருப்பேன்'' என்று அடிக்கடி சொல்வார். அதனால் எனக்கு அம்மாவின் மீது அளவுக்கதிகமான வெறுப்பிருக்கு. அப்பா எனது காதலை கடைசி வரையும் எதிர்க்க மாட்டார். எனக்காக அவர் எதையும் விட்டுக் கொடுப்பார். அம்மா, தான் அப்பாவுக்கு வாங்கி வந்த சேலையை அணியவில்லை என்ற கவலை நெடுநாட்களாக இருந்தது. ஒரு நாள் அப்பாவின் தங்கை வீட்டுக்கு வந்தார். அவருக்கு அப்பா ஏராளமான பரிசுப் பொருட்களைக் கொடுத்தார். அப்பொழுது நான், அப்பா அம்மாவுக்காக வாங்கி வந்த சேலையை எடுத்து வந்து அப்பாவிடம் கொடுத்து அதை மாமியிடம் கொடுக்கும் படி சொன்னேன். எனது சொல்லைத் தட்டாது அப்பா அச்சேலையை மாமிக்குக் கொடுத்தார். அதை வாங்கிப் பிரித்துப் பார்த்த மாமி மிகவும் மகிழ்ந்து; ''நல்லசேலை என்று புகழாரம் சூட்டினா. அன்று மாலை நாங்கள் கோயிலுக்குச் சென்றோம். மாமி அச் சேலையை உடுத்தி வந்தா. மிகவும் அழகாக இருந்தது. சரி, பிழை என்று அம்மா ஒரு போதும் பார்த்ததில்லை. தான் நினைத்ததைத்தான் செய்வா'' பெருமூச்சு விட்டாள் அர்ச்சகா.

“ஏன் நிற்கிறீர்கள்” என்று கேட்டவாறு அவ்விடம் வந்தான் நகுலன். அர்ச்சகாவின் முகம் திடீரெனப் பிரகாசமானது. சில நிமிடங்களுக்கு முன்பிருந்த சோர்வைக் காணவில்லை.” “சரி சரி கெதியாய்ப் போங்கோ. அம்மா தேடி வந்தால் இன்னொரு முறை சந்திக்க முடியாது” என்று கூறி விட்டு நடந்தான் நகுலன்.

நகுலன் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றாள் அர்ச்சகா. அவளது முகம் மெல்ல மெல்ல இருண்டு கொண்டு வந்தது” விளக்கு வெளிச்சம் எப்போது நீங்கும் என்று காத்திருக்கும் இருளைப் போல, காதலரின் பிரிவு எப்போது நீங்குமெனக் காத்திருந்து சோர்வும் கவலையும் துன்பமும் வந்து சேர்கிறது” என்று நினைத்தாள் மாதுமை. அர்ச்சகாவின் கண்கள் லேசாகக் கலங்கின. மெதுவாக நடந்தாள். மாதுமைக்கு விபுலனின் நினைவு மெல்ல மனதில் புகுந்தது.

**1186. விளக்குஅற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கண்**
**முயக்குஅற்றம் பார்க்கும் பசப்பு.**

விளக்கின் வெளிச்சம் எப்பொழுது நீங்கும் எனக் காத்திருக்கும் இருளைப் போல, எனது காதலரின் அணைப்பு எப்பொழுது நீங்கும் எனக் காத்திருந்து வந்து படர்கிறது இந்தப் பசலை.

## கொஞ்சநேரம்

“காதல் அற்புதமானது. விபுலன் எனக்கு அருகில் இருந்தால் சொர்க்கம் தெரியும். காலையில் தொடக்கம் இரவு வரை அவர் என் அருகில் இருந்தால் எனக்குப் பசிக்காது; தாகம் எடுக்காது; இறைவனை நினைத்து உபவாசமிருக்கும் பக்தர்களைப் போலவே காதலனின் அருகில் இருக்கும் பெண்ணுக்குப் பரவசம் மிகுதியாக இருக்கும். இது காதலின் மகோன்தை நிலை. இதைப்பற்றி நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை. எல்லாம் உனக்குத் தெரியும்” என்றாள் மாதுமை.

“நகுலனின் அணைப்புத்தான் என்னை உயிருடன் இருக்கச் செய்கிறது. அவருடைய நினைவுகள் தான் என்னை வாழ வைக்கின்றன. அப்பாவின் கதைகளில் இருந்து அவர் யாரோ ஒரு பெண்ணைக் காதலித்திருக்கிறார். அதை அறிந்த அவரது பெற்றோர் அவரை வற்புறுத்தித் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதனால் தான் அம்மா அவரின் மீது பற்றில்லாதவர் போல வாழ்கிறார்”

“நீ அப்படி நினைக்கிறாய் ஆனால் நான்....” என்ற மாதுமை சிறிது நேரம் தாமதித்து விட்டுச் சொன்னாள்; “ வேண்டாம் அதை நான் சொல்ல விரும்பவில்லை”

மாதுமையின் பேச்சு அர்ச்சகாவின் ஆவலைத் தூண்டியது; “சொல்லடி” கெஞ்சினான்.

“ம்... மாட்டன் தெரியாத்தனமாக நான் யோசிக்காமல் கதைத்து விட்டேன் அதைத் தயவு செய்து மறந்து விடு...” என்றாள் மாதுமை.

“நீ கட்டாயம் சொல்ல வேண்டும். என்னை நீ நல்ல நண்பியாகக் கருதினால் சொல்லியே ஆக வேண்டும்” கண்டிப்புடன் சொன்னாள் அர்ச்சகா.

மாதுமைக்குத் தர்மசங்கடமாக இருந்தது. சிறிது நேரம் தயங்கினாள். அவளது முகம் கலவரமடைந்து வியர்த்தது.

“சொல்லு, நீ சொல்லாவிட்டால் நான் இனிமேல் காதல் சம்பந்தமான எந்தக் கதையும் உன்னுடன் கதைக்க மாட்டன். நீ எனது உயிர்த் தோழி என்பதால் தான் வீட்டுப்பிரச்சினையை... சொல்லக் கூடாத பிரச்சனையைக் கூடச் சொன்னனான்”. உணர்ச்சிவசப்பட்டாள் அர்ச்சகா.

“இருந்தாலும் சொல்ல ஒரு மாதிரியாக இருக்கு. நான் இப்படி நினைத்ததற்காகக் குறை நினைக்காதே. உனது தந்தையைப் பற்றி உயர்வாகக் கருதும் நீ, காதல் விஷயத்தில் ஏன் நீ குறைவாகக் கருதுகிறாய். உனது தாயார் இன்னொருவரை விரும்பியதால் பெற்றோர் கட்டாயப்படுத்தியிருக்கலாம் தானே. ஆண்களால் பிரிவுத்துயரை மறைத்து வாழ முடியும். ஆனால் பெண்களால் மறைத்து வாழமுடியாது. அத்துடன் உனது தந்தையார் மீதுள்ள ஏதாவது ஒரு வெறுப்பு அவாவை அப்படி நடக்க வைத்திருக்கலாம்” என்றாள் மாதுமை.

“நீ சொல்வதும் சரி. அம்மாவோ அல்லது அப்பாவோ காதலித்திருக்கலாம் என்றொரு நினைவு எனது மனதில் எழுந்ததே தவிர அவர்கள் அதனால் தான் பிரிவுற்று வாழ்கிறார்கள் என்று சொல்ல முடியாது.

ஏனென்றால் இருவரில் ஒருவர் கூட எந்தச் சந்தர்ப்பத்திலும் தம்மைக் காட்டிக் கொள்ளுமளவிற்கு நடந்ததை நான் காணவில்லை'' என்றாள் அர்ச்சகா.

''காதலித்தும் கலியாணம் செய்யலாம். கலியாணம் செய்த பின்பும் காதலிக்கலாம். இதை பலர் உணர்ந்து கொள்வதில்லை. உன்னுடைய அப்பா மிகவும் நல்லவர்; உயர்ந்த பல பண்புகளைக் கொண்டவர்; உனது காதலுக்குக் குறுக்கே நிற்கமாட்டார் என்று நினைக்கிறேன்'' ஏதாவது பிரச்சினை வந்தால் சொல்லு நான் உனது அப்பாவுடன் கதைக்கிறேன்'' என்றாள் மாதுமை.

''வேண்டாம், சந்தர்ப்ப சூழ்நிலைகள் வரும்போது அதற்கேற்றவாறு நடந்து கொள்ள வேண்டுமே தவிர நாம் சந்தர்ப்பத்தை உண்டுபண்ணக் கூடாது. இப்பொழுது நான் நகுலனுடன் மிகவும் நெருக்கமாகப் பழகுகிறேன். வாரத்தில் ஒரு முறையோ இல்லை இரண்டு முறையோ சந்தித்துப் பேசி மகிழ்கிறேன். அதற்குத் தடை வர எனக்கு விருப்பமில்லை. சென்ற வாரம் கடற்கரையில் நானும் அவரும் இருந்து மகிழ்வுடன் கதைத்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது அவரது இனத்தவர் ஒருவர் பிள்ளைகளுடன் கடற்கரைக்கு வந்தார். அவரைக் கண்டு விட்டு நகுலன் என்னை விட்டுச் சிறிது தூரம் சென்று இருந்தார். அதன் பின் என்னால் அவருடன் கதைக்க முடியவில்லை. அவரோடு மிகவும் நெருக்கமாக இருந்து கதைத்து மகிழ்ந்த நான், அவர் சற்றுத் தள்ளிப் போய்விட்டமையால் எனது மனம் சோர்ந்து விட்டது. என்றுமில்லாத களைப்பும் கவலையும் என்னை ஆட்கொண்டன. அவர் எப்பொழுது தள்ளிச் செல்வார் என்று காத்திருந்த பசலை உடலெங்கும் பரவித் தீயாகச் சுட ஆரம்பித்தது. எனவே அவர்கள் அறியும் போது அறியட்டும்'' என்றாள் அர்ச்சகா.

**1187. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன்; அவ்வளவில்**
**அள்ளிக்கொள் வற்றே பசப்பு.**

காதலனைத் தழுவிக் கிடந்தேன்; சிறிது நேரம் அவரை விட்டு அகன்றேன்; அந்த நேரம் பசலை நிறம் என்மேனி யெங்கும் வந்து பரவிவிட்டது.

**சொல்கிறார்களா?.**

மாதுமையும் அர்ச்சகாவும் வீட்டுக்கு வந்த போது மாதுமையின் தந்தையார் சிவசரவணனின் நண்பரான சேனாதிராஜாவும் அவரது மனைவியான கங்காதேவியும் மகள் சுவர்ணாவும் வந்திருந்தனர். சேனாதிராஜா சிவசரவணபவனுடன் ஒன்றாகப் பல வருடங்கள் கொழும்பில் வேலை செய்தவர். மிகவும் நல்ல மனிதர். அதனால் சிவசரவணபவன் அவரைத் தனது நண்பராகத் தேர்ந்தெடுத்திருந்தார். இரண்டு வருடங்களுக்கு முன்பு சேனாதிராஜாவுக்கு யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் கிடைத்ததால் அவர் யாழ்ப்பாணத்திற்குக் குடும்பத்தோடு வந்து விட்டார். ஆறு மாதங்களுக்கு முன்பு அவர் தொழில் விடயமாக கொழும்புக்குச் சென்ற பொழுது தனது மனைவியையும் மகளையும் அழைத்துச் சென்றார். இரண்டு குடும்பங்களும் நட்புரிமையுடன் பழகியமையால் அவர்களது உறவு மிகவும் இறுக்கமாக இருந்தது. இரண்டு நாட்கள் சேனாதிராசா தொலைபேசியில் தொடர்பு கொள்ளாவிட்டால் சிவசரவணபவன் துடிதுடித்துப் போவார். அதற்காக மாதுமை ''இன்று சேனாதிராசா மாமா தொலை பேசியில் தொடர்பு கொண்டு கதைத்தார்'' என்று சிவசரவணபவனுக்குச் சொல்வாள். அப்படி மாதுமை சொல்வாள் என்றும் தெரிந்து சிவசரவணபவன் தொடர்பு கொள்ளும் போது சேனாதிராசா அவரைச் சமாளித்து விடுவார்.

''நீ வந்து ஒரு வாரமாகிவிட்டது. என்னை வந்து பார்த்தாயா...? என்று அர்ச்சகாவைப் பார்த்துக் கேட்டார் சேனாதிராசா.

''நான் வரும்போது நீங்கள் வீட்டில் இல்லை. அப்பாவைப் போல விடிய முன்பு வீட்டை விட்டுச் சென்று, இரவு பத்துமணிக்கு வந்தால் குடும்பம் என்னாகும்? எல்லா வேலைகளையும் மாமி செய்ய முடியுமே? வேலையைச் செய்ய வேண்டாமென்று நான் சொல்லவில்லை. வீட்டையும் கவனிக்க வேண்டும். பாவம் மாமி. எல்லா வேலைகளையும் செய்து இளைத்துப் போனா. உங்களை மாதிரித்தான் உங்களது மகனும் வீட்டு வேலைகள் எதுவும் செய்வதில்லை.'' என்றாள். சிரித்தவாறு கொழும்பில் இருக்கும் போது மாதுமை சேனாதிராசாவின் வீட்டுக்குச் சென்றாலும் சரி, கங்காதேவி சிவசரவணபவனின் வீட்டுக்கு வந்தாலும் சரி, கங்காதேவி இப்படிச் சொல்லிச் சிணுங்குவாள். அதை விகடமாக மாதுமை சொல்ல, கங்காதேவி சற்றுக் கவலையுடன்; ''என்னுடைய கஷ்ரம் உவருக்கு எங்கே விளங்கப்போகிறது.... என்று ஆரம்பிக்க, சேனாதிராசா; ''என்னைப் பழிவாங்க நினைச்சுத்தான் இதைச் சொன்னனீ'' என்று சிரித்தார்.

‘‘மாதுமை நல்லாய் மெலிந்து போனாய். ஆறு மாதங்களுக்கு முன்பு கொழுகொழுவென்றிருந்த நீ இப்ப துரும்பாய் இளைச்சிட்டாய். முகம் வெளிறிப் போயிருக்கு ஏன் சாப்பிடுவதில்லையா...?’’ என்று கேட்டாள் கங்காதேவி.

சேனாதிராசா விழுந்து விழுந்து சிரித்தார்; ‘‘விபுலன் போனது தான் மாதுமைக்குக் கவலை. சரவணன் சாப்பாடு கொடாமலே மெலிந்திருக்கிறாள்’’ என்று சொன்னார் சேனாதிராசா.

இதற்கு மாதுமை எதுவும் சொல்லவில்லை. மெதுவாகப் புன்னகைத்து விட்டு உள்ளே சென்றாள். அவளைத் தொடர்ந்து சுவர்ணாவும் அர்ச்சகாவும் சென்றனர்.

‘‘உங்களுக்கு எந்த நேரமும் கேலியும் கிண்டலும் தான். நான் மாதுமையோடு கதைத்தால் மனம் ஆறுதலடையும். என்று வந்தனான்; அதைக் கெடுத்துப் போட்டியள்’’ என்றாள் கங்காதேவி.

‘‘என்னைக் கேலி செய்தால் நான் விடுவனே’’ என்று சிரித்தார் சேனாதிராசா.

‘‘அப்பா சொல்வதைப் போல மாதுமை நன்றாக இளைத்து விட்டாள். கன்ன எலும்புகள் வெளியே தெரிகின்றன. கண்கள் வெளிறிக் குழி விழுந்து விட்டன. விபுலனைப் பிரிந்ததால் தான் இவள் இந்த நிலையை அடைந்திருக்கிறாள். அவர் அருகில் இருந்தால் சாப்பிடாவிட்டாலும் கொழுத்து விடுவாள்’’ என்றாள் சுவர்ணா.

‘‘மாதுமையால் விபுலனைப் பிரிந்து இருக்க முடியவில்லையாம் அதனால் தான் பல நோய்கள் தனக்கு வந்திருக்காம்’’ என்று அர்ச்சகா சொல்லிக் கொண்டிருக்கும் போது ஆத்திரத்துடன் குறுக்கிட்டாள் மாதுமை; ‘‘இவள், தலைவனின் பிரிவால் வாடி வதங்கி மெலிந்துள்ளாள் என்றும், பசலை நோய் அடைந்திருக்கிறாள் என்றும் கூறுகிறார்களே தவிர, அவர் இவளை விட்டுப் பிரிந்தார் என்று யாராவது சொல்கிறார்களா..? இல்லையே. அர்ச்சகா நகுலனைத் தீவிரமாகக் காதலிக்கிறாள். அவர், இவளை விட்டுப் பிரிந்தார் என்று இவளாவது சொல்ல வேண்டாமா?’’ கோபித்தாள் மாதுமை.

‘‘ஓ... இவாவும் காதலிக்கிறாவோ?.... எனக்குத் தெரியாதே...’’ என்று ஆச்சரியப்பட்டாள் சுவர்ணா.

**1188. பசந்தாள் இவள்என்பது அல்லால் இவளைத்
துறந்தார் அவர்என்பார் இல்!**

‘இவள் தலைவனின் பிரிவால் வருந்திப் பசலை நிறம் அடைந்தாள்’ என்று பழி சொல்கிறார்களே அல்லாமல், ‘அவர் இவளை விட்டுப் பிரிந்தார்’ என்று யாராவது சொல்கிறார்களா? இல்லையே.

**பரவட்டும்**

‘‘அவா கொழும்பாலை வந்து ஒரு கிழமைக்குள்ளை வாட்ட சாட்டமான ஓர் அழகான இளைஞனை மயக்கிப் போட்டா. கொழும்பிலை இவான்ரை கடைக்கண் பார்வைக்காகப் பலர் அலஞ்சவை. ஆனால் இஞ்சை அவற்றை கடைக்கண் பார்வைக்காக நல்லூர்க் கந்தசாமி கோயில் வீதியிலை தவமிருந்தவா...’’ என்று சிரித்தாள் மாதுமை.

‘‘தவமிருந்தால் பயன் கிடைக்க வேணும். ஆள் மயங்கி விட்டானோ?’’ என்று கேட்டாள் சுவர்ணா.

‘‘இவளின் பேரழகிற்கு யார் தான் மயங்கமாட்டான். இப்ப அவன் இவளின்ரை காலடியிலை தவமிருக்கிறான். இவளை நீ குறைவாக மதிப்பிடாதை. ஆள் பெரிய ஆள். பட்டதாரி; கற்றவன் என்பதை விடக்கட்டுடல் உள்ளவன். நான் கூட விபுலனைக் காதலித்திருக்கா விட்டால் நகுலனைத் தான் காதலித்திருப்பன்’’ கண்சிமிட்டினாள் மாதுமை.

அர்ச்சகாவுக்கு வெட்கமாக இருந்தது. இதழ்கள் பிரிந்து அசைந்து மொழிகள் பேசமறுத்தன. கொழும்பில் வீராப்புப் பேசுவாள் உனக்கு ஞாபகம் இருக்கா. ஒரு முறை நீ விபுலனுடன் கடற்கரைக்குச் சென்ற அனுபவத்தைப் பற்றிக் கூறும் போது எப்படியெல்லாம் கதைத்தவள்; ‘‘ஒரு பெண் திருமணமாகுமுன், அவன் தனக்கெனப் பெற்றோரால் தீர்மானிக்கப்பட்டவனாக இருந்தாலும் அவனுடன் தனியாக எங்கும் செல்லக் கூடாது. திருமணம் என்பது யாகத்தைப் போன்றது. புனிதமான மதச்சடங்குகள் யாவும் நிறைவு செய்த பின்பு தான் மனதைத் தொட்ட காதலன் உடலைத் தொட வேண்டும். மதச்சடங்குகளை மதிக்காது மனிதர்கள் மிருகங்களைப் போல இச்சைகளைக் கட்டுப்படுத்தாது நடந்து கொள்வதால் தான் மிருகக் குணங்களையுடைய மனிதர்கள் பிறக்கிறார்கள்’’ என்று அன்று உனக்குப் பிரசங்கம் செய்தவா இன்று மதச்சடங்குகள் இல்லாமல் காரியத்தை முடித்து விட்டாவோ? என்று கேட்டாள் சுவர்ணா.

‘‘ஊருக்குத் தான் உபதேசம் எனக்கில்லை என்று சொல்பவை தான் உலகில் வாழ்கின்றனர். உலகத்தில் மிகவும் எளிதானது மற்றவர்களுக்கு அறிவுரை கூறுவது. அன்று எனக்கு அறிவுரைகளைக் கதாப்பிரசங்கம் செய்தவா; இன்று நகுலன் கொடுக்கும் இன்பத்தில் மயங்கி, அவனது மடியில் கிடக்கிறா’’ என்று சிரித்தாள் மாதுமை.

‘‘நீ தான் எல்லாவற்றிற்கும் காரணம். மாதுமை காதலிக்கிறாள் நான் காதலித்தால் என்ன என்று காதலித்திருப்பாள். இதைக் கமலேஸ் மாமி அறிய வேணும் ஒரே கொண்டாட்டம் தான்’’ என்றாள் சுவர்ணா.

‘‘அவா என்ன அறியாமலா இருக்கப் போகிறா. மாதுமையின் அப்பாவையும் அம்மாவையும் போல எனது அம்மாவும் அப்பாவும் சம்மதிப்பினை. இல்லாவிட்டால் நான் அவருடன் சென்று விடுவேன்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘வேதம் ஓதிய நீ இந்தளவிற்கு வந்து விட்டாயா...? காதலிக்கும் போது நான் கட்டுப்பாடாக இருந்தேன். அப்படியிருக்க எனது காதலைக் கேவலமாகப் பேசிய நீ, இன்று அதை மறந்து உனது கொள்கைகளுக்கு விரோதமாக நடப்பதை நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருக்கு. தத்துவம், கொள்கை, சாதிமதமெல்லாம் காதலுக்கு இல்லை ஏன் வயது வித்தியாசம் கூட இல்லை. ஓர் ஆணோ இல்லைப் பெண்ணோ காதலிக்கத் தொடங்கினால் உலகத்தையே மறந்து விடுவார்கள். அப்படி மறக்கச் செய்யக் கூடிய மாபெரும் சக்தி காதலுக்கு உண்டு. பிரிவு துன்பம் என்கிறார்கள். உண்மை தான். ஒரு பெண்மீது தீராத அன்பு கொண்ட காதலரைப் பிரிவதால் உண்டாகும் எந்த வேதனையையும் அந்தப் பெண்ணால் தாங்கிக் கொள்ள முடியும். என்னை எடுத்துக் கொண்டால் என்னால் அவரை ஒரு கணமும் பிரிந்திருக்க முடியாது. பெரும் துன்பங்கள் பலவற்றைத் தரும் பிரிவுக்கு என்னை ஆளாக்கி விட்டுச் சென்ற எனது காதலர், உண்மையில் நலம் பெறுவாரானால் எனக்கு எந்தத் துன்பம் ஏற்பட்டாலும் நான் அதைத் தாங்கிக் கொள்வேன்’’ என்று மாதுமை சொன்னாள். அவள் சொல்லும் போது அவளின் வாயிலிருந்து உறுதியான வார்த்தைகள் உதிர்ந்தன.

எந்நேரமும் விபுலனின் பிரிவை நினைத்து நினைத்துக் கண்ணீர் விட்டு அழும் மாதுமையா இதைச் சொன்னது?’’ என்று அதிசயப்பட்டாள் அர்ச்சகா.

‘‘உறுதியான காதல் வலிமை மிக்கது. அது எத்தகைய துன்பங்களையும் தாங்கும் வலிமை கொண்டது’’ என்று நினைத்தாள் சுவர்ணா.

**1189. பசக்கமன் பட்டாங்குஎன் மேனி நயப்பித்தார்**
**நல்நிலையர் ஆவர் எனின்.**

பிரிவுக்கு என்னை ஆளாக்கி விட்டுச் சென்ற என் காதலர் நலம் பெறுவாராக இருந்தால், என்னுடலெங்கும் பசலை நிறம் பரவட்டும்.

**நல்லது**

‘‘ காதலிக்கும் பெண் ஒருத்தி தன்னைக் காதலிக்கும் காதலனின் மீது மிதமிஞ்சிய நம்பிக்கை வைத்திருக்கிறாளோ, அத்தகையவள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் வரும் எந்த விதமான துன்பங்களையும் தாங்கிக் கொள்ளும் வல்லமை உள்ளவளாக இருப்பாள். அதே போலக் காதலிக்கும் ஆண் மகன் தனக்குள்ள கௌரவமும் மரியாதையும் அப் பெண்ணால் போய்விடும். என்று நினைக்காமல் அவளை எக்கணத்திலும் ஏற்கச் சித்தமாக இருக்கிறானோ, அத்தகையவன் காதலால் மேன்மையடைவான். பெண்ணிடம் பொன், பொருள், காணி, பூமி போன்றவற்றை எதிர்பாராது எவனொருவன் துணிச்சலுடன் சவால்களை எதிர்நோக்குகின்றானோ அவன் காதலில் வெற்றியடைவது மட்டுமல்லாமல் முயற்சியால் உயர்ந்தவனாகவும் விளங்குவான். இது காதலரின் சரித்திரம் எமக்களித்த பாடமாகும். எனக்கு வித்தியாவைத் தெரியாது. இங்கு வந்த பின்பு தான் நான் அவரைப் பற்றி அறிந்தேன். அவள் கஜேந்திரன் மீது கொண்ட அன்பின் ஆழத்தை உணர்ந்தேன். உறுதியான மனம் படைத்தவர்கள் எதையும் இலகுவில் வென்று விடுவார்கள் கோளைகள் தான் பெண்ணிற்குப் பின்னால் வரும். சீர்வரிசையை எண்ணிப்பார்ப்பார்கள். என்னைப் பொறுத்தவரை விபுலன் கண்ணியமானவர், நல்லவர் என்மீது அதீத அன்பு வைத்துள்ளவர்’’ என்றாள் மாதுமை.

‘‘நான் நீ சொல்வதை ஏற்க மாட்டேன். உன்னில் அவர் மட்டற்ற அன்பு கொண்டுள்ளது உண்மையானால் அவர் ஏன் உன்னை விட்டுப் பிரிய வேண்டும். உங்களுக்கு இங்குள்ள சொத்தே போதும். அப்படியிருக்க பொருள் தேடி ஏன் அவர் வெளிநாடு செல்ல வேண்டும்?’’ என்றாள் சுவர்ணா.

‘‘வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பணி உள்ளது. எனது காதலருக்கு இரண்டு சகோதரிகள் இருக்கிறார்கள். அவர்களின் நல்வாழ்விற்காகத் தான் அவர் வெளிநாட்டிற்குச் சென்றவர். எனது சொத்து முழுவதையும் நான் அவரது சகோதரிகளுக்குக் கொடுக்கச் சித்தமாக இருந்தேன். ஆனால் அவர் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்; ‘‘காதல் கொண்டவர்களுக்குப் பொருள் தேவையில்லை. ஆனால் பொருள் இல்லாமலும் காதல் இல்லை, என் மீது அன்பு கொண்டு, என்னைக் காதலிக்கும் எனது காதலிக்கு என்னாலான பொருட்களை யெல்லாம் வாங்கிக் கொடுத்தல் வேண்டும். என்னவள் என்னிடம் அது இல்லையே இது இல்லையே என்றுகவலை கொள்ளாதிருத்தல் வேண்டும். அத்துடன் என் அன்புக்குரியவள் எதுவும் இல்லையே என்று கவலைப்படக் கூடாது. மற்றய பெண்கள் சீரும் சிறப்புமாக வாழ என் அன்புக்குரியவள் அவை இல்லாமல் வாழக்கூடாது என்று நான் விரும்புகிறேன்’’ என்றார். அத்துடன் அவரது சகோதரிகள் எமது சொத்தைப் பெற மறுத்து விட்டனர். அதனால் தான் பெற்றோர், சகோதரர், இனத்தவர் எல்லோரினதும் விருப்பத்துடனேயே அவர் என்னைப் பிரிந்து சென்றார். என்னிடம் அளவுக்கதிகமான அன்பும், தனது பெற்றோரிடம் அன்போடு கலந்த அக்கறை இல்லாத தன்மையும் அவரிடம் இல்லை; ‘‘நான் உனக்கு எந்த அளவிற்குச் சொந்தமானவனோ, அந்த அளவிற்கு எனது பெற்றோருக்கும் சொந்தமானவன். இன்றைய இளைஞர் பலரைப் போல இன்னொருவரின் சொத்தைத் திருமணம் என்ற பெயரில் அபகரிக்கும் பணத்தாசை பிடித்த, மூடநம்பிக்கை கொண்ட போலித்தனமுள்ள கோழைகளில் ஒருவனென்று என்னை ஊரார் நினைக்கக் கூடாது. கோழைத்தனத்தை நான் வெறுக்கிறேன். உம்மீது கொண்ட காதலை தூய்மையானதாக நான் நினைத்து உம்மை நேசிக்கிறேன். அன்பும் பாசமும் அக்கறையும் ஒன்றாகக் கொண்ட காதல் ஒன்றே உலகில் புனிதமானது; உண்மையானது’’ என்று அவர் அடிக்கடி கூறுவார். கூறியபடியே நடந்தும் விட்டார். அதனால் அவரது பெற்றோரும் சகோதரர்களும் உறவினர்களும் நண்பர்களும் ஊரவரும் அவரைப் போற்றுகின்றார்கள். அவரது செயலைப் பாராட்டுகின்றார்கள். அதனால் நான் மகிழ்ச்சியடைகிறேன். இதனால் நான் படும் துன்பங்களை இன்பங்களாகக் கருதுகிறேன். அவரது பிரிவால் நான் பசலையுற்றதாக நீங்கள் கூறுவதும் நல்லதென எனக்குத் தோன்றுகிறது’’ என்றாள் மாதுமை. அவளது விழிகளில் புனிதமான ஓர் ஒளி பிரகாசிப்பதைப் போலச் சுவர்ணாவுக்கு இருந்தது.

**1190. பசப்புஎனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்**
**நல்காமை தூற்றார் எனின்.**

என்னை விட்டு அவர் பிரிந்து சென்றதை ஊரவர் தூற்றாமல் இருப்பார்களானால், நான் பசலையுற்றதாகப் பெயர் எடுத்தல் நல்லதே.

## விதையில்லாத பழம்

அர்ச்சகா, வித்தியாவின் வீட்டுக்கு வந்த போது வித்தியா மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தாள். அவளைப் பார்க்க அர்ச்சகாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. முதல் நாள் இரவு அவள் வித்தியாவின் வீட்டிலிருந்து செல்லும் போது அவள் மிகவும் சோகமாக இருந்தாள். அர்ச்சகா வீட்டில் நிற்கும் போது வித்தியாவின் தாயார் வித்தியாவை மிகவும் மோசமாக ஏசினாள். அத்துடன் அவளுக்கு அடித்தாள்; ‘‘படித்தால் அறிவு இருக்க வேண்டும். நீ பல்கலைக்கழகத்தில் படிக்கிறாய். புத்தியுள்ளவளாக இருப்பாயென நினைத்தேன். பெரும் பணக்காரனை நான் உனக்குக் கலியாணம் செய்து வைக்க நினைத்திருக்க நீ சாப்பாட்டுக்கு வழியில்லாத ஒரு பிச்சைக்காரனைக் கலியாணம் செய்யப் போறதாய்க் கூறுகிறாய். அதோடு அவனைச் செய்து தரா விட்டால் தற்கொலை செய்வதாகவும் கூறுகிறாய். நான் உனக்கு அவனைக் கட்டித்தந்தால், ஒரு விலை மதிப்புள்ள சேலையை உனக்கு வாங்கித்தர அவனால் முடியுமே? சொல்லடி’’ என்று வித்தியாவின் முதுகில் பல முறை குத்தினாள்.

அர்ச்சகா பதறிப் போனாள்; ‘‘ மாமி.....மாமி.. வித்தியாவுக்கு அடிக்காதைங்கோ..... விடுங்கோ..... விடுங்கோ’’ என்று தடுத்தாள்.

கண்மணியின் கோபம் அர்ச்சகா மீது திரும்பியது; ‘‘ நான் யாரையும் நம்பமாட்டன். நீ எனக்குச் சாதகமாகக் கதைத்துக் கொண்டு வித்தியாவுக்கு உதவியும் செய்வாய்’’ என்றாள். அர்ச்சகா திகைத்துப் போனாள். தான் அகப்பட்டு விட்டேனோ எனப்பயந்தாள். அவள் தன்னைச் சுதாகரிக்கு முன் வித்தியா சொன்னாள்; ‘‘ அம்மா என்னைப் பற்றி எதையும் சொல்லுங்கோ. ஆனால் வீட்டுக்கு வருபவர்களைப் பற்றிக் குறையாகச் சொல்லாதைங்கோ. அர்ச்சகா இங்கு வருவது உங்களுக்குப் பிடிக்கா விட்டால் நேரே அவளுக்கு இங்கே வரவேண்டாம் என்று சொல்லுங்கோ’’ என்றாள் ஆத்திரத்துடன் சில கணங்கள் அர்ச்சகாவைப் பார்த்த கண்மணி சிறிது நேரத்தின் பின் சொன்னாள்; ‘‘அர்ச்சகா, வித்தியாவில் உள்ள கோபத்தால் உன்னை நான் ஏசிவிட்டேன். அதைக் குறையாக நினைக்காதை வழமை போல இங்கு வந்து போ’’ என்று கூறிவிட்டுச் சென்றாள். இரவு நடைபெற்ற பிரச்சினையால் மனவருத்தமுற்று இருக்கும் வித்தியாவுக்கு ஆறுதல் கூறவந்த அர்ச்சகா, அவள் மகிழ்வுடன் இருப்பதைக் கண்டு எதையும் உணர முடியாதவளாக நின்றாள்.

“என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? நான் கையெடுத்து வணங்கும் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி கடைசி வரையும் என்னைக் கைவிட மாட்டாரடி. அம்மா இரவு நடந்த சம்பவத்தினால் மிகவும் கோபப்பட்டு விட்டா. அதனால் மாமாவின் மகனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விரைவாகத் திருமணத்தை முடிக்க வேண்டும் என்று கேட்டா. அவர் தனக்கொரு காதலியிருப்பதாகக் கூறி எனக்கு வேறு இடத்தில் மாப்பிளை பார்க்கச் சொல்லி விட்டார். அதை அம்மாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இரவு முழுவதும் அழுதா. நான் தான் சமதானப்படுத்தினேன்; அவரைப்பற்றி எடுத்துச் சொன்னேன்; வெகுநேரத்திற்குப் பிறகு எனது விருப்பத்திற்குச் சம்மதித்து விட்டா” என்று சிரித்தாள்.

“நீ பெரும் அதிஸ்டக்காரி. துன்பங்கள் வருவது பெரும் இன்பத்தைக் கொடுப்பதற்காக என்பார்கள். நீ, ஒரு மாத காலமாகப் பட்ட துன்பங்களுக்குப் பலன் கிடைத்து விட்டது. இந்த நல்ல செய்தியைக் கஜேந்திரனுக்குச் சொல்ல வேண்டும். பாவம் அவர் மிகவும் வேதனையில் இருந்தவர். இதைக் கேள்விப்பட்டால் சந்தோசப்படுவார்” என்றாள் அர்ச்சகா.

“அம்மாவிடம் சொல்லி விட்டுப் பின்நேரம் சென்று அவரைச் சந்திக்கலாம் என்று நினைக்கிறேன். அதற்கு முன்பு உன்னால் சொல்ல முடியுமானால் சொல்லு” என்றாள் வித்தியா.

“வாழ்க்கையில் ஒருவர் விரும்புவது எது கிடைக்காவிட்டாலும் அந்தக் கிடையாமை ஒரு சில வருடங்களில் நினைவுகளில் இருந்து அற்றுப்போய்விடும். ஆனால் காதலிப்பவன் கிடையாது விட்டால் நாம் எடுக்கும் பிறவிகள் தோறும் அந்நினைவு தொடந்து வரும். அத்துடன்; “தான் விரும்புகின்ற காதலர் தம்மை விரும்புகின்ற பேறு பெற்ற பெண்கள் விதையில்லாத பழங்களைப் பெற்றவர்களாவார்கள்” என்று பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். இன்று உனக்கு விதையில்லாத நல்ல பழம் கிடைத்துள்ளது” என்றாள் அர்ச்சகா.

**1191. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே**
**காமத்துக் காழில் கனி.**

தாம்விரும்புகின்ற காதலர் தம்மை விரும்புகின்ற பேறு பெற்ற பெண்கள், காமநுகர்ச்சி என்னும் விதையற்ற பழத்தைப் பெற்றவராவர்.

**மழை**

கடல் அலைகள் ஆரவாரித்து கரையை நோக்கி ஓடி வந்தன. கஜேந்திரன் ஆரவாரிக்கும் கடலலைகளைப் பார்த்தபடி இருந்தான். ஒரு மாத காலமாக வித்தியாவைக் காணாமையால் ஏங்கித் தவித்த அவனது மனமும் கண்களும் முன்பை விட மோசமாக ஆர்பரித்தன. அன்று காலை பத்துமணி போல் நகுலன் அவனது வீட்டுக்கு வந்து சொன்னான்; “ கஜேந்திரா உனக்கு நல்ல காலம் பிறந்து விட்டது. வித்தியாவின் மாமனின் மகன் இன்னொரு பெண்ணைக் காதலிக்கிறானாம். அதனால் அவன் வித்தியாவுக்கு வேறு மாப்பிளை பார்க்குமாறு சொல்லி விட்டானாம். அதனால் வித்தியாவின் தாயார் வித்தியாவுக்கு உன்னைக் கட்டச் சம்மதித்து விட்டாராம்”

கஜேந்திரனால் அதை நம்ப முடியவில்லை. நகுலன், தான் படும் வேதனையைக் கண்டு அதைப் பொறுக்க முடியாததால் அப்படிக் கூறுகிறான் என்று நினைத்துப் பேசாமல் இருந்தான்.

“எவ்வளவு பெரிய தொரு செய்தியைச் சொல்லுறன். நீ அலட்சியமாக இருக்கிறாய். நான் சொல்வது உண்மையடா. இப்ப அர்ச்சகா வந்து சொல்லி விட்டுச் செல்கிறாள்” கஜேந்திரன் நகுலனின் முகத்தைப் பார்த்தான். அவனது முகம் என்றுமில்லாதவாறு பிரகாசமடைந்திருந்தது; “நான் பொய் சொல்லி உன்னை இன்று சமாளிக்கலாம். நாளைக்குச் சமாளிக்க முடியுமா?” என்று கேட்டான் நகுலன்.

கஜேந்திரனால் பேச முடியவில்லை. அவனது இரண்டு கண்களும் ஆறாகப் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தன. “நகுலா”....அவனால் பேசமுடியவில்லை. சில கணங்கள் தடுமாறினான். பின்; “நான் பாக்கியசாலி நல்ல செய்தியை எனக்குச் சொன்ன உனக்கு என்னிடம் தருவதற்கு ஒன்றுமில்லை...”

“என்ன வாய்க்குள் புலம்புகிறீர்கள்” என்றவாறு கஜேந்திரனின் அருகில் வந்தமர்ந்தாள் வித்தியா. வழக்கமாகச் சற்றுத் தள்ளி அமரும் அவள் அன்று மிகவும் நெருக்கமாக அமர்ந்து சிரித்தாள். கஜேந்திரன் அவளின் முகத்தைப் பார்த்தான். அது பிரகாசமாக இருந்த போதும் பல நாட்களாக நீரூற்றாத செடியைப் போலப் பொலிவிழந்து வாடியிருந்தது. அதைக்கண்டதும் கஜேந்திரனின் கண்கள்

கலங்கின; ‘‘என்னால் தான் உமக்கு இவ்வளவு கஷ்டம் சகலவசதிகளையும் கொண்ட மென்மையான மனமுடைய உம்மை நான் அளவுக்கதிகமாகத் துன்புறுத்தி விட்டேன். உமது அம்மா, உமக்கு அடித்ததை நினைக்க எனது இதயம் வெந்து விட்டது. பூப்போன்ற உமது உடலில் பட்ட காயத்தின் வலி எனது இதயத்தைப் புண்ணாக்கி விட்டது. பெரும் வசதிகளுடன் மகாராணி மாதிரி வாழ வேண்டிய நீர் என்னால் துன்பப்பட்டு விட்டீர்’’ என்றான் கஜேந்திரன்.

‘‘ஒரு பெண்ணை உயிருக்குயிராக நேசிக்கும் காதலனின் அன்புக்காக எவ்வளவு தண்டனைகளையும் பெறலாம். அம்மா எனக்குத் தந்த தண்டனைகள் யாவும் என்னைக் கொடுமைப்படுத்தும் என்றும், என்னை உங்களை மறக்க வைக்கும் என்றும், அம்மா நினைத்தா. ஆனால் அவை எனது மனதைத் திடப்படுத்தின; காதலின் வலிமையை உறுதிப்படுத்தின; நீங்கள் இல்லாமல் உலகில் என்னால் வாழ முடியாது என்ற நிலையை உருவாக்கின. அதனால் அவா இன்னும் தண்டனைகள் பல தந்திருந்தாலும் நான் சந்தோசப்பட்டிருப்பேன்.’’ என்றாள் வித்தியா.

‘‘உம்மைப் பிரிந்திருந்த இந்த ஒரு மாத காலமும் நான் உறங்கவில்லை; சரியாக உணவு உண்ணவில்லை; நான்படும் வேதனையைக் கண்டு எனது அம்மா தானும் உணவு உண்ணாமல் இருந்தார். நோயாளியான அம்மா உணவு உண்ணாமல் துயரத்துடன் இருந்ததால் அப்பாவும் வேதனைப்பட்டு உணவு உண்ணவில்லை. நான் உம்மீது கொண்ட தூய்மையான அன்பு எனது குடும்பத்தையே பாதித்து விட்டது’’ கலங்கினான் கஜேந்திரன்.

‘‘தம்மை விரும்பும் காதலிக்கு அவளை விரும்பும் காதலன் பொழியும் அன்பானது உலக உயிர்களைக் காக்க மேகம் தன் நலம் கருதாது பொழியும் மழையைப் போன்றது. அதற்கு இணையானது உலகில் எதுவும் இல்லை’’ என்றாள் வித்தியா.

அதைக் கேட்டுக் கஜேந்திரன் உருகிப் போனான்; ‘‘இதற்கு மேல் அவள் என் மீது வைத்த அன்பைப் பற்றிச் சொல்ல வார்த்தைகள் இல்லை’’ என்று நினைத்தான்.

**1192. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு**
**வீழ்வார் அளிக்கும் அளி.**

தன்னை விரும்பும் காதலிக்குக் காதலன் அளிக்கும் அன்பு, உலக உயிர்களைக் காப்பதற்காக மேகம் பொழியும் மழையைப் போன்றது.

## செருக்கு

இனி என்னால் ஒரு கணமும் உங்களைப் பிரிந்து இருக்க முடியாது. உங்களைப் பிரிந்திருந்த முப்பது நாட்களும் நான் பட்ட வேதனையை வார்த்தைகளால் கூற முடியாது. நரக வேதனை என்று பெரியவர்கள் சொல்வது இதைத்தானோ? என்று நினைத்தேன். அம்மாவினுடைய கொடிய வார்த்தைகளும், தண்டனைகளும் எனது மனதைத் துன்பப்படுத்தி விட்டன. அந்தக் கொடிய துன்பந்தீர வேண்டுமானால் நான் உங்களோடு சில நாட்களுக்கு இருக்க வேண்டும். நான் உங்களுடன் வரப்போகிறேன்’’ என்று கஜேந்திரனின் நெஞ்சில் முகம் புதைத்துக் கதறினாள் வித்தியா.

கஜேந்திரன் அவளது மென்மையான முதுகை மெதுவாகத் தடவினான். அதனால் ஏற்பட்ட சுகம் அவளை மேலும் அழுகைக்குள்ளாக்கியது; ‘‘உங்களைப் பிரிந்து என்னால் இனிமேல் இருக்க முடியாது. தயவு செய்து என்னைக் கூட்டிச் செல்லுங்கள்’’ விம்மினாள்.

வித்தியா வளர்ந்த போதும் பலவிடயங்களில் குழந்தைகளைப் போல அடம்பிடிப்பவள் என்பது கஜேந்திரனுக்குத் தெரியும். அதனால் அவன் குழப்பமடையாது அவளை இறுக அணைத்துப் பாசத்துடன் அவளது தலை முடியைக் கோதி விட்டான்; ‘‘நீங்கள் எப்பொழுதும் என்னை ஏமாற்றுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும் இன்றைக்கு என்னை ஏமாற்ற முடியாது. இன்று நான் உங்களுடன் வருவேன்’’ வித்தியாவின் குரல் சற்றுக்காரமாக ஒலித்தது.

‘‘சரி நான் அழைத்துச் செல்கிறேன்’’ என்றான் கஜேந்திரன்.

‘‘உண்மையாகவா?’’ வித்தியாவின் விழிகள் பூவாக மலர்ந்தன. கண்களுக்குள் குளமாக நின்ற கண்ணீர் திடிரென வற்றியதால் கண்கள் முறுவலித்தன. வித்தியாவின் முகத்தில் திடீரென்று தோன்றிய மலர்ச்சியைக் கண்டு மகிழ்ந்தான் கஜேந்திரன். அந்த மகிழ்வு நீடிப்பதற்காகவாவது அவளை அழைத்துச் செல்ல வேண்டுமென்று நினைத்தான். கஜேந்திரன். வித்தியாவுக்கு மகிழ்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை கஜேந்திரனது இறுகிய அணைப்புக்குள் இருந்து விடுபட்டுக் கடற்கரைப்

பக்கமாக ஓடினாள். அவளது அந்தச் செயலை எதிர்பாராத கஜேந்திரன் ஆச்சரியத்துடன் அவள் ஓடுவதைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

''அர்ச்சகா என்னை அவர் வீட்டுக்குக் கூட்டிச் செல்லப் போகிறாராம். நான் மகிழ்ச்சியின் எல்லையில் இருக்கிறேன்'' என்று நகுலனுடன் கதைத்துக் கொண்டிருந்த அர்ச்சகாவின் தோள்களைப் பற்றினாள் வித்தியா. திடீரென எதிர்பாராதவாறு யாரோ தன்னைத் தீண்டியதால் திகைத்து எழுந்த அர்ச்சகா பைத்தியக்காரி போலச் சிரித்துக் கொண்டு நிற்கும் வித்தியாவை ஆச்சரியத்துடன் பார்த்தாள்; '' என்னடி உனக்கு விசர் பிடித்து விட்டதே. விசரிகள் மாதிரிச் சிரிக்கிறாய்;''

அர்ச்சகா சொல்வதைக் கேளாது மீண்டும் சிரித்தாள். வித்தியா; ''என்னால் அவரை இனியும் பிரிந்து இருக்க முடியாது. நான் அவருடன் செல்லப் போகிறேன்'' என்றாள் வித்தியா. அப்பொழுது அங்கே கஜேந்திரன் வந்தான்.

''வித்தியா சொல்வதைப் பார்த்தால் நாளைக்கு எங்களெல்லோருக்கும் கலியாணச் சாப்பாடு இருக்கிறது.'' என்றான் நகுலன்.

கஜேந்திரன் எதுவும் பேசவில்லை. அதனால் நகுலன் சொன்னான்; ''முன்பு வித்தியா சொல்லியிருந்தால் நான் ஏற்றிருப்பன். இப்போது பெற்றோர் ஒத்துக் கொண்ட பின்பு சடங்குகள் முடியாமல் கட்டாயம் செல்ல வேண்டுமா?''

''அது தானே நேற்று வரை துன்பப்பட்ட வித்தியா; இன்று சந்தோசமாக இருக்கிறாள். இனித் துன்பத்திற்கு இடமில்லை. அப்படியிருக்க பெற்றோருக்குத் தெரியாமல் செல்ல வேண்டுமா.? என்று கேட்டாள் அர்ச்சகா.

''அதுதானே, தன்னை விரும்பும் காதலரைக் கொண்ட பெண்களுக்குப் பிரிவுத் துயர் இருந்தாலும், அவர் என்னை மறக்க மாட்டார்; என்னைப் பிரிந்து வாழமாட்டார்; எந்த நெருக்கடி வந்தாலும் அதிலிருந்து என்னைக் காப்பாற்றி நினைத்த இன்பத்தைத் தருவார். என்று செருக்கோடு சொன்ன நீ, இன்று ஏன் அவசரப்பட்டு பெற்றோரின் நன்மதிப்பை இழக்க விரும்புகிறாய்'' என்று கேட்டான் நகுலன்.

வித்தியா பேசாமல் தலையைக் குனிந்தபடி இருந்தாள். அவளது மனதில் முன்பை விடச் செருக்கு அதிகமாக இருந்தது.

**1193. வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே**
**வாழுநம் என்னும் செருக்கு.**

தம்மை விரும்பும் காதலரைக் கொண்ட பெண்களுக்கு பிரிவுத்துயரம் இருந்தாலும், அவர் வந்த பின் கூடி வாழ்வோம் என்ற செருக்கு இருக்கும்.

## தீவினை உடையவள்

மாதுமையும் அர்ச்சகாவும் வித்தியாவின் வீட்டுக்கு வந்தனர். அவர்களைக் கண்மணி மிகவும் அன்போடு வரவேற்றாள். இவ்வளவு நாளும் கறுத்துச் சுருங்கியிருந்த அவளது முகம் அன்று பிரகாசமாக இருந்தது. அர்ச்சகாவுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. தனது மகள், தனது சொல்லை மீறீ மிகவும் வறியவனான கஜேந்திரனை விரும்பியதை எந்த வகையிலும் அவளால் ஒத்துக் கொள்ள முடியவில்லை. சிறு வயதில் இருந்தே மட்டற்ற பாசத்துடன் தன்னை நேசித்த சகோதரனைப் பிரிய அவளுக்கு விருப்பமே இல்லை. எந்த வகையிலும் வித்தியாவை மிரட்டியோ அரவணைத்தோ அங்கஜனுக்குத் திருமணம் செய்து வைத்து விட வேண்டும் என்று விரும்பினாள். அவள் தற்செயலாகக் கஜேந்திரனுடன் சென்றால், அன்றே தனது வாழ்வை முடித்து விடுவேன் என்று அடிக்கடி அர்சச்காவுக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள். அதனால் தான் கஜேந்திரனுடன் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டிருந்தாள் வித்தியா.

''துயரத்தில் மூழ்கி, அதிலிருந்து விடுபட முடியாது குழம்பியிருந்த கண்மணி மாமியா இவ்வளவு மகிழ்வுடன் எம்மை வரவேற்கிறார்'' என்று நினைத்தவாறு உள்ளே சென்றாள் அர்ச்சகா.

''இப்போது எந்தப் பிள்ளைகளையும் நம்ப முடியாமல் இருக்கிறது. அங்கஜன் மிகவும் நல்லவன்; தனது சொல்லைக் கேட்பான் என்று நம்பியிருந்த எனது அண்ணாவின் நம்பிக்கையில் இடி விழுந்து விட்டது. அங்கஜன் தன்னுடன் வேலை செய்யும் ஒரு பெண்ணை விரும்பித் திருமணம் செய்து விட்டானாம். அண்ணா வித்தியாவையே தனது மருமகளாக எண்ணியிருந்தமையால், அவன் அண்ணாவுக்குச் சொல்லாமல் அவளைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டானாம். இரண்டு

தினங்களுக்கு முன்பு அண்ணா வித்தியாவைச் செய்யும் படி சொல்லி, நாளையும் குறித்து விட்டார். அதனால் தான் அவன் உண்மையைச் சொல்லியிருக்கிறான். அண்ணா சொன்னார்; ''நான் காதலுக்கு எதிரியில்லை. பெற்று வளர்த்துக் கல்வியூட்டி இந் நிலைக்கு அவனைக் கொண்டு வந்த எனக்குச் சொல்லாமல், அவளைப் பதிவுத் திருமணம் செய்தது தான் கவலையைக் கொடுக்கிறது'' என்று அழுதார். அதைப் பார்க்க எனக்கு வேதனையாக இருக்கு'' என்று கண்கலங்கினாள் கண்மணி.

அர்ச்சகா நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள். சிறிது நேரம் அமைதியாக இருந்த கண்மணி சொன்னாள்; ''அங்கஜன் மீது அண்ணா எவ்வளவு பாசம் வைத்திருந்தார். ஆனால் அவன் அண்ணாவுக்குத் துரோகம் செய்து விட்டு நடித்திருக்கிறான். இப்பொழுது அவன் கருத்தரங்கிற்காக வெளிநாடு செல்லவில்லை. அப் பெண்ணின் பெற்றோர் வெளிநாட்டில் இருக்கின்றனர். அப் பெண்ணுடன் அவள் அவர்களின் வீட்டிற்குத் தான் சென்றுள்ளான். இதை நினைத்து நினைத்து அண்ணா இரவு முழுவதும் அழுதார். அவரின் நிலையில் இருந்து பார்க்கும் போது கஜேந்திரன் மிகவும் நல்லவன். இவ்வளவு பிரச்சினைகள் வந்த போதும் அவன் வித்தியாவை அழைத்துச் செல்ல நினைக்கவில்லை. தற்செயலாக அவன் வித்தியாவை அழைத்துச் சென்றிருந்தால் நான் என் உயிரை விட்டிருப்பேன். அந்தப் பழி அவனுக்கு ஏழேழு ஜென்மங்களிலும் தொடர்ந்து செல்லும். ஒரு பெரும் பழி வராமல் காப்பாற்றி விட்டான். ஒரு பெண்ணைப் பொறுத்தவரை, அவள் தனது கணவனால் மதிக்கப்பட வேண்டும். ஊரவர்கள், அயலவர்கள், நண்பர்கள் அவளைப் போற்றிப் புகழ்ந்தாலோ, இல்லாவிட்டால் உயர்ந்த அந்தஸ்தில் இருந்தாலோ பிரியோசனமில்லை. அவள் தனது காதலனால் மதிக்கப்பட வேண்டும் அவன் அவளை உயர்ந்த பொக்கிசமாகக் கருதவும் வேண்டும். இல்லாவிட்டால் அவளது வாழ்க்கை நாசமாகி விடும். ஒரு பெண்ணுக்குக் கல்வியால், பணத்தால், உத்தியோகத்தால் வரும் புகழும் பொருளும் கணவனின் அன்பில்லாவிட்டால் நரகத்தைப் போன்றது. அந்தளவில் வித்தியாவின் மீது அங்கஜன் அன்பு வைக்கவில்லை. நாம் அவளை வற்புறுத்திச் செய்து கொடுத்தால் அவளது வாழ்வு நாசமாகிவிடும். உறவு தான் வாழ்க்கை என்றும் நினைத்தேன். பணம் தான் வாழ்க்கை என்று நினைத்தேன்; கஜேந்திரன் மனம் தான் வாழ்க்கை என்று புரிய வைத்துள்ளான்'' என்று பூரிப்புடன் சொன்னாள் கண்மணி.

அர்ச்சகா, கண்மணி இப்படிக் கதைப்பாள் என்று எதிர்பார்க்கவில்லை. எனது அம்மாவிற்கும் இந்த எண்ணம் வந்தால் நல்லது'' என்று நினைத்தாள்.

''எல்லாம் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியின் புதுமை'' என்றாள் கண்மணி.

**1194. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்**
**வீழப் படாஅர் எனின்.**

உலகத்தவரால் மதித்துப் போற்றப்படும் பெண்ணாக இருந்தாலும், அவள் தன் காதலனால் விரும்பப்படாதவள் என்றால், அவள் தீவினை உடையவளாவாள்.

**என்ன நன்மை**

வித்தியாவின் அறைக்கு மாதுமையும் அர்ச்சகாவும் சென்ற பொழுது வானொலியில் புல்லாங்குழல் ஓசை மிகவும் மெதுவாகக் கேட்டுக் கொண்டிருந்தது. வித்தியா புல்லாங்குழல் இசையை மிகவும் இரசித்துக் கேட்பாள். கஜேந்திரனைக் காதலிப்பதற்கு முன்பு அவள் சினிமாப் பாடல்களைத் தான் விரும்பிக் கேட்பாள். கர்நாடக சங்கீத இசையையோ சினிமாப் பாடல் தவிர்ந்த வேறு பாடல்களையோ கேட்கமாட்டாள். கஜேந்திரன் இசைப்பிரியன். புல்லாங்குழலை மிகவும் இனிமையாக வாசிப்பான். உச்சுவில் குளக்கட்டில் இருந்து புல்லாங்குழல் வாசித்தானானால் அக் குளத்தில் வாழும் பறவைகளும் மெய்மறந்து. அவனது இசையைக் கேட்கும் வித்தியா அவன் வாசிக்கும் புல்லாங்குழல் இசையில் பலமுறை மெய்மறந்திருக்கிறாள்.

''பல நாட்களுக்குப் பின்பு உனது அறையில் இனிமையான புல்லாங்குழல் இசை ஒலிக்கிறது. அம்மாவின் முகத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சி இருக்கிறது. இதை நான் இவ்வளவு விரைவாக எதிர்பார்க்கவில்லை. உனக்கும் அங்கஜனுக்கும் திருமணம் நடைபெற ஏற்பாடுகள் நடை பெற்றால் அதை எப்படி முறியடிப்பது என்று மனதைக் குழப்பிக் கொண்டிருந்தேன். நல்ல முறையில் அது முடிவுற்றதால் எத்தனையோ பிரச்சினைகள் தீர்ந்து விட்டன'' என்று பெருமூச்சு விட்டாள் அர்ச்சகா.

''உன்னைப் போன்ற நல்லவர்களிடம் தான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். எனது காதலின் உயர்ந்த நோக்கத்தைப் புரிந்து கொண்டு அதன் வெற்றிக்காகப் பாடுபட்டு அதனால் வந்த பல துயரங்களையும் பொறுத்துக் கொண்டு நீ எனக்காகச் செயற்பட்டதை என்னால் மறக்க முடியாது. நான்

துன்பத்தில் கரைந்திருந்த வேளைகளில் தைரியமூட்டி, தேவையான அறிவுரைகளை வழங்கியமையால் தான் நான் இன்று பெரு மகிழ்வுடன் இருக்கிறேன். உனது உதவிகளால் தான் நான் எனது காதலில் வெற்றி பெற முடிந்தது'' என்றாள் வித்தியா.

''எவ்வளவு துன்பங்களைத் தாங்கினாய். ஊரவர் உன்னை இகழ்ந்தனர். உனது தாயார் உன்னை அளவுக்கதிகமாகத் துன்புறுத்தினார். அப்படியிருந்த போதும் நீ, உனது காதலனின் நினைவிலிருந்து அணுவளவேனும் பிறழ்ந்து செல்லாமல் கவனமாக இருந்தமையால் தான் வெற்றியடைந்தாய். காதலாகிய கப்பல் துறை முகத்தை அடைய வேண்டுமானால் எத்தனை பெரிய புயல்களையும் அலைகளையும் சமாளித்து வரல் வேண்டும். எவள் ஒருத்தி தன் காதலனை அடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தைக் கொண்டிருக்கிறாளோ, அதற்காக அவள் தனக்கு வரும் எந்தத் தன்பத்தையும் தாங்கி பொறுமையுள்ளவளாக இருத்தல் வேண்டும். அந்தப் பொறுமை தான் உனக்கு வெற்றியைத் தேடித் தந்தது'' என்றாள் அர்ச்சகா.

''நாம் விரும்பும் காதலரிடம் நாம் எதை எதிர்பார்க்கிறோம்.? அங்கஜன் மருத்துவனாகாவும் கோடிக்கணக்கில் சொத்துள்ளவனாகவும் இருந்த போதும் கூட வித்தியா அவனை விரும்பவில்லை. ஒரு பரம ஏழையைத் தான் விரும்பினாள். காதல் என்பது பணத்தால், சந்தர்ப்ப சூழ்நிலைகளால், அழகால் உண்டாவதில்லை. பூர்வ புண்ணியப் பலனால் உண்டாகிறது. இல்லாவிட்டால் அர்ச்சகாவின் அன்பைப் பெறக் கொழும்பில் எத்தனை ஆண்கள் நாயாக அவளின் பின்னால் அலைந்தார்கள். இவளது சினேகிதி என்ற முறையில் என்னிடம் எத்தனை பேர் உதவி கேட்டு வந்தனர். அவர்களையெல்லாம் நிராகரித்த அர்ச்சகா, நகுலனைக் கண்டதும் காதல் கொண்டாளென்றால் அதற்கு என்ன அர்த்தம். பூர்வ புண்ணியத் தொடர்பு தானே. நாம் விரும்புகின்ற காதலர் நம்மைக் காதலிக்க வேண்டும். எம் அன்பில் திளைக்க வேண்டும். எம்மை விட்டுப் பிரியாது இருத்தல் வேண்டும். இதை விட்டு விட்டு எம்மீது அவர் அன்பு கொள்ளாவிட்டால், அவர் நமக்கு என்ன செய்யப் போகிறார். பொன்னும் பொருளும் காணி பூமியும் எமக்கு இன்பத்தையா தரும். இந்த வகையில் நானும் வித்தியாவும் கொடுத்து வைத்தவர்கள்'' என்றாள் மாதுமை பூரிப்புடன்.

**1195. நாம்காதல் கொண்டார் நமக்குஎவன் செய்பவோ**
**தாம்காதல் கொள்ளாக் கடை?.**

நாம் காதல் கொண்ட காதலர் தாமும் எம்மீது காதல் கொள்ளாவிட்டால், அவரால் எமக்குக் கிடைக்கும் இன்பம் என்ன?.

**ஒத்திருப்பதுவே நன்று**

''வாழ்க்கை என்றால் அன்பும் பண்பும் இருத்தல் வேண்டும். அன்பு தான் காதலின் மூலவேர். காதலிப்பவர்கள் எதிர்ப்பைக் கண்டு அஞ்சாது முன்னேறிக் கொண்டே இருத்தல் வேண்டும். பெற்றோரை எதிர்ப்பது தவறு என்று நினைத்தாலும் அதற்காக வருத்தப்படக் கூடாது. இது போன்ற பல தவறுகளை நம் முன்னோர் செய்திருக்கிறார்கள். தவறுகளைச் செய்யாமலிருந்தால் காதலில் யாராலும் வெற்றி கொள்ள முடியாது. வித்தியா அன்பாக வளர்த்த தாயையும் பாசம் கொண்ட மாமனையும் எதிர்த்தது மிகப் பெரிய தவறென்று கருதியிருந்தால் இன்று இந் நிலையை அடைந்திருக்க முடியாது. எதிர்ப்புக்களும் துன்பங்களும் தான் காதலுக்கு வழிகாட்டும் தெய்வங்கள். துன்பத்தையோ அல்லது எதிர்புக்களை எண்ணிக் கவலைப்பட்டால் இலட்சியத்தில் வெற்றியடைய முடியாது'' இது எனது அனுபவம். இதை அர்ச்சகா கவனத்தில் கொள்ளல் வேண்டும்'' என்று சிரித்தாள் மாதுமை.

''மற்றவர்களுக்குப் புத்திமதிகள் சொல்வது அனுபவத்தின் பாடம். வலிமையும் துணிவும் தான் வெற்றிக்கு வழிவகுப்பவை. பலவீனமும் கோழைத் தனமும் காதலரைப் பிரித்து விடும் ஆப்பையும் கோடாரியையும் போன்றவை. அர்ச்சகாவின் வீட்டில் ஆப்பும் கோடாரியும் உண்டு கவனம்'' என்றாள் வித்தியா.

''காதல் என்பது காதலர் இருவரிடையேயும் இருத்தல் வேண்டும். ஒருவர் மட்டும் காதல் கொள்வதால் எந்தவிதமான நன்மையும் இல்லை. வித்தியா அங்கஜனை விரும்பவில்லை. ஒரு வேளை அவள் தாயின் விருப்பத்திற்காக அவனை விரும்பி ஏற்றிருந்தாலும் மிகவும் துன்பப்பட்டிருப்பாள். வாழ்க்கை என்பது ஆயிரங்காலத்துப் பயிர் என்று பெரியவர்கள் சொல்வார்கள். விருப்பமில்லாத ஒருவருடன் கூடி வாழ்வதன் மூலம் ஆயிரம் காலத்துப் பயிரை நாசஞ் செய்ய முடியுமே தவிர செழித்து வளரச் செய்ய முடியாது. கஜேந்திரனை அணைத்து மகிழ்ந்த கைகளால் எப்படி வித்தியா அங்கஜனைத் தொடுவாள். அந்த அணைப்பில் குளிர்மையான பேரானந்த சுகம் எப்படி உருவாகும். காதல் என்பது காவடியின் பாரத்தைப் போல இரண்டு பக்கமும் ஒத்து இருந்தால் தான் இன்பமாக இருக்கும். ஒரு பக்கத்தில் பாரம் கூட இருந்தால் தாங்க முடியாத துன்பத்தைத் தரும் அத்துடன் வாழ்க்கையும் பாழாகிவிடும்'' என்றாள் வித்தியா.

‘‘கணவன் மனைவியிடையே அன்பும் பாசமும் இருத்தல் வேண்டும். அப்பா சொல்வதை அம்மா கேட்பதில்லை. அப்பாவின் சிறிய ஆசைகளைக் கூட அம்மா மிகவும் சிரமப் பட்டுத்தான் நிறைவேற்றுவா. இது ஏன் என்று எனக்குப் புரிவதில்லை. எதையும் அம்மாவிடம் கேட்க முடியாது. கேட்டால் அவாவுக்கு அளவுக்கதிகமான கோபம் வரும். கண்டபடி ஏசுவா. அதனால் அப்பாவிடம் இதைப்பற்றிக் கேட்பேன். அவர் சிரித்துச் சமாளிப்பாரே தவிர எதையும் கூறுவதில்லை. அப்பா மிகவும் நல்லவர்’’ கண்கலங்கினாள் அர்ச்சகா. மாதுமைக்கு அது தெரியும். அதனால் அவள் அதைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை. ஆனால் வித்தியா துடித்துப் போனாள்; ‘‘நீ பெரிதாக அலட்டிக் கொள்ளாதை. பதினைந்து வருடங்களாக எனக்கு அர்ச்சகாவின் அம்மாவைத் தெரியும்’’ என்றாள் மாதுமை.

‘‘எனது காதல் விஷயத்தை அப்பா ஏற்றுக் கொண்டாரேயானால் எனக்குத் தோல்வி தான் கிடைக்கும். அப்பா இதுவரை எனது எந்த விருப்பத்தையும் பூர்த்தி செய்யாமல் விட்டதில்லை. அதனால் எனது விருப்பத்திற்கு மாறாகத் தான் எனது அப்பா நடந்து கொள்வார். அதை உண்மையென்று நம்பி அம்மா எதிர்மாறாக நடந்து எனது விருப்பத்தைப் பூர்த்தி செய்வா. அப்படித்தான் எனது காதல் விஷயத்திலும் நடந்து கொள்ள வேண்டும். ஆனால் இந்த விஷயத்தில் அப்பா என்னோடு ஒத்துளைப்பாரோ தெரியவில்லை. எனது அப்பாவின் தங்கையின் மகன் ஒருவன் இருக்கிறான். என்னைக் கூட்டிக் கொண்டு அங்கு செல்லப் பலமுறை அப்பா முயன்றவர். மாதுமையின் தந்தையார் தான் அப்பாவுக்குப் புத்திமதிகள் கூறித் தடுப்பார். அப்பா அவரின் சொல்லைத் தான் கேட்பார். எனவே அவருக்கு எனது காதல் விஷயத்தைச் சொல்ல வேண்டும். காதலன், காதலி ஆகிய இருவரிடமும் காதல் இருக்க வேண்டும். அப்படியில்லாத வாழ்க்கை எனது பெற்றோரின் வாழ்க்கையைப் போலத் துன்படையதாக இருக்கும்’’ விம்மினாள் அர்ச்சகா.

**1196. ஒருதலையான் இன்னாது காமம்காப் போல**
**இருதலை யானும் இனிது.**

காதல் ஒருவரிடம் இருந்தால் அது துன்பத்தையே தரும்; காவடியின் பாரம் போல இருபக்கமும் சமமாக இருந்தால் தான் இன்பம் உண்டாகும்.

### ஒப்ப இராமை

வித்தியாவின் வீட்டுக்கு வந்த வளர்மதி, வித்தியாவின் முகத்தைப் பார்த்தாள். அது சுடரைப் போலப் பிரகாசித்தது; ‘‘எல்லாம் கஜேந்திரன் சொன்னவர். இப்படி ஓர் அதிஸ்டம் திடீரென்று உனக்கு வந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது’’ என்றாள் வளர்மதி. அவளின் குரல் கரகரத்தது முன்னைய சுறுசுறுப்பு இல்லாததைப் போல வித்தியாவுக்குத் தோன்றியது.

‘‘என்னடி, ஆதவன் ஏதாவது கடுமையாகச் சொல்லி விட்டானா...?’’ வித்தியா கேட்டாள்.

வளர்மதி விக்கி விசும்பி அழுதாள். அவளால் துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அங்கு சிலர் இருப்பதையும் மறந்து விக்கி விக்கி அழுதாள். ‘‘காதலில் பிரச்சினை உள்ளவர்களைத் தேற்றுவது கஷ்டம். நன்றாகச் சில நிமிடங்கள் அழுதார்களானால் அந்தச் சுமை தற்காலிகமாகக் கொஞ்சமாவது குறையும்’’ என்று வித்தியா அனுபவபூர்வமாக உணர்ந்தமையால் பேசாமல் அவள் அழுவதைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

சில நாட்கள் பழகிய போதும் வளர்மதி அழுவதை அர்ச்சகாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் அவளது கண்கள் கலங்கின. அதைக்கண்ட வித்தியா ஆச்சரியப்பட்டாள்; ‘‘அர்ச்சகா, வளர்மதியின் துன்பம் என்னவென்று தெரியாமல் நீ, ஏன் அழுகிறாய். நான் முன்பு தாங்க முடியாத சோகத்தில் தத்தளிக்கும் போது தைரியத்துடன் ஆலோசனை சொன்ன நீ, இப்பொழுது காரணமின்றிக் கலங்குகிறாய். என்ன நடந்தது? உனது சோகத்திற்காக அழுகிறாயா..?’’ என்று கேட்டாள் வித்தியா.

‘‘எனக்கும் பெரிய பெரிய சோதனைகள் ஏற்படப் போகின்றன’’ என்றாள் அர்ச்சகா.

‘‘சோதனை வரும் போது அதைப் பற்றி யோசிப்போம். மதி, உனக்கென்ன நடந்ததென்று சொல்லு’’ என்றாள் வித்தியா.

மீண்டும் சிலகணங்கள் பேசாதிருந்த வளர்மதி கைக்குட்டையால் முகத்தைத் துடைத்து விட்டுச் சொன்னாள்; ‘‘வித்தி, நேற்று நான் நகரத்தில் உள்ள பூந்தோட்டத்திற்குச் சென்றேன். அவரும் வந்திருந்தார். அவரைக் கண்டதும் எனக்கு மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை. அதனால் நான் அவருக்கு அருகே சென்றேன். அவர் என்னைக் கண்டதும் பாம்பைக் கண்டது போல மிரண்டார்.

அவ்விடத்தை விட்டு வேறு இடத்திற்குச் சென்றார். நான் ஆவல் மிகுதியால் அவருக்குப் பின்னால் சென்றேன். அது அவருக்குப் பிடிக்கவில்லை. எப்படி அவருக்கு அவ்வளவு ஆத்திரம் வந்ததோ தெரியவில்லை. மிகவும் ஆத்திரத்துடன் எனக்கு அருகே வந்து; ‘‘நீ என்ன நினைத்துக் கொண்டு என்பின்னால் திரிகிறாய். என் பின்னால் நீ வருவதை நான் விரும்பவில்லை. ஒரு பெண்ணுக்கு வெட்கம், ரோசம், மானம் ஆகிய மூன்றும் அவசியம் தேவை. இவை இல்லாதவர்கள் விலை மகளிர்கள் தான். இன்னொரு முறை நீ என் பின்னால் வந்தால் அப்படித்தான் நான் நினைப்பேன்’’ என்று கோபமாகக் கூறி விட்டுச் சென்று விட்டார். அவர் என்னைப் பேசியதைப் பற்றிப் பரவாயில்லை. அவரை அடையாமல் என்னால் வாழ முடியாது. முன்பு கஜேந்திரனுக்கு அவர் என்னைக் காதலிப்பதாகக் கூறியமையால் தான் நான் அவரைப் பார்த்துச் சிரித்தேன்; அவரின் பின்னால் சென்றேன்’’ அழுதாள் வளர்மதி.

‘‘அழாதை, கஜேந்திரனுக்குச் சொல்லி என்ன நடந்ததென்று விசாரிக்கிறேன். காதலில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு பிரச்சினை. ஒவ்வொன்றும் வித்தியாசமானவையாக இருக்கின்றன. ஆதவன் கூச்ச சுபாவம் உள்ளவன். காதலர் இருவரின் பக்கத்திலும் ஒப்ப இராமல், காமன் ஒருவரின் பக்கம் நின்று இயங்குவதால் தான் உனது துன்பத்தையும் வருத்தத்தையும் ஆதவன் உணரவில்லை. காதலில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரினதும் பின்னால் அளவற்ற நம்பிக்கையும் உறுதியும் உண்டு. அந்த இரண்டும் தான் வெற்றிக்குப் பக்க பலமானவை. நீ நம்பிக்கையை எந்தச் சந்தர்ப்பத்திலும் இழக்காது உறுதியுடன் இரு. அன்று ஆதவனுக்கு ஏதோ ஒரு பிரச்சினை இருந்திருக்க வேண்டும். கஜேந்திரன், காதலருக்குத் தன்னாலான உதவிகளைச் செய்பவர். அவர் வந்ததும் இதைச் சொல்லி உடனே கேட்டுச் சொல்கிறேன்’’ என்றாள் வித்தியா.

வளர்மதியின் கண்கள் பிரகாசித்தன. அந்தக் கண்களில் முன்பு தென்பட்ட துயரத்தையோ கலவரத்தையோ காணவில்லை. பற்கள் மகிழ்வுடன் பிரகாசமாக ஒளிர்ந்தன.

**1197. பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்**
**ஒருவர்கண் நின்று ஒழுகு வான்?.**

காமன், காதலர் இருவர் பக்கத்திலும் ஒப்ப இராமல் ஒருவரின் பக்கம் நின்று இயங்குவதால், என்னுள் ஏற்பட்ட துன்பத்தையும் வருத்தத்தையும் தலைவன் அறிந்து கொள்ள மாட்டான்.

## கொடுமையானவர்கள்

‘‘ஆதவன், என்னை விரும்புவதாகச் சொன்னபடியால் தான் நான் அவருடன் கதைக்க முயற்சித்தேன். இல்லாவிட்டால் நான் கதைக்க முயற்சித்திருக்க மாட்டேன். அழகு, விருப்பம் என்பது உள்ளத்தில் ஏற்படும் கிளர்ச்சியைப் பொறுத்தது. பட்டணத்தில் பல பிடைவைக் கடைகள் இருக்கின்றன. அங்கு பிடைவைகள் வாங்கச் செல்வோர் பலவற்றைப் பார்த்து விட்டு ஒன்றையே தெரிவு செய்கிறார்கள். அவர்கள் கழித்து விட்டுச் சென்ற சேலைகள் விற்பனையாகாமல் இருப்பதில்லையே. அவற்றையும் யாரோ விரும்பித்தானே வாங்கிச் செல்கிறார்கள். அதே போல ஒருவருக்குப் பிடித்த உணவு இன்னொருவருக்குப் பிடிப்பதில்லை. ஒருவர் சாப்பிடும் உணவை இன்னொருவர் வாயில்வைக்க மறுக்கிறார். எதையும் நாம் புதிதாக உருவாக்க முடியாது. ஏற்கனவே உள்ளது தான் மறைந்திருந்து பின் வெளியே வருகிறது. காதல் தொடர்பும் அப்படித்தான். ஏற்கனவே ஏற்பட்ட பிணைப்பு மறைந்திருந்து உரிய சமயத்தில் வெளி வருகிறது. எந்த ஒரு தொடர்பும் இல்லாமல் நீ கஜேந்திரனை விரும்பினாயா...? அர்ச்சகா இங்கு வந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் நகுலனைக் கண்டு ஏன் மயங்க வேண்டும். அச்சம், மடம், நாணம் இவையெல்லாம் பெண்களின் அணிகலன்கள் தான். இருந்த போதும் ஏதோ ஒரு சக்தி அவற்றைப் பெண்களில் இருந்து மறைப்பதால் தான் காதல் தோன்றுகிறது. அதை உணராது அவர் அப்படிப் பேசியது என்னை வாட்டுகிறது. அவர் அப்படிப் பேசிய பின்பு நான் உணவு உண்ணவில்லை’’ விம்மினாள் வளர்மதி.

‘‘ஆதவன் உன்னை விரும்புவதாகக் கஜேந்திரனுக்குச் சொன்னவராம். கஜேந்திரன் பொய் சொல்ல மாட்டார். அத்துடன் மிகவும் துணிவுள்ளவர். தனது நண்பர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காகப் பல பெண்களோடு கதைத்து ஏச்சும் வாங்கியிருக்கிறார். ஜனனி ஆரம்பத்தில் செருப்பைக் கழற்றிக் காட்டினவள். இருந்தும் அவர் அதற்குப் பயப்படவில்லை. தனது நண்பனான குமரனுக்காகப் பல முறை தூது சென்றவர். இப்ப ஜனனி இரண்டு பிள்ளைகளுக்குத் தாய். மிகவும் இன்பமாக வாழ்கிறார்கள். சிலர் பொழுது போக்கிற்காகக் காதலிக்கிறார்கள். அப்படி ஆதவன் நினைத்தால் உன்னோடு சல்லாபித்திருப்பனே தவிர உன்னை வெறுத்துப் பேசியிருக்க மாட்டான்’’ என்று சொல்லி விட்டு யோசனையில் ஆழ்ந்தாள் வித்தியா.

‘‘ஒரு பெண் விரும்பும் காதலர் இனிமையாகப் பேச வேண்டும். கண்டால் மகிழ்ந்து சிரிக்க வேண்டும். இல்லா விட்டால் உன்னில் எனக்கு விருப்பமில்லை என்றாவது கூறுதல் வேண்டும். இவற்றையெல்லாம் விட்டு விட்டு என்னைக் கண்டதும் விலகிச் செல்வதும், நான் பேச முற்பட்டால் எரிந்து விழுவதும்

எனக்குத் துன்பத்தைத் தருகின்றன. அவர் விரும்பியதால் தான் நான் அவரின் மீது அளவில்லாத அன்பை வைத்தேன். அவரை நினைத்துக் கனவுலகில் மிதந்தேன். ஆனால் தனது நிலையைக் கூறி அன்பாக இரண்டு வார்த்தைகள் பேசியிருக்கலாம். அவர் என்னோடு அன்பாகப் பேசாததால் நான் எவ்வளவு கவலைப்படுகிறேன் தெரியுமா? உலகில் இந்தத் துன்பத்தைப் போல கொடிய துன்பம் வேறு எதுவும் இல்லை'' என்று அழுதாள் வளர்மதி.

அர்ச்சகாவுக்கு அவளைப் பார்க்கத் துக்கமாக இருந்தது; ''ஆதவனைப் போன்ற முட்டாள் உலகில் இல்லை.'' காதல் கொண்ட ஒவ்வொரு ஆணும் எப்போது தனது காதலியைக் கண்டு இன்பமாக கதைத்து மகிழலாம் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பான். ஆனால் ஆதவன் தனக்கு வரும் சந்தர்ப்பங்களைத் தட்டிக்கழிக்கிறான். இது ஏன்''? என்று நினைத்தாள் அர்ச்சகா.

''நாம் நினைக்கும் ஒவ்வொரு எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் பயன் தர வேண்டும். காதலின் ஆரம்பத்தில் வெட்கம், பயம் போன்றன ஆக்கிரமித்திருக்கும். சிறிது காலத்திற்குப் பிறகு வெட்கம் மறைந்து ஆவல் ஏற்படும். அதன் பின் காதல் முதிர்ந்து தனக்குரிய பயனைத் தரும். இப்பயன் தான் காதலின் எதிர் காலத்தை நிர்ணயிக்கின்றது. இவ்விதம் காதலர் தமது வாழ்க்கையைத் தாமே உருவாக்கிக் கொள்கிறார்கள். அப்படி உருவாக்கிக் கொள்ளும் வாழ்க்கை இன்பமுடையதாக இருக்கும். இதற்கு மாறானவராக ஆதவன் இருப்பது எனக்கு வியப்பைத் தருகிறது. தன்னை விரும்பும் காதலியோடு மகிழ்வாகக் கதைக்காத காதலனைக் காதலன் என்று சொல்ல முடியாது. காலன் என்றே சொல்லல் வேண்டும். அவனால் காதலி அனுபவிக்கும் வேதனை மரணவேதனை'' என்றாள் வித்தியா.

வளர்மதி விம்மி விம்மி அழுதாள். அவளைத் தேற்ற வித்தியா எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை.

**1198. வீழ்வாரின் இன்சொல் பெறாஅது உலகத்து**
**வாழ்வாரின் வன்கணார் இல்.**

தாம் விரும்பும் காதலரின் இனிமையான சொற்களைக் கேளாமல் பிரிவுத் துயரைத் தாங்கிக் கொண்டு உலகத்தில் உயிர்வாழும் பெண்களைப் போலக் கொடுமைக்குரியவர்கள் எவரும் இல்லை.

### மகிழ்ச்சி

''ஆதவன் மிகவும் நல்லவன். நல்ல அறிவாளி, பெரும்பணக்காரரின் மகன். பாடசாலையில் அவன் படிக்கும் போது பல நல்ல செயல்களைச் செய்துள்ளான். அவனது உயிர் நண்பன் பிரதீபன். அவனது தந்தையார் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக அகால மரணமடைந்து விட்டார். அதனால் பிரதீபன் கல்வியை விட்டு விட வேண்டிய நிலை ஏற்பட்டது. அவன் யாருக்கும் சொல்லாது பாடசாலையில் இருந்து நின்று விட்டான். வீட்டு நிலைமை காரணமாக அவன் வர்த்தக நிலையமொன்றில் வேலை செய்தான். அதை அறிந்த ஆதவன் அந்த வர்த்தக நிலையத்திற்குச் சென்று பிரதீபனை அழைத்து வந்து அவன் கல்வி கற்க உதவி செய்தான். இப்பொழுது அவன் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புப் படிக்கிறான். இதை எனக்கு கஜேந்திரன் சொன்னவர். இப்படி நண்பர்கள் மீது அளவற்ற அன்பு வைத்துள்ள ஆதவன், உன்னோடு இப்படி ஏன் கதைத்தான் என்று எனக்குப் புரியவில்லை. இது எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது'' என்றாள் வித்தியா.

'' இதை விடப் பல நல்ல விடயங்களைக் கேள்விப்பட்டதால் தான் நான் அவரை விரும்பினேன். எப்பொழுதும் அவர் மற்றவர்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பார்; ''நாம் எம்மால் இயன்றவரை பிறருக்கு உதவி புரிவதன் மூலம் நமக்கு நாமே நன்மை செய்து கொள்கிறோம். எனப் பெரியவர்கள் கூறியுள்ளனர். அது உண்மை என்பதை நான் எனது நண்பர்களுக்கு உதவி செய்வதன் மூலம் உணர்ந்து கொண்டேன். நான் உதவி செய்த பலர் எனக்கு உதவி செய்யக் காத்திருக்கின்றனர்''. என்று தனது நண்பர்களிடம் சொல்வாராம். அதைக் கவிதா வந்து எனக்குச் சொன்னாள். அவள் கூறும் செய்திகள் தான் என்னை அவர் மீது அன்பு கொள்ள வைத்தது'' அழுதாள் வளர்மதி.

''வீணாக ஏன் கலங்குகிறாய். ஆதவன் உன்னை விரும்புவதாகத் தனக்குக் கூறியதாக கஜேந்திரன் கூறினார். சிலருக்குப் பொது இடங்களில் பெண்களுடன் கதைப்பதற்கு பயம். தான் கதைக்கும் செய்தி வீட்டாருக்குத் தெரிந்து விட்டால் தொல்லைகள் வருமென்று அஞ்சுவார்கள். ஆதவனைப் பற்றிக் கேள்விப்பட்டளவில் அவர் தான் நேர்மையுள்ளவராகவும் பிறருக்கு உதவி செய்பவராகவும் இருக்க விரும்புகிறார். அந்த நிலை உன்னுடன் கதைத்தால் மாறுபட்டு விடும் என்று நினைக்கிறாரென நான் நினைக்கிறேன். சிலர் பெண்களுடன் கதைப்பதைப் பெருமையாக நினைக்கிறார்கள். சிலர் அதை அவமானமாகவும், சிலர் வீண் தொந்தரவுகள் வரும் என்றும் நினைக்கிறார்கள். எல்லோரும் ஒருவரைப் போல இருக்க முடியாது'' என்றாள் மாதுமை.

“நீ உற்சாகத்துடன் இருந்தால் தான் காதலில் வெற்றி பெறலாம். துன்பம் பிரிவால் ஏற்படும். தவறான எண்ணங்களை மனதில் நினைப்பதன் மூலம் விபரீதமான விளைவுகளை எதிர் நோக்க வேண்டிய நிலை உண்டாகும். நீ கவலைப்படாமல் இரு. நாளைக்கு நான் கஜேந்திரனைச் சந்தித்து உனது நிலையைப் பற்றிக் கூறி, அதை ஆதவனுக்குச் சொல்லச் சொல்கிறேன். உனது காதலுக்காக நான் எதையும் செய்யச் சித்தமாக இருக்கிறேன். காதலால் உண்டாகும் எல்லா வகையான துன்பங்களையும் நான் நன்றாக அனுபவித்திருக்கிறேன். அந்தத் துன்பத்தின் கொடுமையைப் பற்றி எனக்குத் தெரியும். அந்த நிலை உனக்கு ஏற்பட நான் விடமாட்டேன்” என்றாள் வித்தியா.

“நீ எனக்கு சிநேகிதியாகக் கிடைத்ததையிட்டுப் பெருமைப்படுகிறேன். நான் விரும்பும் காதலர் நான் விரும்பிய படி அன்பு செலுத்த மாட்டார் என்பது எனக்குத் தெரியும். அவர் என் மீது அன்பு செலுத்துபவராக இருந்தால் நான் அவரைக் கண்டதும் அடையும் பரவசத்தை அவரும் அடைந்திருப்பார். இருந்த போதும் அவரைப் பற்றிப் புகழ்ச்சியாகப் பிறர் ஒரு சொல் சொன்னாலும் அச் சொல் எனது காதுகளுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கிறது” என்றாள் வளர்மதி.

**1199. நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு**
**இசையும் இனிய செவிக்கு.**

நான் விரும்பும் காதலர் என்னில் அன்பு கொள்ளாத வேளையிலும், அவரைப் பற்றி மற்றவர்கள் புகழ்வதைக் கேட்டு என் செவிகள் இன்பம் அடைகின்றன.

**இலகு**

நான் என்ன பாவம் செய்தேனோ தெரியவில்லை. எனது மனமும் கண்களும் சதா அவரோடு உறவாட வேண்டு மென்று துடிக்கின்றன. அவற்றிற்கு நான் படும் வேதனையில் நூறில் ஒரு பகுதி கூடத் தெரிவதில்லை. மனம் எந்நேரமும் அவரின் உருவ அமைப்பை நினைத்து மயங்குகிறது. அந்த அழகான உருவத்தைக் கண்டு களிக்க வேண்டு மென்று கண்கள் அவாவுற்று ஏற்கனவே அல்லற்படும் மனதைத் தூண்டுகின்றன. அதனால் தான் நான் அவரைக் காண வேண்டு மென்ற ஆவால் எனது முக்கியமான வேலைகளையும் ஒதுக்கி விட்டு அவரைக் காணச் செல்கிறேன். அவரைக் கண்டவுடன் இந்த உலகை மறந்து விடுகிறேன். முன்பு அவா என் மீது அன்பு கொள்ளாது அவமதித்ததால் அவருடன் கதைக்கக் கூடாது, அவரைப் பின் தொடர்ந்து செல்லக் கூடாது என்று நான் நினைத்திருந்தன வெல்லாம் அவனைக் கண்டதும் மறந்து விடுகிறேன். அதனால் கண்களும் மனமும் சொல்வதை எந்த விதமான யோசனையும் இன்றித் துணிவுடன் செய்கிறேன். பெண்களுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எல்லாம் எங்கோ ஓடி மறைந்து விடுகின்றன. அதனால் அவரை நாடிச் சென்று கதைக்க முற்படுகிறேன். அதனால் தான் எனக்கு அவமானம் ஏற்படுகிறது. ஒரு பெண் வலியச் சென்று ஓர் ஆணோடு கதைத்தால் அவமானம் தான்” என்றாள் வளர்மதி.

வித்தியாவுக்கு அவள் கூறுவதைக் கேட்கத் துக்கமாக இருந்தது. கஜேந்திரனது செயல்களை நினைத்துப் பார்த்தாள். அவள், அவனை உதாசீனம் செய்த காலங்களிலும் அவனது செயல்களை அவளால் வெறுத்து ஒதுக்க முடியவில்லை. அன்றைய அவனது செயல்களை வீட்டில் வந்து நினைத்துப் பார்ப்பாள். அவை அவளுக்கு எல்லையில்லாத பேரின்பத்தைக் கொடுக்கும். முதல் முறை அவனோடு கதைத்ததை நினைத்துப்பார்த்தாள். அவனுடைய அன்புத் தொல்லையையும், தீவிரமான காதலையும் உணர்ந்து வீதியால் செல்லும் போது மெல்ல அவனைப் பார்த்துச் சிரித்தாள். கஜேந்திரன் அதிர்ந்து போனான். அவனால் நம்ப முடியவில்லை. அவளின் பின்னால் வந்து; “வித்தி என்னைப் பார்த்துச் சிரித்தீரா? என்னால் நம்ப முடியவில்லை. அந்தச் சிரிப்பு ஏளனச் சிரிப்பா? இல்லை காதல் சிரிப்பா...? சொல்லும். எனது தலை வெடித்து விடும் போல இருக்கிறது. ஏளனமென்றாலும் என்னைப் பார்த்து முதன் முதலாகச் சிரித்ததற்கு ஒரு பரிசு தரல் வேண்டும்”. மெல்லக் கிசுகிசுத்தான்.

வித்தியா முன்பை விட விரைவாகச் சென்று கடற்கரைப் பக்கமாகத் திரும்பினாள். அவன் உறைந்து போனான். மரத்தால் செய்யப்பட்ட பொம்மையைக் கயிறு கொண்டு இயக்குவதைப் போல் இருந்தது. அவனது இயக்கம். கடற்கரைக்குச் சென்ற வித்தியா பழுதடைந்த அந்த ஓடத்தின் மறைவில் அமர்ந்தான். அவளுக்குச் சற்றுத் தூரத்தில் நின்ற கஜேந்திரன் அவளைப் பார்த்தான். பேரலைகள் மனதுள் ஆர்ப்பரித்தன. வித்தியா நளினமாகச் சிரித்தாள். மறுநிமிடம் கஜேந்திரன் அவளின் அருகில் இருந்தான்; “அன்பே எனது தவம் பலித்து விட்டது. நீர் வாய் திறந்து ஓர் இனிய சொல் சொல்லா விட்டாலும் உமது செயல் எனது எண்ணத்தைப் பூர்த்தி செய்து விட்டது” மெய் மறந்து புலம்பியவாறு அவளது கையைப் பற்றினான்.

“என்னடி புலம்புகிறாய். கஜேந்திரன் தொல்லை தருகிறானா...? நீ கொடுத்து வைத்தவள். அவர் ஒரு நிமிடம் உன்னைச் சந்தித்தாலும் அதைப் பயனுள்ளதாகக் கழித்து விடுவார். காதலின் நுட்பங்களை அறிந்த மாமனிதர் அவர். எனது நெஞ்சு எந் நாளும் அவரை நினைத்து வருந்த வேண்டியது தான். அன்பே இல்லாத காதலரைப் பற்றி எந்நேரமும் மற்றவர்களுக்குச் சொல்லிப் புலம்ப வேண்டியது தான்.

இப்படி சதா அவரை நினைத்துப் புலம்புவதை விட எளிதாகக் கடலைத் தூர்து விடலாம்'' விம்மினாள் வளர்மதி.

''கவலைப்படாதை. துன்பத்திற்குப் பின் வரும் மகிழ்வில் தான் இன்பம் இருக்கிறது. விரைவில் நீ ஆதவனோடு கதைப்பாய்'' என்றாள் வித்தியா. வளர்மதி அவளது முகத்தை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

**1200. உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்**
**செறாஅஅய் வாழிய நெஞ்சு.**

நெஞ்சமே நீ வாழ்வாயாக,! அன்பு இல்லாதவரிடம் உனது துன்பங்களைச் சொல்கிறாய்! அதை விட எளிது நீ கடலைத் தூர்ப்பது.

## இனிமையானது

வித்தியாவின் முகத்தில் தோன்றிய பரவசம், அவளது உடலெங்கும் சிலிர்த்துப் பரவியது. மெல்லச் சிரித்தாள். அவளது உதடுகள் பிரிந்ததா இல்லை அசைந்ததா என்று புரியாத வளர்மதி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மெல்ல வித்தியாவினது கண்கள் மூடின. அதற்குள் கடற்கரை தெரிந்தது. அன்று பௌர்ணமி தினமானதால் கடலுள் அமிழ்ந்து குளித்த சந்திரன் இரத்தச் சிவப்பாக கடலின் அலைகளுள்ளால் வெளிப்பட்டு வானில் உருண்டையாகப் பிரகாசித்தான். நிலவொளி பகலைப் போலக் கடற்கரையை ஒளிரச் செய்தது.

கஜேந்திரன் வித்தியாவின் அருகில் நெருங்கி வந்து அவளது கையைப் பிடித்தான். மற்றய நாட்களில் முரண்டு பிடித்து பொய்யாகக் கோபம் கொண்டு ஏசும் வித்தியா அன்று எதுவும் பேசாமல் நெருங்கி வந்தாள். அது கஜேந்திரனுக்குச் சற்று வியப்பைக் கொடுத்தது; ''நீர், நான் உமது கையைப் பிடிக்கும் போது சினந்து பேசி, எனது கைகளைத் தட்டி விட்டுச் சற்றுத் தள்ளியிருக்க, நான் மோகத்துடன் புலம்பியபடி உமக்கு அருகே வர நீர்; ''இதுக்காகத் தான் நீங்கள் என்னைச் சுற்றிச் சுற்றி வருகிறீர்கள். காதலர்கள் காதலிக்கும் போது தொட்டுப் பழகினால் காதலின் சுவை கெட்டு விடும். அதன் மகிமையும் களங்கப்பட்டு விடும். இன்று கையைத் தொடும் நீங்கள் நாளை என்னென்ன செய்வீர்களோ தெரியாது. பின் என்னைக் கைவிட்டு விட்டால் எனது வாழ்வு நாசமாகி விடும்'' என்று கூறி மறுத்து எனது ஆவலைத் தூண்டிச் சித்திரவதை செய்த பின் மெல்ல அருகில் வந்து ஒரிரு கணங்கள் நெருங்கி இருக்கும் போது வரும் இன்பம் அலாதியானது. அது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது. அப்படியான ஓர் இன்பத்தைத் தான் நான் விரும்புகிறேன்''. என்று சொல்லிய படி அணைத்தான். கடற்காற்று அவர்களுடாக நுழைந்து செல்ல முயற்சித்துக் கொண்டிருந்தது.

''அப்படியா?'' எனக் கோபத்துடன் கூறிய வித்தியா அவனது கைகளைப் பலவந்தமாக விலக்கி விட்டு சற்றுத் தூரச் சென்றமைந்தாள். கஜேந்திரன் அவளை மோக மிகுதியோடு பார்த்தான். அன்று வழமையை விட வித்தியாவின் முகம் சிவந்து துடிதுடித்தது. மெல்ல அருகில் வந்து ஓடத்துடன் சாய்ந்து அமர்ந்திருந்த வித்தியாவின் அருகே இருந்தான். அவனது வலது கை கடற்கரை மணலில் இருந்த அவளது வண்ணச் சேலையின் மீது இருந்தது. வித்தியா அவசரமாகச் சேலையை இழுத்து எடுத்து தோள்களைப் போர்த்திக் கொண்டாள். வழமையாக அவள் அப்படிச் செய்தால் சேலைக்குள்ளால் தெரியும் அங்கங்களையும் அவனது பார்வையில் இருந்து விலக்கி வைக்க வேண்டுமென்ற கடுங்கோபம் காரணமாக இருக்கும்.

''வித்தியா'' முழுப்பெயர் சொல்லிக் குழையுடன் அழைத்தான் கஜேந்திரன். அவன் அவளோடு பழகிய காலத்தில் ''வித்தியா'' என்று அழைப்பதில்லை. செல்லமாக ''வித்தி'' என்பான். சிலசமயம் 'வித்' என்பான்; ''விகுட்டி'' என்பான்; 'விகுஞ்சு'என்பான். அன்று வித்தியா என்று அழைத்ததால் நிமிர்ந்து பார்த்தாள் வித்தியா. அவன் சிரித்தான்; ''உமக்கு வித்தியா என்ற பெயரை விட வித்தகா என்று பெயர் வைத்திருக்கலாம். உமது கண்களும், உதடுகளும், கன்னங்களும் எனக்கு எத்தனை வித்தைகளைக் காண்பிக்கின்றன வென்று தெரியுமா..? அதை விடச் செயல்கள் வித்தைகள் பலவற்றைப் புரிகின்றன'' சிரித்தான் கஜேந்திரன்.

''பனிக்கட்டி மழை பெய்வதைப் போல இருந்தது வித்தியாவுக்கு அந்தச் சூடான குளிர்மை அவளது உடலெங்கும் சிலிர்த்தோட மெல்ல அவனின் அருகில் வந்தாள்.

''உங்களுக்கு எனது பலவீனம் தெரியும்'' குசுகுசுத்தாள் வித்தியா. அவன் மெல்ல அணைக்க அவனது முக முடிகள் கன்னத்தை உரசின.

‘‘என்னடி நான் ஒருத்தி உனக்கு முன்னால் இருக்கிறன் என்பதையும் எனது துன்பத்தையும் உணராமல் விசரி போலச் சிரிக்கிறாய்’’ என்றாள் வளர்மதி.

‘‘உனக்குக் காதலைப் பற்றித் தெரியாததால் கதைக்கிறாய். உண்கின்ற பொழுது மட்டும் தான் கள் மகிழ்ச்சியைத் தரும். ஆனால் எண்ணுகின்ற போதெல்லாம் தீராத மயக்கத்தைத் தந்து மகிழ்வைத் தருவது காதலரின் அன்பான சந்திப்புக்களும் வார்த்தைகளும் தான்’’ என்றாள் வித்தியா. அவளது முகத்தில் பரவிப் பூரித்திருந்த மகிழ்வைக் காண வளர்மதிக்குப் பொறாமையாக இருந்தது.

**1201. உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்**
**கள்ளினும் காமம் இனிது.**

உண்கின்ற பொழுது மட்டும் இன்பத்தைத் தரும் கள்ளை விட, நினைக்கின்ற பொழுது பெருமகிழ்ச்சியைத் தரும் காமம் இன்பமானது.

### எப்போதும் இன்பம்

‘‘நம்பிக்கை, காதலரின் மீது கொண்ட நம்பிக்கை, இதுவே காதல் வெற்றி பெறவும், காதல் வாழ்வு இனிமை பெறவும் காரணமாகும். உன்னிடத்தில் நீ நம்பிக்கை வை. உனது காதலரின் மீது நம்பிக்கை வை. உனது காதல் கட்டாயம் வெற்றியளிக்கும். கஜேந்திரனது நம்பிக்கை தான் என்னைக் கசிய வைத்தது. பலமுறை அவரை நான் அவமானப்படுத்தியதை நினைத்துத் தனது காதல் கைகூடாதென்று நினைத்து என்னை விட்டு விலகிச் சென்றிருந்தால் அவரது காதல் கைகூடியிருக்குமா..? மலையையும் தகர்ப்பேன் என்று நம்பினால் தான் செயலில் ஈடுபட முடியும் செயலில் பல தோல்விகள் வரும்; ஏமாற்றம் வரும்; அவமானம் வரும். இவற்றைக் கண்டு கலங்கித் தொழிலை விட்டால் எப்படி வாழ முடியும். நீ முதலில் உன்னை நம்பு. பின் ஆதவனின் அன்பை என்னால் பெற்றுக் கொள்ள முடியும் என்று நம்பு. வெற்றியடைவாய். சாதிக்க முடியாத காரியங்கள் எவையும் இருப்பதாக நீ நம்பாதே. அப்படி நினைப்பதன் மூலம் நீ உனது காதலை இழப்பாயே தவிர பெற்றுக் கொள்ள முடியாது. கைகூடாது என்று கருதுவதன் மூலம் காதலுக்கு நீ தகுதியில்லாதவளாகிறாய். இயலாமை என்று ஒன்று உண்டென்றால், அது நான் பலவீனமானவள், கைகாலாகாதவள் என்று நமக்கு நாமே சொல்லிக் கொள்வதைப் போன்றது. நீ எதை நினைக்கிறாயோ அதுவாவாய் என்று உபநிடதம் ஒன்று கூறுகிறது. உன்னை நீ உயர்வாக நினைத்தால் உயர்வடைவாய். தாழ்வாக நினைத்தால் தாழ்ந்து விடுவாய். நம்பிக்கையான எண்ணங்கள் தான் நல்வாழ்வுக்கு வழிவகுக்கும். இது கஜேந்திரன் எனக்குக் கற்றுத் தந்த பாடம்’’ என்றாள் வித்தியா. அவளது குரலில் உள்ள உறுதியைக் கண்டு திகைத்துப் போனாள் வளர்மதி.

‘‘ஆதவன் என்னை விரும்புவதாகக் கஜேந்திரனுக்குச் சொன்னவர். அது உனக்கும் தெரியும். பின்பு ஏன் அவர் என்னை வெறுக்கிறார்’’ அழுவதைப் போலக் கேட்டாள் வளர்மதி.

‘‘மனிதர்கள் ஒருவரைப் போல உருவத்தாலோ, குணத்தாலோ இன்னொருவர் இருப்பதில்லை. கஜேந்திரனைப் போலவும் நகுலனைப் போலவும் ஆதவன் இல்லையே என்று நீ நினைக்கிறாய். ஒவ்வொருவனும் ஒவ்வொரு விதமானவனாக இருக்கிறான். முதலில் அதை நாம் புரிந்து கொள்ளல் வேண்டும். ஒருவன் ரோஜாவை விரும்புவான் இன்னொருவன் மல்லிகையை விரும்புவான். வேறொருவன் கனகாம்பரத்தை விரும்புவான். இது பூக்களைப் பற்றிய ஒரு சிறு உதாரணம். உடை உணவு பழக்க வழக்கம் போன்றவற்றில் ஒவ்வொருவரிடமும் நிறைந்த வேறுபாடு இருக்கு. அவற்றை நாம் தெரிந்து கொண்டால் அதற்கேற்ப நாம் மாறலாம். இல்லாவிட்டால் எமக்கேற்ப அவரை மாற்றலாம். கஜேந்திரன் எனக்காக எதையும் விட்டுக் கொடுப்பார். நான் தனக்காக எதையும் விட்டுக் கொடுக்க விரும்பமாட்டார். ஆனால் ஆதவன் அப்படியானவன் அல்ல. நீ தான் அவனுக்கு ஏற்ற முறையில் மாற வேண்டும். இது மிகவும் இலகுவான விசயம். நீ இனிமேல் அவனைக் கண்டால் சோகத்துடன் பார். அழுவதைப் போல பாசாங்கு செய்து கைக் குட்டையால் கண்ணீரைத் துடை. பின் தொடர்ந்து செல்லாதே; முக்கியமாகக் கதைக்காதே. நான் கஜேந்திரனிடம் சொல்லி உன்னோடு ஆதவனைக் கதைக்கச் செய்கிறேன். இதில் அவர் கைதேர்ந்தவர், வல்லவர்’’என்றாள் வித்தியா. வளர்மதி எதுவும் சொல்லவில்லை. தலையைக் குனிந்து கொண்டிருந்தாள்.

‘‘அழுகிறியா...?’’ பாசம் பொங்கக் கேட்டாள் வித்தியா; ‘‘நீ துன்பப்படுவது எனக்கு வேதனையைத் தருகிறது. காதலர்கள் பிரிவதால் துன்பம் தான் உண்டாகும். அந்தத் துன்பம் அவரை நினைக்கும் பொழுது இல்லாமல் போய்விடும். இதனால் காதல் கூடும் போதும், பிரியும் போதும் இன்பத்தையே தரும். நான் அவரைப் பிரிந்திருக்கும் வேளைகளில் அவரை நினைத்து இன்பமடைவேன். நீயும் அவரின் செயல்களையும் உருவஅமைப்பையும் நினைத்து இப்போதைக்கு ஆறுதலடை’’ என்றாள் வித்தியா. வளர்மதியின் கண்கள் கங்கையைப் பேலப் பெருகிப் பாய்ந்தன.

**1202. எனைத்துஒன்று இனிதேகாண் காமம்தாம் வீழ்வார்**
**நினைப்ப வருவதுஒன்று இல்.**

காதலா் பிரிவதால் துன்பம் நோ்ந்தாலும், ஒருவரை ஒருவா் நினைக்கும் போது அத் துன்பம் இல்லாமல் போய் விடும். அதனால் காமம் எந்நிலையிலும் இன்பமானது.

## நினைத்தும் நினைக்காது

அழுது கொண்டிருக்கும் வளா்மதியை வித்தியாவால் தேற்ற முடியவில்லை. நேரஞ்செல்லச் செல்ல அவள் பலமாக அழுதாள். அது வித்தியாவக்குக் கவலையைக் கொடுத்தது. எதுவும் செய்யத் தோன்றாது சில கணங்கள் யோசித்த வித்தியா, அழுது கொண்டிருக்கும் வளா்மதியின் தோள்களைப் பற்றி வருடினாள்.

''மதி, நீ அழுவதை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இந்த அழுகை தேவைதானா என்று எண்ணத் தோன்றுகிறது. நீ அனுபவிக்கும் துன்பம் உன்னால் உருவாக்கப்பட்டது. ஏன் வலிந்து தீய எண்ணங்களை மனதில் உருவாக்குகிறாய். அன்று நடந்த ஒரு சம்பவத்திற்காக இவ்வளவு துயரம் கொள்ளத் தேவையில்லை. பிறரால் எமது துன்பத்தை போக்க முடியாது. நாமே நமது துன்பத்தைப் போக்குதல் வேண்டும். எனவே துயரத்தை விட்டு விட்டு தைரியத்தை வரவழைத்துக் கொள். நான் எனது செயலை முடித்தே தீருவேன் என்று திடசங்கா்ப்பமெடு. உனது நல்வாழ்வை உருவாக்குபவள் நீயே என்பதைப் புரிந்து கொள். உனது செயலை முடிக்க வேண்டிய வலிமையும் திறமையும் உனக்குள்ளேயே இருக்கின்றன'' என்றாள் வித்தியா.

வளா்மதியின் கண்களில் தோன்றிய பரவசம் அவளது முகத்தில் தெரிந்தது. கண்களால் வழிந்த கண்ணீா் நின்றது. ''எனது எதிா்காலத்தை நானே உருவாக்க வேண்டும். காதல் விசயத்தில் உதவியை எதிா் பாா்க்கக் கூடாது என்பதையும் நடந்து முடிந்த சம்பவங்களைப் பற்றி ஓயாமல் சிந்திப்பதால் எந்தப் பயனும் இல்லை என்பதையும் எனக்கு உணா்த்தினாய். அதைப் புரிந்து கொண்ட பின்பு நான் தைரிய சாலியாகி விட்டேன். என் இதயத்துள் ஒரு வலிமை புகுந்து விட்டது. இனி நான் கலங்கமாட்டேன்'' என்று கூறிக் கொண்டிருந்த வளா்மதி தும்மினாள். அவளது மூக்கு உழைந்தது. மீண்டும் மீண்டும் தும்மினாள்.

வித்தியா பலமாகச் சிரித்தாள்; '' உன்மீது ஆதவன் பற்றில்லை என்றும், அவமதிக்கிறான் என்றும் கூறினாய். இப்பொழுது ஓயாமல் தும்முகிறாய். அவா் நினைக்காமல் உனக்குத் தும்மல் வந்ததா? உள்ளே தீவிரமாக யோசித்துக் கொண்டு வெளியே பகைவா்களைப் போல நடந்து கொள்பவா்களுமுண்டு. நான் கஜேந்திரனை நல்லூா்க் கந்த சுவாமி கோயில் தோ்த்திருவிழா வன்று கண்டு காதல் கொண்டேன். அதன் பின் பல மாதங்களாக அவரைக் காணாது தேடித்திரிந்தேன். பின் அவரைச் சந்தித்தேன். அவா் என் பின் நாயாய் அலைந்த போது நான் அவருக்குப் பயம் காரணமாகப் பல கொடுமையான செயல்களைச் செய்தேன். இருந்த போதும் அவா் அதையெல்லாம் பொருட்படுத்தாது எனக்குப் பின்னால் திரிந்தாா். நான் செய்ததை விடக் கொடுமையான செயல்கள் எவற்றையும் உனக்கு ஆதவன் செய்யவில்லை'' என்றாள் வித்தியா.

அப்போது வளா்மதி தும்மினாள். மீண்டும் மீண்டும் தும்மினாள். வித்தியா சிரித்துக் கொண்டு சொன்னாள்; முன்பு நான் கஜேந்திரனைக் காணாத காலங்களில் அவருக்கு ஓயாத தும்மலாம். அதனால் பலமுறை மருந்தெடுத்தும் குணமாகவில்லையாம். கடைசியாக வைத்தியா் சொன்னாராம்; ''உமது காதலி தான் ஓயாமல் நினைக்கிறா. அவாவுக்கு கண்ட படி நினைக்க வேண்டாம் என்று சொல்லும் என்றாராம். இவா் தனக்குக் காதலி இல்லை யென்று சத்தியம் பண்ணிணராம். எனினும் வைத்தியா் நம்பவில்லையாம்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது வளா்மதி தும்மினாள்; ''ஆதவனுக்கு உன்மீது அளவற்ற பாசம் இருக்கிறது என்பதை உனது தும்மல் காட்டுகிறது. என்ற வித்தியா தனது மூக்கைப் பிடித்தாள். ''மூக்கு உழைகிறது தும்மல் வருவது போல இருக்கிறது. ஆனால் தும்மல் வருவதில்லை. காலையில் இருந்து இந்த நிலை தான். என்னால் தாங்க முடியவில்லை. அவா் பொல்லாதவா். நேரிலும் சரி, கனவிலும் சரி விகடமான தொல்லைகளைத் தருவாா். அது அவரின் இயல்பு. இன்று காலையில் இருந்து எனக்குத் தும்மல் வருவது போலத் தோன்றுகிறது. ஆனால் வரவில்லை. இதற்குக் காரணம் அவரது குறும்பான செயல்தான். எனது காதலா் என்னை நினைப்பவா் போல இருந்து நினைக்காமல் இருக்கிறாா். இதன் கருத்து உடனே வந்து என்னைச் சந்திக்கவும் என்பது தான் சரியான கள்ளன்'' என்று சிரித்தாள் வித்தியா. அவளது முகம் செந்நிற ரோஜா பூவைப் போல இருந்தது.

**1203. நினைப்பவா் போன்று நினையாா்கொல் தும்மல்**
**சினைப்பது போன்று கெடும்.**

எனக்கு தும்மல் வருவது போல இருந்து வராமல் அடங்குகிறது; என்காதலா் என்னை நினைப்பவா் போல் இருந்து நினைக்காமல் விடுகிறாரோ.

**நிறைந்திருப்பேனா?**

‘‘எண்ணங்களைப் போல விசித்திரமானவை எவையும் இல்லை. அவற்றுள் காதலரின் எண்ணங்கள் மிகமிக விசித்திரமானவை. அணுகுண்டைப் போல துன்பத்தை விளைவிப்பனவும் உண்டு. அமிா்தத்தைப் போல சுவையானவையும் உண்டு. நம்ப முடியாத கற்பனைகளுக்கு அப்பாற் பட்ட எண்ணங்கள் தான். காதலா்களின் உள்ளங்களில் எழும் இந்த எண்ணம் எப்படியெல்லாம் எழுகிறது என்று புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு நாள் நானும் கஜேந்திரனும் கடற்கரையில் இருந்தோம். அங்கு இரண்டு வளா்ப்பு நாய்கள் ஓடி விளையாடிக் காதல் கொண்டன. கடற்கரைக்கு வரும் ஒருவா் எப்பொழுதும் ஒரு பெரிய சாதி கடுவன் நாயை அழைத்து வருவாா். அதைப் பாா்க்க எனக்குப் பயமாக இருக்கும். இன்னொருவா் அழகான ஒரு பெண் நாயை அழைத்து வருவாா். அவை இரண்டும் காலப் போக்கில் நண்பா்களாகி விட்டன. அவை சூழலை மறந்து ஓடி விளையாடுவதைப் பாா்த்தால் நாமும் அந்த நாய்களாகப் பிறந்தாலென்ன என்ற எண்ணம் மனதில் எழும். அதே போலக் கடற்கரையில் இருக்கும் காகங்கள் பலவற்றைப் பாா்த்திருக்கிறேன். ஒரு நாள் கடற்கரையில் வீசிய உணவுத் துண்டுகளைக் கண்ட காகம் ஒன்று பலமாகக் கரைந்து தனது சோடியை அழைத்தது. அது அதன் அருகில் வந்தவுடன் அந்தக் காகம் அந்த உணவுத் துண்டுகளைப் பாா்த்து கரைந்து கரைந்து செயலால் அதை எடுத்துத் தனக்கு ஊட்டும் படி கூறியது. ஆண் காகம் உணவுத் துண்டுகளை ஒவ்வொன்றாக எடுத்து அதன் அலகுக்குள் வைத்தது. பின் பெண் காகம் உணவுத் துண்டுகளைத் தனது அலகால் எடுத்து ஆண்காகத்தின் அலகிற்குள் வைத்தது. சந்தா்ப்பம் சூழ்நிலையாவற்றையும் மறந்து அவை அன்புடன் கலந்துரையாடியது என்னை அளவுக்கதிகமாகக் கவா்ந்தது. அதைப் பாா்த்த கஜேந்திரன் “ கொடுத்து வைத்த உயிா்கள் இப்படி மனிதா்களில் எத்தனை போ் நடந்து கொள்கிறாா்கள். நான் இதை விடக் கூடுதலாகச் செய்வேன்’’ என்றாா். அக்கணமே நாங்கள் காகங்களாக மாறமாட்டோமா’’ என நினைத்தேன். காதல் உயிா்களை யெல்லாம் எப்படி எண்ண வைக்கிறது என்று பாா்த்தாயா..? கண்களை மூடினாள் வித்தியா.

பரவசத்துடன் கண்களை மூடிய வித்தியாவின் முகத்தைப் பாா்த்துக் கொண்டிருந்தாள் வளா்மதி. வித்தியாவின் உதடுகள் குறுநகையுடன் பிரிந்தன. ‘‘காதலுக்கு பலம் இருக்கும் அதே சமயம் பலவீனமும் இருக்கிறது. பலமுள்ள போது எனது காதலா் எனக்குரியவா் என்ற உரிமையான செருக்கு மனதில் தோன்றும். பலவீனமான வேளைகளில் நாம் தாம் அவரை நினைத்திருக்கிறோம். அவா் என்னை நினைத்திருக்கிறாரோ என்று நினைத்துக் கலங்குவேன். எனது எண்ணத்திற்கு மாறாக அவா் நடந்து கொள்ள மாட்டாா். இருப்பினும் எனது மனம் சில வேளைகளில் அவா் எனது விருப்பத்திற்கு மாறாக நடந்து கொள்கிறாா் என்று அச்சப்படும். அவா் சாதாரணமாகக் கதைக்கும் கதைகளையும் வித்தியாசமானதாக எண்ணிச் சந்தேகப்பட வைக்கும். இதெல்லாம் காதலர்களுக்குத் தோன்றும் இயல்பான குணங்கள். இது உண்மையான காதலரிடத்தான் தோன்றும் இவ் எண்ணங்களாலும் காதல் சிறப்படையும். என்னுடைய நெஞ்சத்தில் எனது காதலா் நிறைந்திருக்கிறாா். இது போல அவரின் நெஞ்சத்தில் நான் நிறைந்திருக்கிறேனா? என்ற சந்தேகம் அடிக்கடி எனக்கே எழுவதுண்டு. அதே போன்ற தொரு எண்ணம் தான் உனக்கும் ஏற்பட்டிருக்கிறது. என்று நினைக்கிறேன்’’ என்றாள் வித்தியா.

வளா்மதி நினைத்துப் பாா்த்தாள். அன்று ஆதவனுடைய முகம் மாறுபட்டிருந்தது. அளவுக்கதிகமான சினம் அதில் குடி கொண்டிருந்தது; ‘‘இல்லை, நீ சொல்வதை நான் நம்ப மாட்டன். எனது இதயத்தைக் காதலரின் நினைவுகள் நிரப்பியுள்ளன. ஆனால் அவரது இதயத்தில் எனது நினைவுகள் நிறைந்திருக்குமோ தெரியவில்லை’’ என்றாள் வளா்மதி. அவள் தைரியமாக இருக்கிறேன் என்ற போதும் அவளது குரல் பிசிறி இருந்ததை வித்தியா உணா்ந்து கொண்டாள்.

**1204. யாமும்உளேம்கொல் அவா்நெஞ்சத்து எம்நெஞ்சத்து
ஓஓ உளரே அவா்.**

என்னுடைய நெஞ்சில் என் காதலா் இருக்கிறாா். அது போல அவருடைய நெஞ்சில் நான் நீங்காமல் இருக்கிறேனோ.?

**வெட்கமில்லாதவா்**

‘‘துரதிஸ்டவசமாக எனது இன்பமான வாழ்க்கையில் இவா் குறுக்கிட்டதால் எனது இன்பங்களெல்லாம் சீா் குலைந்து நாசமாகி விட்டன. அதனால் எனது சகோதரா்கள் வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் பொருட்களையும் பணத்தையும் நான் ஒரு பொருட்டாக எண்ணி அனுபவிப்பதில்லை. சென்ற வாரம் எனது அண்ணா விலை உயா்ந்த ஆபரணம் ஒன்றை எனக்கு அனுப்பியிருந்தாா். அதை அம்மா

கொண்டு வந்து என்னிடம் தந்த போது, நான் மகிழ்ச்சியடையவில்லை. அதனால் அவர்; ''இப்போது உன்னுடைய போக்கே மாறிவிட்டது. சரியாகச் சாப்பிடுகிறாய் இல்லை; நல்ல உடைகளை அணிகிறாய் இல்லை. முன்பென்றால் கண்ணாடிக்கு முன் நின்று பலமணி நேரம் அலங்காரம் செய்வாய். இப்ப உன்னைக் கண்ணாடிக்கு முன்னால் நான் காண்பதில்லை. ஆபரணங்களை அணிவதிலும் ஆர்வம் இல்லை. மூன்பு அண்ணன்மார் உடைகளையோ ஆபரணங்களையோ அனுப்பினால் அதை அணிந்து கொண்டு நண்பிகளுக்குக் காட்டப் புறப்பட்டு விடுவாய். பலருக்கு அதைக் காட்டாவிட்டால் உனக்குத் திருப்தி இராது. இப்போது வீட்டை விட்டு வெளியே செல்கிறாய் இல்லை. ஆபரணங்களை அணிகிறாய் இல்லை. இந்த அட்டியலின் பெறுமதி இரண்டு இலட்சம் ரூபா. அதை நீ சரியாகப் பார்க்கவில்லை. இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. கவிதாவை ஒரு முறை வரச் சொல் அவளைக் கேட்டால் தான் தெரியும்'' என்று சொன்னா'' பெருமூச்சு விட்டாள் வளர்மதி.

வித்தியாவின் நெஞ்சில் கஜேந்திரன் புகுந்தமையால் வித்தியா வளர்மதி இருப்பதை மறந்து விட்டாள். அன்று வித்தியா புதியதொரு சேலை அணிந்திருந்தாள். கஜேந்திரன் அவளை கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தான். அவனது பார்வையைத் தாங்க முடியாத வித்தியா தலையைக் கவிழ்த்தாள்; '' தேவதை மாதிரி இன்றிருக்கிறீா. நீர் என்னைச் சந்திக்க வரும் வேளைகளில் உடுத்தி வரும் ஒவ்வொரு சேலையையும் பார்த்து அச்சேலை தான் உமக்கு அழகு என்று நினைப்பேன். மறு முறை சந்திக்கும் போது முன்னையை விட அழகாக இருப்பீர். இன்று உம்மை என்னால் வர்ணிக்க முடியவில்லை. தேவதை என்று சொல்வதா? தெய்வப் பெண் என்பதா?''

''வித்தியா என்று அப்பா நல்லதொரு பெயரை எனக்கு வைத்திருக்கிறார். வித்தியா என்று அழைத்தாலே போதும்'' என்றாள் வித்தியா.

''தேவதையை எப்படி அழைத்தாலென்ன. இறைக்க இறைக்க ஊறும் கிணறு போல நான் பார்க்கப் பார்க்க உமது அழகு அதிகரிக்கிறது; வனப்புக் கூடுகிறது; எழில் ஏற்றமடைகிறது. என்றவாறு அவளது சேலையை உற்றுப்பார்த்தான்; ''இன்று உமது அழகைப் பற்றி அழகான தொரு கவிதை பாட வேண்டு மென்று ஆசையாக இருக்கிறது. ஆனால் கழுதையாகி விடுமோ எனப்பயமாக இருக்கிறது.''

''என்னடீ என்னோடு கதைத்துக் கொண்டிருந்தாய். அதற்குள் கஜேந்திரன் கண்களுக்குள் வந்து விட்டானோ...? புலம்புகிறாய் சிரிக்கிறாய்'' வளர்மதி வித்தியாவின் தோளைப் பற்றி உலுப்பினாள்.

திடுக்கிட்டு சுயநினைவடைந்த வித்தியா சொன்னாள்; ''இயற்கையைப் பார்த்தால் அவரின் நினைவு வந்து விடுகிறது. யாராவது தமது காதலைப் பற்றிச் சொன்னால் அவரின் நினைவு என்னைக் கொல்கிறது. இப்பொழுது நீ ஆபரணங்களைப் பற்றியும் உடுபிடைவைகளைப் பற்றியும் சொன்னாய். அந்த நினைவு வந்து விட்டது'' என்றாள் வித்தியா.

''ஆதவன் சரியான சுயநலம் படைத்தவர். தன்னுடைய நெஞ்சில் என்னை நுழைய விடாமல் பார்த்துக் கொள்ளும் அவர், என்னுடைய நெஞ்சினுள் வெட்கப்படாமல் நுழைந்து என்னை கொடுமையான இன்பத்துக் குள்ளாக்குகிறார். இது நியாயமானதா என்று அவரிடம் கேட்டுச் சொல்'' என்றாள் வளர்மதி.

**1205. தம்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்**
**எம்நெஞ்சத்து ஓவா வரல்.**

தன்னுடைய நெஞ்சில் என்னை வர விடாமல் பார்த்துக் கொள்ளும் என் காதலர், என்னுடை நெஞ்சுக்கு தான் ஓயாமல் வருவதைப் பற்றி வெட்கப்பட மாட்டாரோ..?

### நினைப்பு

''இந்த வாழ்க்கையில் மக்களில் மிகப் பெரும்பான்மையானோர் எந்தவிதமான இலட்சியமும் இன்றியே வாழ்ந்து மடிகிறார்கள். பலர் காதலைப் பொழுது போக்கு என நினைக்கிறார்கள். ஆனால் நான் கஜேந்திரனை அடைவதையே இலட்சியமாகக் கொண்டிருந்தேன். அதற்காக நான் நெருப்பாற்றைக் கூடத் துணிச்சலாகக் கடக்கலாம் என்று நினைத்திருந்தேன். ஓர் இலட்சியத்திற்காக வாழ்வதே வாழ்க்கை இது தான் மக்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள மாபெரும் வேறுபாடாகும். விலங்குகளைப் போலத் தான் பெரும்பாலான மக்கள் இலட்சியமில்லாமல் வாழ்ந்து மடிகிறார்கள். உண்பதற்குச் சுவையான உணவு வகைகளும், உடுப்பதற்கு நல்ல அணிகலன்களும் அனுபவிப்பதற்குப் பொருள்களும் இருந்தால் போது மென்று நினைக்கும் மனிதர்களே உலகில் அதிக எண்ணிக்கையானவர்கள். வாழ்க்கையில் தொண்ணூறு சதவீத மக்களால் தாம் கொண்ட இலட்சியத்தை அடைய முடிவதில்லை. வாலிப வயதில் இளமை மிடுக்கால் காதலிப்பவர்கள், பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப்படுவதும் பெற்றோரின் வக்கிரமான ஆசைகளுக்குப் பலியாவதும்

எமது நாட்டில் நடை பெற்றுக் கொண்டிருக்கின்ற பாவமாகும். இதைச் சாபக் கேடென்றும் சொல்லலாம். வாழ்க்கையின் பணம், பொருள் வசதிகளை அடைவதற்காகத் தான் கொண்ட உயர்ந்த இலட்சியங்களைக் கைவிடுபவனும் மிருகமும் ஒன்றென்று தான் நான் சொல்வேன். இது காதலுக்கு மட்டுமல்ல உயர்ந்த பெரும் செயல்களைச் செய்து சாதனைகள் புரிவதற்கும் ஏற்றது. அற்பமான இருதயமுள்ளவர்கள் தான் இலட்சியங்களை உயிராக மதிப்பதில்லை. நான் உறுதியான இதயம் படைத்ததனால் தான் எனது காதலில் வெற்றியடைந்தேன். ஆரம்பத்தில் எனது காதலை வெறுத்த எனது தாயார் இப்பொழுது எனது காதலரைப் போற்றுகிறார். நான் துன்பப்பட்ட வேளையில் எனது காதலரோடு சேர்ந்திருந்த நாட்களை நினைத்து இன்புற்றதால் தான் இன்னும் நான் உயிருடன் இருக்கிறேன். இல்லாவிட்டால் என்றோ உயிர் நீத்திருப்பேன். அல்லது பெற்றோரின் விருப்பத்திற்கு இணங்கியிருப்பேன்'' என்றாள் வித்தியா. அவளது வார்த்தைகளில் என்றும் காணாத உறுதியிருந்தது.

''நான் எதை நினைப்பது நான் எப்பொழுது என் காதலரோடு சேர்ந்திருந்தேன். அவரோடு சேரத் துடிப்பதால் தான் நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன். நான் கிட்டச் செல்லச் செல்ல அவர் விலகிச் செல்கிறார். ஒரு நாள் ஒருகணமென்றாலும் அவரோடு சேர்ந்து இன்புற்றிருந்திருந்தால் அதை நினைத்து என் வாழ் நாளைக் கழிக்க முடியும். ஒரு கணம் கூடப் பெறாத அந்த இன்பத்திற்காக ஏங்கி உயிர் வாழ்கிறேன். எனது சகோதரர்கள், குபேரர்கள் உலகில் உள்ள எந்தப் பொருளையும் அவர்களால் எனக்கு வாங்கித் தரமுடியும். ஆனால் நான் என்னுயிரைப் போல நேசிக்கின்ற ஆதவனை பொன் பொருள் கொடுத்து வாங்க முடியுமா? பொன் பொருளுக் கெல்லாம் அப்பாற்பட்டு விலைமதிக்க முடியாத பொக்கிசமாகத் திகழும் அவரது அன்பை என்னால் விலை கொடுத்து வாங்க முடியவில்லையே இது நான் அடைந்த தோல்வியா..? இல்லை ஊழ்வினைப் பயனா? என் மனங்கவர்ந்த காதலரோடு சேர்ந்து மனங்குளிரச் சேர்ந்திருந்த நாட்களை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லையே'' கலங்கினாள் வித்தியா.

'' கலங்கித் தவிக்கும் தலைவிக்குக் காதலரோடு சேர்ந்திருந்த நாட்கள் தான் வாழ்ந்த நாட்கள்; இன்பமான நாட்கள் நான் உயிரோடு இருக்கிறேன் என்றால், நான் காதலரோடு சேர்ந்திருந்து இன்புற்ற நாட்களை நினைத்துக் கொண்டிருப்பது தான் காரணம்'' வித்தியா உணர்ச்சிபூர்வமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

**1206. மற்றுயான் என்உளேன் மன்னோ அவரொடுயான்**
**உற்றநாள் உள்ள உளேன்.**

என் காதலரோடு சேர்ந்து மகிழ்ந்திருந்த நாட்களை நினைத்துக் கொண்டிருப்பதால் தான் நான் உயிர்வாழ்கிறேன். இல்லையென்றால் வேறு எதனால் உயிர்வாழ்வேன்.

### சுடும் இன்பம்

''காதலுக்கு அற்புதமான பல சக்திகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் வார்த்தைகளால் கூற முடியாது. எழுத்தில் எழுத முடியாது. ஒவ்வொருவனது குணம், எண்ணம், கொள்கை மாறுபட்டிருப்பதைப் போன்று அவன் கொள்ளும் காதலும் வேறுபட்டிருக்கும். எனது காதல் அனுபவம் வேறு. அர்ச்சகாவின் காதல் அனுபவம் வேறு. அதைப் போல உனது காதல் அனுபவங்களும் வேறுஒருவருக் கொருவர் உருவ அமைப்பு மாறுபடுவதைப் போலக் காதலின் தன்மையும் மாறுபடுகிறது. உறுதியான இருதயமில்லாதவர்களால் இலட்சியத்தை வெற்றி கொள்ள முடியாது. காதலர்கள் சேர்ந்திருப்பது தான் இன்பமானது அவரோடு இன்பமாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கும் போது எனது உயிர் பிரிந்து விட வேண்டு மென்று நான் கடவுளைப் பிரார்த்தித்த காலம் ஒன்று உண்டு. அம்மா எனது காதலை அறிந்த பின்பு என்னைக் கொடுமைப்படுத்தினா. தான் கொடுமைப்படுத்தினால் நான் எனது காதலரை மறந்து விடுவேன் என்று நினைத்தா. அம்மா எனக்குச் செய்த கொடுமைகளால் எனது காதல் வளர்ந்தது'' கண்களை மூடிய வித்தியா ஏதோ முணுமுணுத்துச் சிரித்தாள்.

வளர்மதி, ஆதவனை நினைத்துப் பார்த்தாள். அவளைக் கண்டதும் கருங்கல்லால் செய்யப்பட்ட சிலை போல அவனது முகம் இறுகிக் கறுத்து விடும். வாய் திறந்து தான் மகிழ்வாகக் கதைக்க முடியாவிட்டாலும் முகம் மலர்ந்தாவது தனது காதலை வெளிப்படுத்தலாம் தானே. காதலர்கள் வாய் திறந்து ஆயிரம் வார்த்தைகள் கதைப்பதை விட மெல்லியதான ஒரு புன்னகை ஆயிரம் கதைகள் பேசுமே. பல்லாயிரம் மக்கள் கூடியிருக்கும் சபையில் கூட ஒரு காதலன் தனது காதலியுடன் தனது எண்ணத்தைக் கண்களால் பகிர்ந்து கொள்ள முடியுமெனப் பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. காதலியின் மனதில் உள்ள குறிப்புக்களைக் காதலனும், காதலரின் மனதில் உள்ள குறிப்புக்களைக் காதலியும் கண்கள் மூலமும் சைகைகள் மூலமும் பரிமாறிக் கொள்ள முடியும். அச் செயலில் வாய் திறந்து ஆயிரமாயிரம் வார்த்தைகள் கூறுவதிலும் பார்க்க உன்னதமான தென்று அனுபவஸ்தர்கள் கூறுகிறார்கள். கல்லுப்பிள்ளையார் மாதிரி என்னைக் கண்ட பின்பும் உணர்ச்சியில்லாமல் இருக்க அவரால் எப்படி முடிகிறது?''. என்று எண்ணினாள் வளர்மதி.

‘‘பிரிந்திருக்கும் வேளையில் காதலனோடு கழித்த இன்பமான நாட்கள் தான் காதலியை உயிர் வாழச் செய்கின்றன. கஜேந்திரனை நான் சந்திக்கும் ஒவ்வொரு வேளையிலும் வேறுபட்ட இன்பத்தை அனுபவிப்பேன். ஒவ்வொரு முறையும் அவர் ஒவ்வொரு விதமாக நடந்து என்னை அதிசயிக்க வைப்பார். அந்த அதிசயமான இன்ப நிகழ்வுகள் தான் நான் அவரைப் பிரிந்திருந்து துன்பத்தை அனுபவிக்கும் போது நினைவில் தோன்றி என்னைச் சமாதானப் படுத்தி தைரிய மூட்டின. அந்த நினைவுகள் அப்போது இன்ப மூட்டிய போது இப்போது அம்மா சம்மதித்த பின் அவரைப் பிரிந்த துயரம் என்னைச் சுட்டெரிக்கிறது. அந்த வெம்மையைத் தாங்க முடியாது. எனது மனமும் உடலும் துன்பப்படுகின்றன. அவரை நினைத்துக் கொண்டிருக்கும் போதே எனக்கு இந்த நிலைமை என்றால் அவரை நினைக்காவிட்டால் என்ன நடக்கும்? என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை’’ என்றாள் வித்தியா.

விரத்தியாகச் சிரித்தாள் வளர்மதி; ‘‘என்னோடு மனம் விட்டு அன்பாக ஒரு நிமிசங் கதைக்காத எனது காதலரை நினைத்துக் கொண்டிருக்கும் போதே அந் நினைவு என்னைச் சுட்டெரிக்கிறது. நினைக்காமல் மறந்தால் என்ன ஆகுமோ தெரியவில்லை. கட்டாயம் எனக்குப் பித்துப் பிடிக்கும். நான் அவரை மட்டுமல்ல உலகத்தையும் மறந்து விடுவேன்’’ என்றாள் வளர்மதி.

**1207. மறப்பின் எவன்ஆவன் மற்கொல்? மறப்புஅறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும்.**

காதலரை மறக்காமல் நினைத்துக் கொண்டிருக்கும் போது பிரிவுத் துன்பம் சுடுகிறது; நினைக்காமல் மறந்து விட்டால் நான் என்ன ஆவேனோ..?.

## கோபம் கொள்ளார்

வித்தியா பேசுவதைக் கேட்டுக் கொண்டு அழுவாரைப் போலிருந்த வளர்மதி திடீரென்று பலமாகச் சிரித்தாள். அதை அதிசயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் வித்தியா; ‘‘இவ்வளவு நேரமும் ஆதவன் தன்னுடன் கதைப்பதில்லை கடைசி அன்பாக ஒரு முறை பார்த்து கனிவுடன் சிரித்ததில்லை. என்று நினைத்துப் புலம்பிய வளர்மதி திடீரென்று ஏன் சிரிக்கிறாள். அதுவும் இரண்டு மூன்று நிமிடங்களாகப் பலமாகச் சிரிக்கிறாளே ஏன்...? அவள் அளவுக்கதிகமாக ஆதவனை விரும்புகிறாள். அவனோடு இனிமையாகக் கதைக்க எவ்வளவோ முயற்சிகள் செய்திருக்கிறாள். இருந்தும் ஆதவன் அவளைப் பார்த்துச் சிரித்ததில்லை. மகிழ்வுடன் கதைத்ததில்லை. கஜேந்திரன் கேட்டதற்கு மட்டும் தான் வளர்மதியை விரும்புவதாகக் கூறியிருக்கிறானே தவிர அன்புடன் ஏதாவது ஒரு செய்தியைக்கூடச் சொல்லி அனுப்பியதில்லை. அத்துடன் அவளுக்கு ஒரு கடிதம் எழுதித் தரும்படி ஆதவனைக் கஜேந்திரன் வற்புறுத்தியும் ஆதவன் இதுவரை கடிதம் எழுதிக் கொடுத்ததில்லை. வளர்மதி பெரும் பணக்காரி, சகோதரர்கள் வெளிநாட்டில் இருப்பதால் அவளின் வீட்டில் பணம் தாராளமாகப் புழங்குகிறது. அதனால் அவள் தனது தேவைகள் அனைத்தையும் உடனுக்குடன் பூர்த்தி செய்து வருபவள். அடிக்கடி அவள் சொல்வாள்; ‘‘ஆதவன் ஒரு விற்பனைப் பொருளாக இருந்தால் நான் எவ்வளவு பணம் கொடுத்தும் வாங்கியிருப்பேன். அவர் உயிர் உள்ள பொருளாயிற்றே. நான் பணத்துடன் அவரை வாங்கச் செல்ல அவர் என்னைப் பணத்திமிர் பிடித்தவர் என்று ஒதுக்கி விட்டால் பின் எதுவும் செய்ய முடியாது. அது தான் யோசிக்கிறேன் என்பாள்’’ ஒரு வேளை ஆதவன் கிடைக்காத துயரத்தால் யோசித்து யோசித்து மூளை பிசகி விட்டதோ’’ என்று நினைத்தவாறு வளர்மதியைப் பார்த்தாள். அவள் பலமாக விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தாள். மெல்ல அவளின் அருகே சென்று குனிந்து வளர்மதியின் முகத்தைப் பார்த்தாள்.

சிரிப்பதை விட்டு விட்டு வித்தியாவைப் பார்த்த வளர்மதி; ‘‘ நீ எனக்கு விசர் பிடித்து விட்டது என்று நினைத்து விட்டாயா? உனது போக்கும் பார்வையும் எனக்கு அதைத்தான் உணர்த்துகின்றன’’ என்று கூறிவிட்டு மீண்டும் பலமாகச் சிரித்தாள் வளர்மதி.

வித்தியாவுக்கு அவளது சிரிப்பைப் பார்க்கக் கோபம் கோபமாக வந்தது; ‘‘இப்படி நீ ஏறுக்கு மாறாக நடந்து கொள்வதால் தான் ஆதவன் வெறுக்கிறார்.’’ என்றாள்.

மீண்டும் சிலகணங்கள் வளர்மதி சிரித்தாள் பின்பு; நான் அவரை நேரில் கண்டு சிரித்தால் தலையைக் குனிகிறார். அன்புடன் கதைக்கலாமென்று அருகே சென்றால். ஓடி மறைகிறார். தொடர்ந்து கிட்டச் சென்றால் முறாய்க்கிறார். கண்டபடி ஏசுகிறார். நான் என்ன செய்வது? அவர் மீதுள்ள காதல் என்னை அப்படி செய்ய வைக்கிறது எனது மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் கனவு காண்கிறேன். கற்பனை செய்கிறேன். இப்பொழுது நானும் அவரும் கடலில் படகொன்றில் உல்லாசப் பிரயாணம் சென்றோம். அவரின் மடியில் நான் படுத்திருக்க, அவர் எனது தலை முடியைத் தனது

கைகளால் கோதிவிட்டவர். அது எவ்வளவு சுகமாக இருந்தது தெரியுமா..? அந்த இன்ப சுகத்தில் மிதந்த நான் மெல்ல எழுந்து அவரது கன்னத்தை வருடினேன். அவர் எதுவும் சொல்லவில்லை. மிகவும் சந்தோசமாக இருந்தார். அதைப் பார்க்க எனக்கு என்றுமில்லாத மகிழ்ச்சியாக இருந்தது. எனது கைகளைப் பிடித்துத் தூக்கினார். நான் அவரைக் கட்டித்தழுவி மிச்சம் உனக்குத் தெரியும்தானே'' என்று சிரித்த வளர்மதியின் கண்களால் கண்ணீர் வடிந்தது. '' நான் அவரை எவ்வளவு மிகுதியாய் எவ்வாறு நினைத்தாலும் என் மீது கோபம் கொள்ள மாட்டார். இது அவர் எனக்குச் செய்யும் பேருதவி'' என்றாள் வளர்மதி.

**1208. எனைத்து நினைப்பினும் காயார் அனைத்துஅன்றோ**
**காதலர் செய்யும் சிறப்பு!.**

காதலனை, நான் எவ்வளவு அதிகமாக நினைத்தாலும் அவர் என்மீது கோபம் கொள்ளமாட்டார்; அவர் எனக்குச் செய்யும் பெரிய உதவி இது.

## உயிர் அழிகிறது

வாரம் ஒன்று கழிந்தது. வித்தியாவின் தாயாரின் அழைப்பின் பேரில் கஜேந்திரன் வித்தியாவின் வீட்டுக்கு வந்தான். வீட்டுக்கு வந்த கஜேந்திரனை அன்புடன் வரவேற்ற கண்மணி கஜேந்திரனது முகத்தைப் பார்த்தாள். அழகான அவனது முகத்தில் ஒரு தெய்வீக ஒளி வீசியது. நெற்றியில் அணியப்பட்டிருந்த வீபூதிப் பூச்சும், சந்தணப் பொட்டும் அவனை வசீகரித்தன. ''வித்தியா தனக்குப் பொருத்தமானவனைத் தான் தோந்தெடுத்திருக்கிறாள்'' என்பதை நினைக்க அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியின் மாபெருங் கருணையால் தான் கஜேந்திரன் தனக்கு மருமகனாகக் கிடைத்தான் என்று மகிழ்ந்தாள்.

வெளியே இருந்த கஜேந்திரனுக்கு உரிமையுடன் தேநீர் தயாரித்துக் கொண்டு வந்தாள் வித்தியா. அவளுடன் அர்ச்சகாவும் வந்தாள். ஏனோ தெரியவில்லை. அர்ச்சகாவின் முகம் வாடிச் சோர்ந்திருந்தது.

தேநீர் கொடுத்த வித்தியாவை நிமிர்ந்து பார்த்தான் கஜேந்திரன். இயல்பாகவே அமைதியும் சாந்தியும் குடி கொண்டிருக்கும் அவளது முகத்தில் அன்று ஓர் தெய்வீக ஒளி சுடர் விட்டுப் பிரகாசித்தது. மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறாள் என்பதை அவளது முகம் எடுத்துக் காட்டியது. மெல்லச் சிரித்தாள்; '' எவ்வளவு தான் பழகிய போதும் பெற்றோருக்கு முன்னால் பெண்களுக்கு நாணம் வந்து விடுகிறது'' பல நாட்களாகத் தொடர்ந்து வந்த துன்பத்தின் பின் எல்லையில்லாத மகிழ்ச்சி கிடைத்தால் கஜேந்திரனது உள்ளம் ஆரவாரம் செய்தது.

''கண்மணி உள்ளே சென்று விட்டாள். கஜேந்திரன் மெல்ல நிமிர்ந்து வித்தியாவைப் பார்த்தான். அவளின் தலை குனிந்திருந்தது. திரும்பி அர்ச்சகாவைப் பார்த்தான். அவளின் கண்கள் கலங்கியிருந்தன. அதை மறைக்க முடியாமல் அல்லற்பட்டாள்; ''நாம் இருவரும் வேறல்லவர் என்று அடிக்கடி சொன்ன நகுலன் இப்போது என்னைச் சந்திக்காது இருந்து வருத்துகிறார். அதனால் உண்டாகும் துன்பத்தால் எனது உயிர் அழிகிறது'' என்று அர்ச்சகாவினது கண்கள் சொல்லி அழுவதைப் போலக் கஜேந்திரனுக்கு இருந்தது.

''நகுலனுக்குப் பல்கலைக்கழகத்தில் பரீட்சை அடுத்தவாரம் ஆரம்பமாக இருக்கிறது. அதனால் சில நாட்களுக்கு அர்ச்சகாவைச் சந்திக்க முடியாது. அவள் நான் சந்திக்காவிட்டால் துன்பப்படுவாள். அவளது உயிர் அதனால் அழிந்து விடும். எனவே நீ சந்தித்து எனது நிலைமையைச் சொல்லு'' என்று நகுலன் சொன்னவன். கவலைப்படாதைங்கோ கடிதம் ஏதாவது தந்தால் கொண்டு வந்து தருகிறேன்'' என்று கஜேந்திரன் அவளைச் சமாளிப்பதற்காகச் சொன்னான்.

''நீங்கள் முறைப்படி இன்று வித்தியாவின் வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள். மகிழ்வுடன் அவளுடன் கதையுங்கள். நாம் இருவரும் வேறல்லர் என்று சொன்ன அவர் பல நாட்களாக என்னைச் சந்திக்காமல் இருந்து எனது உயிரை வருத்துகிறார். தயவு செய்து நாளைக்குக் கடற்கரைக்கு வரச் சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றாள் அர்ச்சகா.

கஜேந்திரன் சிரித்தான்; ''இந்தப் பெண்களைப் புரிந்து கொள்ளவே முடிவதில்லை. அவன் பரீட்சைக்குப் படிக்கிறான். அர்ச்சகா தன்னை வந்து சந்திக்கவில்லை என்று கவலைப்படுகிறாள். அவனின் மேல் உண்மையான காதல் இருந்தால் அவன் படிக்க வேண்டும் என்ற அக்கறை அல்லவா இருத்தல் வேண்டும்''.

“என்ன படிப்பு? ஒருவாரத்தில் ஓரிரு நிமிடங்கள் அவளைச் சந்திப்பதால் அவரது படிப்புக் கெட்டு விடும். பொல்லாத படிப்பு நான் பரீட்சை எழுதும் போது கூட நீங்கள் வந்து என்னைச் சந்திக்கவில்லையா...?” என்று கேட்டாள் வித்தியா.

‘ம்’ என்று பெருமூச்சு விட்டான் கஜேந்திரன்; “என்னவோ தெரியவில்லை இங்கு என்னால் உம்முடன் கதைக்க முடியவில்லை. நாளைக்கு அர்ச்சகாவைக் கூட்டிக் கொண்டு கடற்கரைக்கு வாரும். நான் நகுலனையும் அழைத்துக் கொண்டு வருகிறேன். அங்கு தான் உரிமையுடன் சுதந்திரமாகக் கதைக்க முடியும்” என்று சிரித்தான் கஜேந்திரன்.

**1209. விளியும்என் இன்னுயிர் வேறல்லம் என்பார்**
**அளிஇன்மை ஆற்ற நினைந்து.**

நாம் இருவரும் வேறல்லர் என்று அடிக்கடி கூறும் அவர், இப்பொழுது என்னிடம் அன்பில்லாமல் இருப்பதை எண்ணி என் உயிர் அழிகிறது.

## நிலவே மறையாதே

அன்று, பிறைச்சந்திரன் அர்ச்சகாவின் அழகான நெற்றியைப் போலக் கடற்கரை வானத்தில் ஒளி வீசிக் கொண்டிருந்தான். வழமை போல வித்தியாவுடன் கடற்கரைக்கு வந்த அர்ச்சகா தான் வழமையாக நகுலனைச் சந்திக்குமிடத்தில், நகுலனின் வரவுக்காகக் காத்திருந்தாள். கடற்கரையில் ஏராளமான மக்கள் கூடிக் குலாவி இன்புற்றிருப்பதைப் பார்க்க அவளுக்கு எரிச்சலாக இருந்தது. வித்தியாவும் கஜேந்திரனும் தம்மை மறந்து, அச் சூழலை மறந்து, உலகை மறந்து நெருக்கமாக இருந்து ஏதோ கதைத்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு அர்ச்சகா தம்முடன் வந்தது நினைவில் இருக்கிறதோ தெரியாது. அவ்வளவு நெருக்கம் அன்று வெள்ளிக்கிழமையாதலால் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இரவுப் பூசையைப் பார்த்து விட்டு வருவதாக இருவரும் கூறி விட்டு வந்தனர். அதனால் ஐந்து மணி கடந்தும் அர்ச்சகா வீட்டுக்குச் செல்வதைப் பற்றி நினைக்கவில்லை.

இரண்டு வாரங்களாக நகுலனைச் சந்திக்காததால் மிகுந்த ஆவலுடன் வந்திருந்தாள். நகுலன் அருகில் வந்தமர்ந்து கதைத்தானேயானால் அவளது மனம் பொங்கிப் பூரிப்படைவதை விட அவளது உடல் பொங்கிப் பூரிக்கும். அவனது இனிமையான வார்த்தைகள் அவளது மனதையும் உடலையும் உரசிக் கிழுகிழுக்கச் செய்யும். அந்த நிலை கடந்த இரண்டு வாரங்களாக இல்லாமையால் அவளது மனம் புண்ணாக வலித்தது. மெல்லிய நிலவொளியில் கடற்கரை மணலில் அவனது தோள்களில் மெல்லச் சரிந்திருந்தது. கதைத்து இன்புற்ற அர்ச்சகாவுக்குத் தனிமை பெருந்துன்பத்தைக் கொடுத்தது.

பௌர்ணமி நிலவை விட, பௌர்ணமிக்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு வரும் நிலவைத்தான் அர்ச்சகாவிற்குப் பிடிக்கும். மென்மையான அந்த குளிர்மை மிக்க ஒளியில் விடியும் வரையும் நகுலனின் அணைப்பில் இருந்தாலென்ன என்று அவள் நினைப்பாள். பௌர்ணமி வருவதற்கு இன்னும் மூன்று தினங்கள் இருந்தன. சந்திரன் அர்ச்சகாவைப் பார்த்து மெல்லச் சிரித்தான்; “தனிமை உனக்கு எவ்வளவு வேதனையைத் தருகிறது என்று எனக்குத் தெரியும். பாவம் நீ, நான் என்ன செய்வது நான் செல்லக் கூடிய இடங்களெல்லாம் சென்று பார்த்து விட்டேன். நகுலனைக் காணவில்லை. அவன் எங்காவது நான் காணமுடியாத இடத்தில் இருக்கிறான் போலத் தெரிகிறது. இன்னும் ஒரு முறை தேடிப் பார்க்கிறேன்” என்று சொல்வதைப் போல இருந்தது.

“நிலவே எத்தனை முறை நீ, நான் அவருடன் கதைப்பதைப் பார்த்திருக்கிறாய். அவரது செயல்களைக் கண்டு நீயே வெட்கப்பட்டு முகில்களுக்குள் மறைந்து விடுவதை நான் பலமுறை கண்டு நாணப்பட்டுள்ளேன். அந்தளவிற்கு இன்பமளித்த அவரின் பிரிவு என்னை வாட்டுகிறது. எனது உள்ளத்தை விட்டுப் பிரியாமல் என்னை விட்டுப் பிரிந்து சென்ற எனது காதலரை நான் எனது கண்களால் தேடிக் காணவேண்டும். அதுவரை நீ வானில் ஒளி வீசிக் கொண்டிரு. என்னில் அன்பு வைத்துள்ள அவர் எப்படியும் என்னைத் தேடி வருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதுவரை முகில்களுக்குள் கூட மறைந்து விடாதே” என்று இரந்தாள் அர்ச்சகா.

ஏழுமணிக்கு கஜேந்திரனும் வித்தியாவும் அர்ச்சகா இருந்த இடத்திற்கு வந்தனர். அவர்களைக் கண்டதும் அர்ச்சகாவுக்கு அழுகை வந்தது; “நீங்கள் பிரிவினால் வருந்தும் என்னைப் பற்றிச் சொன்ன போதும் அவர் வரவில்லை. அதனால் எனக்குத் துக்கமாக இருக்கிறது. எனது உள்ளத்தில் காதல் தீயை உண்டாக்கி விட்டுப் பிரிந்து சென்ற அவரை இந்நிலவு மறைவதற்குள் தேடிக் கண்டு பிடிக்க நினைக்கிறேன்” என்றாள் அர்ச்சகா.

வித்தியா அவளைப் பார்த்துச் சிரித்தாள். நகுலனுக்கு ஏதோ அவசர வேலை இருக்கிறது போலத் தெரிகிறது. இல்லாவிட்டால் உன்னைச் சந்திக்க வந்திருப்பர்” என்று வித்தியா கூறிக் கொண்டிருக்கும்

போது கஜேந்திரன் அவளது காதுள் கிசுகிசுத்தான்; ‘‘உம்மையே நினைத்துக் கொண்டிருந்ததால் நான் அர்ச்சகா வரும் செய்தியைச் சொல்ல மறந்து விடடேன்’’ மகிழ்ச்சிப்பூரிப்பு இருந்த வித்தியாவின் முகம் மாறிக் கொண்டு வருவதை உணர்ந்து மெல்ல விலகினான் கஜேந்திரன்.

**1210. விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்**
**படாஅதி வாழி மதி;.**

என் உள்ளத்தை விட்டுப் பிரியாமல், என்னைவிட்டுப் பிரிந்து சென்ற காதலரை நான்தேடிக் கண்டுபிடிக்கும் வரை நிலவே; நீ மறைந்து விடாமல் ஒளி வீசிக் கொண்டிரு.;

## விருந்து

அழகான அந்த அறையில் இருந்த மேசையில் ஒரு பொம்மை இருந்து கையை அசைத்துக் கொண்டிருந்தது. மெல்லிய நீல நிறத்தில் அணிந்திருந்த அதன் சட்டையில் பொன்நிறமான சருகையால் பூக்கள் போடப்பட்டிருந்தன. அந்தக் குழந்தைப் பொம்மையை எடுத்து அதன் கன்னத்தில் முத்தமிட்டாள் மாதுமை. அந்த அறையில் இருந்த முருகனின் படத்திற்கு அருகில் புகைந்து கொண்டிருந்த சந்தணக் குச்சு ஒன்று அவ் அறை முழுவதையும் சந்தண மணம் கமழச் செய்து கொண்டிருந்தது.

மாதுமையை இறுக அணைத்தான் விபுலன்; ‘‘உமக்குக் குழந்தைகளின் மீது கொள்ளை ஆசை என்பது எனக்குத் தெரியும். அதற்காகக் குழந்தைப் பொம்மையையா முத்தமிட வேண்டும். நான் நான்கு மணித்தியாலமாக உமக்கு அருகிலேயே இருக்கிறேன். எனக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை’’ விபுலனின் குரல் தாழ்ந்து ஒலித்தது.

மாதுமை நாணமிகுதியுடன் விபுலனைப் பார்த்தாள். மெல்லிய மஞ்சள் மின் ஒளி விபுலனின் முகத்தில் படர்ந்திருந்த போதும், அவளது எண்ணம் முழுவதும் செங்கோடுகளாக முகத்தில் பரவி இருந்தன. ‘‘மாது’’ மெல்ல அழைத்தவாறு அவளது கைகளைப் பிடித்தான். அவளுக்கு அவனை அணைக்க வேண்டும் என்ற நினைவு பல மணிநேரமாக மனதில் புகுந்து வருத்திய போதும் அவளால் அவனுக்கு அருகே செல்ல வெட்கமாக இருந்தது. எப்போது அவன் தன்னை அணைப்பான் என்று ஏங்கிய அவள் மெல்லச் சிணுங்கியவாறு அவனது கைகளை விலக்கினாள்.

விபுலன் அவளை விழுங்குவதைப் போலப் பார்த்தான். அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. ‘‘பலநாட்களுக்குப் பின் வெளிநாட்டில் இருந்து வந்திருக்கிறேன். பிரிந்த காதலர் இப்படியா சந்திப்பது. என்னைக் கண்டவுடன் கட்டித் தழுவியிருக்க வேண்டும். பலமணி நேரமாகக் காத்திருந்து பொறுமை இழந்து தான் கையைப் பிடித்தேன். அதையும் விலக்கினால். ‘‘ விபுலன் மனதுள் பொருமினான்’’. அச் செயல் அவனுக்கு ஏமாற்றத்தை உண்டாக்கியது.

மாதுமை அவன் விலகியிருந்ததை நினைத்துத் துக்கப்பட்டாள்.‘‘ எப்பொழுதும் ஒரு பெண் காதலரின் இறுக்கமான அணைப்பையே விரும்புவாள். அதை அவள் வெளிக்காட்டாது தனக்கு அது விருப்பமில்லை. என்பதைப் போல நடிப்பாள். அதை இவர் உணராதவராக இருக்கிறாரே...’’ என்று நினைத்தபடி மெல்லத் தனது தோளால் அவனது தோளை உரசினாள்.

மீண்டும் விபுலன் மாதுமையின் கைகளைப் பிடித்தான். தனக்கு அது விருப்பமில்லை. எனக் காட்டிக் கொள்ள மாதுமை விரும்பவில்லை மெதுவாக அவனது தோளின் மீது சாய்ந்தாள்.

‘‘வெளிநாட்டில் நான் எவ்வளவு துன்பப்பட்டேன் தெரியுமா.? இந்த ஒரு சுகத்திற்கு இணையாக உலகில் என்ன இருக்கிறது. அன்பான காதலின் அணைப்பில் பெறும் இன்பம் தேவருலகில் அமுதம் குடித்தாலும் கிடைக்காது. என்றபடி மாதுமையை அணைத்தான். அவனது மூச்சுக் காற்று அவளது கழுத்துப் பகுதியில் பட்டு மெல்ல மெல்ல மேலே சென்றது.

‘‘அன்பே இனி நான் உம்மைப் பிரிந்து எங்கும் செல்ல மாட்டேன். நாம் கூடியிருக்கும் நேரத்தில் பெறும் இன்பம், நான் பிரிந்திருக்கும் வேளைகளில் என்னைக் கொல்கிறது’’ முனகினான் விபுலன்.

உடலெங்கும் சிலிர்த்துப் பரவிய உணர்வுகள் கொடுத்த இன்பத்தால் முனகினாள் மாதுமை. அவளது கைகளும் கால்களும் நான்கு பக்கமும் வேகமாக அசைந்தன. அதனால் அவளின் அருகில் நகுலனின் பிரிவால் நித்திரையில்லாது துன்பப்பட்டுக் கொண்டிருந்த அர்ச்சகா எழுந்து வந்தாள். ‘‘விபுலன் வந்து தொல்லை தருகிறாரோ’’ என்றவாறு மாதுமையைத் தட்டினாள் அர்ச்சகா.

‘‘ விடுங்கோ.... விடுங்கோ..... நான் மாட்டன்’’ என்றவாறு எழுந்த மாதுமை அர்ச்சகாவைக் கண்டு மிரண்டாள்.

‘‘கனவில் வந்து விபுலன் தொல்லை தந்தார். அவர் பிரிந்து விட்டாரே என்று எண்ணியபடி உறங்கிய போது அவருடைய தூதுவராக வந்த கனவிற்கு நான் என்ன விருந்து வைப்பது. எது செய்தாலும் அதற்கு ஈடாகாது’’ என்று சிரித்தாள் மாதுமை.

**1211. காதலர் தூதொடு வந்த கனவினுக்கு**
**யாதுசெய் வேன்கொல் விருந்து?.**

காதலர் பிரிந்து சென்று விட்டாரே என்று எண்ணியபடி நான் உறங்கிய போது, அவருடைய தூதாய் வந்த கனவிற்கு நான் என்ன விருந்து வைப்பேன்?

**சொல்ல**

‘‘நீ கொடுத்து வைத்தவள். காதலர் உன்னைப் பிரிந்து சென்று மாதங்கள் பல கடந்த போதும் நிம்மதியாக உறங்குகிறாய். என்னால் கண்களை மூடமுடியவில்லை. கள்ளத்தனமுள்ள எனது காதலரின் நினைவுகள் எனது மனதை வாட்டுவதால் எனக்கு உறக்கம் வருவதில்லை. இரவு முழுவதும் இரவுக்குத் துணையாக விழித்திருக்கிறேன். அவர் எவ்வளவு கொடியவர் தெரியுமா...? அருகில் இருந்தும் என்னை வந்து பாராமல் இருந்து வருத்துகிறார். அத்துடன் தன்னைப் பற்றியே எண்ண வைத்து என்னை உறங்கவும் விடுகிறார் இல்லை. உன்னைப் போல நான் உறங்கினால் இப்பொழுது நீ அனுபவித்த இன்பங்களை யெல்லாம் நானும் அனுபவித்திருப்பேன். எனக்கு அவரோடு அருகில் இருந்து கதைத்து விட்டு வந்தால் தான் கனவு வரும். கடற்கரையில் அவருடன் சல்லாபித்துச் சொல்ல மறந்தவற்றை யெல்லாம் நான் கனவில் செய்து விடுவேன். அவர் காதலிக்கத் தொடங்கிய சில நாட்களுக்குள்ளேயே என்னை அணைத்து விட்டார். எனக்குத் தான் வெட்கம் அத்துடன் நகுலன் மிகவும் கெஞ்சிக் கேட்டதால் தான் கஜேந்திரனுக்காக நான் உதவி செய்கிறேன். நகுலன் நல்லவன். என்றாலும் தனிமையில் ஒரு பெண்ணைச் சந்திக்கும் போது காதல் மயக்கத்தில் நடக்கக் கூடாதனவெல்லாம் நடந்து விடும். மிகவும் எச்சரிக்கையாக இரு. நகுலனை உனது கையில் கூடத் தொட விடாதே. தற்செயலாக விபரீதமாக ஏதாவது நடந்தால் நான் கமலேஸ்வரி மாமியிடம் தப்ப முடியாது. நான் தான் உன்னைக் கெடுத்ததாக நினைப்பா. நினைத்தால் மட்டும் பரவாயில்லை வாற போற எல்லோருக்கும் வித்தியா தான் தன்னுடைய மகளைக் கெடுத்தவள். அவள் தன்னை மாதிரி ஒழுக்க முள்ள எனது மகளையும் கெடுத்து விட்டார் என்று ஏசுவா. அதனால் பிரச்சினைக்குள்ளாகியிருக்கும் எனக்கு அம்மாவால் மேலும் பல பிரச்சினைகள் வரும். ஆரம்பத்தில் கஜேந்திரன் நகுலனுக்கு உதவி செய்ய மறுத்து விட்டார். அவர் தனது நண்பர் ஒருவருக்கு உதவி செய்தவராம். ஆனால் அவன் காதலித்து விட்டு ஏமாற்றி விட்டானாம். அப் பெண் தினமும் வந்து தனது துயரத்தைச் சொல்லி அழுவாளாம். அதனால் தான் இனிமேல் யாருக்கும் உதவி செய்வதில்லை என்று நினைத்திருந்தவராம். எனது வற்புறுத்தலுக்காகத் தான் உதவி செய்வதாக ஒப்புக் கொண்டார். எனவே தயவு செய்து கவனமாக இரு. கஜேந்திரன் பண்பானவர். நான் பல முறை தனிமையில், இரவில் கூடச் சந்தித்திருக்கிறேன். தற்செயலாகத் தொடுவது போலக் கூட என்னைத் தொடமாட்டார். அவர் என்னைத் தொட வேண்டு மென்று நான் எத்தனையோ தரம் ஆசைப்பட்டனான். அவர் தொடவில்லை. தற்செயலாக தனது அங்கங்கள் எனது உடலில் பட்டால் துடிதுடித்து மன்னிப்புக் கேட்பார்’’ என்று சொன்ன பின்பு எனக்கு ஆசை இருந்தாலும் அதைக் கட்டுப்படுத்திக் கொள்வேன். அதனால் கனவில் தான் நான் அவரைக் கட்டித் தழுவி முத்தமிட்டு மகிழ்வது. அந்த இன்பத்தைப் பெறவும் இப்போது முடிவதில்லை’’ பெருமூச்சு விட்டாள் அர்ச்சகா.

காதலருக்கு நிஜமான சந்திப்புக்களை விட கனவில் சந்திப்பது தான் அதிக இன்பத்தை அளிக்கும். எனது காதலர் என்னைக் கண்டால் வெட்கப்படுவார். தலையைக் குனிந்து கொண்டிருப்பார். அதிகம் பேசமாட்டார். ஆனால் கனவில் வந்தால் என்னையே பார்த்துக் கொண்டிருப்பார். கதைக்கக் கூடாதவற்றை யெல்லாம் கதைப்பார். கனவில் வந்து அவர் எனது அங்கங்களின் பொலிவை வர்ணிப்பதை என்னால் கேட்க முடிவதில்லை. அவ்வளவு மோசமான வார்த்தைகள் தமிழில் இருக்கின்றனவா. என்று ஆச்சரியப்படுவேன்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘அதற்காகத் தான் நான் எனது கண்களை தூங்கும்படி மிகவும் கெஞ்சிக் கேட்கிறேன். கண்கள் தூங்கினால் அப்போது கனவில் வரும் எனது காதலருக்கு என் உயிர் போகாமல் இருந்து நினைவுகளால் துன்பப்படும் எனது நிலையை விளக்குவேன்’’ என்று அழுதாள் அர்ச்சகா.

**1212. கயல்உண்கண் யான்இரப்பத் துஞ்சின் கலந்தார்க்கு**
**உயல்உண்மை சாற்றுவேன் மன்.**

கண்கள் நான் கேட்டவுடன் தூங்குமானால், அந்நேரம் கனவில் வரும் காதலருக்கு நான் தப்பிப் பிழைத்திருக்கும் நிலையைச் சொல்வேன்.

## கனவு

“ நான் நகுலனைச் சந்திக்கும் வேளைகளில் வித்தியா கூறிய எச்சரிக்கையான வார்த்தைகள் காதில் பயங்கரமாக ஒலிக்கும். நகுலன் என்னைத் தொடும் வேளைகளில் வித்தியா சொன்ன வார்த்தைகள் என்னை எச்சரிப்பதால் நான் அவதானமாக இருக்க வேண்டுமென நினைத்து விலகி இருப்பேன். ஆரம்பத்தில் என்னைத் தொட்டுத் தழுவ முற்பட்ட நகுலன் பின்பு எனது நிலை அறிந்து சற்று நிதானமாக நடக்க முற்பட்டார். எனினும் இரவு நேர நெருக்கம் என்னையும் சில சமயம் உணர்விழக்கச் செய்யும். இப்பொழுது இரண்டு வாரகாலமாக அவர் பரீட்சைக்குப் படிப்பதற்காக என்னை வந்து பார்க்கவில்லை. அப்படி என்ன பெரிய படிப்பு. கணிதத்துறையில் கற்கும் கஜேந்திரன் பரீட்சை நடைபெறும் காலங்களில் தான் தீவிரமாக காதலில் ஈடுபட்டதாக வித்தியா சொல்வாள். அவள் பரீட்சைக்கு நேரத்திற்குச் சென்று படியுங்கள் என்றால் அவர் கூறுவாராம்; “அன்பே உம்மில் உள்ள மோகம், நீர் இல்லாத போது தான் அதிகரிக்கிறது. கடவுளை ஒரு கணம் தரிசித்து எமது குறைகளைச் சொல்லி விட்டால் மனப் பாரம் குறைவதைப் போல, மனதுள் வீற்றிருக்கும் உம்மை நேரில் தரிசித்து எனது மனதைத் திருப்திப்படுத்திக் கொண்டால் படிப்பதை நிம்மதியாகப் படிக்கலாம். இல்லாவிட்டால் நீர் நினைவில் வந்து என்னைச் சிந்திக்க விடாது தொல்லை கொடுப்பீர். எனது மனம், மூளை, இருதயம் யாவும் உம்மிடமே உள்ளது. அதை வாங்கிச் சென்று படிக்கத் தான் நான் உம்மிடம் வருகிறேன். எனக்குத் தெரியாமல் எனது மனத்தையும் மூளையையும் இருதயத்தையும் தினமும் திருடி விடுகிறீர். உம்மிடம் எனது மூளை இருக்க எப்படி என்னால் படிக்க முடியும். புத்தகத்தைத் திறக்கு முன்பே வந்து மூளையைத் திருடிவிடுகிறீர். எனக்குத் தெரியாமல் என்னுள் நுழைந்து எனது மூளையைத் திருட உம்மால் எப்படி முடிகிறது” என்று கேட்பாளாம். அதனால் வித்தியா மற்றய நாட்களை விடப் பரீட்சை நடைபெறும் நாட்களில் தான் அவசர அவசரமாக அவரைச் சந்திக்கச் செல்வாள். ஆனால் என்னவருக்கு என்னைக் காணாவிட்டால் தானாம் படிக்க முடியும். இது எவ்வளவு கொடுமை தெரியுமா? இதை அறியாமல் என்னைத் தினமும் சித்திரவதைப் படுத்துகிறார். சொல்லி அனுப்பியும் வருகிறார் இல்லை. எனது துயரை எப்படி நான் போக்குவது” விம்மினாள் அர்ச்சகா.

“உண்மையில் வித்தியா கொடுத்து வைத்தவள். அவளின் மனமறிந்து நிஜத்திலும் கனவிலும் செயற்படும் கஜேந்திரன் உன்மையில் பெரும் மனிதன் தான். இவ்வளவு பற்று வைத்திருக்கும் காதலனை அடைந்த வித்தியா பாக்கியசாலி. எனது காதலர் தனது குடும்பத்திற்காக என்னைப் பிரிந்து சென்றுள்ளார். உனது காதலர் பரீட்சைக்காக உன்னைப் பிரிந்திருக்கிறார். பிரிவு என்பது அவர்களுக்கு வேதனையைக் கொடுக்கவில்லை என்று தான் நான் நினைக்கின்றேன். ஆயிரக்கணக்கான மைல் தொலைவில் இருக்கும் எனது காதலர் விரைவில் வருவார். என்ற எண்ணச் செருக்கு எனக்கு இருக்கு. அருகில் இருக்கும் உனது காதலர் வருவார் என்ற எண்ணச் செருக்கு உனக்கு இல்லையே. அவருக்கு உன்னைக் காண வேண்டும் என்ற ஆவல் இருந்தால் நேற்று உன்னைச் சந்தித்திருப்பார்” என்று மாதுமை கூறிக் கொண்டிருக்கும் போது அர்ச்சகா குறுக்கிட்டாள்; “ தயவு செய்து அப்படிச் சொல்லாதே ஒருவர் இன்னொருவரைப் போல இருப்பதில்லை. தினமும் வந்து சந்தித்துக் கதைத்து மகிழ்ந்தால் தான் காதலர் அன்புள்ளவர் என்றில்லை. அவருடைய கொள்கையை அவரை விரும்பும் நான் மதிக்க வேண்டும். கஜேந்திரன் வித்தியாவைக் கட்டியணைத்தபடியும் படிக்கக்கூடியவர். அந்தத் தன்மை அவருக்கு இருக்கு. ஆனால் என்னவர் என்னைக் கண்டதும் உருகி விடுவார். எனது நினைவில் இருந்து மீள அவருக்கு அதிகநேரம் தேவை. ஆனால் படிக்க அமர்ந்தால் கஜேந்திரன் வித்தியாவை மறந்து விடுவார். என்று சொல்லிக் கொண்டிருந்தாள் அர்ச்சகா. மாதுமைக்கு; “கஜேந்திரன் படிக்கவென உட்கார்ந்தால் தான் வித்தியாவை மறப்பார். ஆனால் நகுலன் படிக்க வென உட்காராமலே உன்னை மறந்து விட்டார். “என்று குறுக்கிட்டுச் சொல்ல வேண்டும் போல இருந்தது. ஆனால் அவள் வருத்தப்படுவாள் என்பதற்காக அப்படிச் சொல்லாதிருந்தாள்.

“ என்னடி யோசிக்கிறாய்? விபுலனின் நினைவு வந்து விட்டதோ..? என்று கேட்டாள் அர்ச்சகா.

“அவரின் நினைவுகளை மறந்தால் தானே நான் திரும்பவும் நினைப்பதற்கு “உனது காதலர் நேரில் வந்து அன்பு காட்டவில்லை. நீ இவ்வளவு நேரமும் உறங்கவில்லை. கண்களுக்குச் சமாதானம் சொல்லி அவற்றை உறங்கவை கனவில் வந்து உனக்கு ஆறுதலளிப்பார். அவர் கனவில் அடிக்கடி தோன்றி என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டு என்னென்னவோ எல்லாம் செய்வதால் தான் எனது உயிர் உடலில் தரித்து நிற்கின்றது. இல்லாவிட்டால் என்றோ எனது உடலை விட்டுச் சென்றிருக்கும். போ.... போய்ப் படு” என்றாள் மாதுமை.

“பொறுத்த நேரத்தில் குழப்பி விட்டேன் என்று கோபப்படுகிறாய். நீ படுக்க முன் உனது விழிகள் அவனைக் காணும் ஆவலில் உறங்கி விடுகின்றன. ஆனால் எனது விழிகளை எனது மனம் உறங்க விடுவதில்லை” எனறாள் அர்ச்சகா.

**1213. நனவினால் நல்கா தவரைக் கனவினால்**

**காண்டலின் உண்டுஎன் உயிர்.**

நேரில்கண்டு அன்பு கொள்ளாத காதலரை, நான் கனவில் காண்பதால் தான் எனது உயிர் உடலை விட்டு நீங்காமல் இருக்கிறது.

**கனவில் இன்பம்**

கனவு காதலருக்கு மனஅமைதியைத் தருகிறது. நிஜத்தில் நாம் கிடைக்க வேண்டு மென்று நினைத்து ஏங்கும் எண்ணங்களெல்லாம் உறக்கத்தில் கனவுகளாக வந்து எமக்கு இன்பமளிப்பதால் தான் நாம் வாழ்க்கையில் பற்றுள்ளவர்களாக வாழ்கிறோம். பிரிவையும் அதனால் வரும் துன்பத்தையும் நினைத்துக் கொண்டு வாழும் அறிவில்லாத எம் போன்றவர்களுக்கு கனவு தான் இன்பமளிக்கிறது. ஒருவர் உடனே இன்பம் பெற வேண்டு மென்று நினைத்தால் கனவு காணவேண்டும். அது பகற்கனவாகவோ, கற்பனையாகவோ இருக்கலாம். இது பாமரர்களுக்கு மட்டுமல்ல படித்தவர்களுக்கும் பொருந்தும். நேரில் கண்டு கதைத்து மகிழ முடியாதவற்றை யெல்லாம் நாம் கனவில் செய்ய முடிகிறது. நேரில் என்னைத் தொடப் பயப்படும் அவர் கனவில் வந்து செய்யும் தொல்லைகளை வெளியே செல்ல முடியாது. சொன்னால் அவை உண்மையென நம்பி ஊரவர் நான் கற்பிழந்தவள் என்று சொல்வார்கள்'' என்றாள் மாதுமை.

அர்ச்சகா சிரித்தாள். நள்ளிரவில் அவள் மெதுவாகச் சிரித்த அந்தச் சிரிப்பு பெரிதாகக் கேட்டது. ''நான் சிரிக்கும் சத்தம் கேட்டு அம்மா எழும்பினாலும் எழும்பி விடுவா. நீ சொல்வதைப் போலப் பல நாட்களாகக் காணாதிருக்கும் அவரை அடிக்கடி கனவு அழைத்து வந்து எனக்குக் காட்டுகிறது. வந்தோம்; பார்த்தோம்; கதைத்தோம் என்றில்லாமல் வெட்கத்தை மறந்து அவர் புரியும் சேட்டைகளைச் சில சமயங்களில் என்னால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. நானும் பெண்ணென்பதை மறந்து மிகவும் கேவலமான முறையில் நடந்து கொள்கிறேன். மறுநாள் அவரை நேரில் காணும் போது அவரைப் பார்க்க முடியாதபடி கனவில் நடந்த செயல்கள் மனதில் எழுந்து விடுகின்றன. அத்துடன் கனவு கண்டு இன்பமடைந்த மனம், தினமும் கனவு காண விரும்புகிறது. சிலவேளைகளில் கனவில் நடந்ததை நனவிலும் செயற்படுத்த முனைகிறது. இன்பமான கனவுகள் நல்லவை தான். ஆனால் அவை தரும் துன்பம் மிகவும் மோசமானவை'' என்றாள் அர்ச்சகா.

''கனவுகள் மிகவும் விசித்திரமானவை. ஒரு நாள் நான் அவருடன் பிரச்சினைப்பட்டுக் கொண்டு கதைக்காமல் இருந்தேன். என்னோடு கதைக்காது விட்டால் விசர் பிடித்தவர்களைப் போல இருக்கும். அவர் அன்று என்ன நினைத்தாரோ தெரியவில்லை. பிடிவாதத்துடன் சென்று விட்டார். மனஸ்தாபம் வந்த அத்தனை வேளைகளிலும் அவர் தான் வலிய வந்து கதைப்பார். நான் பிடிவாதமாக இருந்தால் அந்தச் சந்தர்ப்பத்தை தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி என்னைத் தொட்டுத் தொட்டுக் கதைப்பார். தொட்டுத் தொட்டு மன்னிப்புக் கேட்பார். அதற்காக நான் அவருடன் அடிக்கடி பிரச்சினைப்படுவேன். ஆனால் அன்று என்ன நினைத்தாரோ தெரியவில்லை என்னுடன் அவர் கதைக்கவில்லை. அதன் பின் இரண்டு தினங்கள் அவர் வீட்டுக்கும் வரவில்லை. அதனால் அம்மா அவர் ஏன் வரவில்லை என்று என்னைக் கேட்டா. நான் அவருக்கு அவசியமான வேலை இருக்கென்று கூறினேன்.

அடுத்த மூன்று தினங்களும் அவர் வரவில்லை. அன்று இரவு அவர் கனவில் வந்து தொட்டுக் கதைத்தார்; கட்டியணைத்தார்; முத்தமிட்டார். நான் கிறங்கிப் போனேன் கனவை நிஜம் என்று நம்பி விட்டேன். மறு நாள் காலை மிகவும் உற்சாகமாக இருந்தேன். அவர் வந்தார். அவரைக் கண்டதும் அவர் முதல் நாள் நடந்து கொண்ட விதம் எனக்கு ஆனந்த பரவசத்தைக் கொடுத்தது. ஓடிச் சென்று அவரை அணைத்தேன். பல நாட்களாகப் பலமுறை கேட்டதை அன்று நான் அவர் கேட்காமலே கொடுத்து விட்டேன். அவர் அதிர்ந்து போனார். அவர் சுயநினைவடைய சில நிமிடங்கள் சென்றன.; ''இப்படியான இன்பம் கிடைக்குமென்றால் நான் ஒரு வாரமல்ல ஒரு மாதம் கூட உம்மோடு கதைக்காமல் இருப்பேன்'' என்றார்.

''நேற்று வந்து கதைத்துச் சிரித்துத் தொட்டு அணைத்து விட்டுச் சென்றது. உங்களுக்கு நினைவில்லையா....? இந்த நிலை நீடித்தால் நானொருத்தி இருப்பதும் நினைவில் இல்லாது போய்விடும்'' என்றேன்.

அவர் என்னை அதிசயமாகப் பார்த்தார்; ''நான் யாழ்ப்பாணத்திற்குப் போவதாக உம்மிடம் சொன்னதைக் கோபத்தில் மறந்து விட்டீரா'' என்று கேட்டார். அதன் பின் பலமாக யோசித்துப் பார்த்தேன். நான் கனவில் தான் அவற்றைக் கண்டேன் என்பதை அறிய முடிந்தது. காதலரிடம் வரும் பெரும்பாலான பிரச்சினைகளை கனவுகளும் தீர்த்து வைக்கும். அன்று நனவில் வந்து என்னைச் சமாதானப் படுத்தாத காதலரை கனவு கொண்டு வந்து காட்டி என்னைச் சமாதானப் படுத்தி இன்பத்தைத் தந்து விட்டது'' என்றாள் மாதுமை.

**1214. கனவினான் உண்டாகும் காமம் நனவினான்**
**நல்காரை நாடித் தரற்கு.**

நனவில் வந்து அன்பு செய்யாத காதலரைக் கனவு கொண்டு வந்து எனக்குக் காட்டுவதால், அக் கனவுகளால் எனக்கு இன்பம் உண்டாகிறது.

**காணும் இன்பம்**

''நான் காதலிக்க ஆரம்பிக்கும் போது அவரை அடிக்கடி காண வேண்டும் என்று விரும்புவேன். நான் காதலித்தவரை வீட்டாரும் தீர்மானித்திருந்தமையால் நேரில் அவரைக் கண்டு கதைத்து மகிழும் சந்தர்ப்பங்கள் அதிகமாகக் கிடைத்தன. அதனால் நான் அவரைச் சந்திக்கும் போது எத்தனையோ கற்பனைகளுடன் சந்திப்பேன். ஆனால் அவரைச் சந்தித்ததும் அவற்றையெல்லாம் நான் மறந்து விடுவேன். அவரைக் கண்டால் எனக்குச் சுயநினைவே இராது. அவரோடு என்னென்ன பேச வேண்டும். என்னென்ன கேட்க வேண்டும் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதெல்லாவற்றையும் மறந்து விடுகிறேன். அவரது பிறந்ததினத்தன்று அவருக்கு ஒரு மோதிரம் பரிசளிக்க வேண்டுமென நினைத்திருந்தேன். மோதிரம் வாங்கி விட்டேன். பிறந்ததினத்திலன்று அவரை நான் பூங்கா ஒன்றில் சந்தித்தேன். அவரது பிறந்ததினத்திலன்று அவரைத் தனிமையாகச் சந்தித்து அவரது அழகான நீண்ட விரலை எனது கையில் பிடித்து அதில் மோதிரத்தை அணிய வேண்டுமென நினைத்தேன். அதற்காகப் பலமுறை எனது கையில் அணிந்திருந்து ஒத்திகை பார்த்தேன். ஆனால் அவரைக் கண்டதும் எனக்குப் பயமாக இருந்தது. மோதிரத்தை எடுத்தேன். உடல் வியர்த்தது. ''உங்களுக்கு, எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றேன் எனது குரல் நடுங்கியது மோதிரத்தை நீட்டினேன். அவர் கையை நீட்டினார். அவரது கை நடுங்கிக் கொண்டிருந்தது. நான் கட்டியிருந்த கற்பனைக் கோட்டை திடீரென்று சரிவதைப் போல இருந்தது. மோதிரத்தை அவரிடம் கொடுத்தேன். அதை அவர் வாங்கிப் பார்த்து விட்டு தனது பைக்குள் வைத்தார். எனக்கு ஏமாற்றமாக இருந்தது. நல்லதொரு சந்தர்ப்பத்தைத் தவற விட்டு விட்டேனே எனக்கவலைப்பட்டேன்.

''அன்று இரவு அவர் கனவில் வந்தார். நேரில் பார்ப்பதை விட மிகமிக அழகாக இருந்தார். ''உங்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறியபடி மோதிரத்தை எடுத்தேன். அவர் புன்முறுவலுடன் தனது வலது கரத்தை நீட்டினார். அந்த உறுதியான கரத்தில் பொலிவுடன் இருந்த மோதிர விரலைப் பிடித்து நான் கொண்டு சென்ற மோதிரத்தை அவருக்கு அணிவித்தேன். அவர் மிகவும் சந்தோசமாக இருந்தார்; ''ஒரு காதலி தனது காதலனுக்கு கடையில் வாங்கியா பரிசு கொடுக்க வேண்டும். அன்பான காதலி காதலனைச் சந்திக்க வரும்போதெல்லாம் மனம் நிறையப் பரிசுப் பொருட்களைக் கொண்டு வருகிறாள். தான் கொண்டு வந்த பரிசைத் தருவதைத் தான் காதலன் விரும்புவான்'' என்றார். அவரது வார்த்தைகள் இன்பத்தை அளித்தாலும் நாணம் என்னைத் தொற்றிக் கொண்டது. மெல்லத் தலையைக் குனிந்தேன்; ''மாதுமை அவர் உன் காதலர். அத்துடன் வீட்டாரால் உனக்கு நிச்சயிக்கப்பட்டவர். அவர் கேட்பதைக் கொடுத்து அவரையும் என்னையும் திருப்திப்படுத்து'' என்று எனது மனம் கூறியது. நான் மெல்ல அருகில் சென்றேன். அவர் என்னை இறுக அணைத்தார். மெல்ல தலையை நிமிர்த்தி அவரைப் பார்த்தேன். அவரது கை எனது நாடியைப் பிடித்து உயர்த்தியது. அப்பப்பா அப்படியான ஓர் இன்பத்தை நிஜத்தில் அனுபவிக்கவில்லை. அவரை நேரில் கண்டால் தோன்றும் வெட்கம் நாணமெல்லாம் கனவில் எங்கோ ஓடி மறைந்து விடுகின்றன. அதனால் துணிச்சல் வந்து விடுகிறது. அத்துடன் அவர் எதைச் செய்தாலும் அதைத் தடுக்க மனமில்லாமல் இருக்கிறது. முன்பு நான் காதலரை நேரில் சந்திக்கும் போது அப்போது மட்டும் தான் இன்பமாக இருந்தது. கனவில் காண்பது எப்போதும் இன்பமாக இருக்கிறது'' என்றாள் மாதுமை.

காதலையும் கனவையும் படைத்த கடவுளை நாம் வாழ்த்த வேண்டும். காதலைப் படைத்து விட்டுக் கனவைப் படைக்காதிருந்தால் காதலரில் அனேகமானோர் பைத்தியக் காரர்களாகத் தான் உலகில் வாழ்வார்கள். கனவு இல்லாவிட்டால் எனக்குப் பைத்தியம் பிடித்து விடும். கனவு தான் எனது காதலரை நான் மறக்காமல் வைத்திருக்க உதவுகிறது'' என்றாள் அர்ச்சகா.

**1215. நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவும்தான்**
**கண்ட பொழுதே இனிது.**

எனது காதலரை நேரில் கண்ட போது உண்டான இன்பம் அப்பொழுது மட்டும் இனிதாக இருந்தது. இப்பொழுது காணும் கனவும் கண்டபொழுது மட்டுமே இன்பமாக உள்ளது.

**பிரியாமல் இருப்பர்**

''காதலை விட்டு விட்டு வாழ்க்கையை எடுத்துக் கொண்டாலும் மனிதன் துன்பங்களில் இருந்து விடுபடக் கனவே உதவி செய்கிறது. ஒருவன் செயல்களின் மூலம் பெருந்தொழில்களையோ,

கல்வியையோ மேற்கொள்ளும் போது தனது அவதானக் குறைவாலேயோ, வேறெந்தக் காரணங்களினாலேயோ தோல்வியடைகிறான். என்று வைத்துக் கொண்டால் அவனை அத்தோல்வியிலிருந்து மீட்பது கனவுகள் தான். ஒரு செயலைப் பற்றிக் கனவுகள் கான்பதால் தான் அச்செயலில் வெற்றியடைய முடியும். கனவுகள் காதலா்களுக்கு மட்டுமல்ல மற்றவா்களுக்கும் பெரும் இன்பத்தைக் கொடுக்கின்றன'' என்றாள் அா்ச்சகா.

''கனவுகள் அழிந்து விட்டால் உலகில் உள்ள எல்லாம் அழிந்து விடும். இல்லாவிட்டால் அவை தன் நிலையை இழந்து விடும். மதமும், நாணமும், கல்வியும், ஒழுக்கமும் இருந்த இடத்தில் வன்முறையும் காமமும் வந்தமா்ந்து விடும். அன்புவற்றி, அந்த இடத்தில் பணம் ஆட்சி புரியும். போட்டி பொறாமை வஞ்சகம் சூது போன்றவை தான் நீதியான மாா்க்க மென்ற நிலை உண்டாகும். இதை உணா்ந்து தான் கடவுள் கனவைப் படைத்தாா். கனவு துன்பத்தை இன்பமாக்கும் வல்லமை கொண்டது. ஏழையைக் குபேரனாக்கும் ஆற்றல் மிக்கது. பாமரனைப் பண்டிதனாக்கும் வல்லமை உள்ளது. அப்படியான கனவு காதலரை என்ன பாடு படுத்தும் தெரியுமா? கண்களை மூடினாள் மாதுமை. அவளது மனத்திரையில் விபுலன் தோன்றி நளினமாகச் சிரித்தான். வழமையாக அவன் அவளைப் பாா்த்துச் சிரிக்கும் போது எந்தவிதமான உணா்வுகளும் இராது. அன்று அவளது கண்களுக்குள் தோன்றி அவன் சிரித்த சிரிப்பில் மோகம் நிறைந்திருந்தது. அழகிய ஒரு சிவந்த ரோஜா முழுமையாக மலா்ந்திருக்கும் நிலையில் உள்ள ஒரு சிலிா்ப்பு அதில் பொதிந்திருந்தது. மாது உனது இதழ்களிலா போதை இருக்கு..? என்று கேட்பதைப் போல இருந்தது.
''அன்பானவரே இன்னும் சிறிது நேரம் சிரியுங்கள் வெண்மையாகப் பளீச்சிடும் முத்தை விட உங்களது பற்கள் ஒளி வீசுகின்றன. என் அருகே வாருங்கள்...'' என்று அவளது உதடுகள் பிரிந்து மூடின.

''கனவு காணத் தொடங்கி விட்டால் இனி நான் பேசுவதொன்றும் உனக்குக் கேட்காது. நீ சொல்வதைத் தான் நான் கேட்க வேண்டும். இப்போது அவருடன் பூங்காவில் இருக்கிறாயா? இல்லை கடற்கரையில் இருக்கிறாயா? உனது முகமலா்ச்சியைப் பாா்த்தால் கடற்கரையில் இருப்பதைப் போலத் தான் இருக்கிறது. கடற்கரையில் தென்னை மரத்திற்குப் பின்னால் அவா் சரிந்து அமா்ந்திருக்கிறாா். நீ அவரின் மடியில் படுத்திருக்கிறாய். அருகில் கடலை விற்கும் பையன் ஒருவன் பலமாக கத்திக் கொண்டிருக்கிறான். உங்களுக்கு அது கேட்கவில்லை. கேட்கும் நிலையில் நீங்கள் இல்லை. என்னடி சிரிக்கிறாய். நீ சிரிக்கிறத்தைப் பாா்த்தால் ஏதோ ஒரு அறுவை அறுத்திருக்கிறாா் போலத் தெரிகிறது'' சிரித்தாள் அா்ச்சகா.

'' போடீ, உனக்கு எதற்கெடுத்தாலும் சிரிப்புத்தான். எனக்கு மஞ்சள் ரோஜா என்றால் உயிா். அவா் பூந்தோட்டத்திற்கு வாரத்திற்கு இரண்டு தடவைகள் சென்று மஞ்சள் ரோஜாப்பூக்கள் வாங்கி வந்து எனக்குத் தருவாா். ஒரு நாளென்றாலும் அவா் எனது பின்னலில் அதைச் சூடியதில்லை. அதை அவா் சூடி விடுவாா் என்று பல நாட்களாக ஆசைப்பட்டேன். அதை நசுக்காகச் சொல்லியும் பாா்த்தேன். எனினும் அவா் அதைத் தனது கவனத்தில் எடுத்ததில்லை. இப்பொழுது சற்றுக் கண்அயா்ந்து விட்டேன். ஓரிரு கணங்கள் தான் அதற்கிடையில் அவா் பூந்தோட்டத்திற்குச் சென்று மஞ்சள் ரோஜாப் பூக்களை வாங்கி வந்து விட்டாா்; ''பிறகு ... பிறகு..'' அவசரப்படுத்தினாள் அா்ச்சகா. பிறகென்ன எனது நீண்ட கூந்தலை கையால் அழகாகப் பின்னினாா். பின்பு பெரியதொரு ரோஜாப்பூவை கூந்தலில் செருகினாா். எஞ்சியிருந்த பூக்களை எனது பின்னலில் செருகினாா். நான் மெய்மறந்து போனேன். உடல் சிலிா்த்து விட்டது. அதனால் அதற்கு மேல் அவா் செய்ததொன்றும் எனக்குத் தெரியவில்லை. நனவு என்று ஒன்று மட்டும் இல்லை யென்றால், கனவிலே வந்து கூடி மகிழ்ந்து எல்லையில்லாப் பேரின்பத்தைத் தரும் எனது காதலா் என்னை விட்டுப் பிரியாமல் என்னுடன் சோ்ந்திருப்பா்'' என்றாள் மாதுமை. அவளது முகம் பொங்கிப் பூரித்தது.

**1216. நனவுஎன ஒன்றில்லை ஆயின் கனவினால்**
**காதலா் நீங்கலா் மன்.**

நனவு என்று ஒன்று இல்லாமல் இருக்குமானால், கனவில் வந்த காதலா் என்னை விட்டுப் பிரியாமலே இருப்பா்.

### கொடியவா்

மாதுமையின் சிவந்த முகம் மேலும் சிவந்து பொலிந்து பளபளத்தது. உயா்ந்த பண்பு, ஒழுக்கம், ஆண்மை, தயவு தாட்சணியம் மிக்கவன் விபுலன். அப்படிப்பட்ட விபுலன் பிரிந்திருப்பது அா்ச்சகாவுக்குக் கவலையைக் கொடுத்தது. கடமை உணா்வும், காதலின் பெருமையை உணா்ந்தவனுமான விபுலன் தனது சகோதரா்களின் நல்வாழ்வுக்காகச் சில காலம் பிரிந்திருக்க விரும்பினான். ஆனால் எனது காதலா் எனக்கு அருகில் இருந்தும் என்னை வந்து பாராதிருந்து எனக்குத் தாங்க முடியாத வேதனையைத் தருகிறாா். காதலிக்கும் போது என்னை மயக்க எத்தனை வாா்த்தைகளைச் சொன்னாா். அவரின் அந்த வாா்த்தைகளை நம்பித்தானே நான் அவரை என்மனதில்

இருத்தி அர்ச்சித்தேன். எனது துயரைப் புரிந்து கொள்ள முடியாதவராக இருக்கும் கொடியவரான எனது காதலர் கனவில் வந்து என்னை வாட்டுவதேன்...? விம்மினாள் அர்ச்சகா.

கனவுலகில் விபுலனுடன் உறவாடிக் கொண்டிருந்த மாதுமை திடுக்கிட்டுத் திரும்பி அர்ச்சகாவைப் பார்த்தாள். இரவின் கருமையிலும் அவளது கண்களில் தேங்கி நின்ற கண்ணீரின் பளபளப்பு அவளுக்குத் தெரிந்தது; "நான் அவரைப் பிரிந்து ஆறுமாதங்களாகத் துன்பமில்லாமல் இருக்கிறேன். ஆறு நாள் பிரிவை உம்மால் தாங்க முடியாதோ..?" அதட்டினாள் மாதுமை.

"நேரில் வந்து என்னை மகிழ்விக்காத அவர், ஏன் எனது கனவில் வரவேண்டும். உனக்கு அவர் கனவில் வந்து தொல்லைகள் தருவது இன்பமாக இருக்கலாம். ஆனால் எனக்குத் துன்பமாக இருக்கிறது. உள்ளங்கையில் இருக்கும் பொருளைப் பார்க்கக் கண்ணாடி தேவையில்லை".

அதற்கு மாதுமையால் பதில் கூறமுடியவில்லை. "படு விடிந்த பின்பு முதல் வேலையாக நான் கஜேந்திரனின் வீட்டுக்குச் சென்று, நகுலனின் காலில் விழுந்தாவது அவனைக் கூட்டிவாருங்கள். அவன் வராவிட்டால் அர்ச்சகாவுக்குச் சித்தப்பிரமை பிடித்து விடும். பின்பு வந்தால் அவள் அணைக்கமாட்டாள் கடிப்பள்" என்று சொல்கிறேன் என்றாள்.

அர்ச்சகா தன்னை மறந்து ஒரு கணம் சிரித்தாள். வெளியே பறவைகள் கலகலக்கும் சத்தம் கேட்கிறது. இன்னும் சிலமணி நேரத்தில் விடிந்து விடும். இவ்வளவு நேரமும் நான் தூங்கவில்லை. துன்பத்தில் உழன்றேன். எந்த வேளையிலும் எந்தத் துன்பமும் உன்னை நெருங்க விடாது காப்பேன் என்ற அவர், இப்பொழுது தானே பெருந்துன்பத்தை உண்டாக்கி விட்டு அதைப் போக்க முடியாமல் இருக்கிறாரே... ஓரிரு நிமிடங்கள்... இல்லை இல்லை ஓரிரு கணங்கள் வந்து என்னைச் சந்திக்க முடியாத அவரா என்னை வைத்துக் காப்பாற்றப் போகிறார்" விம்மினாள் அர்ச்சகா.

" விசர் முற்றிவிட்டது. இனி உனக்கு நகுலன் தான் மருந்து தரவேணும். எனக்குக் கண்கள் எரிகின்றன. அத்துடன் அவரைக் காண வேண்டும். படுத்துறங்கு என்று கண்கள் எனக்குக் கட்டளையிடுகின்றன. நீ கொஞ்சநேரம் அழு அப்பத்தான் உனது துயரம் தீரும்..." என்று கதைத்துக் கொண்டிருந்த மாதுமை குறட்டை விட்டாள். அவளது குறட்டை ஒலி அவ் அறையில் பெரிதாகக் கேட்டது.

"அறிவுள்ள மனிதர்களையும் மனம் ஆட்டிப் படைக்கும் வல்லமையைப் பெற்றது. பெரும்பாலானவர்களின் வெற்றிக்கும் தோல்விக்கும் மனம் தான் காரணம் என்று அர்ச்சகா ஒரு நூலில் படித்தது அப்போது அவளின் ஞாபகத்திற்கு வந்தது. அறிவுள்ளவர்களையே ஆட்டிப்படைக்கும் மனம் காதலரை எப்படியெல்லாம் ஆட்டி அசைக்கும் அவரைக் கண்டு மகிழ்வதும் மனம் தான் காணாமல் துன்பப்படுவதும் மனம் தான். இந்த மனத்தின் ஆற்றலை ஞானிகளால் கூட அளந்தறிய முடியாது" என்று நினைத்தாள் அர்ச்சகா.

அர்ச்சகாவின் தாயாரான கமலேஸ்வரி நித்திரை விட்டு எழுந்தால் அதிகாலை ஐந்துமணி என்று அர்த்தம். கமலேஸ்வரி எழுந்து அடுப்படி மின் விளக்கை ஏற்றிய போது சுவர் மணிக்கூடு ஐந்துதரம் அடித்து ஓய்ந்தது. அர்ச்சகா மாதுமையைப் பார்த்தாள். அவ்வறையில் எரியும் இரவு வெளிச்சத்தில் அவளது முகம் தெரிந்தது. அவள் அழகாகச் சிரித்தாள்; "ஏதோ இனிய கனவு" என்று அர்ச்சகா நினைத்தாள்.

**1217. நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என்எம்மைப் பீழிப் பது?.**

நனவில் வந்து எனக்கு அன்பு செய்யாத கொடுமையை உடைய அவர், கனவில் மட்டும் வந்து வருத்துவது என்ன காரணத்துக்காக.

## தூங்கும் விழிக்கும் வேளைகள்

மாதுமையின் நெஞ்சில் அவள் தலைக்கு வைத்துப் படுத்திருந்த தலையணை இருந்தது. அதை இறுகக் கட்டியணைத்த மாதுமை; "உங்களை நான் விடமாட்டன்... விடமாட்டன்" என்னை விட்டுப் போகவிட மாட்டன்" என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

மாதுமையைத் தட்டி எழுப்பச் சென்ற சென்ற அர்ச்சகாவின் கை தானாகப் பின் வாங்கியது; "பலமாதங்களாக விபுலனைப் பிரிந்த துயரத்தில் வாடும் மாதுமை பாவம் கனவிலாவது பேசி

மகிழட்டும்'' என்று நினைத்தவாறு மாதுமையின் முகத்தைப் பார்த்தாள். இரவிற்காக ஏற்பட்டிருந்த மெல்லிய வெளிச்சத்தில் மாதுமையின் முகம் பரவசமடைந்தது நவரசக் கோலங்களைக் காட்டியது.

மாதுமையின் தோள்களை இறுக அணைத்தவாறு விபுலன் இருந்தான்; ''அன்பே உம்மைப் பிரிந்து என்னால் வாழமுடியாததால் இரண்டு தினங்கள் ஓய்வெடுப்பதாகக் கூறிவிட்டு உம்மைப் பார்க்க வந்தேன். நான் உம்மோடு இல்லாததால் நீர் மெலிந்து விட்டீர். உமது கன்ன எலும்புகள் வெளியே தள்ளப்பட்டிருப்பதால் உமது அழகு சீர்குலைந்து விட்டது. ஏன் சாப்பிடவில்லையா...? நன்றாகச் சாப்பிட்டுக் கொழுத்திருந்தால் தான் எனது மனம் குளிரும். என்று சொல்லிவிட்டுச் சென்றேன் அதை மறந்து விட்டீரா? துயரத்துடன் கேட்டான் விபுலன்.

''மகிழ்வுடன் எந்தச் செயலையும் செய்தால் தான் வெற்றியளிக்கும். நான் உணவருந்த ஆயத்தமாகு முன்பே உங்களது நினைவுகள் மனதில் கிளர்ந்தெழுந்து மனதையும் வயிற்றையும் நிரப்பி விடும். அதன் பின் என்னால் எப்படி உணவை உண்ண முடியும். நீங்கள் அருகில் இருந்தால் அடிக்கடி சாப்பிட்டு விட்டாயா'' என்று கேட்பீர்கள். நீங்கள் சென்ற பின்பு யார் என்னைச் சாப்பிடுமாறு கேட்டார்கள். நான் சாப்பிடாவிட்டால் பதறுவீர்கள். வைத்தியரிடம் அழைத்துச் செல்வீர்கள், ஊட்டி விடுவீர்கள். நீங்கள் ஊட்டி விட்டால் நான் வழமையாக உண்பதை விட சற்று அதிகமாக உண்பேன். இபபோ ஊட்ட எனக்கு யார் இருக்கிறார்கள்?''

''அதற்குத் தானே நான் வந்திருக்கிறேன். சாப்பிடும் வாயைத் திறவும்.''

அர்ச்சகா மாதுமையைப் பார்த்தாள். மாதுமை சிணுங்கியவாறு வாயைச் சிறிது திறந்தாள். '' இது போதாதா... இன்னும் வாயைத் திறக்க வேண்டுமா...? மூக்குக்கை உணவை வைக்கிறீர்கள். கொஞ்சநாட்களுக்கு என்னை விட்டுப் பிரிந்தால் எல்லாவற்றையும் மறந்து விடுகிறீர்கள்'' கோபமாக மாதுமை சொன்னது அர்ச்சகாவுக்குக் கேட்டது; ''கொடுத்து வைத்தவள் நகுலன் எனது கனவுகளில் வருகிறாரில்லையே... நான் அவரது எண்ணங்களை விட்டு விட்டுத் தூங்கினால் தானே அவர் வருவார்'' என்று நினைத்தவாறு கட்டிலில் படுத்தாள் அர்ச்சகா. ''விடிவதற்குள் உறங்கினால் அவர் எனது கண்களுக்குள் வந்து விடுவார்'' என்று நினைத்தவாறு கட்டிலில் படுத்துப் போர்வையால் தனது உடலை மூடினாள்.

நகுலன் அவளது போர்வையை மெல்ல விலக்கினான். போர்வையை விலக்கும் நகுலனைப் பார்த்தபடி செயற்றுப் போயிருந்தாள் அர்ச்சகா. அவன் போர்வையை நீக்குவதைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு வரவில்லை; '' நான் வருவேன் என்று நீர் எதிர்பார்க்கவில்லையா...?'' என்று கேட்டான் நகுலன். அவனது கைகள் அர்ச்சகாவின் தோளைப்பற்றி தன்னுடன் இறுக அணைத்தான்.

''அம்மா வீட்டில் இருக்கும் போது என்னைச் சந்திக்கின்ற துணிவு உங்களுக்கு எப்படி வந்தது?''

''உம்மை அணைத்து மகிழவேண்டு மென்று நினைத்தவுடன் துணிவு வந்து விட்டது'' என்று சொல்லும் போது தாயின் குரல் கேட்டது; ''அம்மா வாறா போங்கோ போங்கோ'' என்று எழுந்தாள் அர்ச்சகா. எதிரில் மாதுமை குளித்து விட்டு வந்து நின்றாள்.

'' என்னடி கனவு கண்டாயா..?'' என்று கேட்டாள் மாதுமை.

பெருமூச்சு விட்டாள் அர்ச்சகா. ''தூங்கும் போது கனவில் வந்து எனது தோளைப் பற்றினார். நான் அம்மா கண்டு விடுவா எனப்பயந்து எழ அவர் எனது நெஞ்சுக்குள் புகுந்து விட்டார்'' என்று தனது நெஞ்சைக் கைகளால் பொத்தினாள் அர்ச்சகா.

**1218. துஞ்சும்கால் தோள்மேலர் ஆகி விழிக்கும்கால்**
**நெஞ்சத்தர் ஆவர் விரைந்து.**

தூங்கும் போது கனவில் வந்து என் தோள்களைத் தழுவும் எனது காதலர், நான் விழித்ததும் விரைந்து சென்று எனது நெஞ்சுள் புகுந்து விடுகிறார்.

## அறியாதவர்கள்

அர்ச்சகா நெஞ்சைத் தனது கைகளால் பிடித்தபடி நின்றாள்; ''பாவமடி நகுலன். நீ, நெஞ்சில் நுழைந்த அவர் வெளியே சென்று விடாமல் உள்ளேயே இருக்கட்டும் என்ற நல்எண்ணத்தில்

நெஞ்சைப் பொத்துகிறாய். உள்ளே இருக்கின்ற அவர், உனது உடும்புப் பிடியைத் தாங்கமுடியாது அவதிப்படப் போகிறார். கையை எடு'' என்றாள் மாதுமை.

அர்ச்சகா எதுவும் பேசவில்லை. உதடுகள் பிரியாது சிரித்தாள். அப்பொழுது தொலைபேசி மணி அடித்தது. அர்ச்சகா சென்று தொலைபேசியை எடுத்தாள்; ''நான் மாதுமையின் மைத்துனி பேசுகிறேன். மாதுமையை கதைக்கச் சொல்லுங்கள்'' என்று ஒரு பெண்குரல் சொன்னது.

''மாதுமை உனது மைத்துனி உன்னோடு பேசவேண்டுமாம்'' என்றாள் அர்ச்சகா. மாதுமை தொலைபேசியில் பதினைந்து நிமிடங்கள் பேசினாள். தொலைபேசியில் உரையாடிய பின்பு மாதுமையின் முகம் சோகத்தால் கறுத்திருந்தது.

''என்னடீ... ஒரு மாதிரி இருக்கிறாய்?'' அர்ச்சகா கேட்டாள்.

மாதுமையின் கண்கள் கலங்கின; '' விபுலனது தாயாருக்கு இரத்த அழுத்தம் கூடிவிட்டதாம். நான் உடனே கொழும்புக்குச் செல்ல வேண்டும். அவர் தான் ஒரே ஒரு மகன் தாயினுடைய சகோதரனின் மகளைத்தான் விபுலனுக்குத் திருமணம் செய்ய அவர்கள் விரும்பினார்கள். ஆனால் விபுலன் என்னை விரும்பினார். விபுலனது தந்தையார் எனது தந்தையாரின் உயிர் நண்பர். அவர் என்னைத் தான் மருமகளாக எடுக்க நினைத்திருந்தாராம். நாம் இருவரும் விரும்பியது அவருக்கு மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்தது. இதை விரும்பாத அவர்கள் எமக்குத் தொல்லை தந்தபடியே இருக்கிறார்கள். மாமிக்குச் சுகவீனமென்றால் மாமா தொலைபேசியில் சொல்லியிருப்பார். நேற்று இரவும் கதைத்தவர். மாமியின் சுகத்தைப் பலமுறை நான் விசாரித்தனான். ''மாமியை காதலித்துக் கலியாணம் செய்த நான் அக்கறையுடன் பராமரிப்பேன். மாமியைக் கொஞ்ச நாட்களுக்கு மறந்து ஊரைச் சுற்றிப்பார்'' என்றவர். ஆனால் எனது மைத்துனி முறையான ஒரு பெண்தான் இப்பொழுது பேசியது; ''மனிசிசாகக் கிடக்குது நீ உங்கை என்ன செய்கிறாய். என்றாள். அதைவிட விபுலன் உன்னை அன்பாகக் காதலிக்கவில்லை. தகப்பனின் விருப்பத்திற்காகத் தான் உன்னைக் கட்டச் சம்மதித்தவன். உன்னில் அன்பிருந்தால் உன்னை விட்டுப் பிரிந்து போவானா..? என்று கேட்டாள். விபுலனின் உறவினர்கள் எல்லோரும் என்னை ஏசுகிறார்களாம். இருந்துபார் கடைசிவரையும் வெளிநாட்டில் இருந்து விபுலன் திரும்பி வரமாட்டான். அவன் அங்கு யாராவது ஒரு பெண்ணைத் திருமணம் செய்து விடுவான். உன்னில் மோகமிருந்தால் ஏன் அவன் உன்னை விட்டு விட்டுப் போகிறான்'' என்றாள். அதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது'' அழுதாள் மாதுமை.

''காதல் என்றால் எதிர்புக்கள்வரத்தான் செய்யும். வித்தியாவுக்கு எத்தனை துன்பங்கள் வந்தன என்று உனக்குத் தெரியும் தானே. அதை விடக் கூடுதலாகவா உனக்கு வரப்போகிறது. வித்தியாவின் காதலைத் தாயும் மாமனும் எதிர்த்தனர். உனது காதலை இரு வீட்டாரும் ஒத்துக் கொண்டுள்ளனர். பிறகேன் கவலைப்படுகிறாய்'' என்று கேட்டாள் அர்ச்சகா.

''அவரையோ, அவரது குடும்பத்தினரைப் பற்றியோ யாராவது குறை சொன்னால் எனக்குக் கோபம் வரும். என்னைப் பற்றியாரும் எதுவும் சொல்லலாம். என்னில் விருப்பமில்லாமல் தான் அவர் பிரிந்து சென்றார் என்றும் சொல்லட்டும். தினமும் அவர் எனது கனவில் வந்து என்னுடன் உறவாடி விட்டுத்தானே செல்கிறார். நேற்று இரவு ஒன்பது மணிக்கு வந்தார். விடிய ஆறுமணிக்குத் தானே எனது அணைப்பை விட்டு நீங்கிச் செல்கிறார். இது தெரியாத எனது உறவினர்கள் அவரைக் குறைகூறுகிறார்கள்'' என்று மாதுமை கூறும் போது அவளது தந்தை அங்கே வந்தார்; ''யாரம்மா தொலைபேசியில் உன்னை அழைத்தது'' என்று கேட்டார்.

மாதுமை தொலைபேசியில் தான் உரையாடியவற்றைச் சொன்னாள். சிவசரவணபவன் சிரித்தார்; ''அவர்களுடைய கதையை நீ ஏன் கேட்கிறாய் மாமிக்கு வருத்தமென்றால் மாமா சொல்வார் தானே. இதற்காக ஏன் கவலைப்படுகிறாய்?'' விடிய எழுந்தவுடன் அழுவதா? கண்களைத் துடை'' என்றவர் அர்ச்சகாவின் பக்கம் திரும்பி; ''அவர்களைப் பற்றி உனக்குத் தெரியும் தானே அர்ச்சகா. இவளுக்கு அவர்களைப் பற்றிச் சொல்லு'' என்றவர் மாதுமையின் பக்கம் திரும்பி; ''குழந்தைப்பிள்ளை மாதிரி அழாதை. தொலைபேசியில் மாமாவைக் கேள்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

**1219. நனவினால் நல்காரை நோவர் கனவினால்**
**காதலர்க் காணா தவர்.**

எனது காதலர் கனவில் வந்து இன்பம் தருவதை அறியாதவர்கள், அவர் நனவில் சந்தித்து இன்பம் தரவில்லை என்று பழிக்கின்றனர்.

**ஊரவரின் கனவில்**

‘‘அப்பா எதையும் சாதாரணமாகத் தான் எடுத்துக் கொள்வார். எனது பெற்றோரும் உறவினர்களும், அவரது பெற்றோரும் எமது காதலை ஏற்றுக் கொண்டனர். சில உறவினர்கள் தான் பொறாமை காரணமாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஊரில் உள்ள அனைவரையும் ஒரு விடயத்தில் திருப்திப்படுத்த முடியுமா? என்று நான் யோசிப்பதுண்டு’’ என்றாள் மாதுமை.

‘‘பிறகேன் கவலைப்படுகிறாய்? உனது தந்தையார் தான் செய்தது நியாயமான செயலென நினைக்கிறார். தூய மனத்துடன் செய்யும் செயல்களும் தூய்மையானவைதான். திருமண விஷயத்தில் இருவீட்டுப் பெற்றோர்களின் சம்மதம் தான் முக்கியம். மூன்றாவது மனிதரைப் பற்றி ஏன் சிந்திக்க வேண்டும்? நீ உனது மனதை வருத்திக் கொண்டிருப்பது, உனது சொந்தச் செயல்களாலே உருவாக்கப்பட்டது. அதை உன்னால் மட்டும் தான் நீக்க முடியும். தேவையில்லாத எண்ணங்களை மனதில் உருவாக்கிக் கவலைப்படுவதால் ஆரோக்கியம் கெட்டு விடுகிறது. கற்பனைகள் செய்யயாதே. தைரியமாக இரு, பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக நடந்தால் தான் துன்பப்படல் வேண்டும். பெற்றோரால் தீர்மானிக்கப்பட்டதை ஏன் நீ உனது தோளின் மீது தூக்கிப்போட்டிருக்கிறாய். உனது மகிழ்வுக்குக் காரணமானவள் நீதான் என்பதை உரிமையுடன் உணர்ந்து கொள். ஏற்கனவே நடந்து முடிந்தவற்றை எண்ணி ஏன் கவலைப்படுகிறாய். நடந்து முடிந்த அந்த விஷயத்தை இனி மறுபரிசீலனை செய்ய முடியுமா இல்லை விட்டு விட முடியுமா? உனது வீணான சிந்தனைகள் அதற்கேற்ற பயனைத் தந்தே தீரும் என்பதை நீ உன்மனதில் இருத்த வேண்டும்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘நீ சொல்வதெல்லாம் எனக்குப் புரிகிறது. அந்த நேரம் திடமாக இருக்கும் நான் யாராவது ஒருவர் அவரைப்பற்றிக் குறையாகச் சொன்னதும் பலவீனமடைந்து விடுகிறேன். அவர் என்னை விட்டுப் பிரிந்தது அன்பில்லாமலா..? இல்லை என்னில் கொண்ட வெறுப்புக் காரணமாகவா..? அல்லது பெற்றோரின் வற்புறுத்தல் காரணமாகவா..? அப்படியொன்றும் இல்லையே என்மீது அவர் அளவில்லாத அன்பை வைத்திருக்கிறார். தினமும் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறார். அதைவிட நான் கண்ணயரும் வேளைகளிலெல்லாம் என் கண்களுக்குள் வந்து விடுகிறார். இதையெல்லாம் என்னைப் பற்றிப் பழித்துப் பேசும் ஊரவர்கள் அறிவார்களா...? அவர் என்னைப் பிரிந்து சென்றன்றே பலரும் பலவிதமாகப் பேச ஆரம்பித்து விட்டனர். அவர்கள் எனக்குக் கேட்காதளவில் பேசினால் பரவாயில்லை. என்முன்னாலே பேசுகிறார்கள். இரண்டு வாரங்களுக்கு முன்பு ஒரு திருமணத்திற்குச் சென்றேன். அங்கு கூடியிருந்தோர் பலவிதமாக என் முன்னாலேயே பேசிச் சிரித்தனர்; ‘‘ஒரு பெண் காதலரைப் பிரிந்திருப்பது மிகக் கொடுமையானது. நீ ஏன் அவரை வெளிநாட்டுக்கு அனுப்பினாய். பணத்தை எப்போது வேண்டுமானாலும் சம்பாதித்துக் கொள்ளலாம். இளமையைச் சம்பாதிக்க முடியுமா..?’’ என்றாள் ஒருத்தி. ‘‘இளவயதில் காதலரை பணம்தேட அனுப்பி விட்டுக் கிழவரான பின்பு என்ன செய்யப் போகிறாய்’’ என்றாள் இன்னொருத்தி இப்படி அவர்கள் கதைக்கும் கதைகளை நினைக்க எனக்கு நெஞ்சு வெடித்து விடும் போலுள்ளது. சிறிது நேரத்திற்கு முன்பு மைத்துனி முறையான ஒருத்தி என்னைக் கேவலமாகப் பேசினாள்’’

‘‘ஊர்வாயை மூட உலைமூடி இல்லை என்பார்கள். ஊரவர் நாம் வாழ்ந்தாலும் ஏசுவார்கள், தாழ்ந்தாலும் ஏசுவார்கள் நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களையும் அவதானித்து அதில் உள்ள குறை நிறைகளைக் கதைப்பது அவர்களது பொழுது போக்கு. நனவில் உன்னை விட்டு நீங்கினார். என்று உனது காதலரைப் பழித்துப் பேசும் இந்த ஊரவரின் கனவில் உனது காதலரைச் சென்று பேசச் சொல்’’ சிரித்தாள் அர்ச்சகா.

‘இனி எனது கனவில் வந்தாரேயானால் அப்படித்தான் சொல்ல நினைத்திருக்கிறேன். நீங்கள் என்னை விட்டுப் பிரிந்து சென்று விட்டதாகக் கதைப்போரின் கனவில் சென்று நாம் நனவில் பிரிந்தாலும் கனவில் சேர்ந்திருந்து மகிழ்ந்து கூடிக்கூலாவுகிறோம். என்று சொல்லுங்கள் என்று சொல்லப்போகிறேன்’’ என்றாள் மாதுமை. அப்படிச் சொன்ன போதும் அவளது முகம் சோகத்தால் கறுத்திருந்தது.

**1220. நனவினால் நம்நீத்தார் என்பர் கனவினால்**
**காணார்கொல் இவ்வூ ரவர்.**

நனவில் காதலர் என்னை விட்டுப் பிரித்து விட்டார் என்று இகழ்வாகப் பேசும் இந்த ஊரவர், அவர் எனது கனவில் வந்து என்னை மகிழ்விப்பதை அறிய மாட்டார்கள்.

## முடிவு காலம்

மாதுமையும் அர்ச்சகாவும் கடற்கரையில் இருந்தனர். மெல்லிய செம்மை நிறங் கொண்ட பளபளப்பற்ற பட்டுத்துணி போல மங்கிய ஒளி கடற்கரையெங்கும் சூழ்ந்திருந்தது. கடலுள் புதைந்து

கொண்டிருந்த சூரியனைப் பார்த்துக் கொண்டிருந்தாள் மாதுமை. சூரியனுக்கு மிக அருகே சூரியனைத் தொட்டுவிடும் நோக்கில் ஒரு சிறிய படகு சென்று கொண்டிருந்தது. மிகவும் அழகாக இருந்தது. விபுலனோடு இருந்தால் அந்தப் படகைப் பற்றி ஒரு கவிதை சொல்வான். கவிதைக்குரிய பண்புகள் இல்லாமல் அடுக்கு வசனங்களாக இருந்தாலும் அர்த்தமுள்ளதாக அது இருக்கும்.

மங்கிய அந்த மாலைப் பொழுது காதலர்களின் உள்ளங்களை எவ்வளவு மகிழ்ச்சிக்குள்ளாக்கும் என்பதை அவள் அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிறாள். இன்று அவனில்லாத அந்த மாலைப் பொழுது அவளுக்குக் கசந்தது.

“அன்பானவரே, ஏட்டில் சுரைக்காயை எழுதி வைத்துப் பாப்பது போல் என் மனதில் உன்னை எண்ணத்தால் எழுதி எத்தனை நாள்ப் பார்ப்பது. மாலைவேளையில் மலையையும் தகர்க்கும் மன்மதன் என் மலர் போன்ற மனதில் நுழைந்து என்னவெல்லாம் செய்கின்றான் என்னவரே, என்னால் முடியவில்லை. எண்ணங்கள் கசந்து பாலும் கசக்கும் நாட்களை என்னுள்ளே எண்ணுகிறேன். கணங்கள் நகராமல் நின்று மனத்தை வருத்துகிறது. மாலைப் பொழுதில் நாம் கூடியிருந்த அந்தப் பொன்னாலான காலத்தை எப்பொழுது காண்பேன் என ஏங்கித் தவிக்கிறேன். அந்தப் பொன்னான வேளைகளில் என்மீது நீங்கள் சாய்ந்து கதைபேசி மகிழ்ந்திருந்த வேளைகளில் கடற்காற்று எம்மூடாகச் செல்ல முயன்று தோற்றதை நான் அன்று கேலிசெய்தேன். இப்போது அது நேரில் வந்து என்னைக் குமுற வைக்கிறது; குசலம் விசாரிக்கிறது. இது எனக்கு மிகுந்த அவமானத்தைக் கொடுக்கிறது. மாலை நேரம் மங்கிய ஒளியில் தனிமையில் அமர்ந்திருந்த வேளை நெருக்கமாய் அமர்ந்திருந்து நீங்கள் சொன்னவற்றை, குறும்பு செய்தவற்றை நினைக்க வேதனையால் உடல் வலிக்கிறது. காதலர்களுக்கு இனிமை தருகின்ற இனிமையான மாலைப்பொழுதைக் காண எனக்கு அழுகை அழுகையாக வருகிறது. அவர் இல்லாத வேளையில் ஏன் என்னை வந்தடைந்து துன்புறுத்துகிறாய் என்று திட்டுவேன். மாலையில் சந்தித்து மனம் மகிழ்ந்து பிரிந்தோம். மலையளவு இன்பம் மனதில் இருந்தது மங்கிய ஒளி நீங்கள் அருகிலிருக்க மயக்கத்தைக் கொடுத்தது. ஆனால் இப்பொழுது அந்நேர நினைவுகள் நெருப்பாக மாறி என்னை சுடுகிறது. நினைவுகள் இன்பத்தை அள்ளித்தருமென்பார்கள். ஆனால் இப்போது நினைவுகள் நெருப்பை வாரி இறைக்கின்றன” நினைவுகள் சுட அவளது கண்கள் கசிந்தன.

திரும்பி அருகில் இருந்த அர்ச்சகாவைப் பார்த்தாள். கடலை வெறித்து நோக்கிக் கொண்டிருந்த அவளது கண்களால் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது; “கண்ணைத்துடையடி யாராவது தெரிந்தவர்கள் அறிந்தவர்கள் வந்தால் தவறாக நினைப்பார்கள்” என்றாள் மாதுமை.

அர்ச்சகா திரும்பி மாதுமையைப் பார்த்தாள்; “எத்தனை நாட்கள் நான் அவரைக் கண்டு, அவர் எனக்கு அருகில் இருக்கும் போது நான் தான் இந்த உலகில் பாக்கியசாலி என்று நினைப்பேன். மனதுள் கடலைப் போல எண்ண அலைகள் மகிழ்வுடன் ஆரவாரித்து மோதும். என்னுள்ளம் கவர்ந்தவர் தான்; என்னை மறக்க முடியாதவர் தான்; எனது பெரு வாழ்வுக்காகத் தன் மனதில் எழும் எனது எண்ணங்களைக் கட்டுப்படுத்தி முனிவரைப் போல இருந்து உழைக்கிறார் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் இந்த மாலைப் பொழுதிற்கு அவையெல்லாம் தெரிவதில்லையே. நாங்கள் பேசி மகிழ்வதைக் கேட்கவும், நாம் அணைத்து மகிழ்வதைப் பார்க்கவும் முடியவில்லையே என்று நினைத்து இந்த மாலைப் பொழுது என்னைப் பழிவாங்குகிறது. அதன் கொடுமையை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் அருகில் இருக்கும் போது அளவில்லாத இன்பத்தையும், அவர் இல்லாதபோது கொடுந்துன்பத்தையுமல்லவா கொடுக்கிறது. மாலைப் பொழுது மகிழ்ச்சியான பொழுதல்ல காதலரைப் பிரிந்து வாழும் பெண்களுக்கு முடிவுகாலமாகவே மாலைப்பொழுது வருகிறது” அழுதாள் மாதுமை அர்ச்சகாவுக்கும் இதயம் பொங்கியது. கண்கள் கலங்கி உடைப்பெடுக்க ஆயத்தமாயின.

**1221. மாலையோ அல்லை மணந்தார் உயிர்உண்ணும்**
**வேலைநீ வாழி பொழுது.**

பொழுதே! நீ மாலைக் காலம் அல்ல; காதலரோடு கூடி மகிழ்ந்திருந்து பின் பிரிந்து வாழும் பெண்களின் உயிரை உண்ணும் இறுதிக் காலமாக இருக்கிறாய்.

## இரக்கமில்லாதவரோ?

“எமக்கு வந்துள்ள தாங்க முடியாத துன்பத்திற்காக நாம் பிறரைக் குற்றம் சொல்ல முடியாது. காதலர்கள் மாலைப் பொழுதைக் குற்றம் சொல்கிறார்கள். அது எவ்வளவு பாவமானது தெரியுமா? மாலைப் பொழுதைப் பார், அது தனது காதலனான சூரியனின் பிரிவால் கவலையுற்று சோகத்தால் புலம்புகிறது. அதனால் அது மெல்ல மெல்ல தன் அழகைக் குறைக்கிறது. முடிவில் அது சோகத்தால் துன்புற்று இருளடைந்து விடும். அதற்கு எம்மை விடத் துயரம்அதிகம்” என்றாள் அர்ச்சகா.

உண்மை தான். மாலைப் பொழுது தனக்குத் துன்பம் வந்ததற்காகப் பிரிந்திருக்கும் எத்தனையாயிரம் காதலர்களை வாட்டுகிறது தெரியுமா..? என்றாள் மாதுமை.

‘‘நாம் எல்லாவிடயங்களிலும் சுயநலத்தையே பார்க்கிறோம். எமக்குத் துன்பம் வந்தால், அது எல்லோருக்கும் வரவேண்டு மென்று நினைக்கிறோம். பிரிந்த காதலருக்குத் துன்பத்தைத் தரும். மாலைப்பொழுது, சேர்ந்திருக்கும் காதலர்களுக்கு எவ்வளவு இன்பத்தைத் தருகிறது தெரியுமா..? நான் நகுலனைச் சந்திக்க நினைத்தபோது உண்டான துன்பம் ஒரு நாள் மாலைப் பொழுதில் தான் தீர்ந்தது. அந்த முதல் நாள் அனுபவம் இன்னும் எனது கண்களுக்குள்ளே இருந்து இனித்துக் கொண்டிருக்கிறது. அதன் பின் எத்தனையோ அனுபவங்கள் எனக்குக் கிடைத்தன. ஆனால் அவையெல்லாம் அந்த அனுபவத்திற்கு ஈடாகவில்லை அதற்காக நான் அந்த மாலைப் பொழுதிற்குக் கடமைப்பட்டுள்ளேன். அது எனக்குச் சொல்லொணாத் துன்பங்கள் பலவற்றைத் தந்த போதும் அதைக் குற்றம் சொல்ல முடியவில்லை. அன்று நான் கடற்கரைக்குச் செல்வேனெனக் கனவிலும் நினைக்கவில்லை. வித்தியாவுடன் கதைதுக் கொண்டிருந்த போது அவள் விளையாட்டாக; ‘‘கடற்கரைக்கு வந்தால் நகுலனைச் சந்திக்கலாம். வா போய் வருவோம்’’ என்றாள். என்னால் எனது காதுகளை நம்ப முடியவில்லை. ஒருகணம் உடல் செயலற்று விட்டது. மனதின் குரல்; ‘‘போய்ப்பார் போய்ப்பார்’’ என்று அலறியது. இதுவரை நாளும் சிந்திக்காத ஒன்றைப்பற்றி என்னால் எப்படித் தீர்மானிக்க முடிந்தது என்று இப்போது நினைத்தாலும் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. மரப்பாவையைக் கயிற்றில் கட்டி இயக்குவதைப் போல யாரோ என்னை இயக்கினார்கள். நான் வித்தியாவுடன் கடற்கரைக்குச் சென்றேன். கடல் நீர் எனது காலைத் தொட்டு விளையாடியது. அப்பொழுது செட்டை முளைத்து முகில்களுக்கு ஊடாகப் பறப்பதைப் போன்ற ஓர் இனிய அனுபவம் ஏற்பட்டது. அன்று திடீரென என்னைக் கண்ட நகுலனது முகத்தை என்னால் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. மெதுவாகப் பார்த்தேன். அவர்படும் அவதி அவரது முகத்தில் தெரிந்தது. வெகுநேரமாக எதுவும் பேசாமல் கடற்கரை மணலில் அமர்ந்திருந்தேன். பேசாவிட்டாலும் எனக்குரியவரின் அருகில் அமர்ந்திருக்கிறேன் என்பதை நினைக்கப் பரவசமாக இருந்தது. வாழ்க்கையில் ஒவ்வொரு விஷயத்திலும் நடைபெறும் முதல் நிகழ்வு, அது சிறப்பானதாக இல்லாத போதும், அதை மறக்க முடியாது’’ என்றாள் அர்ச்சகா.

‘‘ஆரம்பத்தில் தான் காதலர்களுக்குச் சந்திப்பதும், அதை நினைத்து இன்பமடைவதும், கனவு காண்பதும் இன்பத்தைக் கொடுக்கும். காதல் வளர வளர காதலரின் நெருக்கம் கூடினால் தான் இன்பமாக இருக்கும். இந்த மங்கிய மாலைப் பொழுதில் அவர் எனக்கு வேண்டும். மயங்கிய இம் மாலைப் பொழுது, தனது காதலனான சூரியனை இழந்து தவித்து ஒளியிழந்திருப்பதைப் போல நானும் இருக்கிறேன். சூரியனைப் போல எனது காதலரும் இரக்கமில்லாதவர்’’ என்றாள் மாதுமை.

‘‘இன்பமான இந்த மாலைப் பொழுது, அவரில்லாததால் தான் எனக்குத் துன்பத்தைத் தருகிறது. பாவம் மாலைப் பொழுது நாம் திட்டினாலென்ன வாழ்த்தினாலென்ன; புகழ்ந்தாலென்ன அவற்றை யெல்லாம் கருத்திற் கொள்ளாது மறுபடியும் வந்து காதலரை இன்பத்திலாழ்த்துகிறது. இனிமையான மாலைப்பொழுதே நீ வாழ்க! ஆயிரமாயிரம் துன்பங்களிருந்தாலும் உன்னைக் கண்டதும் காதலர் மகிழும் மகிழ்வின் தன்மைக்கு உலகிலுள்ள எவற்றையும் ஈடாகக் கொடுக்க முடியாது’’ என்றாள் அர்ச்சகா.

**1222. புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை?.**

மாலைப் பொழுதே! நீயும் என்னைப் போல் ஒளி இழந்து காணப்படுகிறாய்; உனது காதலரும் எனது காதலரைப் போல இரக்கமில்லாதவரோ?.

## மேலும் வரும் துன்பம்

‘‘கொழும்பில் என்னால் மாலை வேளைகளில் நிம்மதியாக இருக்க முடியாமையால் தான் இங்கு வந்தேன். பழகிய உயிர் தோழியும், பழகாத புதிய ஊரும் எனக்கிருக்கும் துன்பத்தைக் குறைக்கு மென்று நினைத்தேன். அது பொய்யாகி விட்டது. மாலைப் பொழுதில் சொர்க்கத்தில் தான் இருந்தாலும் காதலர் அருகில் இல்லாவிட்டால் அது நரகத்தை விட மிக மோசமான துன்பத்தைத் தரும் என்று புரிந்து கொண்டேன். நேற்று மாலை கண்மணி மாமி மிகவும் சுவையான சிற்றுண்டிவகைகளைச் செய்திருந்தார். நான் பல இடங்களில் உணவு உண்டிருக்கிறேன். ஆனால் கண்மணி மாமியின் உணவில் உள்ள சுவையைப் போல ஒரு சுவையை நான் இதுவரை அனுபவித்ததில்லை. அவரும் பலமுறை சொல்லியிருக்கிறார். அப்பா புறப்படும் போது மாமியின் சமையலைப் பற்றித்தான் சொன்னவர். ‘‘யாழ்ப்பாணத்திற்குச் சென்று விதம் விதமான உணவு வகைகளைச் செய்து உண்ண வேண்டும். எனக்கு ஊரைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை பெரிதாக இல்லை. கண்மணீன்ரை சமையலைச் சுவைக்க வேண்டுமென்ற ஆசையால் தான் வருகிறேன்’’ என்றார்.

எனக்கு இட்டலியும் சாம்பாரும் சட்டினியும் உருளைக்கிழங்குப் பிரட்டலும் தான் விருப்பம். எனது சுவைக்கேற்ற மாதிரித்தான் கண்மணி மாமி சமைப்பா என்று நான் சொல்வேன். அப்பா தன்னுடைய சுவைக்கேற்றபடி தான் மாமி சமைக்கிறா என்பார். ஆனால் மாமி எல்லோரினதும் நாவின் சுவையையும் அறிந்தவர்'' சிலகணங்கள் நிறுத்தினாள் மாதுமை.

அர்ச்சகா எதுவும் பேசாமல் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் சூரியனை இரக்கமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்; ''என்மீது இரக்கமில்லாத நீ கடலிலே புதைந்து விடு'' என்று சொல்வதைப் போல இருந்தது அப்பார்வை.

கண்மணி மாமியின் இட்டலியையும் சட்டினியையும் உருளைக் கிழங்குப் பிரட்டலையும் எல்லோரும் சுவைத்துச் சுவைத்துச் சாப்பிட்டனர். அப்பா மகிழ்வுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அம்மா; ''கூடச் சாப்பிடாதைங்கோ உங்களுக்கு இரத்த அழுத்தம் இருக்கு நீரிழிவு இருக்கு பிறகு பல நாட்களுக்குக் கஷ்டப்படுவீர்கள்'' என்று சொல்லிக் கொண்டிருந்தா. அதைப்பற்றி அப்பா கவலைப்படவில்லை. ''சுவையான உணவுகளைச் சாப்பிடாமல் பத்து வருடங்கள் வாழ்வதை விடச் சுவையான உணவுவகைகளைச் சாப்பிட்டுப் பத்து நாட்கள் வாழ்வது இன்பமானது'' என்றார். நான் அந்தச் சுவையான உணவைச் சுவைத்துச் சாப்பிடவில்லை. கண்கள் அவரைக் காணாமல் உறங்க மறுக்கின்றன. மனம் அமைதி கொள்ளாது தவிக்கிறது அத்துடன் இப்பொழுது நாவும் என்னுடன் முரன்படுகிறது; ''அவரைக் கூட்டி வந்து ஊட்டினால் தான் நான் உணவை ஏற்பேன'' என்கிறது. ஒரு முறை நாம் கதிர்காமத்திற்குச் சென்றோம். சுவாமியை வணங்கிப் பூசைகளைப் பார்த்துவிட்டு உணவருந்த ஒரு கடைக்குச் சென்றோம். கடைக்காரன் தந்த உணவு மிகவும் மோசமாக இருந்தது. அம்மாவும் அப்பாவும் சாப்பிடவில்லை. தேநீர்மட்டும் குடித்தனர். எனக்குப் பசிக்காததால் உணவுப்பொட்டல மொன்று கட்டிவந்தேன். மரநிழலில் இருந்து உணவை உண்டோம். அவர் எனக்கு ஊட்ட நான் அவருக்கு ஊட்ட முழுஉணவும் முடிந்துவிட்டது. அன்று உணவு சுவைத்ததைப் போல எனக்கு ஒருபோதும் சுவைத்ததில்லை. அதைச் சொல்ல அம்மாவும் அப்பாவும்; ''உனக்கு மரநாக்கு ஒழுங்காக நாக்கு வழிப்பதில்லை'' என்று ஏசினார். மாமி சமைக்கும் போது வந்த வாசம் மூக்கைத் துளைத்தது. அந்த நேரமே எனக்குப் பசித்தது. அந்தநேரம் தந்திருந்தால் வயிறு நிறைய உண்டிருப்பேன். மாலை வந்ததும் அவரின் நினைவுகளும் சேர்ந்து வந்து விட்டன. அவரின் நினைவுகள் சிலசமயம் எனக்கு உற்சாகத்தை அளிக்கின்றன. சிலசமயம் சோம்பலை அளிக்கின்றன. மாலையில் எழும் உணர்வுகள் என்னை உலகத்தை வெறுக்கப்பண்ணுகின்றன. அதனால் என்னால் இயங்க முடியவில்லை. அவரில்லாததால் பசலைநிறமடைந்த என்மேனியைப் பனிபடர்ந்து பசலைநிறங் கொண்ட மாலைப் பொழுது என்னைப் பரிகசிக்கிறது'' விம்மினாள் மாதுமை.

**1223. பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்**
**துன்பம் வளர வரும்.**

பனிபடர்ந்து பசந்த நிறங்கொண்ட மாலைப்பொழுது, எனக்கு மேலும் மேலும் துன்பம் செய்யவே வருகிறது.

### கொலைக்களம்

''எமது பாடசாலைக் கட்டிட நிதிக்காகக் கண்ணகி என்ற சினிமாப் படத்தைப் படமாளிகையில் நான் க.பொ.த.உயர்தர வகுப்புப் படிக்கும் போது காட்டினார்கள்; ''விபுலன் நான் பிறக்கு முன்பிருந்தே தனது பெற்றோருடன் எமது வீட்டுக்கு வாறவராம். சிறுவயதில் நான் அவருடன் கட்டிப் பிடித்து விளையாடியிருக்கிறேன். அத்துடன் ஆசிரியர் வகுப்பில் கற்பிப்பதைப் போல அவர் கையில் ஒரு கம்பு வைத்துக் கொண்டு எமது வீட்டில் கற்பிப்பார். நானும் எனது அயல்வீட்டுச் சினேகிதிகளும் தான் அவரது மாணவர்கள். கற்பிக்கும் போது பலமாகத் தடியை ஓங்கிஅடிப்பதைப் போல அடிப்பார். ஆனால் அந்தத்தடி கையில் படாது. ஒரு நாள் தவறி எனது கையில் பலமாகப்பட்டு விட்டது. நான் துடிதுடித்துப் போனேன். நான் அப்பொழுது இரண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். எனது அழுகைச் சத்தம் கேட்டு ஓடிவந்த மாமா அவருக்கு அடித்து விட்டார். எனினும் மூன்று வயது கூடிய அவர் அழுதார். அவர் அழ ஆரம்பிக்க எனது அழுகை நின்று விட்டது. அவரதுகண்ணீரைத் துடைத்தேன். அப்பொழுதிருந்தே எனக்குத் துன்பஞ் செய்தவரையும் தண்டித்தால் எனக்குத் துக்கமாக இருக்கும். அவ்வளவு இழகிய மனம் எனக்கு'' நான் உயர்தரவகுப்புப் படிக்கும் போது ஒரு நாள் அவர் வீட்டுக்கு வந்தார். அவர் வந்தநேரம் அப்பா வேலையால் வரவில்லை. அம்மா இனத்தவர் ஒருவரை வருத்தம் பார்க்கச் சென்று விட்டார். வீட்டுக்கு வந்த அவரை இருத்தித் தேநீர் கொடுத்தேன்; ''மாதுமை, உமக்கு சுவையாகத் தேநீர் தயாரிக்கவும் தெரியுமா? மிகவும் சுவையாக இருக்கிறது'' என்றார். ''பகிடிவிடுகிறீர்களா? அம்மா இல்லாததால் சுடுநீர்போத்தலில் இருந்த சுடுநீருக்குள் தேயிலையைப் போட்டு வடித்து விட்டு பாலும் சீனியும் கலந்தேன். சுவையில்லாவிட்டால் குடிக்காமல் விடுவதை விட்டுவிட்டு நக்கலா?'' என்றுகேட்டேன்; ''சத்தியமாக நன்றாக இருக்கு இன்று தான் மிகவும்

சுவையான தேநீரைக் குடித்தேன்? என்றார். நான் அவசரமாக அவரின் அருகில் சென்று அவர் குடித்துக் கொண்டிருந்த தேநீரைப் பலாத்காரமாகப் பறித்துக் குடித்தேன். அவர் அதை எதிர்பார்க்கவில்லை. சற்றுக் குழம்பிவிட்டார். உண்மையில் தேநீர் சுவையாகத்தான் இருந்தது.

‘‘அதன்பின் அவர் கதைக்க வெட்கப்பட்டார்; ‘‘ஓர் ஆணின் எச்சிலை பிறத்தியார் குடிக்கக் கூடாது’’ என்றார். எனக்கு அது புரியவில்லை. ‘‘நான் பிறத்தியாளா...?’’ கலங்கினேன்; ‘‘வளர்ந்து உயர்தர வகுப்பில் படித்தாலும் மூளையில்லை. எச்சில் இலையில் சாப்பிடுவதும் எச்சில் படுத்திய தேநீரை யார்குடிப்பதென்றும் நீ தமிழ்ப்படங்களில் பார்க்கவில்லையா? என்று கேட்டார். எனக்கு வெட்கத்தைத் தாங்க முடியவில்லை. அவரைப் பார்க்கவே முடியவில்லை. அவர்; ‘‘மாது நான் உன்னை விரும்புகிறேன்’’ என்றார். அப்பொழுது அம்மா வந்து விட்டா. அதனால் எதுவும் என்னால் பேசமுடியவில்லை. இரவு முழுவதும் பிரமை பிடித்தவளைப்போல இருந்தேன். மறுநாள் கண்ணகி படம் பார்க்கச் சென்றேன்.

கோவலனைக் கள்வன் என்று கூறி அவனைச் சபைக்கு அழைத்துவரப் பொற்கொல்லன் அனுமதிகேட்கப் பாண்டிய மன்னன்; ‘‘அவனைக் கொன்று விடுங்கள். என்று சொல்கிறான். படைவீரர் மாலை மயங்கும் நேரம் கொலைக்களத்திற்குக் கோவலனை இழுத்து வருகின்றனர். அவனை வெட்டிக் கொலை செய்த அந்த மாலைப் பொழுதை நான் அன்று வெறுத்தேன். அதன்பின் மாலைப் பொழுதின் மீது வெறுப்பேற்பட்டது. விபுலன் தான் மாலைப் பொழுதை இனிமையாக்கினார். அவர் என்னை விட்டுப் பிரிந்தபின்பு மாலைப் பொழுது கொலைக்களம் போல எனக்குத் தெரிகிறது. என்னை மாலை நேரங்களில் கொலை செய்வது போன்ற உணர்வு தான் எங்கிருந்தாலும் ஏற்படுகிறது’’ என்றாள் மாதுமை.

மாதுமை சொன்னது எதுவும் விளங்காததால் அர்ச்சகா திருதிருவென்று விழித்தாள் மாதுமை தனக்காகக் கவலைப்படுகிறாள் என்று நினைத்தாள்.

**1224. காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து**
**ஏதிலர் போல வரும்.**

காதலர் இல்லாத வேளையில் வரும் மாலைப் பொழுது, கொலைக்களத்திற்கு பகைவர்கள் வருவது போல வந்து என்னுயிரைக் கொல்கிறது.

**நன்மை தீமை**

‘‘என்னை முதன்முதலாகக் கண்ணகி படம் பார்த்த அந்த மாலைப் பொழுது தான் கொடுமைப்படுத்தியது. பலநாட்கள் சென்றும் கோவலனைக் கொன்ற அந்த மாலைப் பொழுதை என்னால் மறக்க முடியவில்லை. அந்த மாலைப் பொழுது என்னை இரவுபகலாகத் துன்புறுத்தியது. எனது பெற்றோர் நான் ஏதோ பெரும் வருத்தத்துக்குள்ளாகி விட்டேனெனப் பயந்தனர். செல்லமாக வளர்த்த ஒரே ஒரு பிள்ளை என்ற காரணத்தால் அப்பா பித்துப் பிடித்தவர் போல இருந்தார். என்னை வைத்தியரிடம் பல முறை காட்டினார். வைத்தியர் எனக்கு எந்தவொரு வருத்தமும் இல்லை என்று அடித்துக் கூறினார். அழகான பஞ்சவர்ணக் கிளியைப் போலப் பறந்து திரிந்த நான் அறைக்குள் முடங்கியது விபுலனுக்குத் துன்பத்தைக் கொடுத்தது. அவரைக் காணும்போதெல்லாம்; ‘‘வளர்ந்து உயர்தரவகுப்புப் படித்தாலும் மூளையில்லை. எச்சில் இலையில் சாப்பிடுவதும், எச்சில் படுத்திய தேநீரை யார்குடிப்பதென்றும் நீ தமிழ்ப் படங்களில் பார்க்கவில்லையா’’ என்று அவர் சொன்ன வார்த்தைகளே எனது காதில் ஒலித்தன. அதனால் அவரைக் காண்பதைத் தவிர்த்து வந்தேன். அப்பாவின் நண்பரின் மகன் என்ற உரிமையில் தினமும் அவர் வீட்டுக்கு வரும்போதெல்லாம் நான் அவருடன் கலகலப்பாகப் பேசுவேன். எந்த ஒரு நாளென்றாலும் வித்தியாசமான ஓர் உணர்வு எனது மனதில் எழவில்லை. அவர் குடித்த தேநீரைக் குடித்தால் எனக்கு ஏதாவது வந்து விடுமா?. முன்பு நான் அப்படி நினைத்துப் பார்த்ததில்லை. அவரும் அப்படிச் சொன்னதில்லை. சிறுவயதில் அவர் இனிப்புக் கொண்டு வந்தால் கடித்து விட்டுப் பாதியைத் தருவார். நானும் அப்படித்தான் செய்வேன். அதே போல் வீட்டில் எல்லோருமாகச் சாப்பிடும்போது அவர் வந்தால் எம்முடன் இருந்து சாப்பிடுவார். மாதத்தில் ஓரிரு முறை அவர்கள் எல்லோரும் எமது வீட்டுக்கு வந்து சாப்பிடுவார்கள். நாங்களும் அவர்களின் வீட்டுக்குச் சென்று சாப்பிடுவோம். அம்மா அடிக்கடி பாவற்காய்க்கறி சமைப்பா. அது எனக்குப் பிடிக்காது. அவருக்கும் பிடிக்காது. சாப்பிடும் போது கறிகளில் விரும்பாதவற்றை விலக்கி வைக்க அம்மா விடமாட்டா. விலக்கி வைத்திருப்பதைக் கண்டால் அதைச் சோற்றுடன் குழைத்து விடுவா. அதனால் நான் விருப்பமில்லாத கறிகளை நாக்கில் படாதவாறு விழுங்கி விடுவேன். விபுலனது பெற்றார் எமது வீட்டில் சாப்பிட வரும் நாட்களில் நான் விபுலனுக்கு அருகிலேயே இருப்பேன். எனக்கு விருப்பமில்லாத கறிவகை ஏதாவது இருந்தால் அதை விபுலனின் தட்டில் எடுத்து வைத்து விடுவேன். நாளடைவில் அவரே எனது தட்டில் கைவைத்து எனக்கு விருப்பமில்லாத கறியை எடுத்து விடுவார். அப்போது தோன்றாத எண்ணம் அன்று ஏன் தோன்றியதோ தெரியவில்லை. பல நாட்கள் என்னைக்

காணாததால் ஒரு நாள் எனது அறைக்குள் வந்து விட்டார்; ‘‘மாதுமை நான் அன்று சொன்னது தவறென்றால் என்னை மன்னித்து விடு. நான் கதைப்பதற்கு முதல் நாள் உனது அப்பாவும் எனது அப்பாவும் எமக்குத் திருமணம் செய்து வைக்கவேண்டும் என்று பேசியதைக் கேட்டுவிட்டேன். பிழையென்றால் மன்னித்துக் கொள். இனி நான் அப்படிக்கதைக்க மாட்டேன்’’ என்றார். அவர் கேட்டதும் மாலைப்பொழுதில் தான் பின் எனது அறைக்கு வந்ததும் மாலைப்பொழுதில் தான். என் வாழ்நாளில் மூன்று மாலைப் பொழுதுகள் துன்பத்தை ஏற்படுத்தின. அந்த மாலைப் பொழுதுகள் இல்லாவிட்டால் எனக்கு இந்தக் கொடிய துன்பம் ஏற்பட்டிருக்க மாட்டாது. இந்த மாலைப் பொழுதிற்கு நான் என்ன துன்பம் செய்தேன்; துரோகம் செய்தேன். என்னை ஏன் சித்திரவதை செய்கிறது. மாலைப்பொழுது வந்தால் எனக்குப் பயமாக இருக்கிறது. எப்பொழுது விடியும் என்று விடியும் வரை விழித்திருந்து கடவுளைப் பிராத்திக்கிறேன். விடிந்தால் தான் எனக்கு மகிழ்ச்சி ஏற்படும். மகிழ்ச்சியைத் தரும் காலைப் பொழுதுக்கு நான் ஏதாவது நன்மை செய்தேனா.. இல்லை இலஞ்சம் கொடுத்தேனா.. இல்லையே...’’ என்று சொல்லிக் கொண்டிருந்தாள் மாதுமை.

**1225. காலைக்குச் செய்தநன்று என்கொல்? எவன்கொல்யான்**
**மாலைக்குச் செய்த பகை?.**

நான் காலைப்பொழுதிற்குச் செய்த நன்மை என்ன? என்னைத் துன்புறுத்துகின்ற மாலைப் பொழுதிற்குச் செய்த தீமை என்ன?.

### துன்பமான மாலை

‘‘இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு மாசிமாதம் ஏழாம்திகதி புதன்கிழமை. அப்பாவும் அம்மாவும் கோயிலுக்குச் சென்று விட்டனர். அம்மாவும் அப்பாவும் திருமணம் செய்து பதினெட்டு வருடங்கள் கழிந்து விட்டன. அன்று அவர்களது திருமணநாள். மாலைநேரம் எனது அறையில் படுத்திருந்தேன். வானொலியில் சீர்காழி கோவிந்தராஜன் பாடிய பக்திப் பாடலொன்று ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. சீர்காழி கோவிந்த ராஜனின் குரல் ஒலிக்கவில்லை. தாளவாத்தியம் ஒலித்துக் கொண்டிருந்தது. கண்களை மூடி அத்தாள ஆராதனையை இரசித்துக் கொண்டிருக்கும் போது விபுலனின் ஞாபகம் வந்தது. இது நாள்வரையிலும் அவரைப் பற்றி எண்ணி இரை மீட்காத எனது மனம் சிலநாட்களாக எண்ணி இரை மீட்கத் தொடங்கியிருந்தது. அம்மாவும் அப்பாவும் கதைத்துக் கொண்டிருக்கும் போது நான் அதைக் கவனிப்பதில்லை. அதன் பின் கவனிக்க ஆரம்பித்தேன். மாதவன் எனது நல்ல நண்பன். சகோதரர்களை விட என்னில் அதிக பாசம் வைத்திருக்கிறான். எனக்கு அவனைச் சம்பந்தியாக்கிக் கொள்ள வேண்டு மென்ற ஆசைவெகுநாளாக இருக்கிறது’’ என்று அப்பா சொல்ல; ‘‘நாம் விரும்பி என்ன செய்வது அவர்களும் விரும்ப வேண்டும்’’ என்றா அம்மா. மாதவனுக்கு நல்ல விருப்பம். படிக்கிறவர்களைக் குழப்பக் கூடாது. அவர்களுக்கு இப்ப தெரிய வேண்டாம்’’ என்று அப்பா கூறினார். அதன் பின் இனம்புரியாத ஓர் உணர்வு அவரைப் பார்க்கும் போது உண்டாகும். அன்று திடீரென்று எனது அறை வாசலில் வந்து நின்ற விபுலனைக் கண்டதும் நான் திகைத்து விட்டேன். மெதுவாக அறையை விட்டு வெளியே வந்தேன்.

‘‘மாது, நாம் சிறுவயதிலிருந்தே ஒன்றாகப் பழகி வருகிறோம். அறியாத வயதில் சோறு கறி காய்ச்சி விளையாடியதில் இருந்து இன்று வரை மிகவும் அன்பாகப் பழகிவருகிறோம் நீர் என்னை விரும்பாமலிருக்கலாம் ஏனென்றால் அன்று நான் கதைத்த பின்பு, நீர் என்னைப் பார்ப்பதைத் தவிர்த்து வருகிறீர். சில சமயம் நீர் என்னைச் சகோதரனாகவோ இல்லை நண்பனாகவோ, இல்லைக் குடும்ப உறுப்பினனாகவோ நினைத்திருக்கலாம். அப்படி நீர் நினைக்க நான் உம்மைக் காதலியாக நினைத்தது பிழை தான். அத்துடன் உமது மனத்தை அறியாமல் உம்மோடு நான் அப்படிக் கதைத்தது பெரும் பிழை. மனம் விசித்திரமானது. தவறு செய்யு முன் அது தவறென்றாலும் தனக்கு விரும்பியதைச் செய்யச் சொல்லி வற்புறுத்தும் முன்பே தவறென்று உணர்ந்தாலும் தவறு நேர்ந்த பின்பு தான் தனக்குத் தெரியாதது போல வருந்தி மன்னிப்புக் கேட்கும். அப்படி மன்னிப்புக் கேட்கும் சராசரி மனிதன் தான் நான். தவறு செய்து விட்டேன். அதுவும் தெரிந்து செய்து விட்டேன். என்னை மன்னிப்பதும் தண்டிப்பதும் உமது விருப்பம். என்று கலங்கினார். அவர் கலங்கியதும் ஒரு மாலைப் பொழுதில் தான் நான் அவரை மன்னித்து ஏற்று விட்டேன். எனது மனம் முன்பை விட மகிழ்வால் ஆரவாரித்தது. மீண்டும் ஒரு நாள் மாலை அவர் வந்தார். முன்பு மாசில்லாது இரு மனங்களும் இருந்தபோது அவருக்கு நான் அடிப்பேன், தள்ளுவேன். அவர் எனது பின்னலைப் பிடித்திழுப்பார். அவற்றையெல்லாம் நான் ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. அன்று தேநீர் கொடுக்கும் போது எனது கையைப் பிடித்தார். தேநீர் கோப்பை நிலத்தில் விழுந்து சிதறியது. அவர் என்னை இழுத்துத் தன்னுடன் அணைத்தார். முதன்முதலாக ஓர் இனிய பரவசம் எனது உடலில் சிலிர்த்தோடியது. அதன் பின் மாலைநேரங்களில் அம்மாவும் அப்பாவும் வெளியே எங்காவது செல்லவேண்டு மென்று நினைப்பேன். அம்மாவும் அப்பாவும் இல்லாத வேளைகளில் அவர் வரவேண்டு மென்று நினைப்பேன். அப்பா மேலதிக வேலை செய்வதால் அலுவலகத்திலிருந்து பெரும்பாலும் இரவு எட்டுமணிக்குப் பின்பே வருவார். அம்மா கோயிலுக்கும் இனத்தவர்களினதும் நண்பர்களினதும் வீடுகளுக்கும் சென்று விடுவா. அது எனக்குக் கொண்டாட்டம் தான். மாலைவேளைகளில் அவருடன் மகிழ்வுடன் இருந்த நான்,

இப்பொழுது அவரைப் பிரிந்திருக்கும் போது தான் மாலைப்பொழுது தரும் துன்பத்தை உணர்கிறேன்'' என்றாள் மாதுமை.

**1226. மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத**
**காலை அறிந்தது இலேன்.**

மாலைப்பொழுது இவ்வளவு பெருந்துன்பம் செய்ய வல்லது என்பதை எனது காதலர் என்னை விட்டு அகலாமல் அருகினில் இருந்த காலத்தில் நான் அறியவில்லை.

### மாலையில் மலரும் அரும்பு

நான் மார்கழி மாதம் இருபத்தொம்பதாம் திகதி பிறந்தனான். பிள்ளையார் கதை தொடங்கிய பின்பு நான் பிறந்தேன். என்று அம்மா இப்போதும் கவலைப்படுவா. தனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து அந்த ஒருவருடம் தான் பிள்ளையார் கதைக் காலத்தில் விரதம் பிடிக்கவில்லையாம். சென்ற வருடம்பிறந்த நாளன்றும் கவலையுடன் சொன்னவா.

சென்ற வருடம் மார்கழிமாதம் இருபத்தொன்பதாம் திகதி எனது பிறந்ததினத்தை வழமை போலக் கோயிலுக்குச் சென்று சுவாமிக்கு அபிசேகம் செய்து கொண்டாடவே நான் விரும்பினேன். அவரும் அவரது வீட்டாரும் பெருவிழாவாகக் கொண்டாட வேண்டுமென விரும்பி அப்பாவிடம் அனுமதி பெற்று விட்டனர். அன்று இந்திரலோகம் போல எமது வீடு அலங்கரிக்கப்பட்டது. அன்று அப்பா எமது திருமணவிடயத்தைப் பற்றி வந்திருந்த எல்லோருக்கும் சொன்னார். மாமா எனக்கு ஒரு விலையுயர்ந்த வைர அட்டியல் பரிசாகத் தந்தார். மாமி விலையுயர்ந்த பட்டுச் சேலை ஒன்றை எனக்குப் பரிசளித்தார். பூரணகும்பம் வைத்து கோயில் குருக்கள் ஆசீர்வதித்து மந்திரங்களைக் கூற நானும் அவரும் குத்து விளக்கேற்றினோம். பிள்ளையார் கோயிலில் சுவாமிக்கு நிவேதிக்கப்பட்ட பிரசாதம் மேசையில் இருந்தது. அதை எடுத்து அப்பா எனது கையில் தந்தார். நான் அதை அவருக்கு ஊட்டினேன். அவர் விபுலனுக்கு ஊட்டச் சொன்னார். பலர்மத்தியில் ஓர் ஆடவனுக்கு உணவூட்ட எனக்குப் பெரும் வெட்கமாக இருந்தது. வந்தவர்கள் எல்லோரும் வற்புறுத்தியமையால் தலையைக் குனிந்து கொண்டு பிரசாதத்தை எடுத்து அவரது வாய்க்கு அருகில் கொண்டு செல்ல நினைத்தேன். தலைகுனிந்தமையால் சற்றுத் தடுமாறினேன். அப்பொழுது அவர் எனது கையைப் பிடித்து தனது வாயருகே கொண்டு சென்றார். நான் நிமிர்ந்து மெதுவாகப் பார்த்தபடி பிரசாதத்தை அவரது வாயில் வைத்தேன். அவர் எனது விரல்களை மெல்லக் கடித்தார்.

''அன்று மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். வீட்டிற்கு வந்தவர்கள் எல்லோரும் சென்று விட்டனர். அவர் மட்டும் இருந்தார். இருவரும் தனித்திருந்து இரவு உணவை உண்டோம். மிகமிக மகிழ்வான ஒரு பொன்மாலைப் பொழுது அது. உணவு உண்ணும்போது மெல்ல எனது காலில் தட்டினார்.''

''இரவு பத்துமணிவரையும் இருவரும் தனிமையில் இருந்தோம். அவர் எனது இடது கையை எல்லோருக்கும் முன்னால் பிடித்து மோதிரவிரலில் மோதிரத்தை அணிந்தார். அதைத் தொட்டுப் பார்த்தேன்; '' இன்று நீர் மணப் பெண்ணைப் போல இருக்கிறீர். திருமணநாளன்று நான் எவ்வளவு சந்தோசப்படுவேனோ அந்தளவு சந்தோசம் இன்று எனது மனதில் எழுகிறது'' என்றவாறு எனக்கு அருகில் வந்தார். இரவு பதினொருமணிவரை கதைத்தோம். அவர் சென்ற பின்பு நினைத்துப் பார்த்தேன். அவருடன் என்ன கதைத்தேன் என்பது எனக்குத் தெரியவில்லை. அவர் கதைத்ததும் என்னவென்று எனக்குத் தெரியாது. அந்த நாள்த் தந்த இன்பப்பரவசத்தில் நான் உறங்கி விட்டேன். காலை ஏழுமணிக்கு அப்பா வந்து என்னை எழுப்பிய போது தான் எழுந்தேன். எழுந்தவுடன் இரவு அவர் என்னை அணைத்து விடைபெற்ற காட்சி நினைவில் வந்தது. பின் முதல் நாள் அவருடன் நான் நடந்து கொண்ட விதம் நினைவுக்கு வந்தது. அந்த நினைவு காலையில் சிறு அரும்பாக எனது மனதில் துளிர்த்தது. நேரஞ் செல்லச் செல்ல அந்நினைவு கிடுகிடுவென வளர்ந்து கொண்டே இருந்தது. அவரை ஒரு முறை பார்க்க வேண்டும் என்ற நினைவை என்னால் அடக்க முடியவில்லை. அரும்பாகத் தோன்றிய நினைவு பகலெல்லாம் வளர்ந்து மாலைப்பொழுதானதும் மலர்ந்து விட்டது. என்னால் அவரைப் பாராமல் இருக்க முடியவில்லை. தொலைபேசியில் அவருடன் தொடர்பு கொண்டேன். அவர் இரவு ஏழுமணிக்கு வருவதாகச் சொன்னார். எனது மனம் பூரணமாக மலர்ந்து அவரை எதிர் பார்த்திருந்தது. சூரியன் செல்லும் திசைக்கேற்பத் திரும்பித்திரும்பித் தன் முகத்தைக் காட்டும் சூரியகாந்திப் பூவைப் போல எனது மனம் என்ற மலர் அவர் வரும் திசையை நோக்கி அடிக்கடி திரும்பிக் கொண்டே இருந்தது. ஆனால் அன்று அவர் வரவில்லை. எனதுமனம் விடியும் வரை வாடாது மலர்ந்தபடியே அவரின் வருகைக்காகக் காத்திருந்தது.

**1227. காலை அரும்பிப் பகல்எல்லாம் போதுஆகி**
**மாலை மலரும்இந் நோய்.**

இந்தக் காம நோய் காலைப் பொழுதில் அரும்பாய்த் துளிர்த்து பகற்பொழுதெல்லாம் மெல்ல மெல்ல பேரரும்பாய் வள்ர்ந்து மாலைப் பொழுதில் மலராகிறது.

### சுடும் குழல் இசை

வித்தியாவின் வீட்டுக்கு அர்ச்சகாவும் மாதுமையும் வந்தனர். வித்தியா தோய்ந்து விட்டுத் தலையை விரித்து விட்டிருந்தாள். அவளின் முழங்கால் வரை விரிந்து படர்ந்திருந்த கருமை நிறங் கொண்ட தலை முடியைப் பார்க்க மாதுமைக்கு ஆசையாக இருந்தது. மாதுமையின் தலைமுடி அவ்வளவு நீளமானது அல்ல வித்தியாவின் தலை முடியின் நீளத்தை விட நான்கில் ஒரு பகுதி கூட இல்லை தேவையேற்படும்போது செயற்கைத் தலைமுடியை வைத்துப் பின்னுவாள். விபுலன் சென்ற பின் அவள் தனது அழகில் அதிககவனம் செலுத்தாததால் தலைமுடி சற்று உதிர்ந்திருந்தது.

தலையை விரித்து விட்டு நெற்றியில் நீறணிந்திருந்த அவளின் தோற்றம் தேவமகளிரைப் போல இருந்தது; ''இந்த நேரம் கஜேந்திரன் வந்தால் எவ்வளவு சந்தோசப்படுவார். பெண்ணான எனக்கே உனது தோற்றத்தைப் பார்க்க ஆசையாக இருக்கு'' என்ற படி மேசையில் இருந்த ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடல்களைப் பாடும் வானொலிப் பெட்டியை இயக்கினாள் மாதுமை. அதற்குள் எப்பொழுதும் புல்லாங்குழல் இசை பதிவுசெய்யப்பட்ட ஒலி நாடா இருக்கும்.

இனிமையான புல்லாங்குழல் இசை காற்றில் மிதந்து வந்தது. மங்கிய அந்த மாலைப் பொழுதின் இனிமையை மேலும் அதிகரிப்பதைப் போல அவ் இசை இருந்தது. முன்பு அவள் புல்லாங்குழல் என்றொரு கருவியைப் படிக்கும் பாடத்தில் அறிந்திருந்தாளே தவிர அதன் இசையைக் கேட்டதில்லை. வித்தியாவின் வீட்டுக்கு வந்தபோது தான் அதைக் கேட்டு அதன் இனிமையில் தன்மனதைப் பறிகொடுத்தாள். புல்லாங்குழல் இசையைப் பற்றி வித்தியா சொல்வாள்; ''காதலர் சேர்ந்திருக்கும் போது புல்லாங்குழல் இசை அவர்களை மயக்கி விடும். தேனுண்ட வண்டிற்கு ஏற்படும் மயக்கம் அவர்களுக்குண்டாகும். புல்லாங்குழல் இசை காதலருக்கு மோகத்தை அதிகரிக்கும். மனதை ஒன்றிணைத்து தேவருலகத்திற்கு அழைத்துச் செல்லும் நான் அவரின் நெஞ்சில் சாய்ந்திருக்கும் வேளைகளில் புல்லாங்குழல் இசையைக் கேட்பேன். திருமாலின் மார்பில் திருமகள் உறங்குவதைப் போன்ற ஓர் உணர்வு என்னுள் எழும். நேரம் போவது தெரியாது கதைப்பது என்னவென்று விளங்காத ஒரு மோகன நிலை உண்டாகும்.

''அவ்வளவு சக்தி புல்லாங்குழல் இசைக்கு இருக்கா...? என்று எண்ணியபடி மாதுமை கண்களை மூடுவாள். அப்போது விபுலனின் நெஞ்சில் உறங்குவதைப் போன்றதொரு உணர்வு உண்டாகும். அந்தமென்மையான இனிய இசை மனதை வருடி விடும். அதன் பின் வித்தியாவின் வீட்டுக்கு வரும்போதெல்லாம் புல்லாங்குழல் இசையை இரசித்துக் கேட்பாள்.

''இசைத்துக் கொண்டிருந்த வானொலியின் கழுத்தை திருகி நிறுத்தினாள் வித்தியா. மாதுமை அவளை ஆச்சரியத்துடன் பார்த்தாள்; ''உனக்கென்ன விசர் பிடித்து விட்டதே. அவள் ஆசையாகக் கேட்கிறாள். அவளின் முகத்தைப் பார் வாடிச் சோர்ந்து விட்டது'' என்றாள் அர்ச்சகா.

''உனக்குப் புல்லாங்குழல் இசையின் மகிமையைப் பற்றித் தெரியாது காதலர் சேர்ந்திருக்கும் போது தான் புல்லாங்குழல் இசையைக் கேட்க வேண்டும். அது சேர்ந்திருக்கும். காதலருக்கு அமுதத்தைப் போன்றது; தன்நிலை இழக்கச் செய்து இனம்புரியாத இன்பத்தைக் கொடுக்கவல்லது; அந்த இசை காதலர்களுக்கு மோகத்தை அதிகரிக்கச் செய்யும்; அதே போல் தனித்திருக்கும் வேளைகளில் காதலர்கள் கேட்டதால் காதலரின் அணைப்பில் உள்ள சுகத்தை நினைவுபடுத்தும்; அதனால் அச்சுகம் வேண்டுமென்று மனமும் உடலும் அடம்பிடிக்கும். அவர் தனது இனத்தவரின் வீட்டுக்குச் சென்று விட்டார். திரும்பிவர இரண்டு நாளாகும். அது வரை பொறுமையாக இருக்க இவ் இசைவிடாது. காதலரோடு இக்கும்போது எனக்கு இன்பமூட்டி வந்த இந்த இசை காதலர் இல்லாத மாலைப்பொழுதில் நெருப்பாகச் சுடுகிறது. அது மாலைப் பொழுதில் என்னைக் கொல்ல வந்த படையாகவே எனக்குத் தோன்றுகிறது'' என்றாள் வித்தியா.

மாதுமைக்கு அது புரியவில்லை; ''அவர் வந்த பின் புல்லாங்குழல் இசையில் கூடி மகிழவேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்; ''குறை நினைக்காதே புல்லாங்குழல் பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாவை உனது வீட்டுக்குக் கொண்டு சென்று கேள்'' என்று கெஞ்சினாள் வித்தியா.

**1228. அழல்போலும் மாலைக்குத் தூதுஆகி ஆயன்**
**குழல்போலும் கொல்லும் படை.**

முன்பு இனிமையாக இருந்த ஆயனுடைய புல்லாங்குழல் இசை, நெருப்புப்போல வருத்தும் மாலைப் பொழுதிற்கு தூதுவனாகி என்னைக் கொல்லும் படையாக வருகிறது.

## கொல்லும் படை

“எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. எத்தனை நாட்களுக்குத் தான் காதலரைக் கனவில் கண்டு கட்டித் தழுவி மகிழ்வது. அவா் கனவில் வந்ததும் நிஜமென நினைத்து நான் உறக்கத்திலிருந்து விழித்து விடுகிறேன். விழித்தபின் அவரின் நினைவால் எனக்கு உறக்கம் வருவதில்லை. அா்ச்சகா நகுலனை அடிக்கடி சந்தித்துக் கதைத்து மகிழ்வதால் அவள் உறங்கி விடுவாள். அவளைப் பாா்க்கப் பாா்க்க எனக்கு எரிச்சல் தான் வரும். அவள் நகுலனைச் சந்திக்காவிட்டால் இரவில் என்னோடு துணையாக விழித்திருப்பாள். அதனால் எனக்கு அவா்கள் கூடியிருப்பது எரிச்சலைத் தருகிறது. அவன் நித்திரையானால் எனக்கு அவளின் மீது வெறுப்பேற்படுகிறது. நேற்று இரவு பத்துமணிக்கு உறக்கத்திலிருந்து விடுபட்டு விட்டேன். விடியும் வரை என்னால் தூங்க முடியவில்லை. அதனால் இரவு என்னைக் கொடுமை செய்தது. தனிமையான இரவு விபரீதமான எண்ணங்களுக்கு என்னை உட்படுத்துகிறது; “ஊரவா் சொல்வதைப் போல அவா் வரவிட்டால்” என்ற நினைவு தான் எனது மனதைப் பேயைப் போல பற்றி நின்று ஆட்டுகிறது. பகலில் வராத கொடிய எண்ணங்கள் மயக்கத்தைத் தரும் மாலைப் பொழுதில் எனது மனதில் முளைத்துப் பெரு விருட்சமாகின்றது. அதனால் நான் தவித்துப் போவேன். துக்கத்தைத் தாங்க முடியாது. விம்மி விம்மி அழுவேன். எனக்கு ஆறுதல் சொல்ல யாா் இருக்கிறாா்கள். ஊரே அடங்கி மயான அமைதியில் வீடு இருக்கும் போது என்னால் என்ன செய்ய முடியும். காதலரின் பிரிவு மயானத்தில் இருப்பதைப் போன்ற ஓா் உணா்வைத்தான் எனக்குத் தருகிறது. நாய்கள் ஓயாமல் ஊளையிடுகின்றன. கோட்டான் கத்துகிறது. தொலைவில் நரி ஊழையிடும் சத்தம் கேட்கிறது. சில்லென்ற காற்றுக் கூடபேய் இரைவது போல இருக்கிறது. நித்திரை வராமையால் சாளரத்தினூடாக வெளியே பாா்த்தால் காருளில் மரங்கள் பெரும் பூதங்கள் குத்தி இருப்பதைப் போலத் தெரிகின்றன. எனக்குப் பயமாக இருக்கு” என்றாள் மாதுமை. அவளின் குரல் தளா்ந்து கரகரத்தது.

“பிரிவு என்பது கொடுமையானது பிரிந்த காதலருக்கு மாலைப் பொழுது யமனாகவே வருகிறது. பரிவாரங்களுடன் யமன் வந்து வாசலில் நின்று சித்திரவதை செய்வானே தவிர உயிரைக் கவர மாட்டான். இந்தச் சித்திரவதையைத் தாங்க முடியாது தான். என்ன செய்ய முடியும். தாங்கத்தானே வேண்டும் என்றாள் வித்தியா.

“இரவில் விபரீதமான எண்ணங்கள் மட்டும் தோன்றி என்னைப் பயமுறுத்தவில்லை. மாலைப் பொழுதில் என்னைப் போல ஊரும் மயங்கி விடுகிறது. அதனால் ஊரும் என்னை வருத்துகிறது. முன்பு நான் அவருடன் கழித்த இன்பமான நாட்கள் மனதில் தோன்றி வருத்துகின்றன. அப்படியான ஒரு நாள் எப்போது வருமென ஏங்குகிறேன். ஊரைவிட்டு, என்னைப் பிரிந்து சென்ற அவா் திரும்பிவர எவ்வளவு காலம் எடுக்கும். அது வரை என்னால் எப்படித் துன்பங்களை அனுபவிக்க முடியும்.” மாதுமை அழுதாள்.

“பிரிந்தவா்களுக்கும், சோ்ந்திருப்பவா்களுக்கும் உள்ள வேறுபாடு, அவா்கள் தமது மனதைக் கட்டுப்படுத்திக் கொள்வதில் தான் தங்கியுள்ளது. இன்பமும் துன்பமும் மனத்தின் பலவீனத்தால் தான் வருகின்றன. மனதைக் கட்டுப்டுத்தும் ஆற்றலில் உள்ள வேற்றுமையே, சோ்ந்திருப்பவா்களுக்கும் பிரிந்திருப்பவா்களுக்கும் உள்ள வேறுபாடாகும். சோ்ந்திருக்கும் காதலரைப் பிரிந்திருக்கும் காதலா் ஒப்பிட்டுப் பாா்க்கக் கூடாது. ஒப்பிட்டுப் பாா்த்தால் நீ சொல்லும் செயல்கள் தான் நடைபெறும். பிரிவைத்தாங்கும் சக்தி காதலருக்கு இருத்தல் வேண்டும். பிரிந்திருக்கும் நேரங்களில் தைரியமும் நம்பிக்கையும் வேண்டும். உலகத்தில் எல்லோரும் சோ்ந்திருப்பதில்லை. ஒவ்வொரு காதலரும் பிரிவை எதிா்நோக்கியே இருத்தல் வேண்டும். கவலைப்படாதே; விரைவில் உனது காதலா் வருவாா்” என்றாள் அா்ச்சகா. அவள் சொல்லிய பின்பும் மாதுமையின் மனதில் மாற்ற மேற்படவில்லை என்பதை அவளது முகம் காட்டியது.

**1229. பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு**
**மாலை படா்தரும் போழ்து.**

எனது அறிவு மயங்கும்படியாக மாலைப் பொழுது வந்து படரும் பொழுது, இந்த ஊரும் என்னைப் போலத் துன்பத்தால் வருந்தும்.

## அழிகிறது

“ஆலோசனை சொல்லலாம்; அறிவுரை வழங்கலாம்; உபதேசம் செய்யலாம். இதெல்லாம் கானல் நீரைப் போன்றது. ஆலோசனை, அறிவுரை, உபதேசம் யாவும் கூறும் நேரத்திற்கு மட்டும் பொருந்தும் என்று கூடச் சொல்ல முடியாது. துன்பத்தில் உழல்பவனுக்கு, வாழ்க்கையில் துன்பம் சகசமானது. அது மானிடா் எல்லோருக்கும் வரும். அதைத் தவிா்க்க முடியாது. துன்பங்களால் தான் மனிதன்

பரிபூரணமடைகிறான். துன்பம் இன்பத்தின் திறவு கோல். துன்பத்தை வென்று வாழ்பவன் தான் வலிமையுள்ளவன்; புத்திசாலி. இப்படியெல்லாம் ஆலோசனை சொல்லலாம்; அறிவுரைவழங்கலாம்; உபதேசம் செய்யலாம். இது துன்பப்படுபவர்களுக்கு மேலும் துன்பத்தைத் தான் கொடுக்கும். துன்பப்படும் வேளையில் துன்பம் அவர்களை விழுங்கி விடுவதால் மற்றவர்கள் சொல்லும் எதையும் அவர்கள் ஏற்கமாட்டார்கள் காதற் பிரிவைப் பொறுத்தவரை இது நூற்றுக்கு நூறு வீதம் பொருந்தும். பண்டைக்காலத்தில் வாழ்ந்த பெண்கள் கணவன் இறந்தால் கனவனோடு உடன்கட்டை ஏறுவதாகப் பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. காதலரைப் பிரிந்த துயரம் தான் அவர்களை அந்த நிலைக்குக் கொண்டு வருகிற தென்று நான்படும் வேதனை எனக்குச் சொல்கிறது. அவரில்லாமல் என்னால் கோயில்களுக்குக் கூடச் செல்ல முடியவில்லை. முன்பு நாம் இருவரும் சேர்ந்து கோயிலுக்குச் சென்றோம். சுவாமியைச் சேர்ந்து தரிசித்தோம். சேர்ந்து அர்ச்சனை செய்தோம். இப்பொழுது கோயிலுக்குச் சென்றால் மனத்துள் தனிமையும் வெறுமையும் தெரிகிறது. மனஅமைதிக்காகச் சென்றால் உள்ள அமைதியும் குலைகிறது. அதைவிடக் கோயிலுக்கு வருவோர் என்னை ஒரு நூதனமான பொருளைப் பார்ப்பது போலப் பார்க்கிறார்கள் அதை விட அவர்கள் கேட்கும் கேள்விகள் இருக்கே... அவையெல்லாம் விஷ ஊசிகளைப் போல எனது மனதைத் தாக்குகின்றன. அவர்கள் இயல்பாகச் சாதாரண விஷயங்களைக் கேட்டால் கூட அது பெரியதொரு குண்டைப் போல எனது மனதைத் தாக்குகிறது. இவற்றையெல்லாம் ஆலோசனைகளாலும் அறிவுரைகளாலும் உபதேசங்களாலும் தீர்க்க முடியுமா?'' என்று கேட்டாள் மாதுமை.

வித்தியாவால் அதற்குப் பதில் கூற முடியவில்லை. பிரிந்திருக்கும் காதலர் கூடிக் குலாவினால் தான் இன்பமடைவார்களே தவிர கடவுள் வந்து ஆறுதல் சொன்னாலும் கேட்க மாட்டார்கள் என்பது அவள் தன்னில் இருந்து கற்றுக் கொண்ட பாடம். யோசிக்கக் கூட முடியாதளவிற்கு அவளின் மூளை மரத்து விட்டது.

''என்னுடைய நிலையைப் பார்க்க உனக்கு வேடிக்கையாக இருக்கா? இல்லை இவளுக்கு விசர் பிடித்து விட்டது. என்று நினைக்கிறாயா? உலகத்தில் உள்ள புதுமை என்னவென்றால் காதலித்துக் கலியாணம் செய்தவர்கள் தான் காதலை எதிர்க்கிறார்கள்; காதலரைப் பரிகசிக்கிறார்கள்; காதலுக்கு எதிரியாக மாறுகிறார்கள்; காதலரைக் கேவலப்படுத்துகிறார்கள். இனி நீ அந்த இடத்திற்குத் தான் வருவாய்'' என்றாள் மாதுமை.

வித்தியாவுக்கு அச்சொற்கள் இடியாகக் காதில் புகுந்தன. ''நீ என்னடி சொல்கிறாய். உனது துன்பத்தைப் போக்குவதனால் விபுலன் இங்கு வரவேண்டும். இல்லாவிட்டால் நீ அங்கு செல்ல வேண்டும். இதை விட்டு விட்டு என்னைக் குறை சொல்கிறாயே'' கலங்கினாள் வித்தியா.

''உனக்கு விசர் பிடித்து விட்டது. கதைக்கிறது என்னவென்று தெரியாமல் கண்டபடி கதைக்கிறாய்'' அர்ச்சகா ஏசிக் கொண்டிருக்கும் போது மாதுமை குறுக்கிட்டுச் சொன்னாள்; ''அவர் பிரிந்தன்றே நான் உயிரை விடடிருக்க வேண்டும். பிரிவுத் துன்பத்தால் போகாமல் இருந்த என்னுயிர் பொருள் தேடுவதற்காகப் பிரிந்து சென்ற காதலரை எண்ணி, மயக்கம் தருகின்ற மாலைப் பொழுதுகளில் அழிகிறது; முற்றாக அழிந்தால் நல்லது''.

''விசர்க் கதை கதையாதை நீ தான் பிரிந்து இருப்பதாக நினைக்கிறாய். உலகில் கோடிக்கணக்கானோர் பொருள் தேடுவதற்காகப் பிரிந்திருக்கிறார்கள்'' என்றாள் அர்ச்சகா.

**1230. பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை**
**மாயும்என் மாயா உயிர்.**

காதலரின் பிரிவுத் துன்பத்தால் அழியாமல் இருக்கும் என் உயிர், பொருள் தேடும் காரணமாகப் பிரிந்து சென்ற காதலரை நினைத்து மயக்கத்தைத் தருகின்ற இம் மாலைப் பொழுதில் மாய்கின்றது.

## நாணும் கண்கள்

அர்ச்சகா, கண்களால் கண்ணீர் வழிந்தும் அதைத் துடையாது விம்மிக் கொண்டிருந்த மாதுமையைப் பார்த்தாள். அவளது கண்கள் சிவந்திருந்தன. அளவுக்கதிகமாக அழுததாலும் கண்களைக் கைகளால் கசக்கியதாலும் அவளது கண்களும் புருவங்களும் கன்னங்களும் வீங்கி இருந்தன.; ''அர்ச்சகா, நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் நான் மெய் மறந்து முருகனை வணங்கிக் கொண்டிருந்த போது உமது பட்டுச் சேலை என்மீது பட்டது. ஒரு பெண் தனது முந்தானைச் சேலை முழுவதும் ஓர் ஆடவனின் முகத்தில் படுமாறு நடந்து சென்றால் அவளைப்பற்றி எப்படி நினைப்பது. பக்தனான என்னைக் குழப்புகிறாளே'' என்ற ஆத்திரத்துடன் திரும்பினேன். எனது கண்கள் கவர்ச்சி

மிகுந்த உமது விழிகளை ஒரு கணம் தான் சந்தித்தன. அந்த ஒரு கணத்துள் உமது விழிகளில் இருந்த வசீகரம் அனைத்தையும் விழுங்கி விட்டது. வீட்டுக்குச் சென்று நினைத்துப் பார்த்தேன் விழிகளா அவை? என்னைக் கொல்ல வென வந்த வேல்கள் கண்களைத் தாக்கிய அந்த கூர்மையான இருவேல்களும் எப்படி என்நெஞ்சைப் பிளந்து உள்ளே சென்றன. என்று ஆச்சரியப்பட்டேன். எனது கண்களுக்கும் மனதிற்கும் உமது முகத்தையோ அல்லது உடலின் செழுமையான பகுதிகளையோ பார்க்க வேண்டுமென்ற ஆசை எப்பொழுதும் தோன்றியதில்ல. கவர்ச்சியான கருநிற விழிகளைப் பார்க்க வேண்டுமென்று தான் அடிக்கடி என்னுடன் மோதலில் ஈடுபடும் உமது விழிகளை ஒரு திசையில் நின்று பார்த்தால் பனிக்கால குளிர்மை தெரிகிறது. இன்னொரு திசையில் இருந்து பார்த்தால் ஆவணி மாத வெப்பம் தாக்குகிறது. ஒருபக்கம் கருணையும், மறுபக்கம் கரூண்ணியமும் அடுத்த பக்கம் அன்பும் இன்னோர் பக்கம் பண்பும் நேரே நின்று பார்த்தால் அளவில்லாத மோகமும் தோன்றுகிறது. உமது விழிகளைப் பார்த்துக் கொண்டிருந்தால் எனக்குப் பசி எடுக்காது; தாகம் எடுக்காது; உலக நினைவே இராது. பிரம்மன் சகல சௌபாக்கியங்களையும் உமது விழிக்குள் புதைத்து வைத்திருக்கிறான். காதல்மோகம் ,அன்பு, வசீகரம் ஆகிய அனைத்தையும் சேர்த்துத் தான் உமது விழிகளைப் படைத்துள்ளான். அவற்றில் தோன்றும் தெய்வீக ஒளி என்னை வசீகரித்து மோகத்துக்குள்ளாக்குகிறது. பிரம்மனால் படைக்கப்பட்ட பொருட்களில் மிகவும் அழகானது எதுவென்று யாராவது கேட்டால் நான் உமது விழிகளைத் தான் கூறுவேன்..''

''விசர்...விசர் தட்டிப்போட்டுது'' அர்ச்சகா ஏசினாள்.

''நீர் சொல்வது உண்மை. முருகபக்தனாக இருந்த எனது பக்தியைச் சிதைத்து மோகத்தைக் கொடுத்து விசர் பிடிக்கச் செய்தது உமது கண்கள் தான். எந்நேரமும் அதையே நினைத்திருப்பதால் தட்டி விட்டது. நான் சொல்வதில் சந்தேகமாக இருந்தால் உமக்கு நம்பிக்கையானவரிடம் கேட்டுப் பாரும். மலர்கள் தான் அழகானவை என்கிறார்கள். அவர்கள் எல்லோரும் உமது கண்களைப் பார்த்தால் அப்படிச் சொல்ல மாட்டார்கள்'' ''என்னடி தேநீர் ஆறிப்போய் ஈ மொய்க்கிறது அதற்கிடையில் கண்களுக்குள் கள்வர் புகுந்து விட்டாரோ'' வித்தியா கேட்டாள்.

அர்ச்சகா பதில் எதுவும் சொல்லாமல் மாதுமையின் கண்களைப் பார்த்தாள். மாதுமையின் அழகான விழிகள் வாடிச் சோர்ந்து கறுத்திருந்தன. பிரிவுத்துயரத்தை அவளுக்கு உண்டாக்கி விட்டுத் தொலைவில் உள்ள நாட்டிற்குப் பொருள் தேடச் சென்ற காதலரை எண்ணி எண்ணி அழுது அழுது ஒளி இழந்ததால் அவளது கண்கள் பொலிவு இழந்து விட்டன. முன்பு மலரை விட அழகும் பொலிவும் உள்ள அவளது கண்கள் இன்று நறுமலருக்கு நாணிவிட்டன. எல்லாம் மாலைப் பொழுதும், பிரிவும் செய்த அனர்த்தம்'' என்று நினைத்தாள் அர்ச்சகா. நகுலன் வர்ணிக்கும் அழகைவிடச் சிறந்த அழகான மாதுமையின் கண்களுக்கு நடந்த கொடுமையை நினைத்துக் கலங்கினாள் அர்ச்சகா.

**1231. சிறுமை நமக்குஒழியச் சேண்சென்றார் உள்ளி**
**நறுமலர் நாணின் கண்.**

பிரிவுத் துன்பத்தை எனக்கு உண்டாக்கி விட்டு தொலை தூரத்தில் உள்ள நாடடிற்குச் சென்ற காதலரை நினைத்து அழுதமையால் நறுமணத்தை உடைய மலர்களைப் போல் அழகுடைய எனது கண்கள் பொலிவு இழந்து விட்டன.

**விளம்பரம்**

''மாலைப் பொழுது, பசலை நிறம் படிந்த பனியைப் பூமாதேவியின் மீது போர்த்தியிருப்பதால் பசலை நிறம்படிந்த என்னுடல் வேதனையால் துடிக்கிறது. கண்கள் ஒளியிழந்து வாடிச் சோர்ந்திருப்பதால் வீட்டுக்கு வரும் உறவினர்களும் நண்பர்களும் அயலவர்களும் என்னை ஒரு மாதிரியாகப் பார்க்கிறார்கள்; ''என்னுடன் அகல்யா என்றொரு பெண்படித்தாள். அவள் எனது உயிர்த் தோழி. திருமணம் செய்யமுன் அவளது முக எலும்புகள் வெளியே தள்ளிக் கொண்டிருந்தன. கழுத்தில் பெரியதொரு பள்ளம் விழுந்திருந்தது. அவளது கண்கள் எந்த நேரமும் வாடிச் சோர்ந்திருக்கும். பலர் அவளைப் பெண் பார்த்து விட்டுப் படிக்கவில்லை என்று கூறிவிட்டுச் சென்றனர். அதனால் அவளது பெற்றோர் கவலைப்பட்டனர். என்னுடன் படித்த உருத்திரன் நெடுநாளாக அவள் மீது காதல் கொண்டு அவளது அன்புக்காக ஏங்கித்தவித்தான். ஆனால் அகல்யா ஏனோ தெரியவில்லை அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. திருமணம் தடைப்பட்டதால் அகல்யாவின் பெற்றோர், அவனைச் சந்தித்து அகல்யாவைத் திருமணம் செய்து கொள்ளும் படி வேண்டினர் அவன் பெருமகிழ்வுடன் அவளைத் திருமணம் செய்து கண்டிக்கு அழைத்துச் சென்றான். கண்டி தான் அவனது சொந்த ஊர். அங்கே அவன் வர்த்தக நிலையமொன்றை நடத்தி வந்தான். அண்மையில் அகல்யாவும் உருத்திரனும் அவர்களது கைக்குழந்தையும் எனது வீட்டுக்கு வந்தனர். அகல்யாவை என்னால் அடையாளம் காணமுடியவில்லை. அவள் நன்றாகக் கொழுத்துப் பேரழகியாகியிருந்தாள். ஒட்டிப் போயிருந்த அவளது கன்னங்கள் பொங்கிப் பூரித்திருந்தன. அவளாலும் என்னை அடையாளம் காணமுடியவில்லை; ''ஏனடி இப்படி இளைத்திருக்கிறாய். ஏதாவது நோயா? இல்லை ஏதாவது குடும்பக்

கவலையா? நான் முன்பு இருந்ததை விடக் கேவலமாக இருக்கிறாய். கண்கள் தாண்டு கன்னங்கள் குழிவிழுந்து விட்டன..? உனக்கு என்ன நடந்தது'' என்று கேட்டாள்; ''நான் எதைச் சொல்வது எனது மனநிலையை எனது உதடுகள் சொல்லு முன்பு எனது கண்கள் சொல்லி விடுகின்றனவே'' நான் பேசாமல் இருந்ததால் அகல்யா சொன்னாள்; ''மனம் தான் உடல் நிலைக்குக் காரணம். மகிழ்வாக மனமிருந்தால் எமது உடலும் பூரிப்புடன் இருக்கும். உனது காதலர் உன்னை விட்டுப் பிரிந்ததால் தான் உனக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்குமென்று நினைக்கிறேன். காதலர்கள் ஒரு போதும் பிரிந்திருத்தல் ஆகாது'' என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

''இரண்டு தினங்களுக்கு முன்பு அர்ச்சகாவின் வீட்டுக்கு வந்த சுவர்ணா சொன்னாள்; ''அவரைக் கண்டபடி நினைக்காதே. நீ எந்நேரமும் அவரையே நினைத்துக் கொண்டிருக்கிறாய். என்பதைப் பசலை படர்ந்த உனது கண்கள் எனக்குச் சொல்கின்றன. மனதைக் காட்டும் கண்ணாடி கண்கள் என்று சொல்வார்கள். நீ குழம்பிப் போயிருக்கிறாய். அவருடன் ஏதாவது பிரச்சினையா'' என்று கேட்டாள். அவரின் நினைவுகள் தரும் வேதனையை விட நண்பர்கள் இனத்தவர்கள் கூறும் வார்த்தைகள் தான் எனக்கு அதிக வேதனையைத் தருகின்றன. எப்படித்தான் மனதை நான் கட்டுப்படுத்தினாலும் அது என்னையும் மீறித் தனது போக்கில் என்னை ஆட்டிப் படைக்கிறது'' என்றாள் மாதுமை.

''ஞானிகளால் கூடக் கட்டுப்படுத்த முடியாத மனத்தை நீ கட்டுப்படுத்தப் போகிறாயா? அது சரிப்பட்டு வராது. விரைவாக நீ அவரிருக்கும் ஊருக்குச் செல்லப்பார். இல்லாவிட்டால், நீ அவருடன் பிரச்சினைப்பட்டு பிரிந்திருக்கிறாய் என உனது கண்கள் ஊராருக்குச் சொல்லி விடும்'' என்று சிரித்தாள் அர்ச்சகா.

''நடக்கக் கூடியவற்றைக் கதை. நான் தலை கீழாக நின்றாலும் அவர் வாழும் ஊருக்குச் செல்ல முடியாது அத்துடன் அவரும் இங்கு வரமாட்டார்'' என்று விம்மினாள் மாதுமை. அவள் சொல்வதைக் கேட்க வித்தியாவுக்குத் துக்கமாக இருந்தது.

**1232. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்**
**பசந்து பனிவாரும் கண்.**

பசலை நிறமடைந்து நீர் சொரியும் எனது கண்கள், விரும்பிய காதலர் என்னிடம் அன்பு செலுத்தாத தன்மையைப் பிறருக்குச் சொல்வன் போல் உள்ளன.

### மெலிந்த தோள்கள்

தனது பிறந்ததினத்திற்குப் பிடிக்கப்பட்ட புகைப் படத்தை எடுத்துப் பார்த்தாள் மாதுமை. மிகுந்த அழகுடன் காணப்படும். அப்புகைப்படம் தன்னுடையது தானா என்ற ஐயம் அவளது மனதில் எழுந்தது.

சென்ற வருடம் மார்கழி மாதம் இருபத்தொன்பதாம் திகதி இரவு நடந்த சம்பவம் அவளது மனதில் நிழலாடியது. அவளுக்கு மஞ்சள் நிறமென்றால் உயிர். அனேகமாக அவள் மஞ்சள் சட்டைகளைத் தான் விரும்பி அணிவாள். மஞ்சள் பாவாடை தான் கட்டுவாள் உடுக்காவிட்டாலும் மஞ்சள் நிறத்தில் தான் சேலை எடுப்பாள். அன்று அவள் மஞ்சள் நிறக் காஞ்சிபுரப் பட்டு சேலையணிந்திருந்தாள். அதற்கு ஏற்ற மஞ்சள் சட்டை அணிந்திருந்தாள். அவளது அறையில் மஞ்சள் நிற மின் குமிழ் ஒன்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவளது அறைக்கு விபுலன் வந்தான். மஞ்சள் நிறச் சேலையும் சட்டையும் அணிந்திருந்த அவள் மஞ்சள் மயிலாகத் தோன்றினாள். சட்டைக்குக் கீழ் இருந்த கைகளும் முகமும் மஞ்சள் ஒளிபட்டுப் பளபளத்ததால் அவள் சேலை அணியாத மஞ்சள் ஓவியம் போல அவனுக்குத் தோன்றினாள். அதை நினைத்து அவன் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீர்கள் அவன் பதில் சொல்லாமல் மீண்டும் சிரித்தான்; ''ஏன் சிரிக்கிறீர்கள்'' அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை பலமாக வாய் விட்டுச் சிரித்தான். ''ஏன் சிரிக்கிறீர்கள்'' மீண்டும் மாதுமை கேட்டாள். அவன் பதில் சொல்லவில்லை. அதனால் அவள் சென்று கட்டிலில் முகம் குப்புறப் படுத்தாள். விபுலன் அவளின் அருகே சென்று அமர்ந்தான்; ''நீங்கள் என்னோடு கதைக்க வேண்டாம்'' என்றாள் மாதுமை.

''கதைக்காவிட்டால் நான் சிரித்ததை எப்படிச் சொல்வது..? அப்போ நான் சென்று வருகிறேன்'' எழுந்தான் விபுலன்.

மாதுமை எழுந்தாள்; ''நல்ல நாட்களில் என்னை அழப்பண்ணுவதில் உங்களுக்கு அலாதியான பிரியம்'' கண்களைத் துடைத்தாள் மாதுமை.

‘‘எனது கற்பனையைச் சொல்ல முடியாதம்மா..’’ அசடுவழிந்தான் விபுலன்.

‘‘எனக்குச் சொல்ல முடியாத பல விஷயங்களை மனதில் மறைத்து வைத்திருக்கிறீர்கள். அப்படியான உங்களை நான் எப்படி நம்புவது?’’ சிணுங்கினாள்.

‘‘பல விஷயமில்லை. ஒரே ஒரு விஷயம் தான். நீர் வற்புறுத்தும் போது சொல்லா விட்டால் சண்டைக்கு வருவீர். சொன்னாலும் சண்டைக்கு வருவீர்’’சத்தியமாக ‘‘நான் சண்டைக்கு வரமாட்டன்’’.

‘‘சத்தியமாய்’’ அவனது கையைப் பிடித்துச் சத்தியம் செய்தாள் மாதுமை. அவன் அவளது கையைப் பிடித்து இறுக அணைத்தவாறு காதுக்குள் சொன்னான்.

‘‘போங்கோ..’’ அவளது முகம் சிவக்க, அவள் அவனது நெஞ்சுள் புதைந்தாள்; ‘‘மஞ்சள் சேலையும் சட்டையும் மஞ்சள் நிற மின் வெளிச்சமும் என்னை ஏதேதோ செய்கிறது. கைதேர்ந்த ஓவியன் நான் காதில் சொன்ன மாதிரி ஓவியம் வரைந்தால் எப்படி இருக்கும். உமது பொலிந்த தோள்களின் வனப்பு மஞ்சள் சட்டையையும் பிரித்துக் கொண்டு தனது பொலிவை எனக்குக் காட்டுகிறது. அகன்ற அளவான தோள்களின் பொலிவிற்கேற்ப உமது நீண்ட கைகள் திரண்டு பளபளக்கின்றன. அழகான மென்மையான வசீகரம் மிக்க இந்த நீண்டவிரல்கள் மனதில் கிளர்ச்சியை உண்டு பண்ணுகின்றன’’. அவளது மோதிர விரலைப் பிடித்து அதில் இருந்த மோதிரத்தை உருட்டினான். இப்படி உமது தோள்களும் கைகளும் பொலிவுடன் எந்த நாளும் இருக்க வேண்டும். மஞ்சள் ஒளியில் இறுக்கமாகக் கையில் அணிந்துள்ள பொற்காப்புகள் கையின் நிறம் அதுவென நினைக்கவைக்கிறது. பொலிவான தசைப்பற்று மிக்க உமது கையை இக் காப்புக்கள் வெட்டி விடும் போல் இருக்கு. புதிதாகப் பெரிய காப்புகள் செய்ய வேண்டும். அது போலச் சட்டையும் புதிதாகத் தைக்க வேண்டும்’’ என்றான் விபுலன்.

‘‘எனக்கு வெட்கமாக இருக்கு அவற்றையெல்லாம் பாராதைங்கோ..’’வாய்க்குள் முணுமுணுத்தாள் மாதுமை ‘‘யாருடைய படத்தைப் பார்க்கிறாய்’’ என்று கேட்டாள் அர்ச்சகா.

மாதுமை விம்மினாள்; ‘‘இந்தப் படத்தையும் பார்த்து என்னையும் பார். ஒருவருடத்துக்குள் எனது கோவம் மாறி விட்டது. காதலரோடு கூடியிருந்த காலத்தில் பூரித்திருந்த எனது தோள்கள் இப்பொழுது மெலிந்து, காதலர் பிரிந்ததை எல்லோருக்கும் அறிவிக்கின்றன’’ என்று விம்மினாள் மாதுமை.

**1233. தணந்தமை சால அறிவிப்ப போலும்**
**மணந்தநாள் வீங்கிய தோள்.**

காதலருடன் கூடியிருந்த காலத்தில் மகிழ்ந்து பூரித்திருந்த எனது தோள்கள், இப்பொழுது மெலிந்து காதலரின் பிரிவைத் தெரிவிப்பன போல உள்ளன.

## பெருமை இழப்பு

‘‘காதலரை இரண்டு தினங்கள் பிரிந்திருந்தாலும் அழகு கெட்டுத் தோள்கள் இளைத்துத் தன்வனப்பை இழந்து விடும். அதனால் வளையல்கள் கழன்று விழத்தான் செய்யும். ஆனால் காதலனைக் கண்ட மறுநிமிடமே காதலரை மகிழ்விக்க, காதலியின் தோள்கள் பொங்கிப் பூரித்துத் தனது எழிலைப் பன்மடங்கு கூட்டிக் கொள்ளும். காதலியின் எந்த அவயமும் காதலனைக் காணாத வேளையில் தன் பொலிவு முழுவதையும் இழந்து தான் இருக்கும். ‘‘நான் பல நாட்களாக அவரைக் காணவில்லை. அம்மா தினமும் செய்த சித்திரவதைகள் யாவும் உனக்குத் தெரியும். விதி வசத்தால் அம்மா மனம் மாறி எனது காதலை ஏற்றுக் கொண்டா. அம்மாவிடம் அனுமதி பெற்று நானும் அர்ச்சகாவும் அவரைச் சந்திக்கக் கடற்கரைக்குப் போனோம். என்னால் நடக்க முடியவில்லை. கடற்கரை மணலில் புகுந்த கால்களை வெளியே எடுக்கச் சிரமப்பட்டேன். பல நாட்கள் சரியாகச் சாப்பிடாமையால் எனது உடல் மிகவும் பலவீனமடைந்திருந்தது. கடற்கரையில் அவர் இருந்தார். அவரை என்னால் பார்க்க முடியவில்லை. நன்றாக மெலிந்து கறுத்திருந்தார். கண்கள் குழிவிழுந்திருந்தன. மிகவும் எடுப்பாகத் தோன்றும் அவரது குறுந்தாடியை என்னால் பார்த்துச் சகிக்க முடியவில்லை. பலநாட்களாகப் பெருந்துன்பப்பட்ட நான் அவருக்கு அருகே சென்றமர்ந்தேன். அவர் வெகு நேரமாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார். வழமையாக எமக்குக் குளிர்பானம் தருபவனும் கடலை தருபவனும் எமக்கருகில் வந்தனர். அவர் குளிர்பானப் போத்தலொன்றையும் கடலைச்சரையையும் வாங்கினார். குளிர்பானத்தை என்னை அணைத்து எனக்குப் பருக்கினார். எங்கிருந்து தான் புத்துணர்ச்சி வந்ததோ தெரியவில்லை. நான் உற்சாகமடைந்தேன்; ‘‘உமது பிரிவால் நான் துரும்பாகி விட்டேன். ஆனால் உம்மில் பிரிவுத்துயரம் தெரியவில்லை. பனிபடர்ந்த ரோஜாப்பூவைப் போல முகம் ஜொலிக்கிறது. தோள்கள் வனப்பு மிகுந்து காணப்படுகின்றன. கைகளில் முன்பு ஓடியாடி விளையாடிய வளையல்கள் அசைய முடியாது திணறுகின்றன. எப்படி இந்தப்

புதுப்பொலிவு உமக்கு வந்தது; ''என்றவாறு எனது கைவிரலைத் தொட்டார் மலர்களை விட மென்மையாக உமது விரல்கள் இருக்கின்றன. உண்மையைச் சொல்லும் உமக்கு என்மீது அன்பில்லையா? அன்பிருந்தால் என்னைப் போல வாடிவதங்கியிருப்பீர். நான் இன்று வரும்போது வாடி மெலிந்து கண்கள் உள்ளே சென்று, குச்சுப் போன்ற உருவம் ஒன்றுதான் என்னைச் சந்திக்கவரும். என்று எதிர்பார்த்தேன். நீர் கொழுத்துப் பளபளப்பாக வந்திருக்கிறீர்'' என்றார்; ''நான் வீட்டில் இருந்து புறப்படும் போது எனது வளையல்கள் கையை விட்டுக் கழன்று கொண்டிருந்தன. விரல்கள் மெலிந்தால், விரல்களை விட்டுக் கழன்று விழுந்த மோதிரங்களை வீட்டில் வைத்து விட்டுத் தான் சென்றேன்; ''இந்த மோதிரத்தை நீர் எந்தக் காரணங் கொண்டும் கழற்றக் கூடாது. நீர் உயிரோடு இல்லாத காலத்திலும் இம்மோதிரம் எனது நினைவாக மயானத்தில் கிடக்கட்டும்'' என்று கூறி அவர் ஒரு நாள் எனது கையில் அணிந்த மோதிரத்தை மிகவும் அவதானமாகக் கையைப் பொத்தி வைத்திருந்தேன். அவர் சொல்வது உண்மை தானா என அறியக் கையை விரித்துப் பார்த்தேன். நான் புறப்படும் போது விரலை விட்டுக்கழன்ற மோதிரம் அப்போது விரலை இறுக்கியது. எனவே உனது தோள்களும் கைகளும் மெலிந்து பொலிவு இழந்து விட்டதாகக் கருதாதே. அவை அவரைக் கண்டதும் இறைத்தபின் ஊறும் கிணறு போலத் தன்னுடைய நிலைக்கு வந்து விடும். அந்த மாயச் சக்தி அவரின் பார்வைக்கு உண்டு'' சிரித்தாள் வித்தியா.

மாதுமை வித்தியாவை நிமிர்ந்து பார்த்தாள். அவள் சொன்னது அத்தனையும் உண்மையென அவளது தோளும் முகமும் கைகளும் சொல்லின. இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு பொலிவிழந்திருந்த வித்தியாவின் முகத்தில் ஓர் அசாதாரண அழகு படிந்து பளபளத்தது. அதைக் கண்வெட்டாது பார்த்துக் கொண்டிருந்தாள் மாதுமை. நேரஞ்செல்லச் செல்ல அந்த அழகு அதிகரித்துப் பளபளத்தது.

**1234. பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்**
**தொல்கவின் வாடிய தோள்.**

துணைவர் என்னை விட்டு நீங்கியதால் எனது அழகான தோள்கள் மெலிந்து வாடிவிட்டன.; பருத்த தன்மை கெட்டு உடல்மெலிந்ததால் வளையல்களும் கழல்கின்றன.

## கொடியவரின் கொடுமை

முதல் நாள் வந்த கடிதம் மேசையில் இருந்தது. அதை விபுலன் எழுதியிருந்தான். பிரிக்காத அக்கடிதத்தை உற்று நோக்கிய படி இருந்தாள் மாதுமை. அவளது கண்கள் கலங்கின. வந்த நேரம் முதல் அக்கடிதத்தைப் பல முறை எடுத்துப் பார்த்து விட்டாள் மாதுமை. எனினும் அதைப் பிரித்து வாசிக்க வேண்டு மென்ற எண்ணம் அவளது மனதில் தோன்றவில்லை. என்ன பெரிதாக எழுதியிருக்கப் போகிறார். வழமையாகப் பாடும் புராணத்தைத் தான் பாடியிருப்பார்'' அதை வாசித்து விட்டுப் பல நாட்களுக்குத் துன்பப்பட அவள் விரும்பவில்லை.

அப்பொழுது அங்கு வந்த அர்ச்சகா, முதல் நாள் வந்த கடிதத்தைப் பிரித்துப் படிக்காமல், அதையே உற்று நோக்கிக் கொண்டிருக்கும் மாதுமையின் தோள்களைப் பற்றினாள். அவளது தோள்களில் முன்னைய மெதுமை இருக்கவில்லை. கரடு முரடான கல்லொன்றைக் கையால் பிடிப்பதைப் போல இருந்தது.

''நேற்று வந்த கடிதத்தை இன்னும் நீ பிரித்துப் பார்க்கவில்லையா..? ஏன்? என்று கேட்டாள் அர்ச்சகா. மாதுமை பதில் சொல்லவில்லை. சிலகணங்கள் அவள் கதைப்பாள் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த அர்ச்சகா, மாதுமை கதைக்காததால் கவலையோடு சொன்னாள்; அவர் வெளியூருக்குச் செல்லும் போது நீ சம்மதம் தெரிவித்தனி. மகிழ்வுடன் தான் விடை கொடுத்தனீ. உனக்குள்ள துக்கமும் துயரமும் அவருக்கு இல்லை யென்றா நீ நினைக்கிறாய்? இப்படிப் பிரிந்த பின் துயரப்பட வேண்டிய நிலையேற்படும் என்று உனக்குத் தெரியும் தெரிந்து தான் விட்டனி. அத்துடன் இங்கு வரும்போது எனது வீட்டு விலாசத்தையும் தொலைபேசி இலக்கத்தையும் கொடுத்து விட்டுத்தான் வந்தனி. அவர் கடிதம் போடுவது உனக்கு விருப்பமில்லையென்றால் எனது வீட்டுக்குச் செல்கிறேன் என்று கூறி விட்டு வந்திருக்கலாம். விலாசத்தையோ தொலைபேசி இலக்கத்தையோ ஏன் கொடுத்தாய். அந்த நேரம் உனக்குத் தேவையானவை இப்பொழுது தேவையில்லாதன வாகிவிட்டனவா? பிரிவால் வரும் துன்பத்தைப் பற்றி எனக்குத் தெரியும். அவரது பிரிவு தேவை கருதி ஏற்பட்டதொன்று துரோகமிழைத்துப் பிரிவதும், உன்னைத் துன்புறுத்தி விட்டுப் பிரிவதும், பணம் பொருளுக்காகப் பிரிவதும் தான் குற்றமானவை. தண்டிக்கப்பட வேண்டியவை. தேவைகருதிப் பிரிந்து உனக்காக உயிர் வாழும் விபுலனை நீ இப்படித் தண்டிக்கக் கூடாது'' என்ற அர்ச்சகா மேசையில் இருந்த கடிதத்தை எடுத்துப் பிரித்து, அதனுள் விபுலன் எழுதிய தாள்களை எடுத்து நீட்டினாள்; ''இப்படிச் செய்யும் அவ்வளவிற்கும் எனக்கு உரிமை எனக்கு இருக்கிறது. வாசிக்கத்தான் இல்லை'' என்றாள்.

மாதுமை முகம் மலரச் சிரித்தபடி கடிதத்தை வாங்கினாள்; ‘‘நீ செய்த உபதேசம் எதுவும் எனக்குத் தெரியாதவை என்னால் பிரிவைத் தாங்க முடியவில்லை’’ என்றவள் கடிதத்தைப் பார்த்தாள். விபுலனது எழுத்து அவ்வளவு அழகானதல்ல. எனினும் சிரமப்படாமல் வாசிக்கலாம்.

‘‘என்மீது அழியாத அன்புகொண்டவளே’’ அந்த வரி அவளைக் கண்கலங்க வைத்தது.; ‘‘அவர் எப்படி நினைக்கிறார். நான் தான் அவரைப் புரிந்து கொள்ளாமல், நேற்று வந்த கடிதத்தை வாசிக்காது விட்டு விட்டேன்’’ விம்மினாள்; ‘‘முழுக்கடிதத்தையும் வாசித்து விட்டு அழு; இன்று முழுவதும் அழு; இந்த மாதம் முழுவதும் அழு’’ என்று கூறி விட்டுச் சென்றாள் அர்ச்சகா.

‘‘என் மீது அழியாத அன்புகொண்டவளே, உனது அழகான முகம் அதில் சுழன்றாடும் கருமை மிக்கவிழிகள், ஓவியனால் மெருகூட்டப்பட்டதைப் போன்ற புருவங்கள், சதைப்பிடிப்பான மென்மையான கன்னங்கள், பளபளப்பான கழுத்து, திரண்டு பளபளக்கும் தோள்கள், வசீகரமான மோகனப் புன்னகை, மன்மத பானங்களை என் மீது பாய்ச்சும் சுந்தரத் தோள்கள். இவை தான் என் கண்களுக்குள் மினுங்கும். வைகாசி விசாகத் திருநாளன்று நாம் கதிர்காமத்திற்குச் சென்றோம். நீர் மாணிக்ககங்கையில் நீராடி விட்டு எழுந்து வெளியே வந்தீர். தோளுக்கு கீழிருந்தபகுதி முழுவதையும் ஆடை மறைத்திருந்தது. அன்று தான் உமது பொலிந்த தோள்களையும் நீண்ட கரங்களையும் அந்நிலையிற் கண்டேன். என்னை அதிசயித்துப் பிரமிக்க வைத்த அந்தத் தோள்களில் இருந்து வெளியெறிய மன்மத பாணங்கள் என்னை மூர்ச்சிக்க வைத்தன. அந்தத் தோற்றம் நடமாடும் படமாக என்மனத் திரையில் என்றும் தெரிந்து கொண்டிருக்கிறது. நினைக்கும் போதெல்லாம் மயக்கத்தையும் போதையையும் தரும் உமது தோளின் பொலிவு நான் எடுக்கும் பிறவிகள் தோறும் எனது நினைவில் இருக்கும்.

‘‘நேற்று இரவு ஒரு கனவுகண்டேன். அதில் நீர் மெலிந்து உடல் ஒட்டி இருந்தீர். வசீகரமான உமது கன்ன எலும்புகள் வெளியே தெரிந்தன. பொலிவான தோள்கள் வாடிச் சோர்ந்திருந்தன. நீண்ட கைகளில் இருந்த வளையல்கள் கைகளில் தரிக்காமல் கீழே விழுந்த வண்ணம் இருந்தன. அதை நீர் எடுத்து கைகளில் அணிய அணிய அவை கீழே விழுந்த வண்ணம் இருந்தன. வளையல்கள் கழன்று விடுமளவிற்கு தன் அழகை இழந்து விட்ட தோள்கள், கொடியவனான நான் உமக்குச் செய்த துன்பத்தைப் பிறர் அறியும் படி செய்கின்றன. இது நான் உமக்குச் செய்த கொடுமை’’ விம்மினாள் மாதுமை; ‘‘அர்ச்சகா, என்னுடைய மெலிந்த தோற்றத்தை அவர் கனவில் கண்டாராம். அந்தளவில் அவரது உணர்வுகள் என்னைச் சுற்றியே வட்டமிடுகின்றன. நான் தான் அதை அறியாமல் அல்லற்படுகிறேன். நான் இரண்டு நாட்களாகத் தனது கடிதத்தை வாசிக்காததை அவர் கனவு மூலம் அறிந்தால் எவ்வளவு துன்பப்படுவார். எனது அந்த நிலையைக் கட்டாயம் கனவு உணர்த்தி என்னைப் பழிவாங்கும்’’ விம்மி விம்மி அழுதாள் மாதுமை.

‘‘இதற்காகத் தான் நான் உன்னைக் கடிதத்தை வாசிக்கும்படி வற்புறுத்தினேன்’’ என்றாள் அர்ச்சகா.

**1235. கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு**
**தொல்கவின் வாடிய தோள்.**

வளையல்கள் கழன்று விழுமாறு தம் பழைய அழகை இழந்து விட்ட எனது தோள்கள், எனது துன்பத்தை உணராது பிரிந்து சென்ற கொடியவரின் கொடுமையைப் பிறர் அறியச் செய்கின்றன.

### அன்பற்றவர்

மாதுமை கடிதத்தை வாசித்து விட்டுச் சிரித்தாள்; ‘‘அவருடைய மனநிலையை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நீ வற்புறுத்தாவிட்டால் நான் கடிதத்தை இப்பொழுதும் வாசித்திருக்க மாட்டேன். அதனால் அவருக்குப் பதில் கடிதமும் எழுதியிருக்க மாட்டேன். கனவில் நான் துன்பப்படுவதைக் கண்டு பொறுக்க மாட்டாது கலங்கித் தவிக்கும் அவர், நான் கடிதம் எழுதாவிட்டால் எனக்கேதோ பெரும் துன்பம் நேர்ந்து விட்டதாக நினைத்துக் கவலைப்படுவார். உனக்கு நன்றி’’ என்றாள் மாதுமை.

‘‘இதில் நன்றி சொல்வதற்கு என்ன இருக்கிறது. நான் அவரை ஒரு நாளைக்குக் காணாவிட்டாலும் துடிதுடித்துப் போவேன். படிப்பதற்காக அவர் ஒரு வாரம் என்னைச் சந்திக்காமல் இருந்ததால் நான் பட்ட துன்பம் உனக்குத் தெரியும் தானே. பிரிவின் போது காதலர் மீது கோபப்படுவது உன்மையான கோபத்தினால் அல்ல. அவர் வந்து அன்பு தரவேண்டும் என்ற ஆசையால் தான். அவரைக் குளிர்மைப்படுத்த நல்லதொரு கடிதம் எழுது. கடிதம் எழுதினால் உனது மனமும் குளிர்ந்து விடும்’’ என்றாள் அர்ச்சகா.

அப்பொழுது அவளது தோழியான சுவர்ணாவும் அவளது தாயாரும் வந்தனர். சுவர்ணா எப்பொழுதும் விகடமாகக் கதைப்பாள். மகிழ்வான நேரங்களில் அவளது கதையை மாதுமையும் அர்ச்சகாவும் கேட்டு விழுந்து விழுந்து சிரிப்பார்கள். ''சுவர்ணா வந்து விட்டாள் இனிக்கல கலப்புத் தான்'' என்று எண்ணி மகிழ்ந்தாள் அர்ச்சகா.

''ஓ, அத்தான்ரை கடிதமோ...?கடிதத்தில் என்னென்ன பரிசுப் பொருட்கள் அனுப்பியுள்ளார். ஏராளமான முத்தங்கள் அனுப்பியிருப்பாரே. கடிதத்தைப் படித்துப் பார். அத்தானின் உதட்டைக் கடிப்பதைப் போன்ற இனிமை தோன்றும்''.என்றுசொல்லிக் கொண்டிருந்தாள் சுவர்ணா அர்ச்சகா பெரிதாகச் சிரித்தாள். மாதுமைக்கு வெட்கமாக இருந்தது. நேரில் தருவதை விட பொதியாக அனுப்பினால் கூடுதலானவற்றை அனுப்பலாம். முழுவதையும் இன்றைக்கே முடித்து விடாதே. அடுத்த கடிதம் வரும் வரை வைத்திருந்தால் தான் கவலை வராது'' என்று சுவர்ணா சொல்ல; ''பல நாட்களாகத் துடிதுடித்தவள். இன்றைக்கே முடித்து விடுவாள். அவர் இப்பொழுது தினமும் அனுப்பத் தொடங்கியுள்ளார். அதனால் இன்றைக்கே முடிக்கட்டும்'' என்றாள் அர்ச்சகா.

''அவர் அனுப்பும் பரிசுப் பொருட்களென்றால் நாமும் பகிர்ந்து கொள்ளலாம். இதை எப்படி பங்கிர்றது'' என்றாள் சுவர்ணா.

''அதெல்லாம் இருக்கு கொஞ்சம் பொறு'' என்றாள் அர்ச்சகா.

''பொருட்களை விட வேறேதுவோ ஒன்று கூடுதலாக அனுப்புவதால் தான் இவள் வரவர மெலிந்து கொண்டு போறாள். மெலிந்து கொண்டு போவதைப் பார்த்தால் அவர் அன்பாக அனுப்பவில்லைப் போலத் தெரிகிறது. அன்புடன் அனுப்பினால் கொழுத்திருப்பாள்'' என்றாள் சுவர்ணா.

''கூடினாலும் கொழுப்பைக் கரைத்து விடும்.'' என்று அர்ச்சகா சொல்ல; ''இல்லை இது குறைவால் தான் வந்த மெலிவு. காதலிக்கும் போது விபுலன் ஏமாத்துக் கதைகள் சொல்லியிருப்பார். இவளும் அதை நம்பியிருப்பாள். வெளியூருக்குச் சென்றவருக்கு உவளின் நினைப்பு எங்கே இருக்கப் போகிறது. அவர் பொருள் தேடும் ஆசையில் இருப்பார். அருகில் இருக்கும் போது தான் பெரும்பான்மையான ஆண்கள் அன்பு வைத்திருப்பார்கள. பின் மறந்து விடுவார்கள். கண்டவுடன் தான் காதல் பொங்கும்''அவரின் தேவைக்காக கண்சிமிட்டிச் சிரித்தாள் சுவர்ணா.

''போடி அவர் அப்படியானவர் அல்லர். என்மீது உயிரையே வைத்திருக்கிறார். அவர் அப்படிச் செய்ய மாட்டார். ஒரு வேளை நீ உன்னுடைய அனுபவத்தைச் சொல்லுறியோ தெரியாது. அப்படி ஏதாவது இருந்தால் சொல்லு'' என்றாள் மாதுமை.

''அப்படி ஒன்றுமில்லைத் தாயே அப்படி இருந்தால் உன்னைப் போல வெளிநாட்டிற்கு அவரை அனுப்பிப் போட்டு அழுது மெலிய மாட்டன். உன்மீது அன்பில்லாதவரைப் போல என்னவர் இருக்க நான் அனுமதிக்க மாட்டன்'' என்று கூறிவிட்டு; ''மாமியைச் சந்தித்து விட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள் சுவர்ணா.

மாதுமையின் கண்கள் கலங்கின. விம்மினாள்; ''அர்ச்சகா பார்த்தாயா இவளும் ஊரவர்களைப் போல அவர் என்னில் அன்பில்லாதவர். என்று சொல்கிறாள்'' அழுதாள் மாதுமை.

''உனக்கு சரியான விசர் அவள் எப்பவும் விகடமாகத் தான் கதைப்பாள். மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு கதைக்க மாட்டாள் உனக்கு எல்லாவற்றிற்கும் அழுகை தான். கண்களைத் துடையடீ'' என்று கோபமாகச் சொன்னாள் அர்ச்சகா.

**1236. தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்**
**கொடியர் எனக்கூறல் நொந்து.**

வளையல்கள் கழன்று விழுமாறு எனது தோள்கள் மெலிவடைந்ததால், என்னைக் காண்போர் எனது காதலர் கொடியவர் என்று கூறுவதைக் கேட்கத் துன்பமாக உள்ளது.

### பெருமைப் படுவாயோ?

சுவர்ணா, அர்ச்சகாவின் தாயாரைச் சந்திக்கச் சென்றாள். சுவர்ணா சிறுவயதில் இருந்து அர்ச்சகாவின் வீட்டுக்கு வந்து சென்றமையால் கமலேஸ்வரி மீது அளவற்ற பாசம் வைத்திருந்தாள். அவள் கமலேஸ்வரியைச் சந்தித்து உரையாடிவிட்டு அர்ச்சகாவின் அறைக்கு வந்த போது முன்பு சிரித்துக் கதைத்த மாதுமை அழுது கொண்டிருப்பதைக் கண்டு வியப்படைந்தாள்; ''இவளுக்குச்

சிலநிமிடங்களில் என்ன நேர்ந்தது'' என்று சிந்திக்கு முன் அர்ச்சகா ஏசினாள்; ''அவர் தன்னை நேரில் வந்து சந்தித்துக் கதைக்கவில்லையென்று பல நாட்களாக அழுதவள். அவரின் கடிதம் வந்து இரண்டு நாட்களாகின்றன. அவரின் மீதுள்ள கோபத்தால் அக்கடிதத்தைப் பிரித்து வாசியாது அக்கடிதத்தோடு கோபித்துக் கொண்டு ஒரு கரையில் வைத்து விட்டாள். நான் தான் அதை எடுத்துப் பிரித்துக் கொடுத்தனான். கடிதத்தை வாசித்த பின் சிரித்துக் கதைத்தவள். உன்ரை விசர்க்கதையாலை மீண்டும் சோக கீதம் இசைக்கத் தொடங்கி விட்டாள்''.

''அப்படியே கதை. விசர் பிடித்தவர்களுக்கு மருந்து கொடுத்து மாற்றலாம். காதலால் விசர் பிடித்தவைக்கு மருந்து மாத்திரை எதுவும் செய்யாது மருந்து சாப்பிடச் சாப்பிட விசர் அதிகரிக்கும். நீ அவளுக்கு அருகில் எந்த நேரமும் இருக்கிறனி. கவனமாக இரு. இல்லா விட்டால் கடித்து விடுவாள்'' என்றாள் சுவர்ணா.

''நான் என்ன விபுலனே என்னைக் கடிக்க. அதோடை தான் நகுலன் இருக்க இவள் என்னைக் கடித்தால் அவர் இவளைச் சும்மா விடுவாரா...? உனக்குக் கதைக்கப் பேசத் தெரியாது. அவளது மனமும் உடலும் அவரை நினைக்க நினைக்க கரைந்து போய் விடுகிறது. அதை நீ கேலி செய்தால் அவர் தன்னில் அன்பில்லாதவர் என்று நீயும் ஊரவர்களைப் போல நினைக்கிறாய் என்று கற்பனை பண்ணுறாள். அந்தக் கற்பனை சிலநேரம் தட்டியும் போடும்'' என்றாள் அர்ச்சகா.

''அப்ப இன்னும் தட்டடேல்லையே? நான் நினைச்சன் தட்டீற்றுது என்று'' என்ற சுவர்ணா குனிந்து கிழவி ஒருத்தி பேசுவதைப் போலச் சொன்னாள்; ''பிள்ளை மாதுமை, உனக்குக் காதல் புதிசு. நான் அனுபவப்பட்டனான். பலரைக் காதலிச்சனான். நீ நினைக்கிற மாதிரி எந்த ஓர் ஆணையும் நான் காணவில்லை. சும்மாய் கற்பனை பண்ணி மனதைக் கெடுக்காதை பிள்ளை. மூன்று தரத்திற்கு நாலுதரம் சாப்பிடு. அப்பதான் பிரிந்திருக்கிற உன்னவர் வந்தால் சமாளிப்பாய். காஞ்சு வறண்டியெண்டால் அவருக்குக் கசந்து போவாய்...'' சுவர்ணா சொல்ல அர்ச்சகா பெரிதாகச் சிரித்தாள். மாதுமைக்கு துக்கம் மறைந்து சிரிப்பு வந்தது சுவர்ணா சொன்னாள்; ''சில ஆண்களைப் பற்றி உனக்குத் தெரியாது பிள்ளை. அவை சிலநேரம் நினைப்பினை தானில்லாத நாட்களிலை நல்லாய்த் திண்டு குடித்துக் கொழுத்து விட்டாய் என்று. இப்படிக் கொழுத்து அழகு தாண்டவமாடுகிற இவள் என்னை நினைத்திருந்தால் இப்படி இருப்பாளே. நான் வெளியூருக்குப் போனது இவளுக்கு வாய்ப்பாய்ப் போய்ச்சு எண்டும் நினைப்பினை. எனக்கு விபுலனைப் பற்றியும் தெரியும். உன்னை பற்றியும் தெரியும். இப்ப நீ விபுலன்ரை நினைவாலை காய்ந்து கறுத்து மெலிஞ்சு போயிருக்கிறாய். பொங்கிப் புடைத்திருந்த உனது தோள்கள் மெலிந்து போனதால் வளையல்கள் கையை விட்டுக் கழன்று விழுகின்றன. உனது இந்தத் தோற்றத்தைப் பார்த்தால் அவர் பொங்கிப் பூரித்துப் போவார். தான் விரும்புகின்ற காதலி ஊன் உறக்கமில்லாது தன்னைப்பற்றி நினைத்துக் கனவு கண்டு கொண்டிருப்பதால் வாடிவதங்கிப் போனாள் என்று உருகிப் போவார். நீ அழாதை, நெடுக அழுதாயானால் இன்னும் மெலிந்து விடுவாய். பிறகு அவர் உனக்கு ஏதோ பாரதூரமான நோய் இருக்கெண்டு நினைப்பர். பிள்ளை வா போய்ச் சாப்பிடுவம். மாமி சமைக்கும் வாசம் மூக்கைத் துளைக்கிறது'' என்றாள் சுவர்ணா.

''யார் செத்துக் கிடந்தாலென்ன உனக்குச் சாப்பாடு வேண்டும். எனக்குப் பசிக்கவில்லை. நீ போய்ச் சாப்பிடு'' என்றாள் மாதுமை; ''நெஞ்சே, சுவர்ணா சொல்வதைப் போல என்னை விட்டுப் பிரிந்து சென்ற எனது காதலருக்கு எனது அழகிய தோள்கள் மெலிந்து போனதால் உண்டான பழியை எடுத்துச் சொல்லி நீ வைத்த அன்பின் அளவைக் கூறிப் பெருமைப்படப் போகிறாயோ...? என்று நினைத்தாள் மாதுமை.

**1237. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்குஎன்**
**வாடுதோள் பூசல் உரைத்து?.**

நெஞ்சமே; என்னை விட்டுப் பிரிந்து போன கொடியவரான எனது காதலருக்கு, எனது மெலிந்த தோள்களின் தன்மையை எடுத்துச் சொல்லி அதனால் நீ பெருமை அடைவாயோ?

### தளர்வும் தாங்காது

''வா, வா சாப்பிடுவம். எனக்குப் பசிக்கிறது. வீட்டில் ஒருவர் பசியோடு இருக்க என்னால் சாப்பிட முடியாது. வா, சாப்பிடா விட்டால் வந்து பக்கத்தில் இரு. இல்லாவிட்டால் மாமி ஏசுவா'' என்றாள் சுவர்ணா.

மாதுமை நிமிர்ந்து அவளைப் பார்த்தாள். அப்பார்வை; ''இது உனது வீடோ?'' என்று கேட்பதைப் போலிருந்தது; ''நான் செல்லும் வீடெல்லாம் என்னுடைய வீடு போலத்தான். அர்ச்சகா எனது

உயிர்த்தோழி. அதை விட மாமி என்னில் பற்று வைத்திருக்கிறா..'' என்று அவள் சொல்லும் போது கமலேஸ்வரி அடுப்படியில் இருந்து சொன்னாள்; ''சுவர்ணா வந்து சாப்பிடு. அர்சசகாவையும் மாதுமையையும் கூட்டிக் கொண்டு வா''.

சுவர்ணா சிரித்தாள் பின்; ''இப்ப யாருடைய வீடு என்று நினைக்கிறாய். என்னுடைய வீடில்லாவிட்டால் மாமி ஏன் என்னைக் கூப்பிட்டுச் சொல்கிறா'' என்றாள் சுவர்ணா பெருமையாக.

''நீ சாப்பாட்டு இராமி என்று அவாவுக்குத் தெரியும்'' என்றாள் மாதுமை.

''அவள் காதலித்ததால் காதலைப் பற்றியும் அதன் புனிதத்தன்மையைப் பற்றியும், காதலரின் பிரிவால் காதலி படும் துன்பத்தைப் பற்றியும் தெரியும். சுவர்ணாவைக் கேட்பதனால் சாப்பாட்டைப் பற்றித்தான் கேட்க வேண்டும். யானை மாதிரிச் சாப்பிடுபவர்களுக்கு மந்த குணம் தான் ஏற்படும். காதல் உணர்வு ஏற்படாது'' என்றாள் அர்ச்சகா.

''உனக்கு எனது காதலரைப் பற்றி என்ன தெரியும். காதலிப்பவர்கள் எல்லாம் பலருக்கும் சொல்லித் திரிய வேண்டுமென்று நீ நினைக்கிறாயா..? நீங்கள் இருவரும் காதலைப் பற்றி அப்படி என்ன புதுமையாக நினைத்து வைத்திருக்கிறீர்கள். அவரை நினைத்து கற்பனை செய்வதும்; ''அவரின் பிரிவால் அழுது குழறி சாப்பாடில்லாமல் உடல் மெலிவதுமா காதல். அவரை நினைத்துச் சாப்பிட வேண்டும். அவர் பிரிந்து சென்று வரும் போது ஆரோக்கியமாகவும் அழகாகவும் இருந்து அவருக்குப் பணிவிடை செய்ய வேண்டும். அழகாக இருந்தால் தான் அவர் என்னை விரும்புவார். என்னுடைய அழகின் தன்மை கூடக் கூட என்னை அவர் ஆராதிப்பார். அதற்காகத் தான் நான் சாப்பிடுகிறேன். அவர் என்னைச் சந்திக்க வரும் போது விதம் விதமான உணவு வகைகளைக் கொண்டு வந்து எனக்கு ஊட்டுவார்'' சுவர்ணா பேசிக் கொண்டிருக்கும் போது மாதுமை குறுக்கிட்டாள்; ''உனக்கு ஊட்ட முடியுமே. அவர் களைத்து விடுவாரே''.

''இவள் இராத்திரி முற்றத்தில் படுத்திருக்கிறாள் போலத் தெரிகிறது. தலையில் மண்ணிருக்கு'' என்றாள் அர்ச்சகா.

சுவர்ணா தலையைத் தட்டினாள்; ''நான் சொன்னது சரிதானே. இரவு சரியான பனி பெய்தது. அது தான் மாறாட்டமாகக் கதைக்கிறாள்'' என்றாள் அர்ச்சகா. மாதுமை அவளைக் கூர்ந்து பார்த்தாள்; ''உனக்குக் காதலிக்கத் தெரியுமோ...? நேற்று வந்தவர் என்று சொன்னாய். என்ன சொன்னவர்'' என்று கேட்டாள் மாதுமை.

''போடீ.. உங்களைப் போல வெட்கமில்லாதவளே நான். பெண்களுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்களும் இருக்க வேண்டும். அவை உங்களிடம் இல்லை. என்னிடமும் இல்லையே'' என்றாள் சுவர்ணா.

''உன்னுடைய காதலனுடய பெயரைச் சொல்லு'' என்றாள் மாதுமை.

''பெற்ற தகப்பனின் பெயரையும், மனதில் குடிகொண்ட தலைவனின் பெயரையும் ஒரு தமிழ்ப் பெண் வாய்திறந்து சொல்லக் கூடாது. சிவபெருமானின் திருவிளையாடல் ஒன்றில் புலவராக வந்த ஒரு பெரும்புலவரின் பெயர் முதல் இரண்டெழுத்து. மாணிக்கம் வைடூரியம்.. சுவர்ணா சொல்லிக் கொண்டிருக்கும் போது அர்ச்சகா குறுக்கிட்டாள்; சரியாய்த் தட்டிப் போட்டுது. குறுக்கெழுத்துப் போட்டி எங்களுக்கு வைக்கிறாள். விசர்க்கதை கதையாதை...'' என்றாள் அர்ச்சகா. நான் கதைக்கிறது விசர்கதையே. நேற்றிரவு வந்த அவர் என்னை இறுக அணைத்தார். அப்பொழுது ஏதோ சத்தம் கேட்டது. பதறிய அவர் அணைத்த கையைச் சற்றுத்தளர்த்தினார். அப்பொழுது எங்கிருந்தோ தெரியவில்லை பசலை நிறம் வந்து எனது நெற்றியில் படர்ந்து விட்டது... ஐயையோ சிறிய தளர்வைக் கூட என் நெற்றியால் தாங்கிக் கொள்ள முடியாது'' வாயைக் குவித்து நாணிக் கோணுவதைப் போலச் சொன்னாள் சுவர்ணா. பின் ''நீங்கள் நம்பாவிட்டால் எனது நெற்றியைப் பாருங்கள். உங்களுக்கு அந்த அனுபவம் நிறைய இருக்கு'' என்று சிரித்தாள் சுவர்ணா.

**1238. முயங்கி கைகளை ஊக்கப் பசந்தது**
**பைந்தொடிப் பேதை நுதல்.**

தழுவிய கைகளைத் தளர்த்தியவுடன் வளையல்களை அணிந்த காதலியின் நெற்றி, அநதச் சிறிய தளர்வைக் கூடப் பொறுக்க முடியாது பசலை நிறம் அடைந்தது.

**விழிகளின் மாற்றம்**

அர்ச்சகா சுவர்ணாவின் அருகில் சென்று அவளது நெற்றியைப் பார்த்தாள்; ‘‘வடிவாய்ப் பார் உனது கண்களுக்கு பசலை நிறம் தெரிந்தாலும் சிலசமயம் இல்லை யென்று சொல்வாய். மாதுமையையும் பார்க்கச் சொல்லு’’ என்றாள் சுவர்ணா.

‘‘ஓமடி, ஓமடி, நீ சொல்வது உண்மை தான். உனது நெற்றியில் பசலை நிறம் படரவில்லை. பச்சை நிறம் தான் படர்ந்திருக்கு. நெற்றியில் எப்படிப் பச்சை வந்தது. உனது முகம் துடைக்கும் துவாய் பச்சை நிறம் தானே. அதன் சாயம் தான் பட்டிருக்கு’’ என்று சிரித்தாள் அர்ச்சகா.

‘‘இந்தக் குண்டுக்கும் காதல் வந்திருக்கு’’ என்று மாதுமை சொல்ல; ‘‘பூச்சிபுழுக்களுக்கெல்லாம் காதல் வரும் போது இந்தக் கருங்கல்லுக்குக் காதல் வராதா என்ன? என்று குறுக்கிட்டாள் அர்ச்சகா. ‘‘காதலால் இந்தக் குண்டுபடும் கஷ்டம், இந்தக் குண்டுக்கு மட்டும் தான் தெரியும். அவர் மெலிந்தவர். அவரால் என்னை இறுகக் கட்டித் தழுவ முடிவதில்லை. அது அவருக்குப் பெரிய மனவருத்தம். சாப்பாட்டைக் குறையென்று சொன்னார். நான் அவரைச் சந்திப்பதைக் குறைப்பேனே தவிரச் சாப்பாட்டைக் குறைக்க மாட்டன் உங்களை மாதிரி நான் என்ன மொக்கே அவரைக் கண்டாலும் சாப்பிட முடிவதில்லை. அவரை நினைத்தாலும் சாப்பிடமுடிவதில்லை, அவரைப் பிரிந்தாலும் சாப்பிடுவதில்லை என்கிறீர்கள். இது மடைத்தனமல்லவா. நான் அவரின் மீது அளவுக்கதிகமான அன்பு வைத்திருக்கிறேன். அவர் என்னைச் சந்திக்க வரும் போது விதம் விதமான சுவையான உணவு வகைகளைக் கொடு அவர் மனம் மகிழ்ந்து உண்ணும் போது அதைப் பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டும். அப்பொழுது எனது மனதில் மட்டற்ற மகிழ்ச்சி தோன்றி ஆரவாரிக்கும். உண்ட களிப்பில் அவர் என்னைக் கட்டித் தழுவுவார். அந்த நேரம் குளிர்மையான காற்று எமக்கிடையே புகுந்து விடும். அந்த சிறிய இடைவெளியைக் கூடத் தாங்க முடியாது துயரப்பட்டு எனது பெரிய கண்கள் பசலைநிறமடைந்து விடும்’’ நாணிக் கோணினாள் சுவர்ணா.

மாதுமை புன்சிரிப்புடன் அவளது முக பாவனையை இரசித்துக் கொண்டிருந்தாள். அவளின் முக மாறுதல்கள் மாதுமைக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது.

‘‘குண்டு உண்மையாகக் காதலிக்கிறாளோ..?’’ என்று அர்ச்சகாவைக் கேட்டாள் மாதுமை.

‘‘உனக்கென்ன விசரே. அவள் எம்மைக் கேலி செய்கிறாள்’’ என்ற அர்ச்சகா; ‘‘வாருங்கோ சாப்பிடுவம். எனக்கும் பசிக்குது’’ என்றாள்.

‘‘எனக்குக் காதலரின் நினைவு வந்ததால் பசிக்கவில்லை. எனது காதலர் நெஞ்சில் இருப்பதால் உணவு உள்ளே செல்ல மாட்டாது. உங்கள் காதலர் நெஞ்சில் இல்லாததால் உங்களுக்குப் பசிக்கும். போய்ச் சாப்பிடுங்கோ’’ என்றாள் சுவர்ணா.

‘‘அர்ச்சகா, சுவர்ணா வந்தவுடன் சாப்பிட என்ன இருக்கு மாமி என்று கேட்டவள். உங்களுக்கு நேர காலத்திற்குப் பசிக்காது சாப்பிடுபவளை ஏன் குழப்புகிறீர்கள்’’ என்றவாறு அங்கே வந்தாள் கமலேஸ்வரி.

‘‘நாங்கள் ஆயத்தம்..சுவர்ணா தான்..’’ என்று மாதுமை சொல்ல. ‘‘இல்லை மாமி மாதுமைக்கு விபுலனின் கடிதம் வந்தது. அது தான் வாசிக்கிறாள்’’ என்றாள் சுவர்ணா.

‘‘அது நேற்றெல்லோ வந்தது’’ என்றாள் கமலேஸ்வரி.

சுவர்ணா பதில் எதுவும் சொல்ல முடியாமல் சில கணங்கள் தடுமாறிய பின்; ‘‘நீங்கள் எதையும் செய்யுங்கோ நான் சாப்பிடப் போறேன்’’ என்று புறப்பட்டாள் சுவர்ணா.

சுவர்ணாவும் கமலேஸ்வரியும் சென்ற பின் மாதுமை சொன்னாள்; ‘‘இன்றைக்கு குண்டின் கதையில் வித்தியாசமிருக்கு நீ என்ன நினைக்கிறாய்?’’

‘‘எவ்வளவு காலம் பழகுகிறாய் உனக்கு அவளைப் பற்றித் தெரியாதே. அழுத உன்னைச் சிரிக்க வைக்கச் சொல்லியிருப்பள் வா, அம்மா மீண்டும் அழைக்கு முன் செல்வோம் என்றாள் ஆச்சகா.

‘‘எனக் கெண்டால் அவளின் கதையில் சந்தேகமேற்படுகிறது. பசலை அது இது என்று சொல்கிறாள்’’ என்றாள் மாதுமை.

“காதலிக்கிறது நல்லது தானே அவள் காதலிக்கட்டும். நீ வா சாப்பிடுவம்” என்று கூறி விட்டுச் சாப்பாட்டு மேசையில் வந்தமர்ந்தாள் அர்ச்சகா. அப்பொழுது சுவர்ணா அவளைப் பார்த்துக் கண்சிமிட்டி விட்டுச் சாப்பிடத் தொடங்கினாள்.

**1239. முயக்குஇடைத் தண்வளி போழப் பசப்புஉற்ற
பேதை பெருமழைக் கண்.**

இறுக்கமாகத் தழுவி இருந்த போது இருவருக்குமிடையே குளிர்மையான காற்றுப் புகுந்து விட்டது; அந்தத் தளர்வு ஏற்பட்ட கணமே காதலியின் பெரிய விழிகள் பசலை படர்ந்து நிறம் மாறி விட்டன.

**வருத்தம்**

“வயிறு நிறையச் சாப்பிடுங்கோ பிள்ளைகள். நான் கடைக்குச் சென்று வருகிறேன்” என்று கூறி விட்டுச் சென்றாள் கமலேஸ்வரி.

“இன்றைக்கு மாமியின் சமையல் அட்டகாசமாக இருக்கு. ஒரு பிடி பிடிக்கலாம்” என்றாள் சுவர்ணா.

“ உனது காதலர் நெஞ்சில் இருந்து வயிற்றை நிரப்பியிருக்கும் போது நீ எப்படி ஒரு பிடிபிடிக்கப் போகிறாய்” என்று கேட்டாள் மாதுமை.

“எனது காதலர் மிகவும் இரக்க சுபாவம் உடையவர். என்னில் மலையளவு அன்பு வைத்திருக்கிறார். தனது காதலி சாப்பாட்டுப் பிரியை என்று அவருக்குத் தெரியும். அதனால் அவர் நெஞ்சில் இருந்து இடம் மாறிக் கண்களுக்குள் வந்து விடுவார் ஓர் அன்பான காதலன். தனது பாசம் மிகுந்த காதலிக்காக உயிரையும் விட்டு விடுவான் என்று கூறக் கேட்டிருக்கிறேன். எனது அன்பான காதலர் எனக்காக இடம் மாறி இருக்க மாட்டாரா. என்ன? அத்துடன் எனது அங்கங்கள் தமக்குள் போட்டி போடுகின்றன. ஒவ்வொரு அங்கமும் தான் தான் அவரை முதல் பார்க்க வேண்டும், தீண்ட வேண்டுமென்று நினைக்கின்றன.”

மாதுமை பெரிதாகச் சிரித்தாள். அவளுக்குப் புரையேறியது. அருகில் இருந்த சுவர்ணா மாதுமையின் தலையில் தனது இடது கையால் தட்டினாள்; “பார்த்தாயா எனது காதலருக்கும் உனது காதலருக்கும் உள்ள வித்தியாசத்தை. எனது காதலர் தனது அன்பான காதலி இப்பொழுது உணவைச் சுவைத்து ரசித்துச் சாப்பிடுகிறாள்; அவளைத் தொந்தரவு செய்யக் கூடாது; அவளுக்கு என்னை விட உணவின் மேல் தான் காதல் அதிகம் அதனால் அவளை ரசித்து ருசித்துச் சாப்பிட விட வேண்டும் என்று நினைக்கிறார். நான் நன்றாகச் சாப்பிட்டால் தான் எனது வனப்புக் குலையாது ஆரோக்கியமாக இருப்பேனென்றும் நினைக்கிறார்” என்று சுவர்ணா கதைத்துக் கொண்டிருக்கும் போது அர்ச்சகாவுக்கு உணவு புரையேறியது. அவள் தனது இடது கையால் தனது தலையைத் தட்டினாள் சுவர்ணா. தண்ணீர்ச் செம்பை எடுத்துக் கொடுத்தாள்; “எனக்கு நகுலனைப் பற்றியும் தெரியும். அவரும் உன்னை எதற்கும் விடார். எந்த நேரமும் தனது நினைவாகவே இருக்க வேண்டும் என்று நினைக்கிறார். அதனால் தான் இரண்டு பேருக்கும் உணவு புரையேறியது. நீங்கள் சாப்பிடும் நேரங்களில் தான் உங்களை நினைக்கக் கூடாதென்று புரிந்து கொள்ள முடியாத அவர் மீது பற்று வைத்துள்ள நீங்கள் மூளையில்லாத முட்டாள்கள்” என்றாள் சுவர்ணா.

மாதுமையும் அர்ச்சகாவும் எதுவும் பேசவில்லை. கதைத்தால் மீண்டும் உணவு புரையேறி விடும் என்று இருவரும் நினைத்தனர். “நான் சொல்வது சரியென்று நீங்கள் இருவரும் ஒத்துக் கொண்டது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நான் சரியாகத் தான் சொல்வேன். பிழையானவற்றைக் கூறமாட்டேன். எனது காதலரைப் போல எனது அங்கங்களும் ஒன்றில் ஒன்று பாசம் வைத்துள்ளன. அவர் அணைக்கும் போது காற்றுப் புகக் கூடிய ஒருசிறு இடைவெளி ஏற்பட்டதால் எனது நெற்றியில் பசலை நிறம் படர்ந்ததைக் கண்டு ஏற்கனவே பசலை நிறம் படர்ந்து துன்பத்தால் துவண்ட கண்கள் பாவம் சுவர்ணாவின் நெற்றி, என்னைப் போலத்தானே ஒளி பொருந்திய சுவர்ணாவின் நெற்றி துன்பப்படும் என்று நினைத்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தது” என்றாள் சுவர்ணா.

“விசர் முற்றி விட்டதென்று மாமாவுக்குச் சொல்ல வேண்டும்” என்று மாதுமை கூறிக் கொண்டிருக்கையில் கடைக்குச் சென்ற கமலேஸ்வரி பொருட்களுடன் வந்தாள்; “சுவர்ணா உழுந்து நனைய விட்டிருக்கிறன் வடை சுட்டுத்தாறன் வீட்டுக்குக் கொண்டு போ” என்றவள் சாப்பாட்டைப் பார்த்து விட்டு; “ஏன் சாப்பிடவில்லை? நான் வைத்தது அப்படியே இருக்கு” கறி சுவையில்லையா?” என்று கேட்டாள்.

“நான் மூக்கு முட்டப் பிடித்து விட்டேன். அர்ச்சகாவும் மாதுமையும் தான்...” என்று சொல்ல, கமலேஸ்வரி சொன்னாள்; “இரண்டு பேரும் இப்ப சாப்பிடுவது குறைவு” அர்ச்சகா அவளை முறாய்த்துப் பார்த்தாள். சுவர்ணா முகத்தைச் சுழித்தாள்.

**1240. கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே**
**ஒண்ணுதல் செய்தது கண்டு.**

காதலியின் ஒளி பொருந்திய நெற்றி, பசலை நிறம் அடைந்ததைக் கண்டு அவளின் கண்களில் படர்ந்திருந்த பசலையும் துன்பமடைந்தது.

### மருந்து சொல்

மாதுமையும் தாயும் தகப்பனும் கமலேஸ்வரியும் சுவர்ணாவின் வீட்டுக்குச் சென்றனர். அன்றைய மதிய உணவை அவர்களுக்காகச் சுவர்ணா ஏற்பாடு செய்திருந்தாள். காலையில் எழுந்தவுடன் அவர்கள் சென்று விட்டார்கள். மறுநாள் சதுர்த்தி. அதற்காக அர்ச்சகாவின் வீட்டைக் கழுவுவதற்காக இரண்டு கூலியாட்கள் வந்திருந்தனர். அதனால் அவர்கள் வீட்டைக் கழுவிய பின்பு அர்ச்சகாவை வரச் சொல்லி விட்டு அவர்கள் புறப்பட்டு விட்டனர். சுவர்ணாவின் வீடு அர்ச்சகாவின் வீட்டிலிருந்து இரண்டு மைல் தொலைவில் இருந்தது. மாதுமை அர்ச்சகாவுடன் வருவதாகக் கூறினாள். ஆனால் கமலேஸ்வரி விடவில்லை; “மாதுமை அர்ச்சகா இப்போது தான் துவிச்சக்கர வண்டி ஓட்டப் பழகுகிறாள். இரண்டு பேரும் விழுந்து காயப்பட்டு விடுவீர்கள். நாம் செல்லும் மோட்டார் வண்டியில் இடமிருக்கிறது. நீவா. அவள் ஒரு மணிநேரத்துள் வந்துவிடுவாள்” என்றாள். அதை மாதுமையின் தந்தையும் ஒப்புக் கொண்டார்.

வீடுகழுவிய கூலியாட்கள் சென்றதும் அர்ச்சகா குளியல் அறைக்குச் சென்று குளித்து விட்டு வந்து நிலைக்கண்ணாடியின் முன் நின்றாள். வெற்றுடலாக இருந்த மார்புப் பகுதியிலும் கைகளிலும் நீர் முத்துக்கள் பரவிக் கிடந்தது. நிலைக்கண்ணாடியில் தெரிந்தது. முன்பென்றால் அவள் நிலைக் கண்ணாடியின் முன் நின்று அலங்காரப் பொருட்களால் தன்னை அலங்கரிப்பாளே தவிர தனது அங்கங்களின் பொலிவை ஒரு கணம் கூடச் சிந்தித்துப் பார்த்ததில்லை. நகுலனோடு உறவு கொண்ட பின் அவன், அவளது அங்க எழிலை வர்ணிப்பான். தமிழை விஷேட பாடமாகக் கற்ற அவனது மனதில் சங்க இலக்கிய அகத்திணை நூல்களில் வரும் பேசும் சுவற் சித்திரங்களின் நிழலுரு அவனது மனதில் நிஜஉருவாக வரும். நூல்களில் படித்து கனவுகளும் கண்டு மகிழ்ந்த அந்தக் கற்பனை ஓவியங்களை அவன் அர்சச்காவின் உருவில் கண்டான்; “அன்பே வெண்கலச் சிலையொன்றிற்கு செவ்விளநீரால் அபிஷேகம் செய்தால் அதன் நெற்றியிலும் முகத்திலும் முத்துக்கள் முளைத்திருப்பதைப் போல இளநீர்த்துளிகள் பளபளத்திருக்கும். அது போலவே வியர்த்திருக்கும் உமது நெற்றியும் முகமும் இருக்கின்றன. பல்லவர்கால் வெண்கலச் சிற்பம் போல் இருக்கிறீர். என்பான். வெண்கலச் சிலையையும் இளநீரையும் நினைத்துப் பார்த்தாள். மஞ்சள் நிறமான அவளது மார்பிலும் முகத்திலும் நெற்றியிலும் மணிமணியாக நீர்த்துளிகள் இருந்தன. அதில் அவ்வறையில் ஒளிர்ந்த மின்குமிளின் பட்டொளி பட்டுப் பளபளத்தது; “நகுலன் சொன்ன வார்த்தைகள் உண்மையானதென அவள் நினைத்தாள். திடீரென்று கண்ணாடிக்குள் வெண்கலச் சிலை ஒன்று தோன்றிக் கண்சிமிட்டியது. உற்றுப் பார்த்தாள். அது நகுலன்; “சீ நீங்களா?” என்றவாறு தனது மார்புப் பகுதியை இரண்டு கைகளாலும் மறைத்தாள். நகுலனைக் காணவில்லை; “சீ நினைக்க முன் வந்து விடுவார்” என்றவாறு சிரித்தாள். நகுலனது நினைவு அவளது இதயத்துள் துளிர்த்து வளர ஆரம்பித்தது. “இப்போது நகுலன் வந்தால் எப்படி இருக்கும்”. நினைக்க அந்த நினைவு தேனானது. “நகுலன் இப்போது வந்து என்னைப் பார்த்தால் என்ன நினைப்பார். உடலில் ஒரு புதிய உணர்வு சில்லிட்டுப் பரவியது. அவள் தனது நிலையையும், தான் செல்ல வேண்டிய இடத்தையும் மறந்து அவ் அறையில் இருந்த கட்டிலில் சாய்ந்தாள். கட்டிலில் இருந்த தலையணையை தன்நெஞ்சோடு அணைத்தபடி திரும்பிப் பார்த்தாள். நிலைக் கண்ணாடி கேலியாகச் சிரித்தது. அவளுக்கு நகுலனைப் பார்க்க வேண்டு மென்ற எண்ணம் மனதில் எழுந்து. உடலை வருத்தியது நெஞ்சே! என் அன்பான நெஞ்சே! காதலரை அடிக்கடி நினைவுபடுத்தி என்னை வாட்டி வதைக்கும் அரக்கத் தனம் மிகுந்த நெஞ்சே! காதலரால் எனக்குப் பரிசாகக் கெடுக்கப்பட்ட இந்தத் துன்பம் மிகுந்த நோயைப் போக்க வல்ல நல்ல மருந்து என்னவென்று நீ அறிந்து கூற மாட்டாயா..? அந்நோயால் என்னுடல் மட்டுமல்ல என் அன்பான நெஞ்சே நீயும் துன்பப்படுகிறாயே. தயவு செய்து இந் நோயைத் தீர்க்க வல்ல மருந்து ஒன்றை எண்ணிப் பார்த்து எனக்குச் சொல்லமாட்டாயா...?”

அர்ச்சகாவின் உதடுகள் அசைந்தன.

**1241. நினைத்துஒன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்துஒன்றும்**
**எவ்வநோய் தீர்க்கும் மருந்து.**

நெஞ்சே! காதலால் வளர்ந்த துன்பந் தரும் இக் கொடிய நோயை நீக்குவதற்குரிய மருந்தை எண்ணிப் பார்த்து நீ எனக்குச் சொல்ல மாட்டாயா?

## அறியாமை

கண்ணாடியில் தெரிந்த பொங்கிப் பூரித்துப் பளபளத்த தனது அங்கங்களை மெய்மறந்து இரசித்தாள் அர்ச்சகா. அவளுக்கு நேரம் போவது தெரியவில்லை. திடீரென்று அவளது நெஞ்சுள் நுழைந்து கிளர்ச்சி செய்த நகுலனது உணர்வுகளை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. கடல் அலைகளைப் போல அது நெஞ்சுள் ஆர்ப்பரித்துக் குமுறியது; ''அன்பானவரே இவ்வளவு சக்தி உங்களது நினைவுகளுக்கு உண்டென்றால் உங்களுக்கு எவ்வளவு இருக்கும். நீங்கள் ஓர் அரிய பொக்கிசம். அது எனக்குக் கிடைத்ததுபெரும் பாக்கியம். நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதியே நானுன்னை வணங்கித் துதிக்கும் போதெல்லாம் எனக்கு வேண்டிய எல்லாவற்றையும். எனக்கு அவ்வப் போதே தந்தருள்வாய். அதைப் போல நான் அவரைத் திருமணஞ் செய்து இன்பமாக வாழ எனக்கு அருள் புரிய வேண்டும்'' கண்களை மூடினாள் அர்ச்சகா. அவளது விழிக்குள் நாவலர் ஸ்ரீவித்தியா கணபதி நகுலனுடன் தோன்றினார். உன்னவனை அழைத்து வந்துள்ளோம். நீ அவரது கரத்தைப் பற்றிக் கொள்'' என்றொரு அசரீரி கேட்பதைப் போல இருந்தது. ''இறைவா உனக்குத் திருமணமாகாவிட்டாலும் காதலருக்குள்ள பிரச்சினைகள் யாவும் தெரியும். தயவு செய்து எனக்கு உதவி செய்யப்பா'' அவளது வாய் முணுமுணுத்தது.

அப்போது தொலைபேசி மணி இசை பாடியாது அர்ச்சகா எடுத்தாள்; ''என்னடி செய்கிறாய்? நகுலனை அழைத்து வந்து சல்லாபிக்கிறாயா?.. எனக்கு நீ வராமல் நிற்கும் போது சந்தேகம் வந்தது. கவனம் செழுமையான உனது முகத்தைப் பார்த்தாலே நகுலனுக்கு வரக்கூடாத ஆசைகள் எல்லாம் வந்து விடும். வீடு கழுவி விட்டு, குளித்து விட்டு அரை குறையாகத் துண்டையும் கட்டிக் கொண்டிருப்பாய். அவர் அந்த நேரம் வந்து . இப்ப நான் தடையாக இருக்கிறேனா? சரி நீ வாறியா இல்லாவிட்டால் இருவருக்கும் சாப்பாடு கொண்டு வரட்டா..?'' சுவர்ணா கேட்டாள்.

''ஏதாவது துரும்பு கிடைத்தால் தூணாக்கி விடுவாய். அவர் இந்த நேரம் கஜேந்திரனுடன் உச்சுவில் குளத்தில் இருந்து மலர்களோடும் மூங்கில்களோடும், பறவைகளோடும் பேசிக் கொண்டிருப்பார்; ''அழகான கொக்கே அர்ச்சகாவைப் பார்த்தாயா.. அவளும் உன்னைப் போலத் தான் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்கிறாள்..'' அவர்க்கு உள்ள விசர் உனக்கும் தொற்றி விட்டது. கெதியாய் வா மாதுமை உனக்காகக் காத்திருக்கிறாள். எனக்குப் பசிக்கிறது'' என்று குறுக்கிட்டுச் சொன்னாள் சுவர்ணா.

மாதுமையும், அர்ச்சகாவும், சுவர்ணாவும் சாப்பாட்டு மேசையில் அமர்ந்திருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்; ''எனது வீடு இங்கு உங்களைச் சாப்பிட அழைத்திருக்கிறேன். நீங்கள் இருவரும் உங்கள் காதலரோடு கனவில் மட்டுமல்ல சாப்பிடும் போதும் கதைத்துச் சிரிப்பீர்கள். எனது காதலர் வந்தாலும் நான் சாப்பிட்டு விட்டுத்தான் வருவேன். என்னடீ.. இரண்டு பேரும் சோற்றைப் பிசைகிறீர்களே தவிரச் சாப்பிடவில்லை. நான் இரண்டு கோப்பை சாப்பிட்டு விட்டேன்.. என்னடி மாதுமை கையைக் கழுவுகிறாய்... பாகாசம் குடிக்கிறியா...? என்னடி ஒருவாய் கூடச் சாப்பிடவில்லை. போட்ட சோறு தட்டிலே இருக்கிறது'' பதறினாள் சுவர்ணா.

''அவளுக்கு அவருடைய நினைவுகள் வயிற்றை நிரப்பியிருக்கும். உன்னைப் போல உணர்வில்லாத மரக்கட்டையா அவள்'' என்றாள் அர்ச்சகா.

''அறியாமை மிகுந்த என் நெஞ்சே நீ நீடூழி வாழ்க. எனது காதலர் என் மீது அன்பில்லாத போதும், நீ காதலின் புனிதத் தன்மையைப் பேணுகிறாய். அதனால் எப்போதும் அவரை எண்ணி எண்ணி வருத்துகிறாய். இது மடமை என்று தெரிந்தும் திருந்துகிறாய் இல்லை. உன்னால் எனக்கு நிம்மதி இல்லை, அதனால் என்னால் உண்ண முடியவில்லை; உறங்க முடியவில்லை. நீ ஏன் என்னை இப்படி வருத்துகிறாய்'' எனப்புலம்பு உனது பிரிவுத் துயரம் மாமிக்குத் தெரிந்தால் அவாவும் சாப்பிட மாட்டார். மாமாவுக்கு தெரிந்தால் இரத்தஅழுத்தம் கூடிய அவரது இதயம் வெடித்து விடும். நீயும் வருந்தி உனது பெற்றோரையும் வருத்துகிறாய். இது உனக்குத் தேவைதானா..?'' என்று கேட்டாள் சுவர்ணா. அது மாதுமைக்குக் கேட்கவில்லை. அவளது நினைவுகள் சாப்பிடுவதற்கு முன் விபுலனைத் தேடிச் சென்று விட்டன.

**1242. காதல் அவர்இலர் ஆகநீ நோவது**
**பேதைமை வாழி என் நெஞ்சு.**

நெஞ்சே, நீ வாழ்க! காதலர் என்னிடம் அன்பில்லாதவராக இருக்க, நீ மட்டும் அறியாமையால் அவரை நினைத்து வருந்துகிறாய்.

## அன்பு இல்லை

“என் அன்புருவே! என்னை நினைத்துருகும் நெஞ்சே என்னுடன் அன்பாகவிருந்து ஆறுதலளித்து விட்டுத் தனது தேவைக்காக என்னை விட்டுச் சென்ற அவரை நினைத்தேன். வருந்துகிறாய். நான் நினைந்துருகுவதைப் போல் அவர் நினைந்துருகுகிறாரில்லையே. அப்படி அவர் என்னை நினைந்துருகியிருந்தால் தானிருக்கும் ஊரில் இருந்து செட்டை கட்டியாவது வந்து இறங்கி என்னைத் தழுவி இன்பமளித்து என்னைக் குளிரப்பண்ணியிருப்பார். நெஞ்சமே! என் ஆசை நெஞ்சமே! இனியாவது ஆறுதலடை. என்மீது அன்பில்லாத அவரை ஏன் உனக்கு அவரை நினைத்தேங்குவதால் உனக்கென்ன பயன் ஏற்படப் போகிறது. உனது செயலால் உனக்குத் துன்பமே தவிர எந்த விதமான இன்பமும் கிடைக்காது. என் ஆசை நெஞ்சே இதை எப்போது நீ உணரப் போகிறாய்?” மாதுமையின் அருகே சென்று நவரச பாவனையுடன் சொன்னாள் சுவர்ணா. அர்ச்சகா விழுந்து சிரித்தாள். மாதுமையின் முகம் படிப்படியாக இருள கண்கள் கலங்க ஆரம்பித்தன.

“அவள் இப்போது முற்றாக மாறி விட்டாள். பிரிந்து சென்ற தனது காதலனைத் தவிர்ந்த எந்த எண்ணமும் அவளிடம் இல்லை. பெற்றோர், இனத்தவர்கள் நண்பர்களை மட்டுமல்ல உணவையும் மறந்து விட்டாள். எந்த நேரமும் அவரை நினைத்துப் புலம்பிக் கொண்டிருக்கிறாளே தவிர வேறெதையும் எண்ணுறாலில்லை.” கவலைப்பட்டாள் அர்ச்சகா.

“அதனால் அவளை மகிழ்விக்கத் தான் நான் இல்லாத காதலன் ஒருவனை உருவாக்கி உங்களுடன் கதைத்தேன். விளையாட்டாக அவளை மகிழ்விக்க ஏதேதோ செய்தேன். ஆனால் அவள் எதையும் கவனிக்காது காதலில் முழ்கி அந்தத் துயரமான நினைவுகளிலேயே இருக்கிறாள். இதனால் தான் நான் காதலிக்கவில்லை. இனியும் காதலிக்க மாட்டன். என்னால் இப்படித் துன்பப்பட முடியாது” கலங்கினாள் சுவர்ணா.

‘சிரித்தாள் அர்ச்சகா; “வாழ்க்கை என்பது தனித்து இன்பமுடையதோ இல்லை தனித்துத் துன்பமுடையதோ இல்லை இரண்டும் கலந்தது தான் வாழ்க்கை. உப்பும் புளியும் அளவுக்கேற்பக் கலந்து இருந்தால் தான் கறி சுவைக்கும். எது ஒன்று கூடினாலும் அது விலக்கி வைக்கப்பட வேண்டியது தான். இன்பத்திற்குப் பிறகு துன்பமும், துன்பத்திற்குப் பிறகு இன்பமும் வருவது தான் வாழ்க்கை. இன்பமான வாழ்வு சலிப்பைத் தருவது போலத் துன்பமான வாழ்வு வெறுப்பைத் தரும். அதனால் தான் இன்பமும் துன்பமும் கலந்து வருகின்றன. பிரிவால் உண்டாகும் பிரிவுத் துன்பம் சேர்வதன் மூலம் பேரின்பத்தைத் தரும். இது உனக்குப் புரியாது. புரிய வேண்டுமானால் காதலித்துப் பார். அதைவிட்டு விட்டு அனுபவமில்லாமல் கதைக்காதே” என்றாள் அர்ச்சகா.

“மனம் பிரிந்து சென்ற காதலரை நினைத்து வேதனைப்பட்டு அழும். பின் அவரை இரக்கமில்லாதவர் என்று ஏசும். நெஞ்சமே, என்னுடன் முன்பு இருந்த அவரை எண்ணி ஏன் வருந்துகிறாய் இந்த நோயை எனக்கு உண்டாக்கிய அவருக்கு உன்னை நினைத்துப் பார்க்க வேண்டும் எனற எண்ணம் இல்லையே என்று அழும். மறுகணம் என் அன்பான நெஞ்சே உனது நன்மைக்காகத் தானே அவர் வேற்றூருக்கு உன்னைப் பிரிந்து சென்றார். அவர் பிரிந்து செல்லும் போது மகிழ்வுடன் விடை கொடுத்த நீ இப்பொழுது ஏன் புலம்புகிறாய் என்று என்னை ஏசும். இதெல்லாம் மனதின் இயல்பு. இதைக் கண்டு நீ அச்சப்படாதே; கலங்காதே முடியுமானால் நீ ஒருவரைக் காதலித்து அதனால் வரும் இன்ப துன்பங்களைப் பெறு” மாதுமை கூறிக் கொண்டிருக்கையில் அர்ச்சகா குறுக்கிட அவளைப் பேசவிடாது சொன்னாள்; “மாதுமை நீ காதலால் தான் துன்பம் உண்டாகும் என்று நினைக்கிறாய். இதை விட எத்தனையோ துன்பமான விஷயங்கள் இருக்கின்றன. உலகம் துன்பமயமானது. துன்பங்களை வென்று அவற்றை இன்பங்களாக மாற்றும் வல்லமை உள்ளவர்களாக நாம் மாற வேண்டும்” என்றாள்.

“காதல் உனக்கு மோகத்தை மட்டுமல்ல தத்துவத்தையும் கற்பித்திருக்கு” என்றாள் சுவர்ணா.

**1243. இருந்துஉள்ளி என்பரிதல் நெஞ்சே! பரிந்துள்ளல்**
**பைதல்நோய் செய்தார்கண் இல்.**

நெஞ்சே நீ என்னுடன் இருந்து கொண்டு அவரை எண்ணி ஏன் கலங்குகிறாய்? இத் துன்ப நோயை உனக்கு உண்டாக்கியவரிடம் இவ்வாறு அன்பு கொண்டு நினைக்கும் தன்மை இல்லையே.

## அழைத்துச் செல்

“எதையும் செய்தால் தான் அதன் தன்மை தெரியும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். பலபிரச்சினைகள் அப்படி இருக்கலாம். ஒரு தொழிலைச் செய்வதற்கு அனுபவம் வேண்டும் என்பார்கள். முன் அனுபவம் உள்ளவர்களின் தொடர்பு வேண்டு மென்று சொல்வார்கள். ஒருவன் மதிநுட்பத்தோடு

செய்யும் முறைகளை அவனோடு கூட இருந்து பழக வேண்டும் என்பார்கள். மொத்தத்தில் எதற்கும் குரு வேண்டும் என்று கூறுகிறார்கள். அது உண்மை. அது தொழிலைப் பற்றிய கோட்பாடு காதல் என்பது வாழ்க்கை பற்றிய கோட்பாடு. இந்த அனுபவத்திற்குக் குரு இல்லை. அனுபவமில்லை; பின்பற்றல் இல்லை வேண்டுமானால் பழந்தமிழ் இலக்கியங்களை எடுத்துப் படித்துப் பார்க்கலாமே தவிர வேறொன்றும் செய்யமுடியாது. நீ காதலித்திருந்தால் தான் உனக்கு யாவும் புரியும் என்றும் என்னைக் காதலிக்கும் படியும் கூறுகிறீர்கள். உலகத்தைச் சமம்படுத்தவும் கற்காமலே பாண்டித்தியம் பெறவும் கடவுளால் உயிர்களுக்குள் அங்கங்களைப் போலப் படைக்கப்படுவது தான் காதல். நீங்கள் கூறும் அனுபவம் கற்றல் குருவெல்லாம் காதலுக்கு ஒத்து வருமா? மனிதனை விட மற்றய உயிரினங்கள் தங்கள் துணைகளை எவ்வாறு நேசிக்கின்றன. என்று அனுபவஸ்தர்களும், பெரியவர்களும் எமக்குக் கூறியுள்ளனர். இதையெல்லாம் விட்டு விட்டு நீங்கள் என்னைப் பார்த்து ஒன்றும் தெரியாதவள் என்பதை நினைக்க எனக்கு வேதனையாக உள்ளது. காதலித்துக் கலியாணம் செய்வதைப் பற்றித்தான் உங்களுக்குத் தெரியும். கலியாணம் செய்து விட்டுக் காதலிப்பவர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?'' சிலகணங்கள் பேசாமல் இருந்தாள் சுவர்ணா. அர்ச்சகாவும் மாதுமையும் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தனர்.

''அன்றைய காவியங்கள் முதல் இன்றைய கதைகள் வரை இளங் காதலர்களைப் பற்றிக் கூறுகிறதே தவிர கலியாணம் செய்து விட்டுக் காதலிப்பவர்களைப் பற்றிக் கூறவில்லை. உங்களின் நோக்கம் அவர்கள் தமது இச்சையைத் தீர்ப்பதாக கதைக்கிறார்கள், சிரிக்கிறார்கள், குழந்தைகளைப் பெறுகிறார்கள். அப்படியானது அல்ல வாழ்க்கை எனது அம்மாவின் தகப்பனார் வாழ்கிறார் வந்து பாருங்கள். அவருக்கு எழுபது வயது. பாட்டிக்கு அறுபத்தைந்து வயது. இப்பொழுது பார்த்தாலும் அவர்கள் முப்பதுவயது இளைஞர்களைப் போல மிகமிக ஆரோக்கியமாக இருக்கிறார்கள். ஆறு பிள்ளைகள். பதினைந்திற்கும் மேற்பட்ட பேரப்பிள்ளைகள்; மூன்று பீட்டப் பிள்ளைகள். இப்பொழுதும் அவர்களுக்குள்ளே உள்ள பிணைப்பைப் பார்த்து நான் ஆச்சரியப்படுவேன். எனது பாட்டனார் வெளியூருக்குச் சென்று விட்டால் பாட்டி படும் அவஸ்தையைச் சொல்லி முடிக்க மடியாது. நேரத்திற்குச் சாப்பிட்டாரோ?; ஒழுங்காகக் குளித்தாரோ; சீராக உடை அணிந்தாரோ.? இங்கு எல்லாவற்றையும் நான் செய்து பழக்கிவிட்டேன். அவர் குழந்தை மாதிரி; எதற்கும் நான் வேண்டும்'' என்று துடிப்பார். எமக்குச் சிரிப்புத் தான் வரும். அம்மா சொல்வா எந்த ஒரு பெண் தனது கணவனை நேசிக்கிறாளோ அவளால் தான் அந்தக் குடும்பத்தை நேசிக்க முடியும். அதே போல எந்த ஓர் ஆண் தனது மனைவியை நேசிக்கிறாளோ அவனால் தான் தன் குடும்பத்தை உயர்த்த முடியும். அவர்கள் அப்படி வாழ்ந்தமையால் தான் அவர்களது பிள்ளைகளான நாங்கள் மகிழ்வுடன் வாழ்கிறோம். நாங்கள் மகிழ்வுடன் வாழ்ந்தால் அதைப் பார்த்து நீங்களும் வாழ்வீர்கள். உங்களது மகிழ்ச்சியில் தான் உங்களது எதிர்காலம் தங்கியுள்ளது. இப்பொழுது மாதுமை நினைப்பாள்; ''என் அன்பான நெஞ்சமே நீ அவர் செல்லுமிடமெல்லாம் சென்று வருகிறாய். தயவு செய்து எனது கண்களையும் அழைத்துச் செல். எனது கண்கள் அவரைப் பார்க்க வேண்டு மென்ற ஆசையால் என்னைப் பிடுங்கித் தின்கின்றன'' இதைப் பாட்டி எப்படி நினைப்பா தெரியுமா? ''அன்பான எனது கால்களே மனம் இன்று அவரைச் சந்தித்துக் கதைத்து மகிழ்ந்துவிட்டது. எனவே தயவு செய்து என்னை அவரிடம் அழைத்துச் செல் குழந்தையைப் போல் வளர்த்த அவரை நான் பராமரிக்க வேண்டும்'' சுவர்ணா சொல்லிக் கொண்டிருக்கும் போது அர்ச்சகா சொன்னாள்; ''நீ தத்துவம் பேசினாலும் காதலைப் பற்றிப்பேசினாலும் விகடமாகத் தான் இருக்கும்'' என்று சிரித்தாள்.

**1244. கண்ணும் கொளச்சேறி நெஞ்சே! இவைஎன்னைத்**
**தின்னும் அவர்க்காணல் உற்று.**

நெஞ்சே! நீ அவரிடம் செல்லும்போது எனது கண்களையும் அழைத்துச் செல்; அவரைக் காண வேண்டும் என்று என்னை அவை பிடுங்கித் தின்கின்றன.

### கைவிடமுடியாது

''காதல் என்றால் நீ என்ன வென்று நினைக்கிறாய். அளவற்ற அன்பு தான் காதல். அளவற்ற அன்பு தான் பாசம். இது ஒவ்வொரு இடத்திலும் வேறுபடுகிறது. ஒரு பெண் தனது காதலரின் மேல் வைக்கும் அளவற்ற அன்பு தான் காதல். ஒரு தாய் தனது பிள்ளைகளின் மீதும், பிள்ளைகள் தாயின் மீதும், சகோதரர்கள் தமக்கிடையேயும் வைக்கும் அன்பு பாசமாகும். இரு நண்பர்களுக்கிடையே உண்டாகும் அன்பு நட்பாகும். இதெல்லாவற்றையும் சேர்த்துத்தான் நாம் கடவுளின் மீது வைக்கிறோம். அதனால் தான் பெரியவர்கள் அன்பே சிவம் என்பார்கள். நீங்கள் ஓர் இளைஞனைக் காதலித்து விட்டு எனக்குக் காதலைப்பற்றித் தெரியாது என்கிறீர்கள். எனக்குத் தெரிந்ததில் ஆயிரத்தில் ஒரு பகுதி கூட உங்களுக்குத் தெரியாது. எனது தாத்தாவும் பாட்டியும், அம்மாவும் அப்பாவும் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா...? கேட்டு விட்டு நிறுத்தினாள் சுவர்ணா.

''சொல்லு...சொல்லு'' அவசரப்பட்டாள் அர்ச்சகா.

“பலவருடங்களுக்கு முன்பு நடந்தது. அம்மா சொல்லித் தான் எனக்குத் தெரியும். தாத்தா இளமையாக இருந்த காலத்தில் நடந்த சம்பவம் இது. தாத்தாவைப் பாட்டி விரும்பித்தானா திருமணம் செய்தவா. தாத்தாவின் தந்தை பாட்டியைத் தனது மருமகளாக்க மறுத்து விட்டார். இதனால் பாட்டி தாத்தாவுடன் சென்று விட்டா. அதனால் வாழ்க்கையில் மிகவும் கஷ்டமேற்பட்டது. ஏதோ பிரச்சினை. பாட்டியை வேண்டா மென்று சொல்லி பிரிந்து சென்று விட்டா. பாட்டியின் தந்தை மிகவும் வசதியானவர். போனவள் வரட்டும். கொழுப்பு அதிகரித்துத் தான் போனவள் கொழுப்பு அடங்க வருவாள் என்று கூறி விட்டு இருந்து விட்டார். அன்று மாலை பாட்டி மாலை நாவலர் ஸ்ரீ வித்தியா மகாகணபதி ஆலயத்திற்குச் சென்றார். அவர் தினமும் கோயிலுக்கு வருவார் என்று பாட்டிக்குத் தெரியும். கோயிலுக்குச் சென்ற பாட்டி கோயிலில் மகா கணபதியை மெய்மறந்து வணங்கிக் கொண்டிருந்த தாத்தாவின் அருகில் சென்று; “குடும்பம் தான் கோயில் அன்பாக வாழும் குடும்பத்தவர் மகா கணபதியை அழைத்தால் அவர் வீட்டுக்கு வருவார். வாருங்கள்” என்று கூறி அவரது கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து விட்டார்.”

“பொல்லாத கிழவியாய்க் கிடக்கடீ... பிறகு...பிறகு...” அவசரப்பட்டாள் அர்ச்சகா; “பிறகென்ன அதன் பின் எந்தச் சண்டை வந்தாலும் தாத்தா வீட்டை விட்டுப் போகமாட்டார். அப்படிப் பிரச்சினைப் பட்டுப் போனால் பாட்டி அங்கு சென்று விடுவார் என்ற பயம். இதனால் பாட்டியின் தந்தையார் பாட்டியைக் கோபித்து ஏசியிருக்கிறார். அதையெல்லாம் பாட்டி பொருட்படுத்த வில்லை; “பாட்டி தனது தந்தைக்குச் சொன்னாவாம்; “நான் விரும்பினாலும் என்னை விரும்பாத என் காதலரை, அவர் என்னை வெறுத்தாள் என்பதற்காக நான் அவரைக் கைவிட்டு விட முடியுமா? எனது நெஞ்சு அவரின் பிரிவைத் தாங்க முடியாது அல்லற்பட்டுத் தவிக்கிறது. உனக்கு விருப்பமில்லா விட்டால் அவரைக் கைவிடு, ஆனால் அவரை எனக்கு வேண்டும் என்று என் நெஞ்சு அடம்பிடித்து அழுகிறது. அதனால் தான் அப்படிச் செய்தேன்” என்றாவாம். இது தான் காதல் காதலன் பிரச்சினைகள் காரணமாகக் கோபப்பட்டிருக்கும் போது காதலி அவரைத் தேற்றிச் சமாதானப் படுத்த வேண்டும். காதலி மனம் குழம்பியிருக்கும் போது காதலன் அவளைத் தேற்றி மகிழ்விக்க வேண்டும். ஒன்று சேர முடியாத பிரிவு என்பது காதலரிடையே இல்லை. தொழிலால் பிரிவு ஏற்படும்; சிறு சிறு பிரச்சினைகளால் பிரிவு ஏற்படும். இதெல்லாம் பிரிவல்ல; காதலரிடையே பிரிவு ஏற்படுவது பின்னால் வரப்போகும் பெரும் இன்பத்தை உணர்த்துவதற்கான குறியென்பதைக் காதலர்கள் கூட அறிந்து கொள்ளத் தவறி விடுகிறார்கள். இதை அறிந்தால் நீங்கள் இருவரும் அழுது குழறி சாப்பாடு போடுவீர்களா” என்று கேட்டாள் சுவர்ணா.

“நீ பூனை மாதிரி இருக்கிறாய் ஆனால் பொல்லாத புலி” என்றாள் மாதுமை.

**1245. செற்றார் எனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம்**
**உற்றால் உறாஅ தவர்?.**

நெஞ்சே! நான் விரும்பி நாட்டம் கொண்டு சென்றாலும் என்னில் நாட்டம் கொள்ளாத அவர், என்னை வெறுத்து விட்டார் என்று எண்ணி நான் அவரைக் கைவிட முடியுமா?

**பொய்க்கோபம்**

முன்பு நடைபெற்ற சம்பவமொன்றை நினைத்துப் பார்த்தாள் மாதுமை. அன்று விபுலன் அவளைச் சினிமாப் படத்திற்கு அழைத்துச் செல்வதாகக் கூறியிருந்தான். முதல் முறையாக அவள் அவனுடன் தனியே படம் பார்க்கச் செல்கிறாள். அவள் இதற்கு முன் பல தடவை கோயிலுக்கு அவனுடன் சென்றுள்ளாள். சோடியாக இருவரும் கோயிலுக்கு முதன் முதல் சென்றபோது அயல்வீட்டுக்கார மாமி அவர்களைத் தெருவில் கண்டாள்; “கோயிலுக்கு போகிறீர்களா...? சென்று வாருங்கள். உனது நல்ல குணத்திற்கும், உனது அம்மாவின் நல்ல குணத்திற்கும் ஏற்பக் கடவுள் நல்லதொரு வரனை உனக்குத் தந்துள்ளார். விபுலன் மிகவும் நல்லவர். திருமணம் செய்த பின்பு தான் தங்கத்தைப் புட மிடுவதைப் போலவும் வைரத்தைப் பட்டை தீட்டுவதைப் போலவும் ஆண்கள் பெண்களால் மாற்றப்படுகின்றனர். கெட்டவனை நல்லவனாக்குவதும், நல்லவனைக் கெட்டவனாக்குவதும் பெண்களில் தான் தங்கியுள்ளது. விபுலன் ஏற்கனவே மிகவும் நல்லவன். அவனை நல்லபடி காத்துக் கொள்ளம்மா” என்றாள்.

மாதுமைக்கு மகிழ்ச்சியாக இருந்தது. வெட்கத்துடன் விபுலனைப் பார்த்தாள். அவன் கண்ணைச் சிமிட்டினான். கடவுள் தனக்கு நல்லதொரு கணவனைத் தந்துள்ளார் என நினைத்தாள் மாதுமை. கோயிலுக்கு அவர்கள் சென்ற போது அவளது பள்ளித் தோழிகள் அவளை வரவேற்றனர்; “உனக்கென்ன படிப்பு முடிந்ததும் நல்ல மாப்பிளை கிடைத்து விட்டார். அதற்காகத் தினமும் அர்ச்சனை செய் என்றாள் ஒருத்தி. அவர்கள் செல்லுமிடமெல்லாம் இதே கதையையே அவளது நண்பர்களும் இனத்தவர்களும் அயலவர்களும் சொன்னார்கள்.

இன்று அவள் முதன் முதலாகப் படம் பார்ப்பதற்காகச் செல்கிறாள். கோயிலில் ஏராளமான மக்கள் கூடி நிற்பார்கள். இரவுத் திருவிழாவானாலும் பகல் போல வெளிச்சமிருக்கும் ஆனால் இன்று இருட்டில்

தனியே இருவரும் இருக்கப் போகிறார்கள். அன்று இரவுக் காட்சிக்கு மக்கள் மிகவும் குறைவாகவே வந்திருந்தனர். பின் வரிசையில் இருவரும் இருந்தனர். முதலாவது மணி அடித்ததும் மின்குமிழ்கள் பல அணைந்தன. மாதுமையின் நெஞ்சு லேசாகப் படபடக்க ஆரம்பித்தது. சில நிமிடங்களில் மணி அடிக்காமலே மின் குமிழ்கள் மங்கிக் கொண்டிருந்தன. அவற்றின் ஒளி குறைந்து குறைந்து செல்லப் படம் ஆரம்பமானது.

விபுலன் அவளது கையைப் பிடித்தான். அவனது கரடு முரடான விரல்கள் அவளது விரல்கள் மீது பட்டு மெல்ல மணிக்கட்டையும் தாண்டிச் சென்று வளையல்களை உருட்டின. குளிரூட்டப்பட்ட அந்தப் படமாளிகையில் அவளுக்கு வியர்த்துக் கொட்டியது. உடல் நடுங்க விபுலனைப் பார்த்தாள்.

“என்னம்மா ஆறு மணிக்கு எங்கோ விபுலனுடன் போகப் போறதாகச் சொன்னாய் போகவில்லையா?” அப்பா கேட்டார்.

கற்பனையில் மிதந்து கொண்டிருந்த மாதுமை திடுக்கிட்டு மிரள மிரள விழித்தாள்; “விபுலன் வரவில்லையா? ஏதாவது அவசர வேலையாக இருப்பார். வந்து வருவார்” என்றார் அப்பா.

மாதுமை அவனை எதிர்பார்த்தாள் மனதுள் இனம் புரியாத ஓர் ஏக்கம் உருவாகி அவளைத் தவிக்கச் செய்தது. இரவு ஒன்பது மணிக்கு வந்த விபுலன்; “காத்திருக்க வைத்து விட்டேன். அலுவலகத்தில் இருந்து வரமுடியவில்லை. சில முக்கியமான வேலைகள் இருந்தன. நாளைக்குச் செல்வோம்” என்றான்.

மாதுமை எதுவும் பேசவில்லை. அவன் கெஞ்சினான். தனக்கு நேர்ந்த பிரச்சினையைச் சொன்னான். அவள் கேட்காது எழுந்து சென்று விட்டாள். இரண்டு தினங்கள் அவள் அவனுடன் கதைக்கவில்லை. அந்த இரண்டு தினமும் பொய்க் கோபம் கொண்டிருந்த மனம் இப்பொழுது தடுமாறியது.

“நெஞ்சமே சேர்ந்து ஊடலைத் தீர்க்கும் காதலரைக் காணும்போது முதலில் ஊடல் கொண்டு, பிறகு தெளிவடைந்து சேரமாட்டாய். அந்த நேரத்தில் பொய்க்கோபம் காட்டுவாய். அவரது வேதனை இரசிப்பதில் உனக்கு அலாதியான பிரியம் இருக்கும். இப்பொழுது அவர் பிரிந்திருக்கும் போது அவரைக் காணவேண்டு மென்று என்னைச் சித்திரைவதை செய்கிறாய். உனது புத்தி இப்படி ஏன்போனது?” என்று மனதுள் நினைத்தாள் மாதுமை.

**1246. கலந்துஉணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துஉணராய்**
**பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு.**

என்நெஞ்சே! ஊடல் உற்ற போது கூடி ஊடலைத் தீர்க்கும் காதலரைக் காணும் வேளையில் முதலில் ஊடல் கொண்டு பிணங்கிப் பின் தெளிவடைந்து சேரமாட்டாய். இப்பொழுது பொய்க் கோபம் கொண்டு துன்பப்படுகிறாய்.

### ஒன்றை விடு

மெல்லச் சிரித்தாள் அர்ச்சகா. மெதுவாகப் பிரிந்து அவளது உதடுகள் அசைந்த போது, அவளது முகத்தில் பரவிச் சிவந்திருந்த உணர்வுகளைச் சுவர்ணா பார்த்து விட்டு மாதுமையை மெல்ல அழைத்தாள். மாதுமை மெதுவாகச் சத்தம் கேளாதவாறு நடந்து வந்து சுவர்ணாவின் அருகில் நின்றாள்; “பார் அர்ச்சகாவை. நேற்றுப் மாலைநேரம் கடற்கரைக்குப் போனவள். இவ்வளவு நாளும் இல்லாதவாறு நகுலன் சற்று உரிமையுடன் நடக்க முற்பட்டதாகவும், அதற்குத் தான் இடங்கொடுக்கவில்லை என்றும் சொன்னவள். அவள் தலையைக் குனிந்து கொண்டு சிரிக்கும் சிரிப்பைப் பார். நகுலன் சொல்லக் கூடாத எதையோ சொல்லி விட்டான் போலத் தெரிகிறது.”

“இல்லை அவளது கையைப் பிடித்து...” மாதுமை சொல்லும் போது சுவர்ணா குறுக்கிட்டாள்; “விபுலனைக் காதலித்ததாகவும் கோயில்களுக்கும் சினிமாவுக்கும் கடற்கரைக்கும் அவரோடு சென்றதாகவும் கூறும் நீ அவர் கையைப் பிடித்தால் இப்படியாச் சிரிப்பாய்” என்றாள் மாதுமை வெக்கப்பட்டாள்; “நிமிர்ந்து பார். நான் உன்னை விபுலனையா பார்க்கச் சொல்கிறேன். அர்ச்சகா கீழுதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டு வெட்கப்பட்டு நெளிகிறாள். அவள் சொன்னதை நான் கேட்டனான்; “நகுலன் இப்போது சற்று வித்தியாசமாகக் கதைக்கிறார். அதைக்கேட்க ஒரு மாதிரியாக இருக்கிறது.; “ஒரு பெண்ணோடு இப்படிக் கதைக்கலாமா என்று நான் ஏச; அவர்; “நான் வேறு பெண்ணுடனா கதைக்கிறேன். என்று காதலியுடன் தானே கதைக்கிறேன்” என்றார். என்னால் இப்பொழுது அவரின் முகத்தைப் பார்க்க முடியவில்லை. என்றவள்” என்றாள் சுவர்ணா.

“எனக்கும் சொன்னவள்; “விபுலன், உன்னுடன் கதைக்கும் போது நகுலனைப் போல இரட்டை அர்த்தத்தில் கதைப்பாரா. வெட்கமில்லாமல் பச்சையாகக் கதைப்பாரா?” என்று கேட்டவள்; காதலர்

என்ற உரிமையோடு அவர் அப்படி இப்படிக் கதைப்பார். அதைப் பொருட்படுத்தாதே. கொஞ்ச நாள்ச் செல்ல பழகி விடும் என்றேன்.'' சிரித்தாள் மாதுமை.

அர்ச்சகாவுக்கு மிக அருகில் வந்த சுகுணா; ''அன்பே! எத்தனை நாட்களுக்குத் தான் நான் உனது அழகைப்பற்றிப் பிதற்றிக் கொண்டிருப்பது. சேலைக்கு வெளியே தெரியும் உனது அழகான கால்களையும் சட்டைக்கு வெளியே தெரியும் அழகான கைகளையும் கள்ளத்தனமாகப் பார்ப்பது. இனியும் என்னால் பொறுமையாக இருக்க முடியாது கண்ணே. சிவந்த உனது கன்னங்களைப் பார்க்க முடியவில்லை'' என்று அர்ச்சகாவின் காதுக்குள் சொல்லியவாறு மெதுவாக அவளது காதைக் கடித்தாள். சுவர்ணா.

நினைவுகளில் இருந்து விடுபட்ட அர்ச்சகா சுகுணாவைப் பார்த்தாள்; ''என்ன அவர் கரைச்சல் கொடுக்கிறாரா? காதலித்தால் இப்படித்தான். ஆரம்பத்தில் கண்ணே எனக்கு உன் அழகின் மீது மோகமில்லை. பூர்வ புண்ணியத் தொடர்பு தான் எம்மை இணைத்தது. என்று வெட்கப்பட்டு நடுங்கியபடி தூர நின்று சொல்வார்கள். இரண்டு நாட்கள் கழிந்தால் பூர்வ புண்ணியத் தொடர்பு இறுக்கமாகி விடும். பின் கிட்ட வந்து தொடர உரச ஆரம்பிப்பார்கள். பின் இப்படித்தான் கதைப்பார்கள். இனித்தான் பிரச்சினை. கவனமாக இரு. என் நல்ல நெஞ்சே! காதல் என்பது கதைத்துச் சிரிப்பது மட்டுமல்ல. அதற்கு மேலும் இருக்கு. காதலிப்பவர்கள் காமத்தை விட்டு விட வேண்டும். இல்லாவிட்டால் வெட்கத்தை விட்டு விட வேண்டும். இரண்டில் ஒன்றை விடா விட்டால் காதலிக்க முடியாது கண்ணே'' என்றாள் சுவர்ணா.

அர்ச்சகா நிமிர்ந்து சுவர்ணாவைப் பார். அவளின் கண்கள் சுழன்று நடனமாடி அர்ச்சகாவைக் கேலி செய்தன; ''இவளுக்கு அவர் புலம்பியது எப்படித் தெரிகிறது. என்று யோசிக்கிறாயா. காதலைப் பற்றித் தெரிந்து கொள்ள உன்னைப் போல அனுபவம் தேவையில்லை. நான்கு பழம் தமிழ் நூல்களைப் படித்தால் போதும்'' அர்ச்சகாவுக்கு அவள் சொல்வது உண்மையாகத் தோன்றியது. தனது அவதிப்படும் நெஞ்சிற்குச் அர்ச்சகா சொன்னாள்; ''நல்ல நெஞ்சமே! ஒன்றில் காமத்தை விட்டு விடு. அல்லது வெட்கத்தை விட்டு விடு. இரண்டையும் ேர்த்து வைத்துக் கொள்ள என்னால் முடியாது.

**1247. காமம் விடுஒன்றோ நாண்விடு நல்நெஞ்சே**
**யானோ பொறேன்இவ் இரண்டு.**

நல்ல நெஞ்சே! ஒன்றில் நீ காமத்தை விட்டு விடு; இல்லாவிட்டால் வெட்கத்தை விட்டு விடு; இந்த இரண்டையும் பொறுத்துக் கொண்டிருக்க என்னால் முடியாது.

## நீ பேதை

மாதுயின் நெஞ்சை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. அது அவளது கட்டுப்பாட்டை அடிக்கடி மீறி விபுலனின் பின்னால் சென்றதால் அவளுக்கு தாங்க முடியாத துன்பம் உண்டானது; ''நெஞ்சே உனக்கு அறிவில்லையா..? எனது கட்டுப்பாட்டை மீறி ஏன் என்னை விட்டுப் பிரிந்து சென்றவரின் பின்னால் செல்கிறாய். அவரின் செயல்கள் உனக்கு இன்பமாக இருக்கலாம் ஆனால் எனக்குத் தாங்க முடியாத துன்பத்தை அவை கொடுக்கின்றன.''

''மாதுமை மெல்ல அழைத்தது அவளது நெஞ்சு; ''யோசித்துப் பார் நானா அவரை விரும்பச் சொன்னேன். இது எல்லாம் எனக்குத் தெரியும். உன்னால் ஒரு சிறு இழப்பையும் தாங்க முடியாது. விபுலன் உனது தந்தையின் நண்பனின் மகன் தான். எனினும் அவனது தாய் மாமனின் மகள் அவனை உயிருக்குயிராக நேசிக்கிறாள். உனது தந்தையாருடன் விபுலனின் தந்தை நட்புப் பூணும்போது உனக்கு வயது எட்டு. அதற்கு முன்பே விபுலனின் மாமியார் விபுலனைத் தான் தனது மகளுக்குச் செய்து வைக்க வேண்டும் என்று விரும்பினவா. அதைப்பற்றிய விபரமெல்லாவற்றையும் நான் உனக்குச் சொன்னான். அப்போது நீ என்ன சொன்னனீ.. ஏன் பேசாமலிருக்கிறாய். குற்றஞ் செய்தது நானல்ல நீதான் என்று உனக்குத் தெரிகிறது. என்ன? அவளது நெஞ்சு சற்று நேரம் பேசாமல் இருந்தது.

மாதுமை எதுவும் பேசாமல் இருந்தால் அவளது நெஞ்சு மீண்டும் சொல்ல ஆரம்பித்தது; ''உன்னால் உண்மையை ஒத்துக் கொள்ள முடியாது. உன்னைப் போன்றவர்களெல்லோரும் தம்மைக் குற்றம் சொல்லாது தாம் செய்த குற்றங்களை எம்மீது போடுகிறார்கள். விபுலன் முதன் முதலாக உன்னிடம் வந்து தனது காதலைப் பற்றிச் சொன்ன போது நீ அவனை விரும்பவில்லை. அளவுக்கதிகமாகக் குழம்பினாய்; தடுமாறினாய்; உன்னால் இரண்டு மூன்று தினங்கள் தீர்மானம் எடுக்க முடியவில்லை; ''அப்பாவின் நண்பரின் மகன்; தினமும் அவர் வந்த போதும் இதுவரை நான் அவரைக் காதலன் என்ற நிலையில் வைத்துப் பார்க்கவில்லை'' என்று நீ கூறிய போது நான் சொன்னேன் அவனை நீ மறந்து விடும்படி பொறுத்த வேளைகளில் தடுமாறும். உன்னை நான் வழிப்படுத்திக் கொண்டு தான் வந்தேன்.

நீ அவரை விரும்பிய பின் அவர் தனது சகோதரர்களின் நன்மைக்காக வெளிநாடு செல்ல விரும்பினார். அப்போது நான் உனக்கு என்ன சொன்னேன்; ''அர்ச்சகா அவர் சென்று வந்த பின்பு உனது காதலை அவருக்கு எடுத்துச் சொல். அதற்கு முன் முன்பு போலவே பழகு என்றேன். நீ கேட்கவில்லை. உனது கண்களுக்கு அவரது தரிசனம் தேவைப்பட்டது. அதுவும் அடிக்கடி தேவைப்பட்டது. அவரில்லாவிட்டால் அவரது நிழற்படத்தைப் பார் என்று உனது கண்கள் உன்னை வற்புறுத்தின. அதனால் நீ எனது வார்த்தைகளையும் மீறி கண்களின் வழி நடத்தலில் வாழ்ந்தாய். அதை விட அவரது பேச்சுத் தேவை. என உனது காதுகள் அடம்பிடித்தன. அதனால் அவரைத் தேடிச் சென்றாய். அவர் பைத்தியக் காரனைப் போலப் புலம்பியவற்றையெல்லாம் அமுத மொழியாக அறிவுரையாகக் கேட்டாய். நாட்ச் செல்லச் செல்ல காதிற்கு அந்த அமுத மொழி எந்நேரமும் தேவைப்பட்டது. இதுமட்டுமல்ல உனது பிறந்ததினவிழாவன்று உனது விரலைத் தொட்டு மோதிரமணியும் போது நான் எச்சரித்தேன். பின்பு உனது அறைக்கு வந்த அவர் உன்னைக் கட்டித் தழுவினார். அவர் அறைக்குள் நுழையும் போது நான் உன்னை எச்சரித்தேன். நீ அதை அலட்சியம் செய்தாய். உனது உடலுக்கு அன்று அது தேவைப்பட்டது. உனது கண்களையும் காதுகளையும் போல உடலும் அடம்பிடிக்கத் தொடங்கியது. அதனால் அடிக்கடி எனது கட்டுப்பாடுகளையும் மீறிச் சென்று அவருடன் இன்பம் அனுபவித்தாய். அவ்வேளைகளில் என்னைப் புறக்கணித்த நீ இப்பொழுது என்னைக் குறை சொல்கிறாய்; ''அன்பான நெஞ்சமே! பிரிவுத்துயரத்தால் வருந்தும் எனக்கு அவர் வந்து அன்பு செலுத்தி என்னை மகிழ்விக்கவில்லை. என்று தெரிந்ததும் நீ பிரிந்தவர் பின் தானே செல்கிறாய். அவரின் செயலை நியாயப் படுத்துகிறாய். உனக்கு அறிவில்லையா'' என்று கேட்கிறாய். சிந்தித்துப் பார். யாருக்கு அறிவில்லை என்று புலம்பினாள் உள் மனம் கூறியவற்றை மாதுமையால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

**1248. பரிந்துஅவர் நல்கார்என்று ஏங்கிப் பிரிந்தவர்**
**பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு.**

என்நெஞ்சே! பிரிவுத் துயரால் நான் வருந்த, காதலர் வந்து என்மீது அன்பு செலுத்தவில்லையே என்று ஏங்கி, நீ பிரிந்தவரின் பின் செல்கிறாய்; நீ பேதை.

**யாரிடம் செல்கிறாய்**

''நான் சொன்னவை அனைத்தும் உண்மையானவை என்பதால் உனக்கு என்மீது வெறுப்பாக இருக்கிறதா?. முன்பும் நான் உண்மையான பல தகவல்களைச் சொன்ன போது நீ ஏற்றுக் கொள்ளவில்லை. விபுலனை அவனது மாமியார் தனது மகளைச் செய்யுமாறு வற்புறுத்தினார். அதனால் அவர்களுக்கிடையே பெரும் பனிப்போர் ஏற்பட்டது. பின் அது பெரும் சண்டையாகி இப்பொழுது குடும்பப் பிரிவை ஏற்படுத்தி விட்டது. விபுலனது தந்தை அப்பெண்ணின் தாயின் சகோதரன். அப்பெண்ணின் தந்தை இறக்கும் போது விபுலனுக்கு அவளைத் திருமணம் செய்து கொடுக்கும்படி உனது தந்தைக்குக் கூறியிருந்தார். அதை உனது தந்தையார் நிறைவேற்றாததால் உனது தந்தைக்கு அங்கு நடைபெறும் நல்ல கெட்ட நிகழ்வுகளுக்குக் கூடச் சொல்வதில்லை. சென்றமாதம் நடைபெற்ற தனது மகளின் திருமணத்திற்கு உங்களுக்குச் சொல்லவில்லை. பலர் வற்புறுத்தியும் அவர்கள் உங்களுக்குச் சொல்லவில்லை. எனினும் உனது தாயாரை விட்டு விட்டு உனது தந்தை திருமணமண்டபத்திற்குச் சென்றார். அவரை அங்கு யாரும் வரவேற்கவில்லை. சபை நடைபெறும் போது கூட அவரை யாரும் வந்து அழைக்கவில்லை. அதனால் அவர் உணவு உண்ணாமல் வந்து விட்டார். இதெல்லாம் உனக்குத் தெரியும். நான் சொன்னபடி நடந்திருந்தால் இவ்வளவு பிரச்சினைகளும் வந்திருக்க மாட்டாது. இப்பொழுது நீ இப்படிக் கவலைப்பட்டிருக்கவும் தேவையில்லை. என்னைக் குறை சொல்லும் நிலையும் உனக்கு வந்திருக்க மாட்டாது'' என்றது அவளது நெஞ்சு.

''உண்மைதான். என்னில் தான் பிழை ஆனால் எல்லாம் ஊழ் தலை விதி என்பார்கள். அதை மாற்ற இறைவனால் கூட முடியாது. என்கிறார்கள். அப்படியிருக்க நான் எம்மாத்திரம் எல்லாம் அவன் செயல்'' என்றாள் மாதுமை.

அவளின் நெஞ்சுக்குள்ளிருந்து யாரோ பலமாகச் சிரிக்கும் ஓசை கேட்டது. மாது என்னைத் தெரியவில்லையா. நான் தான் உனது நெஞ்சு. பொதுவாக மனிதர்கள் தாம்விடும் தவறுகளை இன்னொருவர் மீதோ அல்லது இன்னொன்றின் மீதோ இலகுவாகச் சுமத்தி விட்டுத் தாம் எதுவும் செய்யாத குழந்தைப் பிள்ளைகளென நினைத்து விடுகிறார்கள். இது மனிதனின் மிகப் பெரிய பலவீனம். ஊழ், விதி, எல்லாம் அவரவராலே அவரவருக்கு ஏற்படுவது ஒவ்வொருவரும் நினைப்பது தான் விதி. அதனால் செய்யும் செயல்கள் தான் ஊழ். இதைப்பற்றி நானுனக்குப் பலமுறை கூறியிருக்கிறேன். விபுலனைத் திருமணம் செய்ய நீ விரும்பியிரா விட்டால் துன்பமான நிகழ்வுகள் நடைபெற்றிராது. நாம் விதைத்ததைத் தான் அறுவடை செய்யமுடியும். நெல்லை விதைத்து விட்டுப் பயறை அறுவடை செய்ய முடியாது. விதைத்த பின் செயல்களைப் பொறுத்தே விளைச்சல் ஏற்படுகிறது. நல்லமுறையில் பராமரித்து வந்தால் நல்ல பயனும், நல்ல முறையில் கவனிக்காது விட்டால் பயன் இல்லாமலும் போவது இயல்பானது. இதில் விதிக்கு இடமில்லை. எதையும் எமக்குச் சாதகமாகப் பயன்படுத்தாது பொது விதிக்கேற்ப நடந்து கொண்டால் எல்லாம் நல்லதாகவே இருக்கும்.

நீ அனுபவிக்கும் துன்பங்களெல்லாம் உனது செயல்களாலேயே உருவானது. அதை நீ முன்பே நீக்கியிருக்கலாம். அதை விட்டு விட்டு இப்பொழுது நீ என்னைக் குற்றவாளியாக்குகிறாய். இது நியாயமா...?'' என்று கேட்டது நெஞ்சு.

''என் நெஞ்சே! நியாயம், அநியாயத்தைப் பற்றிக் கதைத்து என்னால் உன்னை வெல்ல முடியாது. நீ என்னை விட அறிவாளி காதலர் உன் உள்ளத்திலே இருக்கும் போது நீ அவரை நினைத்துக் கொண்டு யாரிடம் செல்கிறாய். உள்ளத்தில் உள்ள காதலரை உள்ளத்தில் வைத்தே பூசிக்க முடியாது. என்னைக் குழப்பித் துன்பப்படுத்துகிறாய். நீ சொல்வது போல் அவர் பொல்லாதவர்; இரக்கமில்லாதவர்; என்மீது அன்பில்லாதவர். என்பது உனக்குத் தெரியும். தெரிந்திருந்தும் உன் உள்ளத்தில் உள்ளவரை மறந்து நீ ஏன் தறி கெட்டு அலைகிறாய், சொல்லு... சொல்லு... உன்னால் சொல்ல முடியாது. ஏனென்றால் உனக்கும் அவரது நிஜமான உருவமும் செயல்களும் வேண்டும்'' முணுமுணுத்தாள் மாதுமை.

**1249. உள்ளத்தார் காத லவர் ஆக உள்ளிநீ**
**யாருழைச் சேறிஎன் நெஞ்சு.?**

என்நெஞ்சே! எனது காதலர் என் உள்ளத்திலே இருக்கும் போது, நீ அவரை நினைத்து எங்கே செல்கிறாய்?

## மெலிவது ஏன்?

அர்ச்சகா எனது வீட்டுக்குச் சாப்பிட வரும்படி அழைத்தபோது மிகவும் சந்தோசப்பட்டாள். அவளது அந்த நிலை என்னையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. நல்ல முறையில் சமைத்துக் கொடுக்க வேண்டு மென்று இரண்டு நாட்களாகத் திட்டமிட்டு நல்ல முறையில் சமைத்தேன். அவள் சாப்பிடும் நேரம் கழிந்த பின்பு தான் வந்தாள். அவள் மகிழ்ந்தது வீட்டார் இங்கு வந்து விட்டால் தான் தனது காதலரோடு கூடிமகிழலாம். என்று என்பதை நான் இப்பொழுது தான் புரிந்து கொண்டேன். வீட்டை இங்கு வந்து விட்டுச் சென்று கழுவலாம். தானே. அப்படிச் செய்தால் நகுலனை அழைக்க முடியாது. இவள் முதல் நாள் வீடு கழுவுபவர்களுக்குக் காலையில் வரும்படி கூறி விட்டாள்; ''என்று சுவர்ணா சொல்லும் போது அர்ச்சகா குறுக்கிட்டுச் சொன்னாள்; ''சும்மாய் கற்பனை பண்ணிக் கதைக்காதை. வழமையாக மாலையில் தான் கழுவுவது என்று அர்ச்சகா கூறும் போது சுவர்ணா அவசரமாகக் குறுக்கிட்டாள். ''நான் இரண்டு மணிக்குப் பிறகு தான் வீட்டைக் கழுவ வருமாறு சொன்னான். அவர்கள் காலையில் வந்து விட்டார்கள். அவர்கள் கழுவும் போது ஒரு வேலையும் செய்யாத அர்ச்சகாவை மாதுமையுடன் போகச் சொன்னனான் அவள் மறுத்துவிட்டாள். அதனால் அவளை விட்டு விட்டு வந்தேன். கூலியாட்களுக்கு சரியான மேற்பார்வையில்லா விட்டால் ஒழுங்காக வேலைகளைச் செய்ய மாட்டார்கள். வீடு திரும்பவும் கழுவவேண்டுமோ தெரியாது'' என்று அடிக்கடி மாமி சொல்லிக் கொண்டிருந்தவா. அவாவுக்கு இன்று நிம்மதியே இல்லை. நீ நகுலனைச் சந்திப்பதற்காகத் தான் அன்று அளவுக்கதிகமாகச் சந்தோசப்பட்டனீ.'' என்றாள் சுவர்ணா.

அர்ச்சகா வெட்கத்துடன் சிரித்தாள். அவளது முகமெங்கும் சிவக்கத் தொடங்கியது;. ''காதலிப்போர் தமது காதலரைச் சந்திப்பதற்காகப் பல திட்டங்களைத் தீட்டுவார்கள். பல்லாயிரம் மக்கள் கூடியிருக்கும் சபையிலும் ஒரு காதலன் தனது காதலியுடன் தனது மனதில் இருப்பதைப் பகிர்ந்து கொள்வான். அதே போல காதலியும் தனது மனதில் உள்ளவற்றைச் சொல்லிவிடுவாள். காதலர் பேச எந்த மொழியும் தேவையில்லை. மனிதர்களைத் தவிர மற்றைய உயிர்கள் எந்த மொழியில் காதல் மொழி பேசுகின்றன. காதலர்கள் தூரஇருந்து கண்களாலும் கைகளாலும் செயல்களாலும் பேசுவதை எந்த அனுபவஸ்தனாலும் கண்டு கொள்ள முடியாது. காதலன் தலையைத் தடவுவான். காதலி தனது பிள்ளையைத் தூக்கி முன்னால் போட்டு அதை வருடுவாள்; குலைத்துப் பின்னுவாள்; கைகளால் தடவுவாள். இப்படி எத்தனையோ சைகை மொழிகளைப் பற்றி அகத்திணை நூல்களில் நான் படித்திருக்கிறேன். காதல் கொண்ட பெண்ணை அவளது சிநேகிதிகள் இலகுவில் புரிந்து கொள்வார்கள். அவர்கள் நண்பர்களுடன் சேராது விலகியிருப்பதும் காரணங்கள் எதுவுமின்றிக் கதைப்பதும், சிரிப்பதும் அவர்களது இயல்பு. இதைக் கண்டு கொள்ள அனுபவம் தேவையில்லை'' என்றாள் சுவர்ணா.

அர்ச்சகாவும் மாதுமையும் எதுவும் பேசவில்லை. மெதுவாகச் சிரித்தனர். அதனால் சுவர்ணா சொன்னாள்; ''மாதுமையோடு சேர்ந்திராமல் அவளைக் விட்டு விட்டுச் சென்று வேறு ஓர் ஊரில் எப்படி அவளது காதலன் வசிக்கிறான் என்று சொல்ல முடியும். அவரை அவள் நெஞ்சில் வைத்துப்பூட்டி வைத்திருக்கிறாள். அப்படியிருக்க அவளை விட்டு அவர் நீங்கினார் என்று நாம் எப்படிச் சொல்ல முடியும். அதை விடப் பிரிந்தவரின் நினைவால்தான் மாதுமை தான் மெலிந்ததாகக் கூறுகிறாள். நீயும் அப்படித்தான். சொல்கிறாய். அவர் அருகில் இருந்தால் தான் அழகும் மெருகும் வனப்பும் அதிகரிக்கும் என்கிறார்கள். உள்ளம் அவரை விட்டு வெகுதொலைவிலா இருக்கிறது. அவளுக்குள்ளே இருக்கும்

உள்ளத்தில் வாழும் அவரால் இவளுக்கு எப்படிப் பிரிவு ஏற்பட்டது. அழகு ஏன் குலைந்தது; செழிப்பான உடல் ஏன் வாட்டமுற்றது'' என்று கேட்டாள் சுவர்ணா.

அதைப் பற்றி எமக்கென்ன தெரியும். முற்றும் உணர்ந்த முழுஞானியே! அதைப்பற்றி எமக்கு விரிவுரை நிகழ்த்துங்கள் தாயே'' என்று கரங்குவித்தாள் மாதுமை. அர்ச்சகா பலமாகச் சிரித்தாள்.

**1250. துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா**
**இன்னும் இழத்தும் கவின்.**

என்னோடு சேர்ந்திராமை என்னைக் கைவிட்டுச் சென்ற காதலரை நான் நெஞ்சில் வைத்திருக்கும் போது, நான் ஏன் மெலிந்து அழகை இழந்து வருகிறேன்.



இந்து சமயத்தை வளம் படுத்தும் நூல்கள் பலவற்றை எல்லோரும் கற்றுப் பயன் பெற வேண்டு மென்ற உயரிய நோக்கில், எமது பேரன்பிற்குரிய கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் அதிபராக விளங்கும் திருமிகு கே.வி.குணசேகரம் அவர்கள் எளிய முறையில் இலகு தமிழில் கதை வடிவில் பல நூல்களை எழுதி வருகிறார். இவரது ஆத்தி சூடிக் கதைகள் மலேசியாவில் நடைபெற்ற உலகச் சைவ மகாநாட்டில் வெளியிடப்பட்டன. சிறுகதை, நாவல், கவிதை, சிறுவர்நூல்கள், சமயக் கட்டுரைகள் போன்றவற்றில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்து வளரும் இவ்வாசிரியர் திருக்குறள் கதைகள் மூலம் ஈழத்தில் பெருமை பெற்று விளங்குகிறார். திருக்குறள் பாக்களின் கருத்துச் சிதையாமல் அற, நீதிக் கருத்துக்களைப் பாமரரும் படித்து இன்புறுமாறு கதை வடிவில் எழுதி வருவது பெருமைக்குரியது. 480 திருக்குறள் பாக்களுக்கான கதைகள் வெளி வந்து விட்டன.

நூலசிரியரின் இம் முயற்சியைப் பெரிதும் பாராட்டுவதுடன் இவர் மேன் மேலும் இத்தகைய பணிகளில் சிறந்து விளங்கத் திருவருள் துணை புரியும் என்று நம்புகிறேன்.

டாக்டர் மா. வேதநாதன், எம்.ஏ.பிஎச்.டி
தலைவர், புறநிலைப்படிப்புக்கள் பிரிவு,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
ஸ்ரீலங்கா.